இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56+8

சுடர் 32 | கதிர் 162 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 24 ஞாயிற்றுக்கிழமை 07.05.2017

## காலியில் பயங்கரம்: குடும்பத்தலைவர் சுட்டுக்கொலை

காலி, மே 7
காலியில் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாச் சூட்டில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கம்மன்பிலவத்த, அந்து கொட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பத் தலைவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.
தனது பிள்ளையையும் அயலவருடைய 2 பிள்ளைகளையும் தனது முச்சக்கர வண்டியில் ஏற்றி தனியார் வகுப்புக்கு அழைத்துச் சென்றபோதே குடும்பத் தலைவர் மீது இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. »53

## போர் முடிவே தவிர அது வெற்றியல்ல!

ஜே.வி.பி. கூறுகிறது

கொழும்பு, மே 7
2009 இல் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நிகழ்வை போர் வெற்றி என்று கூறக்கூடாது. போர் முடிவு என்றே கூற வேண்டும். போர் வெற்றி என்றால் இனங்களிடையே ஒற்றுமையைக் கட்டி எழுப்ப முடியாது.
இவ்வாறு ஜேவிபியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான லால் காந்த தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
ஜனநாயக ஆட்சி மக்கள் விரோத ஆட்சியாக மாறுகின்றபோது அதைக் கவிழ்ப்பதற்காக நாம் போராடுவோம். »53



## முதல்வர் விக்கியிடம் மைத்திரி உறுதிமொழி

வடக்கில் விவசாய ஆராய்ச்சி உதவியாளர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படுமாம்

யாழ்ப்பாணம், மே 7
"வடக்கு மாகாணத்தில், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்குரிய அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்பிக்கப்பட்டு நியமனங்களுக்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்" இவ்வாறு »53

## பஸ் வழித்தட அனுமதிக்கு அறவீடு செய்த பணத்தை திருப்பித் தரவேண்டும்

அரச தலைவரிடம் நேரில் கேட்டார் முதல்மைச்சர்

யாழ்ப்பாணம், மே 7
"தனியார் பேருந்துகளிடம் வழித்தட அனுமதிக்காக மாவட்டச் செயலகம் ஊடாக மாகாண சபையின் ஆயுள் காலத்தில் அறவிடப்பட்ட பணத்தை கொழும்பு அரசின் போக்குவரத்து ஆணைக்குழு, வடக்கு மாகாண போக்குவரத்துஅமைச்சிடம் மீள வழங்க வேண்டும்" இவ்வாறு »53

## மோடியுடனான சந்திப்பில் முக்கியமானவை பேசப்படும்

சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7
"தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை, அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடனான சந்திப்பில் நிச்சயமாகப் பேசப்படும். இந்தச் சந்திப்பு 12 ஆம் திகதி »53

# முழு அடைப்புக்கு மகிந்த அணியினர் மும்முரமான முயற்சி

அரசுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கத் திட்டம்

கொழும்பு, மே 7
உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துமாறு அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் நாடு முழுவதிலும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுப்பதற்கு மகிந்த ஆதரவு அணி தீர்மானித்துள்ளது.
மகிந்த அணியின் மே தினக் கூட்டத்தில் லட்சக் கணக்கானோர் திரண்டனர். அதே வேகத்தோடு நாடு முழுவதும் முழு அடைப்பை நடத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்க மகிந்த அணியினர் திட்டமிட்டுள்ளனர்.
இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவை எடுப்பதற்கு மகிந்த அணியின் முக்கிய உறுப்பினர்கள் முன்னாள் அரச தலைவர் மகிந்த »53



கொஞ்சநாள் அடங்கியிருந்த பூதம் திரும்ப கிளம்பியிருக்கு போல...

## பணிஸ் துண்டு தொண்டையில் சிக்குண்டதில் குழந்தை சாவு

கொழும்பு, மே 7
பணிஸை உண்டபோது அதன் சிறு துண்டொன்று தொண்டையில் சிக்கியதால் மூச்சுத்திணறிய குழந்தை »53

## பொன்சேகாவுக்குப் புதிய பதவி
## அரசின் போக்கை அறிவதில் இராஜதந்திரிகள் முனைப்பு

கொழும்பு, மே 7
அமைச்சர் பொன்சேகாவுக்கு வழங்கப்படவுள்ள புதிய பதவி தொடர்பில் அறிந்து கொள்வதற்கு இராஜதந்திரிகள் முனைப்புக் காட்டி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
அரசுக்கு எதிராக நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிப் புறக்கணிப்புப் போராட்டங்களின் போது, இராணுவத்தில் சிறப்புச் செயலணியை உருவாக்கி அதன் அதிகா »53

## மோடியின் பாதுகாப்பை உறுதிசெய்ய 6,000 பொலிஸார் சிறப்புக் கடமையில்

கொழும்பு, மே 7
இந்தியத் தலைமை அமைச்சரின் இலங்கைப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ள நிலையில், தலைமை அமைச்சர் மோடிக்கு கடும் பாதுகாப்பு வழங் கப்படும் என்றும் இதற்காக 6 ஆயிரம் பொலிஸார் சிறப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர தெரிவித்ததாவது: ஐ.நா வெசாக் நிகழ் »53

## வாள்வெட்டில் துண்டானது உடுவில் இளைஞனின் கை

சுதுமலையில் நேற்றுக் கொடூரம்

யாழ்ப்பாணம், மே 7
யாழ்ப்பாணம், சுதுமலையில் இளைஞர் ஒருவரின் கை வாள் வெட்டால் துண்டாடப்பட்டது. கடும் காயங்களுடன் மீட்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். »53



## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். செயலகத்தால் ஒத்திவைப்பு

போர் வீரர்கள் தினம் காரணமா?

யாழ்ப்பாணம், மே 7
வடக்கு மாகாண போர் வீரர்கள் நினைவு நாளுக்காக, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை திங்கட் »53

## உடுத்துறை கடற்கரையில் 38 கிலோ கஞ்சா சிக்கியது

இரு நாள்கள் தேடுதலில்

கிளிநொச்சி, மே 7
வெற்றிலைக்கேணி, உடுத்துறைக் கடற்கரையில் மணலில் புதைக்கப்பட்டிருந்த 38 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி, பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுத்து »53



SDB சீதனம்

நேசமிகு அர்ப்பணிப்பு
பாதுகாப்பான எதிர்காலம்

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| --- | --- | --- | --- |
| 5,000 | 395 | 1,559 | 2,440 |
| 10,000 | 7,991 | 3,117 | 4,880 |
| 25,000 | 4,977 | 7,793 | 12,202 |
| 50,000 | 9,955 | 15,586 | 24,403 |
| 75,000 | 14,932 | 23,379 | 36,605 |
| 100,000 | 19,909 | 31,172 | 48,806 |
| 500,000 | 99,549 | 155,862 | 244,031 |
| 1,000,000 | 199,099 | 311,725 | 488,062 |

Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

SDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனை ஆக்கியது மைத்திரியின் சாணக்கியம்

## முன்னாள் எம்.பி. சிறிகாந்தா தெரிவிப்பு

வவுனியா, மே 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக்கியமை மைத்திரி அரசின் சாணக்கியம்தான். சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகியதால் எமக்குத்தான் நட்டம். இது மைத்திரி அரசுக்கும், சிங்களவர்களுக்கும் இலாபம். அவர்கள் தந்திரத்தில் வென்று விட்டார்கள்.



இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தரும் சட்டத்தரணியுமான ந. சிறிகாந்தா தெரிவித்தார்.

தமிழீழவிடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறிசபாரத்தினம் மற்றும் போராளிகளின் 31 ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தற்போதைய தலைவரும் வன்னி மாவட்ட நடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிறிகாந்தா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமக்கு ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு வேண்டாம். வடக்கு கிழக்கு இணைந்த சுயநிர்ணயஉரிமையே வேண்டும்.

மகிந்த ராஜபக்சவுக்குப் பின்னால் மே தினத்தில் திரண்ட கூட்டத்தைப் பார்த்து யாரும் அச்சப்படத்தேவையில்லை. மகிந்த அண்மையில் தனது உரையில், தான் இந்தியாவின் உதவியை கோராமல் இந்தியா உதவியது. இந்தியாவின் படைவீரர்கள் கடைசி சண்டையில் பயன்படுத்தப்பட்டார்கள் என்பதைக் கூறியுள்ளார். இந்தியப் படை சிங்கள பேரினஅரசுக்கு உதவியிருக்கிறது.

உண்மையில் இன்று எதிர்க்கட்சியாக இருக்கக் கூடியவர்கள் மகிந்தவை கூட்டாகக் கொண்ட அணியே தவிர, சம்பந்தன் அல்ல. தற்போது தமிழர்களின் தலைமையை சுமந்திருப்பவர் தன்னால் முடியாவிட்டால் இன்னொருவரிடம் கையளிக்கவேண்டும். சிறந்த தகைமையும்துணிச்சலும்உள்ளவர்கள்தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளனர்.

இன்றுமைத்திரிஎமதுதாயகப்பிரதேசத்தில் கலகத்தை அடக்க சரத்பொன்சேகாவுக்குப் பதவி வழங்கித் தமிழ் இனத்தை அடக்க முயற்சித்தார். இப்போது அது பற்றி யோசிக்கிறார்களாம். தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து விடுவிக்க இராணுவத்திடம் பேச வேண்டும் என்றால் இந்த அரசு எதற்கு?". என்றார்.

நிகழ்வில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றினார்.

"முன்னாள் போராளிகளை விமர்சிக்காதீர்கள். அவர்களை கௌரவமாக வழிநடத்துங்கள். ஆயுதம் ஏந்திய போராளிகளை சிலர் விமர்சிக்கிறார்கள். எந்தவொரு முன்னாள் போராளியும் வேலை தேடி வரும்போது அவர்களுக்கு வேலை கொடுங்கள், புறக்கணிக்காதீர்கள். உங்களுக்காகத் தம்முடைய குடும்பத்தைத் துறந்து போராடியவர்கள் முன்னாள் போராளிகள்.

எங்களுடைய மக்களைக் காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் எங்களுக்குள் முரண்பாடு வேண்டாம். போராளிகளை நாங்கள் நினைவு கூருவதன் நோக்கம் எங்களுடைய கடந்தகால வாழ்க்கையை எண்ணி நிகழ்காலத்திலே எவ்வாறு நடக்க வேண்டும் என்பதற்கே. ஒவ்வொரு போராளியும் பொதுமக்களால் மதிக்கப்படவேண்டும்." என்றார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறி சபாரத்தினத்தின் 31ஆ வது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும், தமிழ் தேசிய ஒற்றுமை வாரமும் நேற்று மாலை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

ரெலோ இயக்கத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் , வட மாகாணசபை பேரவை தலைவர் சி.வி.கே.சிவஞானம், ரெலோ இயக்க செயலாளர் நாயகமும் முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான என். சிறிகாந்தா, வட மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், செ. மயூரன், இ.இந்திரராசா, ம.தியாகராசா, சிவநேசன், புவனேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரன் (ஜெனா), தெற்கு பிரதேச சபை செயலாளர் கிஷோர் சுகந்தி மற்றும் கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ந-4-402)



## வேலை தேடும் பட்டதாரிகள் விரைவில் முற்றுகைப் போர்!

யாழ்ப்பாணம், மே 7

வடக்கு மாகாண வேலை தேடும் பட்டதாரிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தவுள்ளனர். அதற்கு முன்னர் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாட ஏற்படு செய்யப்படும் என்று முதலமைச்சரின் செயலாளர் கூறியுள்ளார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 69 நாள்களாக வேலை தேடும் பட்டதாரிகள் அரச நியமனம் கோரியும், தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களில் சரியான நடைமுறையைப் பின்பற்றக் கோரியும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இது வரை அவர்களின் கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காத நிலையில் அவர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி வடக்கு மாகாண சபை முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

"கிழக்கு மாகாண முதலமைச்சர் கிழக்கு மாகாண வேலை தேடும் பட்டதாரிகளுக்கு தீர்வு வழங்க முன்வந்துள்ளார். வடக்கு முதலமைச்சரால் ஏன் இயலாது?. அவரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். எமக்கு உரிய தீர்வுகள் கிடைக்கா விட்டால் அரச திணைக்களங்களை முற்றுகையிடும் போராட்டம் தொடரும்." என்று அவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகளின் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். (ந-ரி)

## ஏற்றுமதிச் சந்தை மூலம் அபிவிருத்தி

கொழும்பு, மே 7

ஏற்றுமதிச் சந்தை ஒன்றை உருவாக்குவதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பதுளையில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

செலுத்த வேண்டியுள்ள கடன் அளவைச் செலுத்தி முடிப்பதற்காக இந்த ஏற்றுமதிப் பொருளாதார முறை மிகவும் உதவியாக இருக்கும். 2020ஆம் ஆண்டாகும் போது இலகுவான முறையில் கடன்களை செலுத்துவதற்கு வசதியான பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும் - என்றார். (ந-10)

## சிறி சபாரத்தினத்தின் நினைவு நிகழ்வுகள்

தமிழ் ஈழ விடுதலை இயக்கமான ரெலோக் கட்சியின் மறைந்த தலைவர் சிறி சபாரத்தினத்தின் முப்பத்தியோராம் ஆண்டு நினைவு நிகழ்வு அவர் கொல்லப்பட்ட இடமான கோண்டாவில் அன்னங்கை கோகிலா வீதி தோட்டவெளியில் நேற்றுக் காலை 10மணிக்கு ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் நிதிச் செயலாளருமான கே. என். விந்தன் கனகரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில்அஞ்சலியுரைகளை கட்சியின் செயலாளரும், சட்டத்தரணியுமான என். சிறிகாந்தாவும் கட்சியின் உப தலைவர் கே. ஹென்றி மகேந்திரனும் கட்சியின் தேசிய அமைப்பாளரும் வட மகாணசபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி பிரமுகர்களும், வட மாகாணசபை உறுப்பினர்களும் நிகழ்த்தினார்கள். நன்றியுரையை கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சில்வஸ்ரர் விமல்ராஜ் நிகழ்த்தினார். (ந-12)

## தேசிய நல்லிணக்கக் கொள்கை வரைவை ஏற்றது அமைச்சரவை

### சந்திரிகா வரவேற்பு

இலங்கையின் முதலாவது தேசிய நல்லிணக்கக் கொள்கை வரைவை அமைச்சரவை ஏற்றுக் கொண்டதை முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க வரவேற்றுள்ளார்.



சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தலைமையிலான தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கக் கொள்கை அலுவலகத்தின் வரைவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். அதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

நல்லிணக்கத்துக்கான தேசியக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்தும் முயற்சி 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆரம்பமானது.

வரைவுக்கான ஆலோசனைகள் சம்பந்தப்பட்ட அமைச்சுகள், பல்வேறு தரப்புகளிடம் இருந்து பெறப்பட்டன.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைகள், உடலகம ஆணைக்குழு அறிக் கைகள், பரணகம ஆணைக்குழு அறிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களும் இந்த வரைவுக்காக சீர்தூக்கி ஆராயப்பட்டன. (வ-5)

## ஹெரோயின் கடத்தல் வழக்கு

## மறியலிலுள்ள இந்தியர்கள் 6 பேரின் உறவினர்கள் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், மே 7

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் கடந்த மாதம் 2ஆம் திகதி அதிகாலையில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட 6 இந்தியர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

காங்கேசன்துறையில் இருந்து 17 கடல் மைல் தொலைவில் பயணித்த படகு ஒன்றிலிருந்து ஏப்ரல் 2ஆம் திகதி 13.5 கிலோ கிராம் உயிர்க்கொல்லிப் போதைப் பொருளான ஹெரோயின் மீட்கப்பட்டது. படகில் பயணித்த 6 இந்தியர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 6 பேரும் பொலிஸார் ஊடாக மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட னர். போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் 6 இந்தியர்களும் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒரு மாதகாலமாக அவர்கள் யாழ்ப்பாணம் விளக்கமறியல்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பான விசாரணைகளை காங்கேசன்துறைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள 6 இந்தியர்களையும் பார்வையிட்டு அவர்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் அவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்துக்கு கடந்த வாரம் வருகை தந்திருந்தனர். 6 இந்தியர்களினதும் விளக்கமறியல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை மல்லாகம் நீதிவான் மன்றால் நீடிக்கப்பட்டுள்ளது. (வ-101)

# மணல்திட்டு கடலில் எச்சரிக்கைப் பலகை

## இலங்கைக் கடற்படையால் நடப்பட்டது

சென்னை, மே 7

இந்திய மீனவர்கள் எல்லை கடந்து வராமல் தடுக்கும் வகையில் இலங்கை அரசு 5ஆவது மணல்திட்டு பகுதியில் எச்சரிக்கை பலகை வைத்துள்ளது. இலங்கை தேசிய கொடி வரையப்பட்டுள்ள இந்தப் பலகையில் சிறிலங்கா என்று எழுதப்பட்டுள்ளதாக, இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

இராமநாதபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட இந்திய மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது, எல்லைத் தாண்டி வந்து மீன் பிடித்ததாகக் கூறி இலங் கைக் கடற்படையினர் கைது செய்வதும், தடுத்து வைப்பதும் தொடர்கின்றன. கடல் நடுவே செல்லும்போது எல்லை தெரிவதில்லை என்பது தமிழக மீனவர்களின் வாதமாகும்.

இந்த நிலையில் இலங்கை அரசு 5ஆவது மணல்திட்டு பகுதியில் அந்த நாட்டு கடல் எல்லையை குறிக்கும் வகையில் பலகையை வைத்துள்ளது. எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்களை எச்சரிக்கும் வகையில் இலங்கை அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இராமேஸ்வரம், தனுஷ்கோடி 5ஆவது மணல்திட்டு பகுதியில் இந்திய அரசு ஏற்கனவே இது போன்ற அறிவிப்புப் பலகையை வைத்துள்ளது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு அரசில் மனோவுக்கு திடமான நம்பிக்கை

## போர்க்குற்ற விசாரணை நடக்குமாம்

கொழும்பு, மே 7

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை நடைபெறும் என்று அமைச்சர் மனோ கணேசன் பிபிசி செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசும் ஒரு பங்குதாரராக உள்ளதால், அந்தக் கடப்பாட்டிலிருந்து நழுவிவிடமுடியாது என்று தேசிய சகவாழ்வு மற்றும் அரச மொழிகளுக்கான அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்று கூட்டு அரசின் தலைமை கருதுமானால் அதற்கான விலையைக் கொடுத்தாக வேண்டும் என்று வலியுறுத்திய அவர், வடக்கே இராணுவம் பொதுமக்களின் நிலங்களில் இருந்து வெளியேற வேண்டும் எனும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருக்கிறார் எனவும் கூறியுள்ளார். (வ-5)

## சமூக வலைத்தளங்களில்

# எய்ட்ஸ் கிருமி குறித்து பொய்யான பரப்புரை

## மருத்துவ நிபுணர் விளக்கம்

கொழும்பு, மே 7

குருதிப் பரிசோதனை மேற்கொள்வதாகக் கூறி எச்.ஐ.வி வைரஸ் கிருமிகளைப் பரப்பி வருவதாக சமூக வலைத்தளங்களில் வைரலாகும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு இயக்கம் தெரிவித்தது.

'எச்.ஐ.வி வைரஸ் செல்கள், மனிதனின் உடலுக்கு வெளியில் நேரடியாக இருக்கும் கால அளவு மிகவும் குறைவானது என்பதனால் ஊசிகளின் மூலமாக அது பரவும் அச்சுறுத்தல் மிகவும் அரிதானது' என்று அதன் பணிப்பாளர் சிறப்பு மருத்துவ நிபுணர் சிசிர லியனகே தெரிவித்தார்.

'இலவசமாக யாராவது மருத்துவப் பரிசோதனை செய்வதாகக் கூறினால் அவதானமாக இருக்கவும். குருதிப் பரிசோதனை என்ற பெயரில், எச்.ஐ.வி. வைரஸை குருதியினுள் ஏற்றிச் செல்வார்கள். இது தொடர்பில் எச்சரிக்கையாக இருக்கவும்' என்ற செய்தி தமிழ் மற்றும் சிங்கள மொழியில் சமூக வலைத் தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வந்தது.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜயசுந்தர பண்டார, "இது பொய்யான பரப்புரை. இந்தப் பரப்புரையால் எமது பணிகள் பாதிப்படைகின்றன. யானைக் கால் நோய் பரவலாகக் காணப்படுகின்ற பிரதேசங்களில் இரவு வேளைகளில் குருதிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சமூக வலைத் தளத்தில் வெளியான பொய்ச் செய்தி எமது பணிகளை பாதிக்கின்றது" என்று தெரிவித்தார். (வ-5)

## கல்வியில் பின்னடைவு

# வடமாகாண சபை மீது தவராசா குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே 7

"வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு மூன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருப்பது கவலைக்குரிய விடயம். இதற்கான முழுப்பொறுப்பையும் வடக்கு மாகாண சபைதான் ஏற்க வேண்டும்"

இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள முதலமைச்சர்களில் தகுதி கூடியவர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கி னேஸ்வரன். அது அனைவருக்கும் தெரியும். அண்மையில் கல்வி அமைச்சருடன் வட மேல் மாகாணத்தில் வயம்ப எனும் இடத்தில் கூட்டம் ஒன்றுக்கு சென்றிருந்தேன். மேல் மாகாண முதலமைச்சர் 8ஆம் ஆண்டுதான் படித்தவர் என்று அங்கு தெரிவித்தனர். ஆனால் அவர் அந்த மாகாணத்தைச் சிறப்பாக கொண்டு நடத்துகின்றார். ஆள்வதற்குத் தகுதி அல்ல முக்கியம் ஆளுமைதான் தேவை அவரிடம் ஆளுமை இருக்கிறது. இதனைப் பல இடங்களில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அதுமாதிரித்தான் வடக்கு கல்வி அமைச்சரும். அவர் ஆசிரியராக, அதிபராக, வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து கல்வி அமைச்சராக வந்தவர் என்பது முக்கியமல்ல. அவரது ஆளுமைதான் முக்கியமானது.

வடக்கின் கல்வித்துறையில் வளங்கள் சரியாக பகிரப்படாமை, அது சரியாகப் பயன்படுத்தப்படாமை மற்றும் நெறிப்படுத்தப்படாமை போன்ற காரணங்களால் கல்வித்துறை என்றுமில்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கின் கல்வி வீழ்ச்சி தொடர்பாக ஆரம்பத்தில் என்னால் கேள்வி எழுப்பப்பட்ட போது, முன்னாள் வடக்கு ஆளுநர் மற்றும் மகிந்த அரசு மீதும் அந்த அரசுக்கு ஆதரவு வழங்கிய அரசியல் கட்சிகள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் வளங்கள் உள்ளிட்ட கல்வித் துறையின் வளங்கள் சரியாக, முறையாகப் பங்கிடப்படவில்லை. இலங்கையில் ஆசிரியர் மாணவர் விகிதாசார நியமம் 18 க்கு ஒன்றாக இருக்க வேண்டும். ஆனால் வடக்கில் 16க்கு ஒன்றாக காணப்படுகிறது. எனவே வளங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் அந்த வளங்களை சரியாகப் பயன்படுத்தவோ, பங்கிடப்படவோ, நெறிப்படுத்தப்படவோ முடியாத வினைத்திறனற்ற நிர்வாகமே காணப்படுகிறது. இதனாலேயே இந்த மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக ஒரு சில வலயங்களில் கல்வித்துறையின் ஆளணி வளம் குவிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ தடவைகள் எடுத்துக் கூறியும் அது சீர்செய்யப்படவில்லை. அதற்கு மேலதிகமாக இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டார்கள். குறிப்பாக வன்னி பிரதேசங்களில் அவர்களை நியமிக்கவே முன்னுரிமை அளிக்கப்பட்டது. 400 பேரளவில் யாழ்ப்பாணத்துக்கு வெளியே நியமிக்கப்பட்டார்கள். அதில் 50 பேர் ஒத்து இடமாறுதல் மூலம் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்றார்கள். ஆனால் 75 பேர் அரசியல்வாதிகளின் பரிந்துரை மற்றும் உயர்மட்ட செல்வாக்கின் அடிப்படையிலும் யாழப்பர்ணத்துக்கு வந்துவிட்டார்கள். இதில் எந்தெந்த அரசியல்வாதிகள் ஈடுப்பட்டுள்ளனர் என்ற ஆதாரமும் என்னிடம் உண்டு.

வளங்களைச் சரியாக நெறிப்படுத்தி அதற்கான ஆளுமையான தலைமைத்துவத்தை வழங்கி வினைத்திறனான செயற்பாடுகளைக் கொண்டு நடத்தவே அரசியல் தலைமைத்தும் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

வடக்கிலும் முதலமைச்சர், அமைச்சர்கள் அவர்களுக்குச் சம்பளங்கள், சலுகைகள் மற்றும் உறுப்பினர்கள் அவர்களுக்கு சம்பளம் என வழங்கி வருவது ஏன்? மக்களுக்கு வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே. ஆனால் அது எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை - என்றார். (வ-21,35)

# கிளிநொச்சி, வவுனியாவில் நேற்றுப் பொழிந்தது மழை



கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நேற்று மழை பொழிய ஆரம்பித்துள்ளது. கடும் வெப்பமான கால நிலை அண்மைய நாள்களாக நிலவி வந்த நிலையில் மழை பொழிந்தமையால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிளிநொச்சியில் அக்கராயன், ஆனைவிழுந்தான், வன்னேரி, ஸ்கந்தபுரம் உள்ளிட்ட இடங்களில் தொடர்ச்சியாக மழை பெய்துள்ளது. வவுனியாவில் நகரை அண்டிய பகுதிகளில் மழை பொழிந்தது.

அக்கராயன், ஆனைவிழுந்தான் பிரதான வீதிகள் சீரமைப்புச் செய்யபடாதுள்ளன. மழை பெய்ததால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த வீதிகளை சீரமைப்புச் செய்து தர வேண்டும் என்று நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடுக்கப் படும் நிலையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ற-21)

# போசகர் பதவியிலிருந்து தூக்கப்படுவாரா மகிந்த?

## அடுத்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எனத் தகவல்

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போசகர் பதவியில் தொடர்ந்து அனுமதிப்பதா என்பது தொடர்பாக தீர்மானம் கட்சியின் அடுத்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது என்று கட்சித் தகவல்கள் கூறுகின்றன. எதிர்வரும் வாரம் வெசாக் பூரணை தினத்தின் பின்னர் கூடவுள்ள கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது. கட்சியின் போசகராக இருந்து கொண்டு அந்தக் கட்சிக்கு எதிராக ஏனைய கட்சிகளுடன் இணைந்து மகிந்த ராஜபக்ச செயற்படுகின்றார் என்றும், இவ்வாறான ஒருவரைப் போசகராகக் கொண்டிருப்பது பல்வேறு பிரச்சினைகளுக் இடமளிக்கும் என்றும் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். கடந்த மே தினக் கூட்டத்தில் மகிந்த தலைமைத்துவத்தை சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வழங்கியிருந்தார். சுதந்திரக் கட்சியின் 52 உறுப்பினர்கள் அவருடன் இணைந்திருந்தனர். இது சுதந்திரக் கட்சியை இரண்டுபடுத்தும் செயல் என்பதில் சந்தேகமில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும். அதற்கு முன்னர் கட்சிகு எதிராகச் செயற்படுவர்களை ஓரம் கட்டி கட்சியைப் பலப்படுத்த வேண்டும். மகிந்தவின் கனவு ஒருபோதும் பலிக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இரு வேடமிடுகின்றது த.தே.கூ.

## சாடுகின்றது த.தே.ம. முன்னணி

யாழ்ப்பாணம், மே 7

உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

அந்தக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் சிவகுரு இளங்கோ அனுப்பியுள்ள பத்திரிகைக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்தச் சட்ட வரைபின் உள்ளடக்கம் தொடர்பாக அதிர்ச்சியடைந்துள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகின்றது. தமிழ் மக்களை மிருகங்களைப் போன்று கொடூரமாக அடக்கக் கூடிய சட்டவரைபு என்பதை நன்கு தெரிந்து கொண்டு மறைமுகமாக ஆதரவைத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக சட்டவரைபின் உள்ளடக்கம் தொடர்பில் அதிர்ச்சியடைகின்றோம் என்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர். என்றுள்ளது. (ற-5)


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
**தாவீதுப்பிள்ளை அல்போன்ஸ்**
(முன்னாள் ஊழியர் பரந்தன் இரசாயனபொருள்கள் கூட்டுத்தாபனம் )

ஆரத்தழுவி அணைத்தகையைத் தேடுகின்றோம்
வாரியெடுத்து அணைத்த நெஞ்சைத் தேடுகின்றோம்
பாசமொழிபேசி பாசத்தோடு எமை அணைத்த
நேசமுள்ள அப்பப்பாவே நெடுந்தூரம் போனீரோ !

நீங்கள் எமைவிட்டு நான்காண்டு போனாலும்
நேற்றுப்போல் எம் மனதில் -
- நிலையாய் இருக்கின்றீர்கள்
போற்றி வளர்த்தீர்கள் புத்திமதி சொன்னீர்கள்
ஏற்றமொடு நாம் வாழ ஆசீர் வழங்குங்கள்.

தோற்றம் 23.04.1934
மறைவு 07.05.2013

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் கொள்ளை; பெண் உட்பட மூவர் கைது

கொழும்பு, மே 7

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்து ஆலயங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு விநாயகபுரம் கிராமத்தில் அமைந்துள்ள படபத்திர காளியம்மன் ஆலயத்தின் மூலஸ்தான கதவு உடைக்கப்பட்டு நகைகள் திருடப்பட்டன. இது தொடர்பாக ஆலய தலைவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

இந்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கொள்ளையிடப்புட்ட தங்க நகைகள் மீட்கப்பட்டன. சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ - 10)

# இலவச முன்னோடிப் பரீட்சை

வவுனியா,மே 7

வவுனியா அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் "மாணவர்களின் கல்வி நிலையைக் கண்டறிதலும் அதனை மேம்படுத்தலும்" எனும் தொனிப்பொருளில் ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள கணித,உயிரியல்,மற்றும் வர்த்தக பிரிவு மாணவர்களுக்கான இலவச முன்னோடிப் பரீட்சை நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வவுனியா,கிளிநொச்சி,முல்லைத்தீவு,மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையின். வினாத்தாள்கள் திருத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. (ஜ - 8)

**வேலையாள்கள் தேவை**

*Technical Officer (Minimum 2 years Experience)
*Technical Assistant (Minimum 1 year Experience)
*Technical Trainee
*Accounts Assistant
*மேசன். உதவியாளர்
*வெல்டர். உதவியாளர்
*அலுமினிய பிற்றிங் வேலை தெரிந்தவர்
*தச்சுத்தொழிலாளி. உதவியாளர்.

076 310 1597
bluestarbuilders@hotmail.com

**Florance Nighhtingaale**
**School of Nursing**

**நீங்கள் தாதியராக தொழில்புரிய ஆசைப்படுகின்றீர்களா?**
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி
3மாத தனியார் வைத்திய சாலையில் பயிற்சியின் பின் நிரந்தர வேலைவாய்ப்பு.
தகைமை : O/L 6 பாடம் சித்தி
வயது : 17-35 வரை
அலுவலக நேரம் 8.00 - 4.00 மணிவரை
(CS 3795 b)(10)

தொடர்புகளுக்கு: 0777186438 / 021 4928916
கே.கே.எஸ் றோட், மருதனார் மடம்.

**சைப்பிரஸ் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

➤ ஹவுஸ் மேட் - 20 — 327 - 350 Euro சம்பளம் : Rs.58,100/-
➤ லேபர் - 20 ( ஆண்) — 374 - 455 Euro சம்பளம் : Rs.75,530/-
1 EURO = Rs.166.00

நியந்தனைகள் & சலுகைகள் :
- உணவு வழங்கப்படும்
- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம் • வேலை நேரம் ஒரு நாளைக்கு 7 மணிநேரம் / வாரத்தில் 46 மணிநேரம் • ஒரு நாள் லீவு வழங்கப்படும்.
- இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு 4 வருட சேவை முடிவின் பின்னர்.
- ஏனைய நியந்தனைகளும்,விதிமுறைகளும் சைப்பிரஸ் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

வயது : 45 வயதிற்கு கீழ்

INTERVIEW Daily
பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.

Hot Line : 072 720 0005
0112552598 / 0773074744
0726999886
max adz

**MayZone College**
*The Capstone of Success*

GRAPHICS . ANIMATION . MULTIMEDIA
Diploma in Digital Pre-Press
Diploma in Digital Video Production
Duration : 3 Months
Diploma in Web Animation
Diploma in 2D & 3D Animation

விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்
DiTEC Diploma in Information Technology
AdOA Adv. Diploma in Office Administration
DiCA Computerized Tally Accounting
DiWP Diploma in Web Programming
DiWD Diploma in Web design & Development
AdCHN Adv. Diploma in Hardware & Networking
Duration : 3 Months for all courses

- 100% Practical Classes
- Events & Activities
- A/C Labs & Classes
- Certified & Experienced Faculties
- Personality Development & English Speaking

IELTS A1
திருமணம் முடித்து வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான புதிய பிரிவு 10.05.2017

NO.61,3rd Floor,Palaly Road,Jaffna
021 722 3444/ 0768508894

**Florance Nighhtingaale**
**School of Nursing**

**தற்போது எங்களின் புதிய சேவையாக நோயாளர்களை பராமரிக்கும் சேவையை ஆரம்பித்துள்ளோம்**

சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பவதிகள் அனைவரையும் தங்கள் இல்லங்களுக்கு வருகை தந்து அக்கறையுடன் சேவை மனப்பாங்குடன் கவனித்துக் கொள்வதற்கு உதவித் தாதியர் பயிற்சிப் பெற்ற தாதியர்கள் எங்களிடம் இருக்கின்றனர்.

**தங்கள் தேவையறிந்து சேவை செய்ய நாங்கள் காத்திருக்கின்றோம்**



(CS 3795 a) (10)

தொடர்புகளுக்கு: 0777186438
கே.கே.எஸ் றோட், மருதனார் மடம்.

## கேள்விஅறிவித்தல்
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2017
## வேலணை பிரதேசசபை

**ஒப்பந்தபெயர், இல : நயினாதீவு ஆலம்புலம் வீதி புன்ரமைப்பு** NP/14/41(18)/7/PSDG/ 01/2017

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு. **வேலணை பிரதேச சபை, வங்களாவடி வேலணை,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிர்மாண/ புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் குறிப்பிடப்பட்ட திட்டங்களிற்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம்** (தொலைபேசி இல: **-021 221 1506,** மின்னஞ்சல் - **velanaips@gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 29.05.2017 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 08.05.2017 ஆம் திகதியிலிருந்து 29.05.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **1,500/-** (வற்வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இருபிரதிகளில் தயாரித்து **தலைவர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 29.05.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்ப டவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 77 (எழுபத்து ஏழு - 14.08.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.Mn) | ஒப்பந்த காலம் | தேவையானதரம் | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | தேவைப்படும் காலம் |
| NP/14/41(18)/7/PSDG/01/2017 | ஆலம்புலம் வீதிபுனரமைப்பு | Rs.3.88 | 04 மாதங்கள் | C8 அல்லது அதற்குமேல் | Rs. 40,000.00 | 11.09.2017 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வேலணை பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் 23.05.2017 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்த காரர்கள் தமது செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்றபெறுகைக்குழு,**
**வேலணைபிரதேச சபை,**
**வங்களாவடி, வேலணை.**
**08.05.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு ஸ்ரீ யோக

ம

# ஜீர்ணோத்தஸ்தாரண

# மஹா கு



### மல்லாவி சிவனுக்கு மகத்தான கும்ப

கோமாதா, தலவிருட்சம், தாமரைத்தடாகம், போன்ற தெய்வீக சூழல் பொழி சமேத யோகபுரநாதர் ஆலயம் புனருத்தரான பணிகள் புரிந்து, புதுப்பொ மஹாகும்பாபிஷேக பெருவிழா நடைபெறுவதை இட்டு அகமகிழ்கின்றோம். சிவப்பணியில் பங்கு கொள்ளும் அனைவரும் மிகவும் பாக்கியசாலிகள். சோழ அ அரிதான பொக்கிஷம். இப்படியான நூற்றாண்டு பழமை வாய்ந்த ஆலய பொக்கிஷங்கள் எமது ஸ்ரீராஜகணபதி ஆலய அறங்காவலர் திரு.ஷண்முககுமாரன் நவரட்ணம். இவ்வாலய மஹாகு பரிபாலன சபையினர், திருப்பணிச் சபையினர், கும்பாபிஷேக குழுவினர் என அனைவரி துன்னையூர் கலாநிதி சிவசக்திஸ்ரீ ராம் தேவலோகேஸ்வர குருக்கள் தலைமையில் நடை யோகபுரநாதர் திருவருளை பரவச் செய்து இப் பாரெங்கும் சாந்தி, சமாதானம்,அமைதி மற்றும் ம

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



### மல்லாவி சிவனுக்கு மங்கள நீராட்டு

வன்னி பெருநிலம் மல்லாவி யோகபுரம் ஸ்ரீ யோகாம்பிகை சமேத ஸ்ரீ யோகபுரநாதர் ஆலயம் திருவருளும், கீர்த்தியும் கொண்ட திருத்தலமாகும் இவ்வாலயம் புனருத்தாரண பணிகள் அழகுற அமைக்கபெற்று ஆகம நியமம் வழுவாத அற்புத ஆலயமாய் காண்போரை கவர்ந்திடும் வகையில் பூரணத்துவ பொலிவு பெற்று இன்று 07.05.2017 ஞாயிறுவாரம் சித்திரை திங்கள் உத்தரம் நட்சத்திரத்திலே விண்ணவரும் மண்ணவரும் துதி செய்ய நனி சிறக்கும் நன்னீராட்டு விழாவாக அமைகின்றது. புராதன சிற்ப சாஸ்திர அமைப்புடைய இவ்வாலயம் மூலவர் லிங்கமானது இலங்கையில் உள்ள தனித்துவமான அமைப்புடன் அருட்பிரவாகமாக மிளிர்கின்றது. ஈர்த்தென்னை "ஆட்கொண்ட எந்தை பெருமானே" எனும் சிவபுராண கூற்றுக்கு அமைய எம்மையும் ஈர்த்து தம்பணி செய்ய வைத்தார். இக்குட முழுக்கு பெருவிழா திருவருள் அனைவரையும் சார்ந்து நல்லருள் பொழிய ஸ்ரீ யோகாம்பிகா சமேத ஸ்ரீ யோகபுரநாதர் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றேன். மல்லாவி சிவனுக்கு மங்கள நீராட்டு மலரட்டும் மனங்களில் ஆன்மீக பேரூற்று.

அன்பே சிவம்

கும்பாபிஷேக பிரதம பிரதிஸ்டா குரு.
கலாநிதி. சிவசக்திஸ்ரீ. ராம் தேவலோகேஷ்வர குருக்கள்.
(சாரதா பீடம் துன்னையூர்)



### ஆசிச்செய்தி

மல்லாவிப் பகுதியிலே குடிகொண்டு அடியவர்களுக் கெல்லாம் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் யோகம்பிகா சமேத யோகபுரநாதர் ஆலயம் மஹாகும்பாபி ஷேக பெருவிழா 07.05.2017 ஞாயிற்றுக் கிழமை காலை 06.46 முதல் 08.24 வரை நடைபெறுவதால் உள்ளத்தால் பெரு மகிழ்வடைகின்றேன். எம்பெரு மான் அடியவர்களின் உதவியோடு இக் கோயில் பெருவிழாக் காண்பது பெருமைக் குரியதே எல்லா நிகழ்வுகளும் சிறப்புற நிறைவேற்றி நிற்க ஆசி கூறுகின்றேன்

"ஓம் சிவாய நம"

ஆலய குரு
சிவஸ்ரீ திருஞானசம்பந்த குருக்கள்
ஞானப்பிரகாசக் குருக்கள்.
(தென்னிந்திய வேதாரணிய ஆதீன பரம்பரை)



### வாழ்த்து செய்தி

வன்னிப் பெருநிலப்பரப்பில் மல்லாவி நகரிலே மக்களுக்கு இடையறாது அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம் என திருநாமம் இட்ட மல்லாவி சிவன்கோயிலின் மகாகும்பாபிஷேக பெருவிழா இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 06.46 முதல் 08.24 வரை சைவ ஆகம விதிப்படி தெய்வ அனுக்கிரகத்துடன் மங்களகரமாக தெய்வ அருள் பாலிக்க சிறப்புடன் நடைபெறவேண்டுமென்றும் நொந்து போன மக்கள் தங்கள் வலிகளை கொட்டித் தீர்த்து சுமைகளை இறக்கி புதிய வாழ்வுக்குள் புகுவதற்காக நடைபெறுகின்ற இந்த கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

கொடிய யுத்தத்தின் விளைவுகளால் கட்டட இடிபாடுகளில் இருந்து தன்னை தற்காத்து கொண்ட சிவன் மக்களையும் பாதுகாத்து இந்த வன்னி பெருநிலப்பரப்பில் தன் அருளினால் மீளக்குடியமர்த்தியுள்ளார். அந்த அருள்மிகு கைங்கரியத்தை தன்னால் நடத்தி அந்த மக்களை கொண்டே த்ன் எதிர்கால இருப்பையும் அருள் பாலிப்பையும் செவ்வனவே மக்களுக்கு நிறைவேற்ற கலை அம்சங்களுடன் ஆகம நெறி பிறளாது ஆலய நிர்மாணப்பணிகள் நிறைவடைந்து அதில் புனிதமாக்கப்பட்ட இறையருள் வடிவமாக அந்த மூலஸ்தானத்தில் இருந்து ஏதிலிகளாக வரும் மக்களுக்கு அருள்பாலிக்க வேண்டுமென்று ஸ்ரீ யோகாம்பிகை சமேத் யோகபுரநாதரை பஞ்சாங்க நமஸ்காரம் செலுத்தி பயபக்தியுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

மக்கள் சேவையில் உள்ள,
திருமதி சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னிமாவட்டம்.

## மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

முத்துப்பிள்ளையார்
வண்ணச்சோலை



ஆண் பெண் இருபாலாருக்குமான
ஆடைத்தெரிவிற்கு
நாடவேண்டிய ஒரே இடம்
முத்துப்பிள்ளையார்
வண்ணச்சோலை
மல்லாவி, கிளிநொச்சி.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

ஏகாம்பரம்
டெக்ஸ்டைல்ஸ்




யாழ்ப்பாணம்

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோ

பிள்ளையார்
ஹட்வேய
மற்றும் அரிசி ஆலை

மொத்தமாகவும், சில்லறையாகவும்
இங்கு பெற்றுக்கொள்ள முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகர்களுக்கு சுகாதாரத்துறை எச்சரிக்கை

## மென்பானங்கள், குடிதண்ணீர் போத்தல்களை வெயில்படும் வகையில் காட்சிப்படுத்தக்கூடாது

தென்மராட்சி, மே 7

திறந்த வாகனங்களில் மென்பானங்கள் மற்றும் குடி தண்ணீரை எடுத்துச் செல்வதையும் வர்த்தக நிலையங்களில் வெயில்படும் இடங்களில் அவற்றைக் காட்சிக்கு வைக்கக்கூடாது எனவும் சுகாதாரத் துறையினர் அறிவித்தனர்.

"அண்மைய வெப்ப காலத்தில் பொதுமக்கள் மென்பானங்கள்மற்றும்குடிதண்ணீர்ப் போத்தல்களை அதிகளவில் கொள்வனவு செய்கின்றனர். மென்பானங்கள் மற்றும் குடிதண்ணீர் போன்றவற்றில் வெயில் ஒளிபடுவதால் அதன் கூறுகளில் பாதிப்பு ஏற்பட்டு அவற்றை அருந்துவோருக்கு உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்படுகின்றது.

எனவே பொதுமக்கள் நலன் கருதி மென்பானங்கள் மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்களை விநியோகத்துக்காக மூடிய வாகனத்தில் எடுத்துச் செல்ல வேண்டும். வர்த்தக நிலையங்களில் அவற்றைக் காட்சிப்படுத்தும் போதும் வெயில் படாத இடங்களில் வைக்க வேண்டும். திறந்த வாகனங்களில் மென்பானங்கள் மற்றும் குடிதண்ணீர் போத்தல்களை எடுத்துச்செல்வதும் வர்த்தக நிலை யங்களில் வெயில்படும் இடங்களில் அவற்றை வைத்திருப்பதும் கண்டுபிடிக்கப்படின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சுகாதாரத்துறையினர்மேலும் தெரிவித்தனர். (வ -9)

## வடக்கு சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் சதி

### பாதிக்கப்பட்டோர் மைத்திரிக்குக் கடிதம்

"ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைய வேண்டும் என்ற காரணத்தைக் கூறி இந்த முறையும் சுகாதார தொண்டர்களாகிய எமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதிலிருந்து தட்டிக்கழிக்க அதிகாரிகள் முயற்சிக்கின்றனர்"

இவ்வாறு தெரிவித்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் அரச தலைவருக்கு கடிதம் அனுப்பினர். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுகாதாரத்தொண்டர்கள் ஆகிய நாம் 1994ஆம் ஆண்டு தொடக்கம் போர்க் காலம் மற்றும் நலன்புரி நிலையங்கள் முதல்கொண்டு இன்று வரை எதுவித வேதனமுமின்றி தொண்டர் அடிப்படையில் பணியாற்றி வருகின்றோம். எமக்கான நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்து செயற்பட்டு வருகின்றோம். 2015ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதியன்று நிரந்தர நியமனம் வழங்கும் போது ஜிஎவ்ஏரிஎம் நிறுவனத்தின் கொடுப்பனவுடன் கடமையாற்றிய தொண்டர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இருந்த போதும் தகுதியிருந்தும் 2015ஆம் ஆண்டு எமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை. அடுத்த கட்டத்தில் நிரந்தர நியமனம் வழங்குவதாக அதிகாரிகளால் வாக்குறுதி வழங்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 30 வருடகாலமாக நடைபெற்ற போரால் எங்களின் கல்வியை சரியாகத் தொடரமுடியவில்லை. எனவே புதிய அரசில் எமது சேவைக்கான முடிவு வேண்டும். நிரந்தர நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆவண செய்து தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு சில கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. (வ-21)



## சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்கிறது

வவுனியா, மே 7

நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி வவுனியா மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

"1994ஆம் ஆண்டிலிருந்து எந்த விதமான கொடுப்பனவுகளும் வழங்காமல் வேலை செய்து கொண்டு இருக்கின்றோம். குடும்பநல உத்தியோகத்தர்கள். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாகக் கிராம மட்டத்திலும் கிளினிக் நடைபெறும் நிலையங்களிலும் பணியாற்றி வருகின்றோம். அலுவலகத்தில் பணியாற்றுபவர்களும் இருக்கின்றோம்.

சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனங்கள் நடைபெறும் போது எங்களுடைய பெயர்கள் விடுபட்டுள்ளன. தகுதியான சுகாதாத்ர தொண்டர்களை உள்வாங்கவில்லை. மாகாண சபை நிர்வாகத்தால் தவறிழைக்கப்பட்டுள்ளது. ஏன் அப்படி நடைபெற்றுள்ளது என்பது தொடர்பாக நாங்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். சுகாதாரத் தொண்டர்களை ஏன் உள்வாங்கவில்லை?. இரு வாரங்கள் பொறுங்கள் உங்களுக்கு சரியான பதில் தருவதாக முதலமைச்சர் தெரிவித்தார். ஆனால் இன்று வரையும் எங்களுக்கு முதலமைச்சர் சரியான முடிவைத்தரவில்லை.

கடந்த 28ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் 25தொடக்கம் 30 வரையான சுகாதாரத் தொண்டர்கள் சென்று கலந்துரையாடியபோது, உங்கள் அனைவரையும் எனக்குத் தெரியும். நீங்கள் போர்க் காலத்தில் பணியாற்றியவர்கள்தான். உங்களுடைய நியமனம் தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சர், வடக்கு முதலமைச்சர், வடக்கு ஆளுநருடன் ஆகியோரிடம் கதைத்தக் கொண்டிருக்கின்றேன் என்று அவர் தெரிவித்தார்.

சரியான தீர்வு பெற்றுத்தருவதாக எங்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார். எமக்கு நிரந்தர நியணம் கிடைக்கும் வரை எமது போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர். (வ-21)

# உள்ளூர் மீனவரின் வாழ்வுடமையை பறிக்கிறது நீரியல் வளத் திணைக்களம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சாடல்



யாழ்ப்பாணம்.மே 7

கொக்குளாயில் உள்ளூர் மீனவர்களின் வாழ்வுடைமையை தட்டிப்பறித்து தாரைவார்க்க கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் துணையாக உள்ளது - என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தின் இதயபூமியே கொக்குளாய். ஈழத் தமிழினத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த பாரம்பரிய தமிழரின் வாழ்வுடைமையானது விவசாயமும் மீன்பிடியுமாகும். கொக்குளாய் கிழக்குக் கிராம அலுவலர் பிரிவில் 10 கரவலைப்பாடுகள் இருப்பதை 1985ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி அரசிதழ் (வர்த்தமானி) அறிவித்தது. இந்தக் கரவலைப்பாடுகளில் ஒருபாடு மட்டும் தென்பகுதி மீனவருக்குரியதாக இருந்தது. ஏனைய 9 கரவலைப்பாடுகளும் உள்ளூர் கரவல்லை உரிமையாளர்களுக்கே சொந்தமாக இருந்தன.

1984ஆம் ஆண்டு நாயாற்றுக்கு தெற்கேயான கிராமங்கள் அரசின் வெளிப்படையான அறிவித்தல் மூலம் வெளியேற்றப்பட்டன. இதன்போது கொக்குளாய் கிராம மக்களும் வெளியேற்றப்பட்டனர். தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு வெற்று இடமாகக்காணப்பட்ட கொக்குளாய் பிரதேசத்தில் தென்னிலங்கைக் கரவலை உரிமையாளர்கள் இராணுவத்தினதும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் இசைவுடனும் தமிழருக்கு சொந்தமான கரவலைப்பாடுகளில் கரவலைத் தொழிலில் ஈடுபட்டனர். இவர்கள் திருகோணமலை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் உத்தியோகபூர்வமாக நிர்வகிக்கப்பட்டனர்.

இவ்வாறு மக்களற்ற வெற்றிடமாக காணப்பட்ட கொக்குளாயில் கரவலை நடவடிக்கைகளில் ஈடுபட்ட தென்னிலங்கை கரவலை உரிமையாளர்கள், உள்ளூர் மீனவர்களின் இறங்கு துறையிலும் அத்துமீறி கரவலை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

2010 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் கொக்குளாயில் மீள்குடியமர்த்தப்பட்டனர். இந்த நிலையில் இங்கு மீள்குடியமர்ந்த உள்ளூர் மீனவர்கள் தங்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக பாரம்பரிய இறங்குதுறையை பயன்படுத்த முயன்றபோது, அந்த இறங்குதுறையை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் இசைவுடன் அத்துமீறி கரவலையை வளைத்து வந்த தென்னிலங்கை மீனவரால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டனர். இதனால் அந்த மக்கள் தங்கள் வாழ்வுடைமையை இழந்து தமது வாழ்வாதாரத்துக்கே தவிக்கின்றனர்.

இதனை ஆராய்ந்த கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தமிழ் மக்களின் பாரம்பரிய இறங்குதுறைப் பிரதேசத்தை உத்தியோகபூர்வமாக மீன்பிடி இறங்குதுறையாக அறிவித்து கடிதம் ஒன்றை உள்ளூர் மீனவர்களுக்கு வழங்கி இருந்தார். அதனால் உள்ளூர் மீனவர்களால் தமது வாழ்வுடைமைத்தொழிலைத் தொடர முடிந்தது. இதனைப்பொறுத்துக் கொள்ள முடியாத றுக்மல் திசாரா லிசேரா என்றநபர் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் முறையிட்டார்.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், றுக்மல் திசார லிசேராவின் நெருங்கிய உறவினர் என கொக்குளாய் மக்கள் என்னிடம் தெரிவித்தனர். இதனால் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பின்படி தமிழ் மீனவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கின் அடிப்படையில் கொக்குளாயில் உள்ள 10 பாடுகளையும் அளவிட நீதிமன்றம் உத்தரவிட்டது. கடந்த மாதம் 18ஆம் திகதி நில அளவை நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின்போது கரவலைப்பாடுகளின் முன்னை நாள் உரிமையாளர்களான தமிழ் மக்கள் தமது பாடுகள் அமைந்திருந்த இடங்களை அடையாளம் காட்டினார்கள். கரைதுறைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரும் அந்த இடங்களை உறுதிப்படுத்தினார்கள். இருந்தபோதும் நீரியல் வளத் திணைக்களம் இதனை கருத்தில் கொள்ளவில்லை. தமிழ் மக்களின் இறங்குதுறை அமைந்துள்ள இடம் உள்ளடங்கலான இடத்தையே கரவலைப்பாடுகள் அமைந்துள்ள இடம் என ஒரு தலைப்பட்சமாக சாதித்தனர்.

இந்த நியாயமற்ற செயலால் தமிழ் மீனவர்களின் வாழ்வுடைமையிலும் அவர்களது குடும்பத்தின் அன்றாட உணவு, அவர்களது பிள்ளைகளின் கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூர் மீனவர்களின் இறங்குதுறையைப் பறித்து தென்னிலங்கை மீனவர்களுக்கு கொடுக்க முனைகின்ற இந்தத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு கூட்டு அரசு ஒப்புதலளித்திருப்பது மிகவும் கவலை தருவதாக அமைகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய இறங்குதுறை அவர்களிடம் கையளிக்கப்படாவிட்டால் இது தொடர்பாக அந்த மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபடுவார்கள் - என்றுள்ளது. (வ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமிகள் மீது துர்நடத்தை; செல்வந்தரின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, மே 6

கிளிநொச்சி, பளைப் பகுதியில் சிறுமிகள் மீதான துர்நடத்தைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட செல்வந்தரின் விளக்கமறியலை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடித்து கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

பளைப் பகுதியில் சிறுமிகள் மீது பாலியல் துர்நடத்தை மேற்கொள்ளப்படுவதாக பளைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஏப்ரல் 9ஆம் திகதி செல்வந்தர் ஒருவரைக் கைது செய்தனர். அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் அவரது சட்டத்தரணி மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். எனினும், சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமிகளின் மருத்துவப் பரிசோதனை அறிக்கை இன்னமும் மன்றில் முன்வைக்கப்படவில்லை மற்றும் விசாரணகள் முடிவுறாத நிலையில் சந்தேகநபரை பிணையில் விடுவிப்பது விசாரணைகளுக்குப் பாதகமாக அமையும் என்று பொலிஸார் மன்றில் ஆட்சேபனை தெரிவித்தனர். அதனையடுத்து பிணை விண்ணப்பம் மன்றால் நிராகரிக்கப்பட்டது.

சந்தேகநபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு தற்போது நீதிமன்றப் பாதுகாப்பில் இருக்கும் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனத்தை விடுவிக்கமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பொலிஸ் கண்காணிப்பில் இருக்கும் சந்தேகநபரின் ஆடம்பர வீட்டில் இரசாயன பகுப்பாய்வு சோதனைகள் முடிவடைந்தவுடன் அவற்றை மன்றில் ஒப்படைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். வழக்கு விசாரணையை எதிர்வரும் 19ஆம் திகதிவரை ஒத்திவைத்த நீதிவான் மன்று அதுவரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (வ-ய)



## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில்

# மைத்திரி மௌனம் உறவுகள் கவலை

வவுனியா, மே 7

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிந்து தருமாறு கோரி வவுனியா மாவட்டத்தில் இருந்து 7ஆயிரத்து 400 தபால்கள் அரச தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனினும் இதுவரை பதில் வழங்கப்படவில்லை"

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்தனர்.

கடத்தப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுதலையும் வலியுறுத்தி இரவுபகல் பாராது வடக்கு, கிழக்கில் தொடர்போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடர் போராட்டங்களில் கிளிநொச்சிப் போராட்டம் நேற்று 76ஆவது நாளாகவும், வவுனியாப் போராட்டம் 72ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 60ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 54ஆவது நாளாகவும், கிழக்கில் திருகோணமலையில் 64ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தன.

"வவுனியாவில் காணாமற்போனோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிந்து தருமாறு கோரி பொது மக்களால் அரச தலைவருக்குக் கடிதங்கள் அனுப்பட்டன.

இவ்வாறு இதுவரை 7ஆயிரத்து 400 தபால்கள் அனுப்பட்டுள்ளன.

அதற்கு இன்று வரையில் ஒரு பதிலும் கிடைக்க வில்லை" என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவலை தெரிவித்தனர். (வ-21)

## விசுவமடு வர்த்தகரின் விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி விசுவமடு பிரதேசத்தில் காசோலை மூலம் நிதிமோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட வர்த்தகரின் விளக்கமறியலை எதிர்வரும் 12ஆம் திகதிவரை நீடித்து கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார்.

விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் சக வர்த்தகர் ஒருவரிடம் ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையைக் கடனாகப் பெற்றுகாசோலைவழங்கி மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் குற்ற விசாரணைப் பிரிவினரால் கடந்தமாதம் 3ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டார். அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் உத்தரவில் விளக்கமறியலில் உள்ளார். இந்த வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்பட்டார்.

10 சதவீத வட்டி என்ற அடிப்படையில் பணம் பெறப்பட்டது என்றும், முதலுக்கு மேலான தொகை வட்டியாகச் செலுத்தப்பட்டிருக்கின்றது என்றும் சந்தேகநபர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான், விசாரணைகளை விரைவில் முடிவுறுத்துமாறு குற்ற விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டதுடன், சந்தேகநபரின் விளக்கமறியலை எதிர்வரும் 12ஆம் திகதி வரை நீடித்தார். (வ-ய)



## குடும்பநல மாதுக்களுக்கு கிளிநொச்சியில் கௌரவம்

கிளிநொச்சி, மே 7

உலக குடும்ப நலமாதுக்கள் தினம் கிளிநொச்சி பழைய மருத்துவமனை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரிகளின் ஒழுங்கமைப்பில் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் மகப்பேற்று நிபுணர் பாபுவும், சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் சத்தியசீலனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தமது சேவைகளை திறம்பட வழங்கிய குடும்பநல மருத்துவ மாதுக்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

உலகில் தாய்சேய் நலன்களைப் பேணிப்பாதுகாக்க உதவும் குடும்பலநல மாதுக்களின் சேவைக்கு மதிப்பளிக்கும் நோக்கில், 1992 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் மே மாதம் 5ஆம் திகதி உலக குடும்பநல மாதுக்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. (வ-ஐ-10-35)

## புளியங்கூடல் சந்திக்கு எப்போதுதான் ஒளி வரும்?

### காத்திருக்கும் தீவக மக்கள்

> வேலனை மற்றும் ஊர்காவற்துறை 2 பிரதேசங்களையும் இணைக்கும் முக்கிய சந்தியாக காணப்படும் புளியங் கூடல் சந்தி யில் நீண்ட காலமாக மின்விளக்கு பொருத்தப் படாமையால் அந்தப் பிரதேசம் இருளில் மூழ்கிக்கிடக்கிறது.

யாழ்ப்பாணம் மே 7

யாழ்ப்பாணம், தீவகம் புளியங்கூடல் சந்திப் பகுதியில் மின்விளக்கு பொருத்தப்படாமையால் அந்தப் பிரதேசம் இருளில் மூழ்கியுள்ளது. அதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

"வேலனை மற்றும் ஊர்காவற்துறை 2 பிரதேசங்களையும் இணைக்கும் முக்கிய சந்தியாகக் காணப்படும் புளியங்கூடல் சந்தியில் நீண்ட காலமாக மின்விளக்கு பொருத்தப்படாமையால் அந்தப் பிரதேசம் இருளில் மூழ்கிக்கிடக்கிறது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்பல முறை தெரிவித்த போதிலும், இன்றுவரை அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

புளியங்கூடல் சந்திப் பகுதியை இணைக்கும் வீதிகளில்ஒருபகுதிவீதிவேலணைப் பிரதேச சபைக்கும் மற்றைய பகுதி ஊர்காவற்துறை பிரதேச சபைக்கும் உரித்தானதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் மின்விளக்குகளைப் பொருத்துமாறு கோரிக்கைகளை முன்வைத்த போதும், இது எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதி இல்லை என்று 2 பிரதேச சபை அதிகாரிகளும் தெரிவித்துவிட்டனர். தவிர இந்தப் பிரச்சனைக்குத் தீர்வை வழங்கும் முயற்சிகளை அவர்கள் எடுப்பதாகவும் இல்லை" என்று மக்கள் தெரிவித்தனர்.

"புளியங்கூடல் சந்தியின் ஒரு பகுதி வீதி ஊர்காவற்துறை பிரதேச சபைக்கும் மற்றைய பகுதி வேலணைப் பிரதேச சபைக்கும் உரியவையாகும். புளியங்கூடல் சந்திப் பகுதியில் மின்விளக்கு பொருத்துவது தொடர்பாக எம்முடன் சிலர் கதைத்தார்கள். அதன் போது நாம் அவர்களிடம் மின் விளக்கு பொருத்துவது தொடர்பில் இருக்கின்ற சிக்கல்கள் தொடர்பாக எடுத்துக் கூறினோம்.

பொதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வருமானம் குறைந்த பிரதேச சபையாக ஊர்காவற்துறை பிரதேச சபையே காணப்படுகின்றது. இந்த நிலையில் எமது பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் அனைத்தும் எமது சபையால் பொருத்தப்பட்டுள்ளன.

எனினும் அவற்றுக்கான மின்னிணைப்புக்கள் பொதுமக்களின் வீடுகளில்இருந்தேபெறப்பட்டு வருகின்றன.

இந்த சிக்கலே புளியங்கூடல் சந்திப்பகுதிக்கு மின்குமிழ் பொருத்துவதிலும் ஏற்பட்டுள்ளது. எனினும் எமது பிரதேச சபையால் மின்குமிழ் தொகுதியை வழங்குவதற்கு தயராக இருக்கின்றோம்.

அதற்கான மின்னிணைப்பை வழங்குவதற்கு அந்தச் சந்திக்கு அண்மையில் உள்ள வர்த்தகர்கள் யாரும் முன்வரவில்லை. அவர்கள் முன்வருவார்களாயின் மின்விளக்கை உடனடியாகப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக இதுவரை தமக்கு எந்தக் கோரிக்கைகளும் முன்வைக்கப்படவில்லை என்று வேலணை பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சிறுநீரகச் சோதனை

## வடக்கு சுகாதார அமைச்சர் அறிவிப்பு

வவுனியா, மே 7

"வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சிறுநீரகப் பரிசோதனை மேற்கொள்வதற்கு திட்மிடப்பட்டுள்ளது. சிறுநீரக நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இலங்கையிலேயே முதன் முறையாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது"

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

சிறுநீரகப்பிரச்சினை தொடர்பான மீளாய்வுக்கூட்டம் வவுனியா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுந்தினம் மாலை இடம்பெற்றது. கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் காணப்படக்கூடிய நாள்பட்ட சிறுநீரக நோய் சம்பந்தமான நடவடிக்கைகளின் மீளாய்வு க் கூட்டம் இன்று (நேற்று முந்தினம்) வவுனியாவில் இடம்பெற்றது. சிறுநீரக நோய் குறித்த மருத்துவ அதிகாரிகள், சிறப்பு மருத்துவ நிபுணர்கள், சுகாதார அதிகாரிகள் உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர். வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறுநீரக நோய் பாதிப்புக் குறித்த முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. சிறுநீரக நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து கட்டுப்படுத்துவது தொடர்பாக இலங்கையிலேயே முதன் முறையாக இந்தக் கூட்டத்தில் ஆரயப்பட்டது. சிறுநீரக நோய்ப் பாதிப்புக்குள்ளாகிய அதிகளவானோரைக்கொண்ட இடங்களைக் கண்டறிந்து, அங்கு 20 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளளது.

வவுனியா மாவட்டத்திலே ஒரு வருடத்தில் மொத்தமாக ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 454 பேரை பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அவர்களுடைய குருதி மாதிரிகளையும் சிறுநீர் மாதிரிகளையும் எடுத்து வைத்தியசாலையில் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்ட உள்ளன. தற்போது இந்தப் பரிசோதனைகள் செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையிலும் வவுனியா பொது வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு ஆளணிப் பற்றாக்குறை மற்றும் ஆய்வுகூட வசதிகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதற்கு பொறுப்பாகவுள்ள மருத்துவ அதிகாரியால் அனுப்பப்படுகின்ற குருதி மற்றும் சிறுநீர் மாதிரிகள் வவுனியா, செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அனுப்பி பரிசோதனைக்கு உட்படுத்துவதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான வளப்பற்றாக் குறை கொழும்பு சுகாதார அமைச்சருடன் பேச்சு நடத்தி வெகுவிரைவில் தீர்வைப் பெறுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

கடந்த வருடம் 30ஆயிரம் பேரிடம் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. குருதி மாதிரிகள், சிறுநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டன. அவர்களில் 961 பேர் வவுனியா வைத்தியசாலைக்கு மேலதிக பரிசோதனைக்காக அனுப்பப்பட்டனர். அவர்களில் 822 பேர் தொடர் பரிசோதனைக்காக மீண்டும் மீண்டும் வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களில் 568 பேர் நாள்பட்ட சிறுநீரக நோய்க்குள்ளாகியவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாட்டத்திலும் சீறுநீரகப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு 2 நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

எனினும் முதற்கட்டமாக செட்டிக்குளம், மல்லாவி ஆகிய 2 நிலையங்களும் இரண்டு மாதங்களுக்குள் திறந்துவைக்கப்படும். நாள்பட்ட சிறுநீரக நோய்க்கான பல காரணங்கள் காணப்படுகின்றன. மிகவும் முக்கிய காரணமாக அவர்களுக்கு இராசயனங்கள் கலக்காத சுத்தமான குடிதண்ணீர் பெற்றுக்கொள்ளக்கூடிய தேவை இருக்கின்றது. மீளாய்வுக் கூட்டங்களை ஒவ்வோரு மாதமும் வவுனியாவில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த மீளாய்வுக் கூட்டத்தை எதிர்வரும் 18ஆம் திகதி நடாத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டது-என்றார்.

(வ-21)

# நல்லாட்சி அரசும் எமக்கு துரோகமிழைத்துவிட்டது

## இரணைதீவு மக்கள் வேதனை

யாழ்ப்பாணம், மே 7

"நல்லாட்சி அரசை ஏற்படுத்துங்கள். உங்களின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று எங்களது தலைமைகள் சொன்னார்கள். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. எங்களால் உருவான நல்லாட்சி அரசும் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டது"

இவ்வாறு இரணைதீவில் தொடர் போராட்டத்தைமுன்னெடுத்துள்ள மக்கள் தெரிவித்தனர்.

தமது காணிகளை விடுவிக்கக் கோரி இரணைதீவு மக்கள் நேற்று 6ஆவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தாம் மீண்டும் ஊருக்குச் செல்லும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்த குடும்பத் தலைமைத்துவப் பெண் ஒருவர் தனது ஊரைப்பற்றி தெரிவித்ததாவது:

எங்கள் ஊரில் (இரணைதீவில்) இருந்த காலத்தில் காலையில் 6 மணிக்குக் கடலுக்குச் சென்றால் ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்துவிடுவோம். அதற்கிடையில் எங்களுக்குகிடைக்கின்ற வருமானம் வாழ்க்கைச் செலவைக் கொண்டு நடத்த போதுமானதாக இருக்கும். 4 வகையான தொழிலைச் செய்து வந்தோம். ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. மிகவும் வறுமையின் மத்தியில் வாழ்கின்றோம். வாழ்வாதாரத்துக்கே போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

வளமாக வாழ்ந்த ஊருக்குச் செல்ல வேண்டும். மீண்டும் வளமான வாழ்க்கையை வாழ வேண்டும். எங்களது வாழ்க்கைதான் கடைசிக் காலத்தை எட்டிவிட்டது. எங்களது பிள்ளைகளின் வாழ்கையாவது நிம்மதியானதாக அமைய வேண்டும். அதற்கு நாங்கள் ஊருக்குத் திரும்ப வேண்டும் என்றார்.

இரணைதீவு மக்கள் 1992ஆம் ஆண்டு தங்களின் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள் இரணைமாதா நகர் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர். 340 வரையான குடும்பங்கள் உள்ளனர். தாங்கள் சொந்த நிலத்துக்குச் செல்லவும் தங்கி நின்று தொழில் செய்யவும் கோரியே கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

(வ-35,12)

மாணவர் உணவூட்டல்

# மரக்கறி வகைகளுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

வவுனியா, மே 7

பாடசாலை உணவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்துக்கான பச்சை மரக்கறிக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக உணவுத்திட்ட நிறுவனத்தின் அனுசரனையுடன் உணவு வழங்கும் பாடசாலைகளுக்கு செலுத்தப்படும் பச்சை மரக்கறிக்கான கொடுப்பனவு 2ஆம் தவணை ஆரம்பத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. 1 தொடக்கம் 50 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் மாணவர் ஒருவருக்கு 6 ரூபாவிலிருந்து 7 ரூபா வரையும் 51 தொடக்கம் 100 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் மாணவர் ஒருவருக்கு 4.50 ரூபாவிலிருந்து 5 ரூபாவாகவும் 101 தொடக்கம் 200 வரையான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் மாணவர் ஒருவருக்கு 3.50 ரூபாவிலிருந்து 4 ரூபாவாகவும் அதிகரிக்கப் பட்டுள்ளது.

பச்சை மரக்கறிக்கான கொடுப்பனவு வழங்குவது ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு நாளும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயாகும். மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்ததனையடுத்து பாடசாலை அதிபர்கள் கோரிக்கை விடுத்தனர். அதனால்தான் அதற்கான கொடுப்பனவு அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. என்றார்.

(வ-402)

# ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

வவுனியா, மே 7

வன்னி மாவட்ட ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கான இலவச முன்னோடிப்பரீட்சை நாளை ஆரம்பமாகும் என்று வவுனியா மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி சங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

"வவுனியா மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி சங்கம் வன்னி மாணவர்களின் கல்வி நிலையைக் கண்டறிதலும் அதனை மேம்படுத்தலும் என்ற தொனிப்பொருளின் கீழ் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித, உயிரியல் மற்றும் வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கு வருடந்தோறும் முன்னோடிப்பரீட்சை நடத்தப்படுகிறது. இந்த வருடம் 4ஆவது முறையாக வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய 4 மாவட்டங்களில் நாளை 8ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை இந்தப்பரீட்சை நடைபெறவுள்ளது.

வர்த்தகப் பிரிவு பரீட்சை வவுனியா மாவட்டத்திலும் கணித, உயிரியல் பிரிவுபரீட்சை மேற்கூறிய அனைத்துமாவட்டங்களிலும் நடைபெறும். மாணவர்களின் வினாத்தாள்கள் திருத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்படும். அத்துடன் பரீட்சைக்கான புள்ளித்திட்டமும் விடைத்தாளும் மாணவர்களுக்கு வழங்கப்படும்" என்று வவுனியா அனைத்து பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

(வ-21)

# குடியிருப்புகளுக்குள் புகுந்த யானையால் 3 வீடுகள் சேதம்



வவுனியா - ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அம்மிவைத்தான் கிராமத்தில் நேற்றுமுந்தினம் இரவு புகுந்த யானை 3 வீடுகளை சேதப்படுத்தியது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

"கிராமத்துக்குள் புகுந்த தனியன் யானை அங்கிருந்த தென்னை மரங்கள் மற்றும் வாழை மரங்களை நாசப்படுத்தியது. அதனை அவதானித்த சிலர் யானையைத் துரத்துவதற்கு முற்பட்ட போது, அவர்களைத் துரத்திச் சென்ற யானை அந்தப் பகுதியிலிருந்த 3வீடுகளை சேதப்படுத்தியது. கொட்டகை வீடொன்றில் உணவுத்தேவைக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களையும் யானை நாசமாக்கியது. எனினும் வீட்டில் இருந்தவர்கள் அருகிலுள்ள பற்றைகளுக்குள் ஒழிந்து கொண்டதனால் உயிர் தப்பித்தனர்" என்று அம்மிவைத்தான் கிராம மக்கள் குறிப்பிட்டனர்.

கடும் வறட்சியால் நீரைப் பெற்றுகொள்வதற்காக காட்டுக்குள் இருக்கும் யானைகள் சாதாரணமாக மக்கள் குடியிருப்புக்களுக்குள் படையெடுக்கின்றன. இதனால் சொத்து இழப்புக்கள் ஏற்படுவதுடன், உயிர் சேதங்களும் ஏற்படுமோ? என்ற அச்சம் உள்ளது. எனவே இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து மக்களது வாழ்வாதாரத்தை அதிகாரிகள் பாதுகாக்க வேண்டும்" என்று வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மருதோடை, சேமமடு, நெடுங்கேணி, ஒலுமடு, பாலமோட்டை, கொம்புவைத்தகுளம், கள்ளிக்குளம், செட்டிகுளம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

"வவுனியா மாவட்டத்தில் குடியிருப்புகளுக்குள் யானை உட்புகாத வகையில் தற்போது 100 கிலோ மீற்றருக்கு வேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்த வருட ஆரம்பத்தில் 36 கிலோ மீற்றருக்கு வேலி அமைப்பதற்கு கொழும்பு அலுவலகத்திலிருந்து அனுமதி கிடைக்கப்பட்டுள்ளது. நெடுங்கேணி ஒலுமடுவில் வேலி அமைப்பக்கப்படுகின்றது. தற்போது மருதோடை பகுதியில் வேலி அமைக் கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. பிரதேசசெயலகங்கள் தமது பகுதிகளில் யானை உட்புகாத வகையில் வேலி அமைத்தத்தருமாறு விண்ணப்பம் கோருமிடத்தில் அதுகுறித்து பரிசீலனை செய்து அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளமுடியும்" என்று வவுனியா மாவட்ட வன உயிரினங்கள் திணைக் கள அதிகாரிகள் அண்மையில் தெரிவித்தனர். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் உறங்கும் வடக்குத் தமிழர்கள்

## போராட்டங்களுக்கு அரசு உடன் பதில் வழங்கவேண்டும் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு,மே 7
தங்களின் உரிமைகளைக் கேட்டு வீதிகளில் படுத்துறங்கிப் போராடும் வடக்கு-கிழக்கு மக்களின் போராட்டத்துக்கு அரசு உடன் பதில் வழங்க வேண்டும். அவர்களின் காணிகளை விடுவிப்பதற்கும், காணாமற்போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

சிங்கள தொலைகாட்சி ஒன்றில் இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



காணாமற் போன தமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தருமாறும், படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளை விடுவிக்குமாறும் கோரி வடக்கு - கிழக்கு மக்கள் மாதங்களாகத் தொடர்ச்சியாகப் போராட்டங்களை மேற்கொண்டு வரு கின்றனர். முழுக் கடையடைப்புப் போராட்டத்தையும் அவர்கள் நடத்தினர்.

புதிய ஆட்சி மலர்ந்து 2 வருடங்களில் பல இடங்கள் விடுவிக்கப்பட்டு இருப்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இருந்தாலும், அதை விடவும் அதிகமான காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. படையினர் அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு விவசாயம் செய்கின்றனர். அதில் அறுவடை செய்து தமிழர்களிடமே அவர்கள் விற்கின்றனர்.

மக்களின் பூமியை அபகரித்து அதில் விவசாயம் செய்து அதில் உண்டாகும் விளைச்சலை காணியின் சொந்தக்காரரிடமே விற்பனை செய்வது எவ்வளவு பெரிய அநியாயம். தமிழர்கள் இன்று விவசாயம் செய்யும் காணிகளைப் படையினரிடம் பறிகொடுத்து விட்டுத் தொழில் எதுவும் செய்ய முடியாமல் வறுமையில் வாழ்கின்றனர். ஆனால், படையினர் அந்தக் காணிகளில் விவசாயம் செய்து வாழ்கின்றனர்.

இந்தக் காணிகளைக் கேட்டுத்தான் இன்று மக்கள் போராடுகின்றனர். இவர்களின் போராட்டம் நியாயமானதாகும். அந்தப் போராட்டத்தை மதித்து அதில் உள்ள உண்மையை ஏற்று, அரசு உடனடியாகக் காணிகளை விடுவிக்க வேண்டும்.

நாட்டில் 65 ஆயிரம் பொலிஸார் இருக்கின்றனர். அவர்களுள் ஆயிரம்பேர்கூட தமிழர்கள் இல்லை. இராணுவத்திலும் அதே நிலைமை தான். 100 தமிழர்கள் கூட அதில் இல்லை. இராணுவத்தில் இணைவதற்கு தமிழ் இளைஞர்கள் விரும்புகின்ற போதிலும் அரசு அதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதில்லை.

தொழில் வாய்ப்புக் கோரி வடக்கு - கிழக்கில் பட்டதாரிகள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பணி வெற்றிடங்கள் இருந்தும் நிரப்பப்படுவதில்லை.

வடக்கில் இராணுவத்தினர் சுற்றுலா விடுதிகளை நடத்துகின்றனர். அங்கு தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. தெற்கில் உள்ளவர்களே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து தமது உறவினர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டு சிலர் வாழ்கின்றனர். இதனை வைத்துக் கொண்டு வடக்கில் மக்கள் பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைந்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது. எதிர்காலத்தில் இது வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

தெற்கில் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடிக் கொண்டு வடக்கில் தொழிலாளர்களின் உரிமையை இவ்வாறு பறித்து வருகின்றது அரசு. வடக்கில் என்ன நடக்கிறது? என்று தெற்கு மக்களுக்குத் தெரியாது.

வடக்கில் இப்போது தமிழர்கள் எல்லோரும் நிம்மதியாக இருக்கின்றனர் என்று தெற்கு மக்கள் நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். அரசியல்வாதிகளும் அப்படித்தான் கூறித் திரிகின்றனர்.

அரசு இனிமேலும் இந்த விடயத்தில் பாராமுகமாக இருக்கக் கூடாது. தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக வீதிகளில் படுத்துறங்கும் எமது மக்களின்போராட்டத்துக்கு மதிப்பளித்து உடன் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் - என்றார். (ஐ - 3)

## சமுதாயம் ஒற்றிணையாவிடில் பிரச்சினைக்கு தீர்வில்லை

### மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே 7
பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நாங்கள் பலமான சமூகமாக சக்தி மாற வேண்டும். அவ்வாறு மாறாமல் ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொண்டு இருப்போமானால் எங்களை நாமே ஏமாற்றிய சமூகமாக மாறி விடுவோம்.

இவ்வாறு மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். கிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி, ஜாமியதுல் ஜமாலியா அரபுக் கல்லூரியின் அல் மர்கம் மீரான் முபீன் ஆலிம் மண்டபத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியலுக்கு அப்பால் சமூகம் என்ற ரீதியில் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஒற்றுமைப்பட்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இந்த சமுதாயம் ஒன்றிணையாது விட்டால், எமது பிரச்சினைகளுக்கு என்றுமே தீர்வு காண முடியாது போய்விடும். வில்பத்து, இறக்காமம் பிரச்சினைகள் நிறைவடையும் போது வேறு எங்காவது இன்னுமோர் பிரச்சினையைக் கிழப்பிவிடுவார்கள். இதனை வெறுமனே பேசிக் காலத்தைக் கடத்துகின்ற சமூகமாக இல்லாது அதனைச் சரியான முறையில் முகம்கொடுக்க நாங்கள் தயாராக வேண்டும்.

இந்தச் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தும் பொறுப்பு உலமாக்களுக்கும் உள்ளது. வெறுமனே அரசியல் தலைவர்களை மாத்திரம் குறை கூறிக்கொண்டிருக்க முடியாது. உலமாக்களும் குத்பாக்களை பயன்படுத்த வேண்டும். அதற்கான தலைமையை ஏற்க வேண்டும். மார்க்கத்தை போதிப்பது மாத்திரம் தான் எங்களது கடமை என்று நின்றுவிடாது அதற்கு அப்பால் சென்று அரசியல் தலைமைகளை வழிநடத்தவும் ஒன்றுபடுத்தவும் வேண்டும் - என்றார். (ஐ - 10)

## தேயிலையின் கொள்வனவை அதிகரிப்பதற்கு சீனா இணக்கம்

கொழும்பு, மே 7
இலங்கையிடம் இருந்து கொள்வனவு செய்யும் தேயிலையின் அளவை அதிகரிப்பதற்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க மற்றும் இலங்கைக்கு வருகை தந்த சீன விவசாயத்துறை பிரதி அமைச்சர் ஷெங் சேகுவா இடையே கொழும்பில் நேற்று முன்தினம் பேச்சு இடம்பெற்றது.

இலங்கையின் ஏற்றுமதிப் பயிர்களில் தேயிலையும் ஒன்றாக விளங்குகின்றது. அதன் கொள்வனவை அதிகரிப்பதற்கு சீன விவசாயத்துறை பிரதி அமைச்சர் இணக்கம் தெரிவித்தார் என்று அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார். (ஐ -10)

## அனைத்து வெளிச்சவீடுகளும் விரைவில் சீரமைக்கப்படுமாம்


கொழும்பு, மே 7
"வெளிச்சவீடுகள் மூலமாகச் சுற்றுலாத் துறைக்குப் பல நன்மைகள் கிட்டும். நாடுமுழுவதிலுமுள்ள அனைத்து வெளிச்சவீடுகளையும் சீரமைப்பது தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டின் வளங்களை நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் உபயோகப்படுத்துவது மக்களின் கடமையாகும்.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

தெய்வேந்திரமுனை வெளிச்ச வீட்டை மீண்டுமொருமுறை மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது.

துறைமுக அதிகார சபையின் ஒத்துழைப்புடன் இந்த நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை தெய்வேந்திர முனையிலிருந்து ஆரம்பிக்க முடிந்துள்ளது. நான் திருட்டுச்



செயல்களை எதிர்ப்பவன். அரசில் அங்கம் வகித்தாலும், எதிர்கட்சியில் அங்கம் வகித்தாலும் அவ்வாறே இருப்பேன். எங்கேனும் திருட்டுச் செயல்கள் இடம்பெறுமாயின் அதனை உடனடியாக நிறுத்துவதே என்னுடைய கொள்கையாகும். அதன் காரணமாகவே இற்றைக்குப் பல மாதங்களுக்கு முன்னர் தெய்வேந்திரமுனை வெளிச்ச வீட்டுக்கு மக்கள் செல்வது நிறுத்தப்பட்டது. இன்று அவையனைத்தும் சரி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வெளிச்ச வீடுகள் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானவை என்ற போதிலும் அவற்றிலிருந்து நாம் எவ்வித பயனும் அடையவில்லை.

முதலீட்டாளர்கள் மூலமேனும் வெளிச்சவீடுகளை அபிவிருத்திச் செய்வதன் மூலமாக கிராமத்திலுள்ள சாதாரண மனிதன் வருமானம் ஈட்டும் முறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். துறைமுக அதிகார சபையானது தான் ஈட்டும் வருமானத்தையே செலவிடுகின்றது" என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

"எதிர்காலத்தில் இந்த வெளிச்ச வீட்டைப் பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற பாடசாலை மாணவர்கள் தொடர்பில் சிறப்பு அவதானம் செலுத்தப்படும். முதலாவதாக நாம் வெளிச்சவீட்டைப் பார்வையிடுவதற்கு வருகின்றவர்களின் பாதுகாப்பை உறுதிச் செய்ய வேண்டும். அதன் காரணமாக வெளிச்சவீட்டின் மேல் பகுதிக்குச் செல்வது தற்பொழுது தடைச்செய்யப்பட்டுள்ளது. எவ்வித சிக்கல்களும் இன்றி இதனைப் பார்வையிடுவதற்கு மக்களை அனுமதிக்கலாமா? என்று எதிர்காலத்தில் நாம் ஆராய்ந்து பார்ப்போம். அதே போல் எவரேனும் மேலே செல்வதற்கு முனைந்து ஏதேனும் தவறிழைப்பாராயின் அந்தச் சந்தர்பத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கே நாம் எந்நேரமும் முயற்சிக்கின்றோம்" என இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் தம்மிக்க ரணதுங்க தெரிவித்தார் - என்றுள்ளது. (ஐ - 10)

## மங்கள–விமல் இடையே சபையில் வாக்குவாதம்

கொழும்பு, மே 7
நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கும் இடையே அவரவர் சொந்த விடயங்கள் தொடர்பில் வாக்குவாதம் இடம்பெற்றது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் விமல் வீரவன்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என்று அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தினர். விமல் வீரவன்ச தனது மகனை அரச செலவில் வெளிநாட்டுப் பயணங்களுக்கு அழைத்துச் சென்றுள்ளதாகக் குற்றம் சுமத்தியிருந்தார்.


இதன் போது இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த விமல் வீரவன்ச, பிள்ளைகள் இல்லாதவர் என்பதனால் இவ்வாறு போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றார். இவர் பிள்ளைகள் பற்றித் தெரியாதவர் என்று மங்கள மீது குற்றம் சுமத்தினார். இதனால் சபையில் சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.

(ஐ -10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி





தாவடி கொக்குவில்
அருள்தரும் அன்னை
ஸ்ரீ வடபத்திரகாளி
அம்பாள் தேவஸ்தானம்

# புதிய சித்திரத் திருமஞ்சப் பெருவிழா

காலம் : 07.05.2017
ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி

புதிய சித்திரத் திருமஞ்சத்தில் அம்பாள் ஆரோகணித்து ஆடி அசைந்து வரும் அருள் கண்கொள்ளாக் காட்சியைத் தரிசித்து அருள் பெற்று விசேட நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

## விசேட நிகழ்வுகள்

**மங்கள இசைக்கச்சேரி**
தேவஸ்தான ஆஸ்தான வித்வான்
இணுவையூர் ஸ்வரகீதபானு சிவதாஸ் குழுவினர்

**தாளவாத்திய இன்னிசை விருந்து**
ஈழ நல்லூர் நாதஸ்வர கான விநோதன்
பாலமுருகன் குழுவினர்.

## திருமஞ்சப் பெருவிழா உபயம்

**திரு.யோகலிங்கம் பிரசாந்தன்** – (விஜிதா அரிசி ஆலை, தாவடி, கொக்குவில்)

ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
தாவடி, கொக்குவில்.

(4 29741)

சுபம்

பிரம்ம ஸ்ரீ நா.சசிதரசர்மா (ரவி ஐயா)
ஆதீனகர்த்தா

# நொதேண் சென்றல் வைத்தியசாலை

**யாழ்ப்பாணத்தில் நவீன தொழில்நுட்பத்துடனான அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரே ஒரு வைத்தியசாலை**


### உங்கள் சிரிப்பில் தன்னம்பிக்கை தெரியட்டும் !


### நொதேண் சென்றல் பற்சிகிச்சைப் பிரிவு (Dental Clinic)

நீங்கள் எப்பொழுது பல் வைத்தியரை நாட வேண்டும் ?

- பல் கூச்சம்
- பல்வலி
- ஈறுகளில் இரத்தக்கசிவு
- வாய் துர்நாற்றம்
- பல் இல்லாமை
- பல்லின் மேல் படிவுகள், கறைகள்.
- அழகற்ற பல் வரிசை

இவ்வாறான பிரச்சினைகள் இருப்பின் உங்களுக்கான உடனடித்தீர்வுகளை நொதேண் சென்றல் வைத்தியசாலை பல்சிகிச்சை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.





### வாய், முக, தாடைப் (Oromaxillofacial - OMF) பிரச்சினைகளுக்குரிய ஆலோசனைகளும் சத்திர சிகிச்சைகளும்

- முக. என்புமுறிவு/ மெல்லிழைய காயங்கள்.
- புற்றுநோய் / கட்டிகள் (தலை. கழுத்து. முகம். தாடை. வாய்)
- முகம். தாடை, வாய் என்பவற்றில் கிருமித்தொற்று வீக்கம் மற்றும் கட்டிகள்
- உதட்டுப்பிளவு, அண்ணப்பிளவு
- முகம். தாடை. மூக்கு. காது. கண்மடல் அமைப்புக் குறைபாடுகள்.
- முகத்திலேற்படும் பல்வேறுபட்ட நோவுகள்.
- வாய். தாடை. மூட்டு சம்பந்தமான நோய்கள்.
- மேல். கீழ்த்தாடைகளில் ஏற்படும் நோய்கள்.
- முகத்தில் ஏற்படும் பக்கவாதக் குறைபாடுகள்.

போன்றவை சம்பந்தமான ஆலோசனைகளும் மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சைகளும் இலங்கையின் முன்னணி வைத்திய நிபுணர்களால் வழங்கப்படுகின்றது. இவை தவிர முகம் மற்றும் புருவ உயர்த்தல், முகத்தில் ஏற்படுத்தக்கூடிய வடுக்களை

**குறைத்தல் அல்லது இல்லாமல் செய்தல்**
முகச்சுருக்கங்களை நீக்குதல். தலைமயிர் நாட்டுதல், முகத்தினை அழகாக்குவதற்கான பொட்டுலினம் ஊசி மருந்தேற்றுதல் (Botulinum Toxin Injection)போன்ற சேவைகளும் இங்கே வழங்கப்படுகின்றன.



### இருதயசிகிச்சைப் பிரிவு (CARDIAC CENTER)

இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு நெடுந்தூரம் பயணம் செல்ல வேண்டிய தேவை இப்பொழுது இல்லை.

யாழ்ப்பாணத்திலேயே உங்கள் வசதிக்கேற்றவாறு எந்தவித அசௌகரியங்களுமின்றி சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

நொதேண் சென்றல் வைத்தியசாலை உலகத்தரம் வாய்ந்த நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இருதய சத்திரசிகிச்சை வசதிகளைக் கொண்டிருப்பதுடன் இற்றைவரை அறுபதுக்கும் மேற்பட்ட சத்திர சிகிச்சைகளை விசேட நிபுணத்துவம் வாய்ந்த உள்ளூர் மற்றும் சர்வதேசரீதியில் பிரபலம் வாய்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்களினால் **Oxonion Heart Foundation** இன் பங்களிப்புடன் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

இதற்கான மொத்தக்கட்டணத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை ஜனாதிபதி உதவிநிதியம் மற்றும் ஆளுநர் உதவிநிதியத்திலிருந்து (President's fund and Governors' fund) மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.



**Northern** Central Hospital
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263
Fax: 021 221 6677
e-mail:nchjaffna@gmail.com
Website: www.nchjaffna.com

(CS 28944) (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு தேவை

யாழ். இயேசு அழைக்கிறார். ஸ்தாபனத்தில் பொறுப்பாளராக இருக்கும் குடும்பத்துக்கு வசிக்க வீடு தேவை.

**077 769 2068, 077 160 5594**

## கடை வாடகைக்குத் தேவை

யாழ்.ஸ்ரான்லி வீதியில் சிறிய கடை கட்டடம் வாடகைக்குத் தேவை.

**077 662 3824**

## மணமகள் தேவை

உயர் இந்து 1985, உத்தராடம் - 4, பாவம் 47, செவ்வாய்க்குற்றமில்லை. M.Sc படித்தவர். அரச வங்கி அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். மணமகனது தகுதிக்கேற்ப படித்த மணமகள் தேவை.

**077 889 5456**

## பெண் உதவியாளர் தேவை

தற்போது மகளின் படிப்பிற்காக இந்தியாவில் வசிக்கும் இங்கிலாந்து பிரயாவுரிமை பெற்ற யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட குடும்பத்திற்கு (தாய், தந்தை, மகள் வயது 16) 30 வயதிற்கு உட்பட்ட ஒரு பெண் உதவியாளர் தேவை. வருபவர் மகளுடன் தோழிமாதிரி பழகக்கூடியவராக இருக்கவேண்டும். சகல வசதிகளுடன் ரூபா 25,000 ஊதியமாக வழங்கப்படுவதுடன் 6 மாதத்திற்கு ஒருமுறை இலங்கை வந்து போக வசதிகள் செய்துகொடுக்கப்படும். (சி.எஸ்.53736) (13.17)

**தொடர்பு: 077 175 5720**

## IMMEDIATE VACANCY IN A FIRM OF CHARTERED ACCOUNTANTS IN JAFFNA

Vacancy available for an Audit / Accounts Executive who should possess chartered Inter / CAB II completed with 3 years experience in audit / accounting field with knowledge of QB & MS Office.

Please forward your curriculum vitae including address of two non - related referees to wskiru@yahoo.com within 7 days of this advertisement. (aja 3335)(11)

## யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முதன் முறையாக e-Money கற்கைநெறி ஆரம்பம்

**வீட்டில் இருந்தவாறே இணையம் மூலம் மாதாந்தம் 25000 ரூபாய்க்கு மேல் சம்பாதியுங்கள்**

**வழிமுறைகள்**

Data Entry, Copy Paste, Online Sales, AdSense Click,
Visit Web Pages Typing, Spread sheet Editing, Data Collection Face book, multimedia
Web site Design, Accounts, programming, Software Development, Auto CAD Drawing, Graphic Designing, photoshop, Web Development, Word, Excel, CMS
Share Market
Forex Trading



யாருக்காக
பல்கலைக்கழக மாணவர்கள், பகுதிநேர வேலை எதிர்பார்ப்பவர்கள், இல்லத்தரிசிகள், இளைஞர் யுவதிகள், அலுவலக பணியாளர்கள், ஓய்வு பெற்றோர் மற்றும் ஆர்வம் உள்ள அனைவருக்கும்.

Tecmode (Pvt) Ltd
No: 179A, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
T.P: 077 51 97 574

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள். (விலை - 3500, 5500, 9000)**

பதிவு இல : 16168
077 2106 155
**221, நாவலர் றோட், யாழ்.**

## தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா?
*முடி கொட்டுகிறதா ?
*தலையிடியா ?
*பேன் பொடுகு தொல்லையா?
*இள நரையா ?
*முடி அடர்த்தி இல்லையா?

**பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய**

பதிவு இல : 16168
077 263 9037
**221, நாவலர் றோட், யாழ்.**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா ?

*எடை கூட வேண்டுமா ?
*ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா ?
*கணைச்சூடா ? *பலகீனமா ?
*மார்பு கூட்ட வேண்டுமா ?
*உடல் குறைபாடுகளா ?

**விலை 5500/= - 9000/=**

**100 % பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் உங்கள் அழகிய தோற்றத்தைப் பெற**

பதிவு இல : 16168
077 3149 386
**221, நாவலர் றோட், யாழ்.**

## விற்பனைக்கு

நல்லின பசுமாடுகள், பசுக்கன்று, இனப் பெருக்கத்துக்குகந்த ஜேசி இனக்காளை, இறைச்சிக்கான பன்றிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு இலக்கங்கள் :-
**021 222 2432, 077 728 3616**
முகவரி - சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
பார்வையிடும் நேரம் :- பி.ப. 1.30 - பி.ப. 4.30 மணி

## கடை வாடகைக்கு

கஸ்தூரியார் வீதி, இல.137 நகர மத்திய பகுதியில் நீளம் 110 அகலம் 13

**077 351 8131**

## வேலைவாய்ப்பு

வேலையொன்றை எதிர்பார்ப்பவரா நீங்களா? கொழும்பு, கடவத்த, கடுவெல, ராகம, பியகம, ரணால போன்ற பிரதேசங்களில் ஜாம், பிஸ்கட், பால்மா, சொக்லெட், கிளவுஸ், பிளாஸ்டிக் போன்ற தொழிற்சாலைகளில் பெக்கிங், டெமேஜ் அகற்றல், மெஷின் ஒபரேட்டர், ஹெல்பர், சுப்பவைசர், QC போன்ற துறைகளில் வெற்றிடங்கள் உண்டு. 18-45 வயதுக்கிடைப்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 30,000/= வரை தொழில் அடிப்படையில் சம்பளம் பெறமுடியும். உணவு, தங்குமிடம் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு 830B, Railway Road, Valachchenai. 077 683 8226 / 077 599 7579

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய தடுப்பு போடப்பட்ட ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**077 892 4932**

## தவறிவிட்டது

கரடிப்போக்குச் சந்தியிலிருந்து பரந்தன் சந்திக்கு இடைப்பட்ட பகுதியில உழவு இயந்திரத்தின் காப்புறுதி ( Insurance ) வரி (Tax) என்பன தவறிவிட்டது. வாகன இல.RB 8169 பெட்டி இல.RW 0371

தொடர்பு : குரு ஹாட்வெயர் - கிளிநொச்சி.

**077 384 0310, 077 089 4049**

## ஓம்
## 'நியந்த்ரீ'
## அறிவித்தல்

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர சாதாரணதர மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் தங்கள் விண்ணப்பங்களை 27.05.2017 இற்கு முன்னதாக பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கவும்

செயலாளர்,
நியந்த்ரீ
சிவன்கோயில், நல்லூர், யாழ்ப்பாணம்.

சிவன்கோயில்,
நல்லூர். (சி.29740) (13.17)
செயலாளர்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மணற்கும்பான் பிரதேசத்தில் காணி விற்பனைக்கு உண்டு. மணற்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பிரதான வீதியில் காணி அமைந்துள்ளது.
பரப்பு 320,000
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 984 1873, 077 678 7737**

## கணக்காளர் தேவை

எமது நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கணக்காய்வு செய்வதற்கு பட்டதாரிகள்/ முகாமைத்துவம் அல்லது கணக்காய்வில் நீண்ட கால அனுபவம் மிக்கவர்கள் தேவைப்படுகின்றனர். 07.05.2017 காலை 9.30 மணியில் இருந்து கீழ் வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**ஈஸ்வரபகவான் கம்பனி பிறைவேட் லிமிடெட்,
இல.91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல. 021 222 7603
021 221 7150

## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1Kg) மொத்மாகவும் (ரூபா. 100), சில்லறையாகவும் (ரூபா.110) பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகில்)**

## SUPER LUXURY BUS FOR HIRE

Call
076 822 7522
076 822 7515
076 822 7523



29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi

**581, K.K.S ROAD, JAFFNA.**

## வல்வை முதியோர் இல்லம் பெண்கள்

பிள்ளைகளாலும், உறவினர்களாலும் உடனிருந்து பராமரிக்கமுடியாது போனவர்களினதும் தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள முடியாதவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் அவர்களது நலன்களை பேணுவதற்காகவும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நடத்தப்படும் இல்லமாகும்.

இந்த இல்லத்தின் சேவையைப் பெற்று பயனடைய விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

திரு.V.யோகானந்தவேல்
திருமதி ரஞ்ஜனி யோகானந்தவேல்(ராணி)
பிருந்தாவனம், ஊரிக்காடு, வல்வெட்டித்துறை , இலங்கை
தொலைபேசி இலக்கம்:
021 300 7598/077 810 6857/077 259 4273

திரு.திருமதி சிவகுமார்
7/2-4 MIA MIA STREET, GIRRA WEEN NSW 2145, AUSTRALIA.
TP: 0061286771012
Email: bamini_lk@yahoo.com

## காணி தேவை

திருநெல்வேலி, கொக்குவில், பல்கலைக்கழகம் ஆகிய பிரதேசங்களில் காணி தேவை.

**077 656 9685**

## ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

சிறந்தரக ஊர்க்கோழிச் சேவற் குஞ்சுகள் (2 ½ மாதம்) விற்பனைக்குண்டு.

**077 693 3022, 077 755 6244**

## ஒத்துமாறல்

மேல்மாகாண கொழும்பு அரச நிறுவனத்தில் மாகாண முகாமைத்துவ உதவியாளராகக் கடமைபுரிபவர். வடமாகாண யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாறவுள்ளார். விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

**071 548 2886**




## INDIA'S No1 FERTILITY CHAIN COMES TO SRI LANKA

**"இல்லை ஒரு பிள்ளை" என்ற குறையா?**

**குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு ஓர் நற்செய்தி**

- யாழில் உள்ள குழந்தை இல்லா தம்பதியர்களுக்காக இதோ வருகின்றது NOVA IVI Fertility India சர்வதேச அளவில் புகழ் பெற்ற IVF நிலையம்
- NOVA IVI Fertility 13500 IVF கர்பங்களுக்கு மேல் சாத்தியமாகியுள்ளது.
- மிக சிறந்த கருவியல் வல்லுனர்கள் அடங்கிய அனுபவம் மிக்க குழுவுடன் இலவச ஆலோசனை வழங்கப்படும்.
- எங்களின் நவீன அறிவியல் ஈடு இணையற்ற நிபுணத்துவம் மற்றும் பயனாளிகளின் நம்பிக்கை ஆகியவை தான் நாங்கள் இந்த மைல்கல்லை அடைவதற்கான காரணம்.

**இன்றே பதிவு செய்யுங்கள்
இலவச கருதரிப்பு ஆலோசனை முகாம்**

திகதி
19th, 20th & 21st மே 2017

நேரம்
9 AM to 5 PM

இடம்
Vembadi Girls High School
1st Cross st,
Jaffna,
Sri Lanka

**19 CENTERS IN 14 CITIES IN INDIA**

**NOVA IVI FERTILITY**
Visit - www.novaivifertility.com

SRILANKAN INFORMATION CENTER
UniHealth MDC
266, Galle Road, Bambalapitiya
077 414 3434 / 011 208 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் முதியவர் சாவு

திருகோணமலை, மே 7

திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக் குள்ளானது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. சம்பவத்தில் முதியவரொருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை இலக்கம் 96, பாடசாலைவீதியைச் சேர்ந்த 62 வயதுடைய கே.ராதா என்பவரே உயிரிழந்தவராவார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மோதுண்டார். அதனையடுத்து தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், திருகோணமலைப் பொது மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்ட வேளை உயிரிழந்தார். உடலம் திருகோணமலைப் பொது மருத்துவமனையின் சடல அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-10, 45)

**ஊர்க்கோழிகள் விற்பனைக்கு**

6மாத ஊர்க்கோழிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 245 3673

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

திருநெல்வேலியில் உள்ள பொறியியலாளர் குடும்பத்திற்கு வீட்டில் தங்கிநின்று 3வயதுப் பிள்ளையைப் பராமரிக்கக்கூடிய பணிப்பெண் தேவை.

077 232 0354

**பணியாளர் தேவை**

01. தொலைபேசி விற்பனை முகவர்
02. சிட்டை எழுதுனர்
03. கணக்காளர்
04. மேற்பார்வையாளர் ஆகியோர் தேவை.

077 361 1282




**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி** | **5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்: 7.12.1911 மறைவு: 10.05.1998

வல்வெட்டித்துறை
சங்கரநமச்சிவாயம் வேலுப்பிள்ளை
(முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சின் பிரதம கணக்காளரும் சட்டதரணியும்)



தோற்றம் 25.02.1916 மறைவு 11.05.2012

வல்வெட்டித்துறை திருமதி
பர்வதாவர்த்தினி வேலுப்பிள்ளை

என்றும் எங்கள் மனதில் உங்கள் அன்பு நீங்காது இருக்கும்.
உங்கள் அன்பை என்றும் மறவாத பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தவர்கள்.

215/C-8 பார்க் வீதி, கொழும்பு- 5 T.P - 0112585164

**JB Construction**

கொன்கிறீட் பிலேட் வேலைகள், மாபிள் வேலைகள் கட்டட வெடிப்புக்கள், பிலாட் கசிவுகள் சரிபார்த்தல் பழைய கட்டடங்கள் திருத்தி அமைத்தல், புதிய கட்டடங்கள் அமைத்துக்கொடுத்தல், தேக்கு கதவு, யன்னல்கள் செய்துகொடுத்தல்

J.T. ஜோன்சன் T.P. 077 113 8615

**பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு**

Educational Technologies Pvt Ltd
இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.



G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road,Jaffna.

**Vacancy Advertisement**

Taprobane Seafoods (Pvt) Ltd is a multinational sea foods exporting company in Sri Lanka. We are operating in Sri Lanka with 5 main seafood processing plants with over 1000 employees. We are going to recruit the below vacancies.

Accounts Officer

Qualifications

- Degree holder in Accounting or Finance of HNDA or Part qualified in ACCA, CA Sri Lanka & CIMA.
- Credit in English G.C.E. O/L.
- Fresh graduates are encouraged to apply.
- Experience in relevant field considered as added advantage.

Management Assistant (Female only)

Qualifications

- Degree holder in food technology and Science .
- Diploma in Food technology and Science University or College or Technical College.
- Fresh graduates are encouraged to apply.
- Relevant experience is added advantage.

Salary Negotiable
Forward your CV to jobtsf@outlook.com on or before 12 th May 2017.

**வாடகைக்கு அறைகள் உண்டு**

வவுனியா, வைரவப் புளியங்குளத்தடியில் ஆண்கள் தங்கக் கூடிய இரண்டு தனி அறைகள் வாடகைக்கு உண்டு.

077 758 5969

**பசுமாடு விற்பனைக்கு**

கலப்பின பசுமாடு 6 மாத சினையுடன் விற்பனைக்குண்டு.

076 911 6390

**விற்பனைக்கு**

Ruling,Cutter இயந்திரம், தொழிற்சாலைப் பொருள்கள் மற்றும் காகிதம் முதலிய எழுது பொருள்கள்.

தொடர்பு: 011 268 6585

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் படித்த லட்சணமான கடை வைத்திருக்கும் 55 வயது தார குற்றமற்ற மணமகனுக்கு 45 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. (சைவ போசனம் விரும்பத்தக்கது)

மே/பா உதயன் இல:- 5533,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 417 5498

**வேலைவாய்ப்பு**

SB Travels and Tours
இங்கு AIR TICKETING ACADEMY வகுப்புக்களும் 2மாத பயிற்சிகளும் நடைபெறுகின்றன.
Vacancy available (abacus system)
(அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
Basic Salary 15000/= இல் இருந்து.

இல.216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 108 3481/021 222 7111/222 7666

**இயந்திர உபகரணம் விற்பனைக்கு**

பாவித்த நல்ல நிலையில் உள்ள 05 கொங்கிறீட் குழைக்கும் இயந்திரங்கள் மற்றும் கட்டட உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

077 077 5546

**விற்பனைக்கு**

02 புதிய 65 A Lucas MF Batteries.
Warranty 3 month 19,000

071 566 4931

**சேவிஸ் வேலையாள் தேவை**

யாழ்.நகரிலுள்ள டீசல் இயந்திர Pump திருத்தும் நிறுவனத்துக்கு முன் அனுபவமுள்ள அல்லது பழக விருப்பமுள்ள நபர் தேவை.
(வயதெல்லை 19 -35)

077 253 0865

**வாகனம் விற்பனைக்கு**

மலேசியன் மோட்டார் சைக்கிள் NP BAA XXXX இலக்க வாகனம் விற்பனைக்குண்டு.

077 712 9998

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ரெஸ்ரூரண்டுக்கு சுத்திகரிப்பாளர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

077 839 2107

**வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் முத்தமிழ் வீதி, கொட்டடியில் வீட்டுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

076 533 3386, 021 223 0886

**வேலை வாய்ப்பு**

1. Technical Officer (NCT (Civil), NDT (Civil) , HND (Civil) or Equivalent
2. படவரைஞர் - *Certificate in Draughts man and AutoCAD 2D,3D with Quantity surveying Experience*

Your CV and Covering letter must be send Before 12th May 2017

தொடர்பு: 021 221 3663
E-Mail - vacancynsc@gmail.com

**சாரதி தேவை**
(Personnel Driver)

- தனிநபர் ஒருவரின் வாகனத்திற்கு மன்னார் பிரதேசத்தில் வசிக்கும் சாரதி தேவை.
- அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிந்தவர்கள் விரும்பத்தக்கது வயது எல்லை: 40 -50
- உங்களது சுயவிவரங்களை கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு SMS செய்யவும் -

075 841 6353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 06.03.1937 மறைவு 07.04.2017

கொக்குவில் கிழக்கு நந்தாவில்
அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும்
கொண்ட

**விநாசிதம்பி பரமேஸ்வரன்**

(வர்த்தகர் பான்சி பலஸ்- திருகோணமலை)

பாசத்துடன் வளர்த்த தந்தையே. எம்மை
ஏக்கத்துடன் விட்டு சென்றது ஏனோ?
உன் பிரிவை தாங்குமோ எங்கள் இதயம்

07.04.2017 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(AJA CS 3785)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி துரைராஜா நகுலேஸ்வரி (துரைராஜா ரீச்சர்)



தோற்றம் 09.05.1944 மறைவு 05.05.2017

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா நகுலேஸ்வரி (துரைராஜா ரீச்சர் - ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை - வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா) 05.05.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - மங்கையற்கரசி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கமலபூரணம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும், சபேசன், சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலநூபி (வவுனியா தெற்கு பிரதேச செயலகம்), சுபேந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், பூஜா, ஹரணி (வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), நிவேதன், டிலக்சன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாந்தினி வாசா,
இமையாணன் மேற்கு, வதிரி வீதி, உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

சபேசன் (மகன்- 077 058 3244),
சுபேந்திரகுமார் (மருமகன் - லண்டன்) + 447 448 50 9173)

# கொககொட குப்பை மேட்டில் இடர் ஏற்படச் சாத்தியமில்லை

## அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, மே 7

மீதொட்டமுல்ல இடர் போன்று இன்னொரு கொககொட குப்பை மேட்டிலும் ஏற்படுமெனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அவ்வாறான இடர்கள் எதுவும் நடைபெறாது என்பதைப் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னுடைய ஆலோசனையின் படி நடவடிக்கை எடுத்திருந்தால் மீதொட்ட முல்ல இடரைத் தடுத்திருக்க முடியும். இவ்வாறு உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கண்டி கொககொட குப்பை மேட்டுப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் சென்றிருந்தார். இதன் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சூழல் பாதுகாப்பு அமைப்புக்களால் கொககொட குப்பை மேடு குப்பை தொடர்பில் எதிர்ப்புகள் காணப்படுகின்றன. அது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும். குப்பைகள் கொட்டுவதற்காக ஒதுக்கப்படும் பிரதேசங்களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் எதிர்ப்பை வெளியிடுவது இயற்கையான ஒரு விடயமே. எனினும் குப்பையை எவ்வாறு முகாமைப்படுத்துவது என்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்த வேண்டும். அது தொடர்பில் கண்டி மாநகர சபை அமைச்சுடன் இணைந்து அக்கறையுடன் செயற்படுகின்றது.

மீதொட்டமுல்ல குப்பை மேடு தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் அறிவுறுத்தியிருந்தோம், ட்ரோன் கமராவைப் பயன்படுத்தி குப்பையை முகாமைப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு இரண்டு மூன்று தடவைகள் மாநகர சபையை ஒன்று கூட்டிக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வலியுறுத்தியிருந்தேன். எவரும் அது தொடர்பில் சிந்திக்கவில்லை. அதனாலேயே இந்த இடர் இடம்பெற்றிருந்தது-என்றார். (ஐ-10)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கைலைலிங்கம் முருகதாஸ்**

(முன்னாள் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)

தோற்றம் 30.08.1968 மறைவு 03.05.2012

திதி: துவாதசி

ஆத்மா சாந்தியடை பிரார்த்திக்கின்றோம்.

4/4, இராமகிருஸ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(J.5639) (13.18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 07 . 01 . 1951



மறைவு 09 . 04 . 2017

கடந்த 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சின்னத்துரை பாலச்சந்திரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்

## அந்தியேட்டி அழைப்பு



09.04.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதம்
எய்திய எமது அன்புத் தெய்வம்

**அமரர் சின்னையா இராசநாயகம்**

(இளைப்பாறிய புகையிரதசேவை உத்தியோகத்தர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 09.05.2017 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கோகுலம் இல 37/1,
திருநகர் வடக்கு, திருநகர்.

குடும்பத்தினர்.

(AKN 118) (14)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 . 08 . 1941



இறப்பு 23 . 04 . 2013

அமரர்

**இராசரத்தினம் அன்னலட்சுமி**

நெஞ்சம் கனக்கிறது
நிகழ்வுகள் தைக்கிறது
ஆண்டவன் அடியில்
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

41, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம 10.30 / 1.30 / 4.30 / 7.30
வெள்ளி/சனி 9.30 PM



சில்வர் / ப்ரொன்ஸ்
10.30 / 2.30 / 6.30
வெள்ளி/சனி 10.30 PM
விசாரணை ☎ 021- 2227712
facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கு நாம் தயார்

## அம்பாறை மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் அறிவிப்பு

கொழும்பு, மே 7

"ஊவா மாகாணப் பாடசாலைகளில் உயர்தரத்தில் விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவு மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.

ஊவா மாகாணப் பாடசாலைகளில் நிலவும் உயர்தரத்தில் விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவுகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு, இந்திய ஆசிரியர்கள் வரவழைக்கப் படவுள்ளனர் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் இந்தக் கருத்துக்கு பதிலாகவே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

ஊவா மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஜி.சி.ஈ உயர்தர விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவுகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இந்திய ஆசிரியர்களை வரவழைக்கும் நடவடிக்கையை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புக் கோரி வடக்கு, கிழக்கில் தொடர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ள வேலை தேடும் பட்டதாரிகளில், விஞ்ஞான, கணிதப் பட்டதாரிகளும் அடங்குகின்றனர்.

ஊவா மாகாணத்தில் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் மாத்திரமே விஞ்ஞான, கணிதப் பிரிவு இயங்குவதுடன், அங்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. வேறு மாகாணங்களுக்குச் சென்று உயர் தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவில் கல்வியைத் தொடர முடியாமல், ஊவா மாகாண மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

ஊவா மாகாணத்தின் பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவை ஆரம்பித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்த போதும், தமது பாடசாலையில் குறித்த பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் நிரந்தர ஆசிரியர்கள் இல்லை எனவும் அந்தப் பாடசாலையின் அதிபர் கே. திருலோகசங்கர் குறிப்பிட்டார்.

இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை அழைத்துவரும் பட்சத்தில் அவர்களுக்கு மேலதிக பயிற்சியளிக்க வேண்டும் என்று ஊவா கல்வி அபிவிருத்தி சங்கம் வலியுறுத்தியது.

எதிர்கால சமூகத்தின் நலன் கருதி, ஊவா மாகாண கல்வித்துறைக்கு புத்தாக்கம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும். - என்றனர். (ஐ-10)

டொயோடா ப்ராடோ

பெற்றோல்
TRJ 150 - 2017
2017 G Frontier, 6 Way Camera, Sound System, Dual Multifunction, Sunroof, Tan Leather Seats, Electric Side Step, 7 Seater, Electric Seats
தொடர்பு - 0112500500/ 0112501980

டொயோடா ஹயஸ்

2014, TRH200V - DX, 200 CC Petrol, 5 Door, Petrol, Automatic, PS, PW, Dual AC, Colour - Silver Metalic
ஞாயிறு திறந்திருக்கும்
தொடர்பு
0112500500/ 0112501980




இலவசம்
ஹெல்மட் ஒன்றும் ஜெக்கட் ஒன்றும்.
2017 மே 31ஆம் திகதிவரை இக்கொடுப்பனவு செல்லுபடியாகும்.
நிறுவன பதிவிலக்கம். PB270
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02 011-4700600 011-4700677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk
டிஸ்கவர் 125 டிஸ்க் - விலை. ரூ. 261,700/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் அநீதிகளை கண்டுகொள்ளாத ஐ.நா.

## முஜீபுர் ரக்மான் எம்.பி. கவலை



கொழும்பு, மே 7
இஸ்ரேல், பலஸ்தீனம் மீது தொடுக்கும் அநீதிகளைக் ஐக்கிய நாடுகள் சபை கண்டுக்கொள்வதில்லை. சிறுவர்கள், பெண்கள் உட்படப்பல ஆயிரக்கணக்கான கைதிகள் இஸ்ரேலியச் சிறைகளில் வாடுகின்றனர் . இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரக்மான் கவலை தெரிவித்தார்.

பலஸ்தீனச் சிறைக்கைதிகளின் உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, கொழும்பு பலஸ்தீன் தூதகரத்தில் இடம்பெற்ற கையெழுத்து வேட்டையில் கையெழுத்திட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இஸ்ரேலியச் சிறைகளிலுள்ள ஆயிரத்து 500 கைதிகள் கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். மே மாதம் 3 ஆம் திகதி பலஸ்தீனின் முக்கிய அரசியல் தலைவர்கள் பலரும் இந்த உணவு ஒறுப்பில் இணைந்தனர். இஸ்ரேலின் அராஜகத்தை உலகுக்கு எடுத்துக்காட்டி இந்த அநீதிக்குத் தீர்வு காணும் முயற்சியில் இறங்குவதற்கு முஸ்லிம் நாடுகள் முன்வர வேண்டும்.

1948 ஆம் ஆண்டு முதல் ஒரு மில்லியன் பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தரவுகள் கூறுகின்றன. இஸ்ரேல் பன்னாட்டுச் சட்டங்களைத் துச்சமாக மதித்தே அராஜகங்களை நடத்தி வருகிறது. முஸ்லிம் உலகின் ஒற்றுமையே அநீதிகளை அழிக்கக் கூடிய ஆயுதமாகும். பலஸ்தீன் மக்களின் துன்பங்களிலும் துயரங்களிலும் பங்கு கொண்டு அவர்களின் உண்மையான விடிவுக்கு உழைப்பது மனித நேயத்தை விரும்பும் அனைவரினதும் கடமையாகும் - என்றார். (ஐ-10)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைகள் குறித்து விளக்கக் கடிதம்

யாழ்ப்பாணம், மே 7
"அரச முகாமைத்துவ உதவியாளர்களது கடமைகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குக் கையளிக்க கூடாது. மாறாக அரசால் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான கடமைகளையே அவர்களுக்குக் கையளிக்க வேண்டும்".

அரச அபிவிருத்தி உத்தியோகத்தர் பற்றிய கடமைப்பட்டியல் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜெ.ஜெ. இரத்தினசிறி, நாடுதழுவிய அமைச்சின் செயலாளர், நிறுவனத் தலைவர், மாவட்டச் செயலர் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களுக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது,
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலர்களது கடமைகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலர்களுக்குக் கையளிக்கக்கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தும் அதனைக் கவனத்தில் கொள்ளாது சில அரச நிறுவனங்கள் செயற்படுகின்றன.

பட்டதாரி நிகழ்ச்சித் திட்டமெனும் சிறப்பு செயற்றிட்டத்தின் கீழ் ஆள்ச்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அரசால் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான கடமைகளைக் கையளிக்க வேண்டும் என்றுள்ளது. முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குரியவர்களின் கடமைகளை கையளித்திருப்பின் அவற்றைத் தாமதிக்காது திருத்தம் செய்யப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ-10, 50)

# மாணவனின் குருதியைப் பறித்த கும்பல்

கிண்ணியா, மே 7
கிண்ணியா அல் அதான் வித்தியாலயத்தியில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனிடம் மர்மக்கும்பல் ஒன்று வலுக்கட்டாயமாக மாணவனின் உடலில் இருந்து குருதி எடுத்தனர். அதனால் கிண்ணியாவில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

கிண்ணியா மகரூப் நகரை சேர்ந்த சதாத் முகம்மது ருஸ்தி (11) என்ற அந்த மாணவன் அல் அதான் வித்தியாலயத்தில் 6 ஆம் தரத்தில் கல்வி கற்கிறார். குறித்த மாணவன் பாடசாலை முடிந்து வரும் போது வெள்ளை நிறக் கார் ஒன்றில் வந்த சிலர் மாணவனை வழி மறித்துக் குருதி எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அறிந்த மாணவனது தந்தை, பாடசாலை அதிபரைத் தொடர்பு கொண்டு விசாரித்தார். பாடசாலையில் அவ்வாறான சம்பவம் நடைபெறவில்லை என்று அதிபர் அறிவிக்கவே பெற்றோருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

இது குறித்து கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதோடு சிறுவனும் கிண்ணியா மருத்துவமனையில் பரிசோதனைக்காகச் சேர்க்கப்பட்டார்.

தற்போது குறித்த மாணவன் மேலதிக பரிசோதனைக்காகவும், சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனையைப் பெறுவதற்காகவும் திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று மருத்துவமனையின் மாவட்ட மருத்துவ அதிகாரி எம்.எச். சமீம் தெரிவித்தார்.

இது குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்தச்சம்பவத்தால் கிண்ணியாவில் பெரும்பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஐ-45)




# கொலைவெறி மனநிலை கொண்டவர் பொன்சேகா

## இப்படிச் சொல்கிறார் பிரசன்ன எம்.பி.



கொழும்பு, மே 7
"கொலை வெறி மனநிலையில் உள்ள ஒருவர் தேவை என்பதன் காரணமாவே பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமித்தார்" இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"சரத் பொன்சேகா கொலைவெறி மனநிலை கொண்டவர். அதன் காரணமாகவே அவர் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அவர் இராணுவத் தளபதியாகச் செயலாற்றிய காலத்தில் இலங்கை இராணுவத்தை அமெரிக்காவுக்குக் காட்டிக்கொடுத்தார். அதன் காரணமாக நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அதனைச் சரத் பொன்சேகாவிடம் ஒப்படைக்கப் போகின்றனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாடெங்குமுள்ள காகில்ஸ் புட்சிட்டி வலையமைப்பிலிருந்து உங்களுக்கு அழைப்பு



நாட்டின் முன்னேற்றத்தில் பங்கேற்றிட
வெற்றிகரமான அணியுடன் இணையுங்கள்

காகில்ஸ் புட்சிட்டி
கிளைகள் தொடர்பாக
தற்பொழுது ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது

சேவை உதவியாளர்கள்
Service Assistants

காசாளர்கள்
Cashiers

ரூ. 25,000/-க்கு
அதிக மாதாந்த வருமானம்

தெரிவு செய்யப்படும் உங்களுக்கு

- வருடாந்த ஊக்குவிப்புத் தொகை (Bonus)
- இலவச போக்குவரத்து வசதி (10km வரை)
- பாதுகாப்பான இலவச தங்குமிட வசதி (தெரிவு செய்யப்பட்ட கிளைகளில்)
- பகல் மற்றும் இரவு சேவைகளின் போது உணவு மற்றும் கவர்ச்சிகரமான பல நலன்கள்

மேற்குறிப்பிட்ட சலுகைகளுடன் *CARGILLS FOOD CITY* யில் பணிபுரிந்து வாழ்வில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் சாதாரண தரம் / உயர்தரம் படித்தவர்கள் தங்கள் தகைமைகளுக்கும் திறமைகளுக்குமான வேலை வாய்ப்பினை பெற நேர்முகப் பரீட்சை மற்றும் நேரடி சம்பாசனை நிகழ்வுக்கு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திகதி :2017 மே மாதம் 8ம் 9ம் திகதிகளில்
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை
இடம் : கார்கில்ஸ் SQUARE, ஆஸ்பத்திரி வீதி, யாழப்பாணம்

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
நிர்மலன்: 0773633612

குழு முகாமையாளர் - மனித வளம்
காகில்ஸ் புட்சிட்டி பிரைவட் லிமிட்டட்
இல. 40, யோர்க் வீதி, கொழும்பு 01.
தொலைபேசி: 011 2427777, நீட்டிப்பு: 143
மின்னஞ்சல்: jobs@cargillsceylon.com

food city
Cargills
My Company, My Country.
எமது குழு
எமது சக்தியாகும்

arc
International Fertility & Research Centre
experience the miracle

17ஆவது வருட சேவையில்

குழந்தையின்மைக்கு
முழுமையான தீர்வு

உலக சாதனை
1,50,00,000+ பார்வைகள் YouTube ARC FERTILITY



FOUNDER DIRECTORS

இலவச மருத்துவ ஆலோசனை
MedExpo Jaffna 2017
வேம்படி மகளிர் மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம். மே மாதம் 19, 20, 21
காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை

nethra
நேத்ரா tv

09-05-2017 செவ்வாய்க்கிழமை
காலை 10 மணிக்கு
நேத்ரா டிவியில் நேரலையாக
டாக்டர் சரவணன் லக்ஷ்மணனின்
மருத்துவ ஆலோசனைகளை
கண்டு பயன்பெறுங்கள்

தமிழகத்தில் முதல் கருத்தரிப்பு மருத்துவமனை
1. 6 பிரம்மாண்ட மருத்துவமனைகள்
2. வருடத்திற்கு 3000+ Laparascopies மற்றும் 2000+ IVF Procedures
3. வருடத்திற்கு 30,000 தம்பதிகள் சிகிச்சை பெற்று பயன் அடைகிறார்கள்

முன்பதிவுகளுக்கு
0757 333 666
0091 7811 999 999

சென்னை- பெரம்பூர், எழும்பூர், பெருங்குடி
மிக விரைவில் திருச்சி, மதுரை
திருநெல்வேலி
கோயம்புத்தூர்
வேலூர்

www.arcfertility.in
www.ivf-clinics-india.com

தெரிவுசெய்யப்பட்ட அபான்ஸ் எலைட் காட்சியறைகள் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.

இலவசம்

LG
Life's Good

வட்டி இல்லை ஜொலி அதிகம்

3 வருட உத்தரவாதத்துடன்

மறைமுக கட்டணங்கள் இல்லை

குறைந்த விலைகள்



32"
இலவசம்

வட்டியில்லா
12
கொடுப்பனவு

LG 32" ஸ்மார்ட் LED தொலைக்காட்சி
32LH591D
- 32" LED திரை
- IPS பேனல்
- ஸ்மார்ட் ஷெயாரிங்
- USB மூவி

விசேட விலை
ரூ. 46,999



32"

வட்டியில்லா
12
கொடுப்பனவு

ரூ. 5,000

LG 32" LED தொலைக்காட்சி
32LH564A
- 32" LED திரை
- IPS பேனல்
- HDMI
- USB மூவி

விசேட விலை
ரூ. 35,999



43"

LG 43" FHD LED தொலைக்காட்சி
43LH518A
- 43" LED திரை
- IPS பேனல்
- HDMI
- USB மூவி

FM RADIO

விசேட விலை
ரூ. 69,999

0115 999 000
அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமும் பெறலாம்.
Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தன்னைத் திருத்தினால் உலகம் தானே திருந்தும்

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நெருங்கி வருகிறது. கூடவே அது தொடர்பான சர்ச்சைகளும் கிளம்புகின்றன. அன்றைய தினத்தில் முல்லைத்தீவுக்கு வருகை தருவதற்கு இருக்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

இலங்கை முழுவதும் வறுமையை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை அன்றைய தினத்தில் அங்கிருந்து ஆரம்பிக்க இருக்கிறாராம். வறுமையின் உச்சத்தில் உள்ள மாவட்டம் என்ற வகையில் முல்லைத்தீவு இந்த ஆரம்ப நிகழ்வுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

அந்த நிகழ்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திகதியும் இடமும் இப்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது. இறுதிப் போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் நினை வாக தமிழ்த் தேசிய துக்க தினமாக அந்த நாள் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒருநாளில் அரசதலைவர் ஒரு நிகழ்ச்சியை, அதுவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் எப்படி வைக்கலாம் என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

அன்றைய தினத்தில் அரச தலைவர் அந்த நிகழ்ச்சியை முல்லைத்தீவில் நடத்துவதைக் கைவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ்நிர்மலநாதன்வலியுறுத்தியிருக்கிறார். இதனைஏற்று நிகழ்ச்சித்திகதியைகொழும்புஒத்திவைக்கிறதா? இல்லையா? என்பது ஒருபுறம் இருக்க, மே 18ஆம் திகதியை, முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தைக் குறித்துப் பேசுவதற்கு, அதையொட்டிக் கண்டனங்களை, விமர்சனங்களை முன்வைப்பதற்குத்தமிழர்தரப்புக்குஉண்மையில் அருகதை இருக்கிறதா?

மே 18 என்பது வெறுமனே ஒரு நினைவு தினம் மட்டுமல்ல. அது வீழ்ந்து கிடந்த தமிழ் இனத்தின் மீள் எழுச்சியைக் குறிக்கும் தினமும்கூட. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்தத் திகதியை தெற்கில் போர் வெற்றி நாளாக முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச கொண்டாடியபோது, அதற்கு எதிர் அரசியலாக, பாதிக்கப்பட்ட மக்களின் அரசியலாக வெளிப்பட்டதே மே 18 நினைவுநாள்.

அப்படிப்பட்ட ஒரு நாளைத் தமிழ் மக்கள் ஒன்றுகூடி நினைவேந்தல் செய்வதற்கு மகிந்தவின் காலத்தில் அனுமதி கிடைக்கவேயில்லை. முதன்முதலாகக்கடந்த ஆண்டில்தான் அதற்கான வெளி, ஆட்சி மாற்றத்தின் பின்னர் கிடைத்தது. அதைப்பயன்படுத்தி வடக்கு மாகாணசபை முள்ளிவாய்க்காலில் ஒருநினைவேந்தலை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் பெருமெடுப்பில் நடத்தியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் அதில் கலந்துகொண்டனர். உணர்ச்சிக் கொந்தளிப்பின் மத்தியில் அந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

அதில்பேசிய முதலமைச்சர், நான்நீஎன்றுபோட்டிபோடாமல் அந்த இடத்தில் ஒரு நினைவுத் தூபியை அமைப்பதற்கு அனைத்துத்தரப்பினரையும்உள்ளடக்கியகுழுநியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்என்றுமுன்மொழிந்தார். அவரைத் தொடர்ந்து பேசிய கட்சித் தலைவர்களும் அதனை வழிமொழிந்தார்கள். ஆனால், ''ஊருக்கல்லோ உபதேசம், உனக்கல்லடி பெண்ணே!'' என்ற கணக்காக அதன் பின்னர் அதைப்பற்றிஅடியோடுமறந்துவிட்டார்கள். இதோ! ஒருவருடம் உருண்டோடிப்போய்விட்டது. எந்தநடவடிக்கையும்இல்லை. நினைவுத்தூபியும்இல்லை. அதற்கானஅடிக்கல்லும்இல்லை.

அதாவது போகட்டும், கடந்த ஆண்டு நினைவேந்தலுக்காக அமைக்கப்பட்ட ஒரு சுடரேந்தும் தூணைப் பாதுகாக்கவும், அந்தப்பகுதியைத்துப்புரவுசெய்துபுனிதமாகப்பேணவும்கூட, எந்த நடவடிக்கையும் இல்லை. அந்தத்தூணில் காணப்பட்ட இருகைகளையும் இப்போது காணவில்லை. அவை உடைந்து சிதறிவிட்டன. அதுபற்றி எவரும் கவலைப்பட்டதாகவும்தெரியவில்லை. கடந்த ஆண்டு கொழுத்திப்போட்டுவிட்டு வந்த எரிபந்தங்களின்எச்சத்தடிகள்இன்னமும்அங்கேயேகிடக்கின்றன. (ஒருவேளை அவை இந்த ஆண்டும் பயன்படக்கூடும் என்று விட்டுவைத்திருக்கிறார்களோ என்னவோ!

இப்படி ஒரு பேரவலத்தின் மக்கள் நினைவேந்தல் இடத்தை அமைக்கவும், அதனைத் தூய்மையாகப் பேணவும் வக்கற்ற ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள், அடுத்தவர்கள் அந்தத் தினத்துக்கு மதிப்பளிக்கவில்லை என்றுவாய் கிழியக் கத்துவது நியாயமானதுதானா? ஏற்புடையதுதானா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

அவரவர் தன்னைத் திருத்தினால் உலகம்தானே திருந்திக்கொள்ளும் என்று சொன்னார்சுவாமிவிவேகானந்தர். அதுபோன்றே நாம் மதிப்பளித்து, புனிதமாகப் போன்றினாலன்றி மே 18ஆம் நாளை மற்றவர்கள் மதித்துப் போற்றப்போவதில்லை.

கட்டுரை

# பூகோள அரசியல் போட்டியில் தன்னை பலப்படுத்தும் சீனா

சீனா, ரஷ்யா, ஜப்பான், இந்தியா போன்ற பிராந்திய அதிகாரத்துவ நாடுகள் கிழக்கு ஐரோப்பிய ஆசியப் பிராந்தியத்தின் ஊடாக தமது அரசியல் மற்றும் பொருளாதார இருப்பிடத்தை நிலைநாட்டுவதற்கு போட்டியிடுகின்றன.

இவ்வாறான அதிகாரத்துவப் போட்டிக்குள் அகப்பட்டுத் தவிக்கும் சிறிய நாடுகள் மீது இத்தகைய அதிகாரத்துவ நாடுகள் முதலீடுகள், நிதி மற்றும் அபிவிருத்தி போன்ற உதவிகளை மேற்கொள்வதற்காக 'பல் திசை மூலோபாயத்தைப் பிரயோகித்து வருகின்றன.

ரஷ்யா, சீனா, தென்னாசியா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ள நாடான கசகஸ்தான் இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும்.

சோவியத் யூனியன் உடைந்தபோது, கசகஸ்தான் பிரபலமாகப் பேசப்பட்டது. கசகஸ்தான், ரஷ்யாவின் கைப்பாவை நாடாக இருந்தது என்பதற்கும் அப்பால், அனைத்துலக அதிகாரத்துவ நாடுகளைத் தனது நாட்டில் பல பில்லியன்களை முதலீடு செய்ய வருமாறும் கசகஸ்தான் அழைப்பு விடுத்தது.

சீனா தனது 'ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக அனைத்துலக நாடுகளில் பல்வேறு முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக ஆசியா, கிழக்கு ஐரோப்பா, ஆபிரிக்கா போன்ற பிராந்தியங்களில் கட்டுமான அபிவிருத்தியை மேற்கொள்வதன் மூலம், சீனா பெரியதோர் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்துவ நாடாக துரித வளர்ச்சியடைந்துள்ளது.

### பூகோள அரசியல் போட்டியில் சீனாவின் பங்கு

புதிய பூகோள அரசியல் போட்டியாளராகத் திகழும் சீனா, நீண்ட காலமாக அரசியல் மற்றும் பொருளாதாரக் கூட்டணிகளாகத் திகழும் நாடுகளை ஆட்டங்காணச் செய்துள்ளது. அத்துடன் அதிகாரத்துவமற்ற நாடுகளில் 'பல் திசை மூலோபாயங்களை' பிரயோகித்து சீனா தனது செல்வாக்கை நிலைநிறுத்தி வருகிறது. சீனாவின் இத்தகைய செல்வாக்குக்கு உட்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். வரலாற்று ரீதியாக நோக்கில், இலங்கையானது இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளுடனேயே தொடர்ச்சியாக நெருக்கமான உறவைப் பேணிவந்துள்ளது. ஆனால் சிறிலங்காவில் பல பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட நீண்ட கால உள்நாட்டுப் போரானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர், சிறிலங்காவின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. உள்நாட்டு யுத்தத்தின் முடிவின்போது சிறிலங்கா அரசதரப்பால் பல்வேறு போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையாலும் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளாலும் போர்க்குற்ற மீறல்களைக் காரணங்காட்டிபொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

> சிறிலங்கா மீதான சீனாவின் இந்தச் செல்வாக்கு, இந்தியாவுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது. சீனாவின் பூகோள பொருளாதார மற்றும் இராணுவ அதிகாரமானது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் திடீரென அதிகரித்தமையானது இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

பன்னாட்டுச் சமூகத்தின் இந்த அழுத்தமானது, சிறிலங்காவின் பூகோள அரசியல் பின்னணியில் எதிர்பாராத திருப்பத்தைக் கொண்டு வந்தது. தான் செய்த தவறுகளுக்காக சிறிலங்கா பன்னாட்டுச் சமூகத்திடம் சரணடைவதற்குப் பதிலாக சீனாவிடம் உதவிக்கரம் நீட்டியது. அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட சிறிலங்காவுக்கு உதவுவதில் சீனா அதிக விருப்பம் கொண்டிருந்தது.

சிறிலங்காவுக்கு இராணுவ உதவியாக 37 மில்லியன் டொலரும், கடனாக 8 பில்லியன் டொலரும் சீனாவால் வழங்கப்பட்டன. அத்துடன் 269 ஹெக்ரேயர் பரப்பில் 1.4 பில்லியன் டொலர் செலவில் கொழும்பு நிதி நகரமும், ஆழ்கடல் துறைமுகம், பன்னாட்டு விமான நிலையம், துடுப்பாட்ட அரங்கம், மாநாட்டு மண்டபம், தொழிற்துறை வலயம் என்பவற்றை உள்ளடங்கிய அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல்வேறு பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களும் சீனாவால் சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறிலங்கா மீதான சீனாவின் இந்தச் செல்வாக்கு, இந்தியாவுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது. சீனாவின் பூகோள பொருளாதார மற்றும் இராணுவ அதிகாரமானது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் திடீரென அதிகரித்தமையானது இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இந்தியாவானது இலங்கைத்தீவு மீது செல்வாக்குச் செலுத்தத் தவறினால் இங்கு வேறு நாடுகள் தமது நிதி மற்றும் வேறு உதவிகளைக் காண்பித்து தமது செல்வாக்கை நிலைநிறுத்த முயலும் என்பதையே சீனாவின் இந்த நிலைப்பாடு காண்பிக்கின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்குப் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ள நிலையில், இலங்கைக்கு வடகிழக்கில் அமைந்துள்ள திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான உடன்படிக்கையில் அவர் கைச்சாத்திடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

### திருகோணமலை அபிவிருத்தியில் இந்தியா கடும் அக்கறை

திருகோணமலைத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் இந்தியா முன்னர் ஆர்வம் காண்பிக்கவில்லை. ஆனாலும் சிறிலங்கா மீதான தனது செல்வாக்கை நழுவவிடக்கூடாது என்ற காரணத்துக்காகவே தற்போது இந்தியா, திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தி தொடர்பில் ஆர்வம் காண்பிப்பதாகக் கருத முடிகிறது. பன்னாட்டுக் கட்டுமான முதலீடு மற்றும் அபிவிருத்தியானது இலாபத்துடன் மட்டும் தொடர்புபட்ட விடயமல்ல. ஒரு நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான ஒரு வழியாகவும் இது பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் பூகோள அரசியல் சக்திகளுடன் போட்டியிடும் நிலைப்பாட்டை எதிர்த்துநிற்பதற்கானஒருவழியாகவும் இது பயன்படுத்தப்படுகிறது. தனது நாட்டில் கட்டுமானத்தை முன்னெடுக்க வேண்டிய தேவையிலுள்ள இந்தியா, தற்போது சிறிலங்காவில் 2 பில்லியன் டொலரை முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளது. பிந்திய சோவியத் யுகத்தில், ஆசியா மற்றும் சீனா தனது புதிய பட்டுப்பாதைத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக மிகத் துரிதமாக பன்னாட்டு மயமாகி வரும் நிலையில், சீனாவின் இந்த வளர்ச்சியை முறியடிப்பதற்காக அனைத்துலக அதிகாரத்துவ நாடுகள் மூன்றாம் தரப்பு நாடுகளில் முதலீடு செய்ய வேண்டிய அழுத்தத்துக்கு உட்பட்டுள்ளன. ரஷ்யா, இந்தியா, யப்பான் போன்ற அதிகாரத்துவ நாடுகள் மூன்றாந்தரப்பு நாட்டில் தாம் முதலீடு செய்யாவிட்டால் சீனா முதலீடு செய்யும் என்பதைத் தற்போது நன்கு அறிந்துள்ளன. அதிகாரத்துவ நாடுகளின் புதிய போட்டியில் கசகஸ்தான், சேர்பியா, பங்களாதேஷ், சிறிலங்கா போன்ற நாடுகள் நலன் பெறுகின்றன. சீனா தனது பட்டுப்பாதைத் திட்டத்தின் பெரும்பகுதியை தமக்காகவே நடைமுறைப்படுத்துகிறது என இந்த நாடுகள் நம்புகின்றன.

*ஆங்கிலத்தில் - Wade Shepard*
*வழிமூலம் - Forbes*
*மொழியாக்கம் - நித்தியபாரதி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர்ந்தும் தமிழரை ஏமாற்ற முயலும் மகிந்த

மு.ஈழத்தமிழ்மணி

2017ஆம்ஆண்டின் முடிவுக்குள் இன்றைய அரசைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு நாம் அரசமைப்போம் எனச் சவால் விடுத்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, மைத்திரியின் நல்லாட்சி அரசுக்குப் பெரும் தலைவலியாகஆகி விட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரியில் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் சுதந்திரக்கட்சி படிப்படியாகப் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற உண்மையையும், சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் ஏகோபித்த ஆதரவு மகிந்த தரப்புக்கே என்பதையும், காலி முகத்திடலில் இடம்பெற்ற மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெகையை வைத்துக் கணக்கிடலாம். தமது மே தின உரையின் போது மகிந்த இன்றைய அரசைக் கவிழ்த்து புதிய அரசை நிறுவும் தமது முயற்சி ஆரம்பிக்கப்படுகிறது எனக் கர்ச்சித்துத் தமது ஆதரவாளர்களை உசுப்பேத்தியிருக்கின்றார்.

இன்றைய நல்லாட்சி அரசின் மீது தமிழ் மக்கள் மட்டுமன்றி பெரும்பான்மையான சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் வெறுப்படைந்துள்ளனர் என்பது உண்மையேயானாலும், மகிந்த தலைமையிலான ஆட்சி மீண்டும் அமைவதை அவர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். மகிந்த அணியுடன் சேர்ந்தியங்கும் இடதுசாரிக் கட்சிகளும் இனவாத அமைப்புகளும் மகிந்த தலைமையிலான ஆட்சியை மீண்டும் பதவிக்குக் கொண்டுவரும் குறிக்கோளுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரச தலைவர் மைத்திரி தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், மகிந்த குடும்பத்தின் மீதும், அவரது அமைச்சரவையின் பல அமைச்சர்கள் மீதும் மட்டுமன்றி, பல அரச உயரதிகாரிகள் மீதும் ஊழல் மோசடி புரிந்தமை, லஞ்சம்பெற்றமைஎனப்பலகுற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதுடன் அவை தொடர்பாக கடும் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றது .

### தற்போதும் மகிந்தவுக்கான ஆதரவு அனல் அடிக்கிறது

ஆட்சி அதிகாரம் இழந்த நிலையிலும் தென்னிலங்கை மக்களின் ஆதரவு மகிந்த பக்கமே இருக்கின்றது. அவ்வாறான ஆதரவுத் தளம் குறைந்து விடவில்லை. போரை முடிவுக்குக் கொண்டு வந்தமை, நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை ஒழித்தமை போன்றவை மகிந்தவுக்கு நிரந்தரமானதொரு சாதக நிலையை இன்னமும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

சுதந்திரக்கட்சியின் இன்றைய தலைவரான மைத்திரிபால சிறிசேனாவால் கட்சியின் கட்டுப்பாடுகளை மீறி நடந்ததாகக் கூறி மகிந்தவுக்கு எதிராக எந்த வித நடவடிக்கையும் எடுக்க இயலாததொரு நிலை ஏற்பட்டுள்ளது.

மகிந்தவின் தலைமையிலான ஒருங்கிணைந்த கூட்டு எதிரணிக்கு எதிர்க்கட்சித்தலைமைத்துவம் இல்லாவிட்டாலும் மைத்திரி-ரணிலின் கூட்டரசுக்கு சவால் மிக்கதொரு எதிர் அணியாகவே மகிந்த-தலைமையிலான கூட்டு எதிரணி திகழ்கிறது.

2017 மேதினக் கொண்டாட்டங்கள், நாட்டின் நல்லாட்சி அரசினது பலத்தைச் சோதித்துப்பார்க்கும் விதத்தில் தென்னிலங்கையில் முக்கிய மூன்று மேதினக்கூட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளன.

கொழும்பில் உள்ள கெம்பல் மைதானத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக்கூட்டமும், கொழும்பு காலிமுகத்திடலில் மகிந்த அணியின் தலைமையிலான கூட்டு எதிரணியின் மேதினக்கூட்டமும் நடைபெற, கண்டி கொட்டகம்பே மைதானத்தில் சுதந்திரக்கட்சியின் மேதினக்கூட்டம் நடைபெற்று முடிந்துள்ளது.

தொழிலாளர் உரிமைகள் பற்றி இந்த மூன்று தலைவர்களும் மேதினக் கூட்டங்களில் வருடா வருடம் எவ்வளவு பேசினாலும், மேதினம் முடிந்தவுடன் தமது அடுத்த போராட்டத்துக்கான நாளை தொழிலாளர் அமைப்புகள் தீர்மானிப்பது வழக்கமாகிப் போயிருக்கிறது. எமது நாட்டைப் பொறுத்தவரை தொழிலாளர்களின் அடிப்படை உரிமைப் பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படவேயில்லை. முதலாளித்துவக் கொள்கை நாட்டில் தாண்டவமாடுகின்றது. நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கவும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடவும் மகிந்த அரசுபோல் தற்போதைய நல்லாட்சி அரசும் போட்டிபோட்டுக் கொண்டிருக்கின்றது.

மகிந்தவின் ஆட்சின்போது பொருளாதாரம் நலிவடைந்து நாடு அதளபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தென்னிலங்கையிலுள்ள தொழிலாளர்கள் நசுக்கப்பட்டனர். வெலிவேரியாவில் நன்னீர் கேட்டுப் போராடிய சிங்கள மக்கள்மீது படையினரைக் கொண்டுமிருகத்தனமான தாக்குதலை நடத்தியிருந்ததுடன் மாணவர் உட்பட மூவர் கொல்லப்பட்டுமிருந்தனர்.

மகிந்தவின் ஆட்சியில் ஒன்பது மேதினகள் நடந்தேறியிருந்தன. அந்தக் காலப் பகுதி முழுவதும் பல தமிழ்த் தொழிலாளர்கள் வடக்குக் கிழக்குத் தாயகப்பகுதிகளில் படையினரின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தனர். 2009 ஆம் ஆண்டு மேதின நாள்களின் போது வன்னியில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் தமிழர்கள் பல நூற்றுக்கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் கொல்லப்பட்டிருந்த நிலையிலும் மகிந்த ராஜபக்ச மேதினநாளின் போது ஆற்றிய உரை தமிழினத்துக்கெதிரானதாகவே அமைந்திருந்தது.

### தீர்வுக்கான வழி தம்மிடமுண்டு எனக் கயிறு விடும் மகிந்த

கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் வைத்து இந்த முறை முன்னாள் அரசதலைவரான ராஜபக்ச, தமிழ் மக்களுக்கான விமோசனம் எங்களிடமேயுள்ளது, வட, கிழக்குக்குத் தேவையானவைகளை நாம் செய்து வைத்தோம். அவர்களின் விடிவு எம்மிடமே இருக்கின்றது எனவும் முழங்கியிருக்கின்றார்.

முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப்போரின் போது தமிழ்மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்ததும் இத்தகையதொரு மேமாதத்தில் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் நினைவு கூருகின்றபோது, மகிந்தவின் கொடூரமான முகம் தான் தமிழ்மக்களின் கண்முன் வரும். அதே மேதினத்தில் இன்று மகிந்த தமிழ் மக்களுக்கான விமோசனம் எங்களிடமேயுள்ளது எனக் கூறியிருப்பது வினோதமானது; வேடிக்கையானது. மகிந்தவை தமிழ் மக்கள் ஒருபோதுமே நம்பத்தயாராக இல்லை.

மகிந்த ராஜபக்ச தமது ஆட்சியின்போது காணாமற்போன தமிழர்கள் விடயம் குறித்து பதில் கூறவேண்டிய கடப்பாட்டிலிருந்து தப்பியிருந்தாலும் அவர் அந்தப் பொறுப்பிலிருந்து விலகியிருக்க முடியாது. மகிந்தவின் ஆட்சியின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது உறவுகளைக் கண்டுபிடிக்கும் போராட்டத்தில் அவர்களுக்கான பதிலை வழங்காதது, படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களுக்கான பூர்வீக நிலங்களை அவர்களிடம் மீளளிக்காமை, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காமை, போன்றவற்றை முன்வைத்து போராட்டங்களை தமிழ் மக்கள் நடத்தியிருந்தனர். அந்தப் போராட்டங்களை படையினரைக் கொண்டு அடக்கியிருந்தார் மகிந்த. புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளது வாழ்வும் பொருளாதார நிலைமையும் கவலைக்குரியதாகவேயிருந்து வருகிறது. மகிந்தவோ தாம் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து விடுவித்ததாகத் தற்பெருமை பேசுகின்றார்.

போர் முடிவடைந்தவுடன் ட்சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையை நடத்தி தமிழர் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவேன் எனக் கூறி தமிழ்த் தலைமைகளை ஏமாற்றிய மகிந்த, இன்று மேதினக் கூட்டத்தில் தமிழ் மக்களுக்கு விமோசனம் எங்களிடமேயிருக்கிறது என்றுகூறி தமிழ் மக்களைத் தங்களுடன் இணைத்துக் கொள்ளுமாறு வேறு கோரிக்கை விடுக்கிறார்.

பலவருடங்களாக அரசியலாக்கப்பட்ட பல மேதினங்கள் தொழிலாளர்களுக்குரிய கேளிக்கையானதொரு நிகழ்வு ஆகி விட்டுள்ளது. தமிழ்மக்களுக்கு மட்டுமன்றி, சிங்கள மக்களுக்கும் மேதினமானது அர்த்தமற்றதொன்றாகி விட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் சுகாதார அமைச்சரான ராஜிதசேனாரத்ன எதிர் வரும்மேதினத்துக்குள் காணாமற் போனோர்கள் தொடர்பான பிரச்சினை சம்பந்தமான தீர்வைவழங்குவதுடன், படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணிகளையும் விடுவிப்போம் எனக் கூறியிருந்தார்.

மேதினத்தின்போது யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கப்பட்ட ராஜிதவின் வாக்குறுதிகள் வெறுமனே காற்றில் பறந்துபோகுமா? இல்லையா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### அரசியலில் காதில் பூச்சுற்றல் செயற்பாடு

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாய்த் தெரியுமாம். முன்னாள் அரசதலைவர் என்ற ரீதியில் தனது பாதுகாப்பு அணியில் இணைக்கப்பட்டிருந்த 42 பொலிஸார் அந்தப் பணியில் இருந்து நீக்கப்பட்டதால் தமது பாதுகாப்புக்கு, தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச அச்சம் வெளியிட்டுள்ளார். பொது மக்களின் அனுதாபத்தை ஈட்டி அதன் மூலம அவர்களின் ஆதரவை அதிகரிக்க வைப்பிக்கும் அரசியல்வாதிகளது வழமையான உத்திகளில் இதுவும் ஒன்றெனக் கொள்ள முடிகின்றது. அதேவேளை இத்தகைய தன்னிரக்கக் கருத்து வெளிப்பாட்டை வெளியிட்டகையோடு இத்தகைய அச்சுறுத்தலை ஏற்படுத்தித் தன்னைப் பயமுறுத்தலாம் என மைத்திரி அரசு கருதுவதாகவும் அதற்குத் தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் கர்ச்சித்துள்ளார். விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்துவிட்டோம் என அன்று இறுமாப்புப் பேசிய அவர், இன்று விடுதலைப்புலிகளில் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றனர் என பூச்சாண்டி வேறு காட்ட முனைகிறார். இதேவேளை மைத்திரிபால தலைமையிலான அரச தரப்பு மற்றும் கூட்டு எதிரணிக்குத் தலைமை தாங்கும் மகிந்த ராஜபக்ச தரப்பு ஆகிய இரு தரப்புக்களையும் ஒன்றிணைத்து சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியில் ஒரு தரப்பினர் கடும் ஊக்கம் காட்டி செயற்பட்டு வருவதாகவும் செய்திகள் வெளியாகி வருகின்றன.

அந்த வகையில் அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; நிரந்தர எதிரியும் இல்லை என்ற வாய்ப்பாடு, ஒரு அடிப்படை முக்கிய அம்சமாக கருதப்படுவதாகத் தோன்றுகின்றது. பாவம் நாட்டின் அரசியல் குறித்து அக்கறை காட்டும் அப்பாவிப் பொது மக்கள் தரப்புத்தான் 'பெப்பே' என்று விழிக்கவேண்டிய நிலையில் உள்ளது இன்றைய எமது நாட்டின் அரசியல் நிலை.

க. சரவணமுத்து
மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் பொ.ஜெசிதரன்



# இப்படியும் முயன்று பார்க்கலாமே!

தொற்றா நோய்களின் தாக்கத்திலிருந்தும் அவற்றின் பாரதூரமான பின் விளைவுகளிலிருந்தும் மீளவேண்டுமாயின், உடற்பயிற்சி ஒவ்வொருவருக்கும் அவசியமானதொன்றாகும். இதன்முக்கியத்துவம்இன்றுஎல்லாத்தரப்பினராலும்உணரப்பட்டு வருகிறது. நாம் உடற்பயிற்சி செய்ய ஆர்வத்துடன் இருப்பினும் அதற்கான நேரத்தைக் கண்டுபிடிப்பதே சிரமமாக உள்ளது. இயந்திரத் தன்மையான இலத்திரனியல் வாழ்வியல் நடைமுறையில் உடற்பயிற்சிக்கான நேரம் காணாமலேயே போய்விட்டது.

அவ்வாறு உடற்பயிற்சி செய்வதற்கான நேரம்கிடைக்காதோரும், நேரத்தைக்கண்டுபிடிக்கமுடியாதோரும்வழங்கப்படுத்திக் கொள்வதற்கான சில குறிப்புக்கள் இங்கே முன்னிலைபெறுகிறது. வாழ்வில்இயலுமாயின்இவற்றை நடைமுறைப்படுத்த முயற்சித்துப் பார்க்கலாமே.

**வேலைத்தளங்களில்**

1. மாடிகளில் ஏறுவதற்கு மின் உயர்த்திகளையோ, தானியங்கிப்படிகளையோபாவிக்காது மாடிப்படிகளில்நடந்து சென்றடைவோம்.
2. சென்றடைய வேண்டிய இடங்களுக்குச் சற்றுத் தூரவாகவே வாகனங்களை நிறுத்தி இறங்கிக் கொள்வோம்.
3. மதியஉணவின்பின்பு10நிமிடங்கள்வரைமேலதிகமாக இருப்பின் படிகளில் ஏறி நடந்திடுவோம்.
4. தேநீர் இடைவேளைகளில் இயலுமானவரை நடக்க முற்படுவோம்.
5. வேலையில்ஈடுபட்டிருக்கும்போதுநீர்அருந்தவிரும்பும் போதெல்லாம் எழுந்து சிறிது தூரம் நடந்திடுவோம்.
6. சந்தர்ப்பம்கிடைக்கும்போதெல்லாம்ஒரேஇடத்தில்இருப்பதற்குப் பதிலாக எழுந்து நடந்திடலாம்.
7. சகஉத்தியோகத்தரை அழைப்பதற்குப்பதிலாகவோ அல்லது மின்னஞ்சல் செய்வதற்குப் பதிலாகவோ அவரது மேசை வரை நடந்திடலாம்.
8. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வேகநடை செய்வதைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.
9. கைபேசியில் உரையாடும் போது எழுந்து நின்று உரையாடலாம்.
10. புத்தகம் படிக்கும்போது ஒவ்வொரு ஆறு பக்கங்களுக்கும்ஒருதடவையெனஎழுந்துசிறுதூரம்நடந்திடலாம்.
11. கைபேசிகளில் உரையாடும் சந்தர்ப்பங்களில் எழுந்து நின்றோஅல்லதுநடந்துகொண்டோஉரையாட முயற்சிக்கலாம்.
12. ஓய்வு அறைக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் நீண்ட தூரம் நடக்க வேண்டிய பாதையைத் தெரிவு செய்யலாம்.



**வீட்டில்**

1. தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒவ்வொரு வர்த்தக இடைவேளையின் போதும் எழுந்து நடந்திடலாம்.
2. மனதுக்குவிருப்பமானபாடல்களுக்குநடனம்ஆடலாம்.
3. ஒவ்வொருநாளும்15தொடக்கம்30நிமிடங்கள்உங்கள் பிள்ளைகளுடன் விளையாடலாம்.
4. விறாந்தையில் வேகநடை செய்யலாம்.
5. அருகிலுள்ள கோயில்களுக்கு நடந்து சென்று வரலாம்.
6. அருகிலுள்ள கடையில் பொருள்களை வாங்க நடந்து சென்று வரலாம்.

ஆக்கசக்தியுள்ள உடற்பயிற்சி மனச்சந்தோசத்தைத்தருவதுடன் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும் என்பதை சிந்தனை பூர்வமாக ஞாபகம் கொள்வோம்.

**வேகநடையின் போது**

1. பார்வையை 10 தொடக்கம் 20 அடிவரை முன்னோக்கியதாக வைத்திருத்தல்.
2. கைவிரல்களைத்தளர்வாகமடித்தநிலையில்பேணுதல்.
3. விரல்களையும், தோள்மூட்டுக்களையும் இறுக்கம் இல்லாது தளர்வாகப் பேணுதல்.
4. முழங்கையை90பாகைவரையில்மடித்துப்புயங்களை முன்னோக்கியும் பின்னோக்கியும் தோள் மூட்டில் அசைத்தல்.
5. சீராக, சௌகரியமாகநடத்தல். பாதத்தைக்குதியிலிருந்து விரல் நுனிவரை சீராக உருட்டுவது போல அசைத்தல்.
6. முதுகை நேராகவும் தோள் மூட்டுக்களை ஒரே மட்டத்திலும் பேணுதல்.
7. வயிற்றைஉள்நோக்கியதாகத்தட்டையாகப்பேணுதல்.
8. சின்னச்சின்ன அடிகள் வைத்து விரைவாக நடத்தல்.
9. முதுகெலும்பை வளைக்காது நேராகச் சமனிலைத் தன்மையோடு பேணுதல்.
10. எப்பொழுதுமேஉடல்நிலையைச்சரியானநிலையில் பேணுதல்.
11. அதிகாலையிலோ, இரவிலோநடக்கும்போதுவாகனத்தில் செல்பவர்களுக்கு இலகுவில் தெரியக் கூடிய மெல்லிய நிறத்திலான தளர்வான ஆடைகளை அணிந்து கொள்ளுதல்.

மருத்துவர் எம். அரவிந்தன்

**கேள்வி:**


எனது வயது 65ஆகும். எனக்கு 10 வருடங்களுக்கும் மேலாக நீரிழிவு நோய் உள்ளது. எனது கால்களில் விறைப்புத் தன்மை இருப்பதோடு எரிவது போன்ற உணர்வும் இருக்கிறது. இது பற்றி ஆலோசனை வழங்கவும்?

**பதில்:**

நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படுகின்ற முக்கியமானதொரு நீண்டகாலப் பிரச்சினை நரம்புத் தொகுதியில் ஏற்படுகின்ற பாதிப்பாகும். பாதங்களில் விறைப்பு ஏற்படுதல், ஊசி குத்துவது போன்ற அல்லது எரிவது போன்ற உணர்வு ஏற்படுதல் மற்றும் கால்களிலுள்ள தசையிளைவு குறைவடைதல் என்பன இதற்கு உதாரணங்களாகும்.

நீண்டகாலமாக நீரிழிவு நோய் இருக்கும் போது குறிப்பாகக் கட்டுப்பாடற்ற விதத்தில் இருக்கும் போது இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நீரிழிவு நோயினைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறைத்துக் கொள்ள முடியும். இவ்வாறு கால்களில் விறைப்பு த் தன்மை அல்லது எரிவுத்தன்மை ஏற்படுவதைக் குறைப்பதற்கு குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டினுள் பேணவேண்டியது மிகவும் அவசியமாகும். இதனைக் குறைப்பதற்குப் பலவகையான மருந்துகள் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றை வைத்திய ஆலோசனைப்படி பெற்று இந்தப்பிரச்சினைகளிலிருந்து ஓரளவுக்கு விடுபடக் கூடியதாக இருக்கும்.

பாதங்களில் இவ்வாறான விறைப்புத் தன்மை உள்ளவர்கள் மிகவும் அவதான



மாக இருத்தல் வேண்டும். இவர்கள் பாதணி யின்றி வெறுங்காலோடு வெளியில் நடக்கும் போது பாதங்களில் காயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுகின்றன. எனவே பாதங்களை முற்றாக மூடக்கூடிய வகையிலான, நீரிழிவு நோயாளருக்கான சிறப்பான பாதணிகளைப் பயன்படுத்துவதன் மூலம் தேவையற்ற விதத்தில் ஏற்படுகின்ற காயங்கள் மற்றும் புண்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். நீரிழிவு நோயாளர்களுக்கு இவ்வாறு கால்களில் காயங்கள் ஏற்பட்டால் அவை குணமடையக் கால தாமதம் ஏற்படு கின்றது. சில வேளைகளில் இந்தக் காயங்களில் கிருமித் தொற்று ஏற்பட்டு விரல்கள் மற்றும் பாதங்கள் அழுகிப் போகலாம். விரல்களை அல்லதுகாலினை இழக்கவேண்டி சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இன்று உலகளாவிய ரீதியில் அவயவ இழப்புக்கு மிக முக்கிய காரணமாக அமைவது நீரிழிவேயாகும். எனவே நீரிழிவு நோயாளர்கள் தமது முகத்தினை எவ்வாறு கவனமாகப் பராமரிக்கின்றனரோ அதேபோல அவர்களது பாதங்களையும் கவனமாகப் பராமரிப்பது இன்றியமையாத தாகும்.

சிறப்பு மருத்துவ நிபுணர்,
நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதியல்,
யாழ்.போதனா வைத்தியசாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
07.05.2017



நாடோடிப் பறவைகள்
பக். 28




முதலில் பௌத்தர்களாக இருக்க வேண்டும்
பக். 33



மகிழ்வான திருமண வாழ்க்கை
பக். 23



மயானத்துப் பூக்கள்
பக். 29




பாகுபலி
பக். 25




# இரு கைகளையும் இழந்து அநாதரவாகக் கிடக்கின்றது

# முள்ளிவாய்க்கால்







கணேசதாசன்

- வந்தார்கள்...கூடினார்கள்...மேடை ஏறிப் பேசினார்கள்... உணர்ச்சி முழக்கமிட்டார்கள், திரும்பிப் போய்விட்டார்கள்.

- தொடர்ந்தும் அநாதரவாகவே கிடக்கின்றது ஏராளம் மக்களின் மூச்சடங்கிப்போன அந்த முள்ளிவாய்க்கால் மண்.

- அன்று மட்டும் வந்து திரும்பிய அந்த அரசியல்வாதிகள் இன்றைக்கு ஒரு வருடமாகியும் இந்தப் பக்கம் ஒரு தடவையேனும் ஒருவர் தன்னும் வரவில்லை.

- கவனிப்பாரின்றிய கட்டாந்தரையாக வெந்து கிடக்கிறது நினைவேந்தல் மண் .

- சென்ற வருடம் ஆராதித்து எரிந்து முடிந்த பந்தங்கள் இன்னும் இங்கேயே பரப்பப்பட்டுள்ளன. ஆகுதிச் சுடரை ஏந்திக் கொண்ட அந்தத் தூபி தனது இரு கைகளையும் இழந்து, சிதைந்துபோய் இங்கே அநாதரவாகக் கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இருக்கிற இடம் எங்கயிருக்கு...? என்டு விசாரிச்சபடி இந்த இடத்தைப்பார்க்க ஒவ்வொரு நாளும் வெளிமாவட்டங்களில இருந்தும் வெளிநாடுகளில இருந்தும் நிறையப்பேர் இஞ்ச வருகினம். போன வருசம் மே18 அண்டைக்கு நினைவேந்தல் நடந்திருந்த அந்த இடத்தைப் பார்க்கத்தான் அவை வருகினம். இஞ்சை வந்து அந்த இடம் கிடக்கிற கிடையைப் பார்த்தால், முள்ளிவாய்க்காலில நிறையச் சனம் செத்துப் போயிருக்குஎண்டுறதை அவர்கள் நம்ப மறுக்கினம். அயலில இருக்கிற எங்களுக்கும் அவையக் கூட்டிக்கொண்டுபோய் அந்த இடத்தைக் காட்ட வெட்கமாய்க் கிடக்குது. போனமுறை நினைவேந்தல் நடத்த இஞ்ச வந்துபோன மாகாண சபைக்காரர் ஒருத்தரும் திரும்பி ஒருநாள்கூட இங்க வரயில்லை. அண்டைக்கு மட்டும் கடமைக்கு வந்து போனவைதான். அண்டையோட அவயின்ர நினைவஞ்சலி முடிஞ்சு போச்சுது. இந்த வருசந்தான் இனி இந்த இடத்தில மேடைபோடத் தொடங்குவினம். இவயின்ர அரசியல் கலாசாரம் இப்பிடியே போனா ஏன் எங்கட பிள்ளையளுக்குக்கூட எதிர்காலத்தில இப்பிடியொரு அவலம் நடந்தது எண்டு தெரியாமல் போயிருமோ...! என்ற சந்தேகம் எனக்கிருக்குது" முள்ளிவாய்க்கால் மே 18 நினைவேந்தல் முற்றத்துக்கு அருகாமையில் வாழ்ந்து வரும் ரேகன் இப்படித்தான் கவலை கொள்கின்றார்.



■■■

தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளும் அரசியல் உரிமைகளும் மறுக்கப்பட்டதன் விளைவாக எழுந்த அகிம்சைப் போராட்டங்கள் பிற்காலங்களில் ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்தன. மூன்று பத்தாண்டுகளுக்கும் மேலாக நீடித்த அந்த ஆயுதப்போராட்டம் முல்லைத்தீவு- முள்ளிவாக்கால் மண்ணில் 2009ஆம் ஆண்டு மே18ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இந்தக் கடைசி சண்டையில் இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களை நினைவகூரவும் அஞ்சலி செலுத்தவும் எனக் கடந்த வருடம் மே18அன்று முதல் முறையாக முள்ளிவாய்க்காலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் மக்கள் பலரும்கூடினர். அங்கு தற்காலிகத் தகரக் கொட்டகைகள் சில நிறுவப்பட்டன. அங்கு அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் சுடரேற்றி படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அந்த இடத்தில நினைவுகூர்தலை நிகழ்த்தப்போவதாகவும் அதற்காக நினைவாலயம் ஒன்றையும் அமைக்க குழு அமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அதன்பின்னர் சில நாள்கள் வரையில் வட மாகாணசபையில் அதைச் செயற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் பற்றிய கருத்தாடல்கள் நிலவின. காலம்செல்லச் செல்ல அவையும் மங்கிப் போயின.

இன்றுவரை அந்த இடத்தில் நினைவுத்தூபி ஒன்று நிறுவப்படவே யில்லை. அது மட்டுமன்றி கடந்த வருடம் நினைவுகூர்ந்திருந்த அந்தப்பகுதியின் இன்றைய நிலையும் வேதனைக்குரிய ஒன்றாகவே உள்ளது.

■■■

'போன வருசம் நினைவு நாளண்டைக்கு இஞ்ச படையெடுத்து வந்துபோன எங்கட பிரதிநிதிகளுக்கு அதற்குப்பிறகு கனவிலகூட இப்படியோர் இடம் இருக்குது எண்டு தெரியுமோ தெரியாது! நாட்டில இப்ப இருக்கிறமாதிரியான அரசியல் நிலைமை கடந்த காலங்களில இருக்கேல்லை. இனிவரும் காலங்களிலேயும் அது எப்படி இருக்குமோ என்டது கேள்விக்குறிதான். இப்படியான நேரத்தில் இந்த இடத்தில அந்த நினைவாலயத்தைக் கட்டுறதுக்கு ஏன் அக்கறையில்லாமல் இருக்கிறாங்கள்...? "முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த சந்திரன் கேள்வியுடன் முடித்துக் கொண்டார்.

■■■

'இயக்கத்துக்கு அடிக்கிறம் எண்டு சொல்லி ஆயிரக்கணக்கான அப்பாவிச் சனத்தைக் கொன்று போட்டாங்கள். இது உண்மை. இண்டைக்கு எட்டு வருசங் கழிஞ்சு அப்படி ஒண்டு நடந்தது என்ற ஞாபகம். கடைசிச் சண்டைக்க மாட்டுப்பட்டு முள்ளிவாய்க்கால் சென்று இராணுவக்காட்டுப்பாட்டுக்கு வந்த எனக்கே கொஞ்சம் கொஞ்சமாக மங்கிப் போய்க்கொண்டு இருக்கு. அதுக்க போய் வந்த எனக்கே இப்பிடியென்டால், வெறும் கதையாக் கேட்ட எங்கட சனத்தின்ர நிலமை எப்பிடியிருக்கும்...? நாங்கள் அனுபவிச்ச அந்தக் கொடுமை எங்கட பிள்ளையளுக்கும் தெரியவேண்டுமென்றால், அதை காலாதி காலத்துக்கும் ஞாபகப்படுத்திற மாதிரி ஒரு பெரிய நினைவாலயம் கட்டாயமாகக் கட்டத்தான் வேணும். அது பற்றிக் கூட்டமைப்புக் காரர் கொஞ்ச நாளாய்க் கதைச்சவைதான் பிறகு சத்தத்தைக்காணோம்" இறுதிப் போரின்போது முள்ளிவாய்க் காலில் இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த ஒட்டுசுட்டானைச் சேர்ந்த குமாரவேலு பெரிதாக ஆதங்கப்படுகிறார்.

■■■

முள்ளிவாய்க்காலில் மனிதப் பேரவலம் நடைபெற்றது என்பது உலகில் உள்ள அனைவருக்கும் தெரிந்த விடயமே. அவர்கள் எமது நாட்டுக்கு வரும்போது முள்ளிவாய்க்காலுக்கும் வருகின்றார்கள். அண்மையில் கனடாவில் இருந்து ஒரு முக்கிய பிரமுகர் முள்ளிவாய்க்கால் பகுதிக்கு வந்து கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தார். அவர் வருவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர் தான் கடந்த வருடம் தீபம் ஏற்றி அஞ்சலி செய்த பின்னர் அனைவரும் அப்படியே விட்டுச் சென்ற பீடம் துப்புரவு செய்யப்பட்டது. அன்று மக்கள் தீபம் ஏற்றியிருந்த பந்தங்களும், சுட்டிகளும் கூட அந்தந்த இடத்திலேயேதான் அதுவரைச் சிதறிக்கிடந்தன. இப்போது அவை திரட்டப்பட்டு ஓரிடத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

வெறுமனே அந்த நாளில் மட்டும் அங்கு கூடி வாயால் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று அரசியல் புராணம் பாடுவதை நிறுத்தி இனியாவது முள்ளிவாய்க்காலில் நிலைனவாலயம் ஒன்றை அமைக்கும் வேலையை விரைந்து செய்யுங்கள். அங்கே இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களின் பெயர்களைப் பொறியுங்கள். அதேபோல் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் பெயர்களையும் பொறியுங்கள். வருபவர்களும் வருங்காலத்தினரும் தெளிவாகப் புரிந்து கொள்ளட்டும். இந்த நாட்டில் தமிழர்கள் பட்ட துன்பத்தை.

இந்த வருடத்துக்கான மேடைப்பேச்சுக்கள் ஏற்பாடுகள் அங்கு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு விரைந்துசென்று அதன் கைவிடப்பட்ட நிலையை நீங்களும் ஒருதடவை பாருங்கள். உங்களுக்கும் தெளிவாகப் புரியும். கடந்த நினைவேந்தலுக்குப் பிறகு 'வாய்ச் சொல்லில் வீரரடி' எனும் முதுமொழியைத் தமது வாக்குறுதிகளில் புடம்போட்டபடி தொடர்ந்தும் சிம்மாசன மிட்டிருக்கும் நம்மூர் அரசியல் தலைமைகள் உணர்வு மேலீட்டாலோ அல்லது நினைவாலயம் அமைப்பது தொடர்பாகவோ ஒருதடவையேனும் அந்தப் பகுதிக்குச் செல்லவில்லை என்பதும் அந்தப் பகுதியைத் துப்புரவு செய்யவில்லை என்பதும், தமிழர்களின் பேரவலம் முள்ளிவாய்க்கால் தான் என்பதை நினைவுபடுத்திக் கொண்டே உள்ளது.

> போன வருசம் நினைவு நாளண்டைக்கு இஞ்ச படையெடுத்து வந்துபோன எங்கட பிரதிநிதிகளுக்கு அதற்குப் பிறகு கனவிலகூட இப்படி ஒரு இடம் இருக்குது எண்டு தெரியுமோ தெரியாது? நாட்டில இப்ப இருக்கிறமாதிரியான அரசியல் நிலமை கடந்த காலங்களில இருக்கேல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிழ்வான திருமண வாழ்வு

இ.வாகீசன்

மாறுபடுகின்ற குடும்பச் சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதென்பது ஒவ்வொருவருக்கும் குறிப்பாக கணவன் மனைவி இது மிக மிக அவசியமான விடயமாகின்றது. உண்மையில் குறை, நிறைகளுடன் மற்றவரை ஏற்றுக் கொள்வது என்பது இதன் மூலம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயமாக இருக்கின்றது. இதுவரை நாட்களாகத் தனக்கென ஒரு தனியாள் இடைவெளியைப் பேணி வந்தவர்களிடையே ஒரு புரியாத குழப்பம் ஏற்படும் சர்ந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டுவிடுகின்றது.

அது மட்டுமன்றி பலர் அம்மாவிலும் சிலர் தம்மில் தாமும் தங்கி வாழ்ந்த வாழ்க்கை முறையில் திடீரென ஏற்படும் மாற்றம் குழப்பகரமானதாக அமைந்தாலும் அதிலிருந்து விரைவாகத் தெளிவுபெற வேண்டும். இல்லையேல் குடும்பத்தைக் கையாள்வதென்பது கடினமாகி விடுகின்றது. கணவன் மனைவி இடையேயான சமய, சமூக நம்பிக்கைகள்கூட இங்கு நோக்கப்பட வேண்டியவை. காலம் காலமாக கட்டிக் காத்த சில நம்பிக்கைகளில் குறுக்கீடு ஏற்படுகின்றபோது அது பெரிய தாக்கத்தைக் கொண்டு வந்துவிடும்.

மூத்தோரை மதித்தல், வீட்டில் இருக்கும்போது ஆடை அணியும் முறை, பேச்சு முறை , உபசரிப்பு முறை, கூடி உண்ணுதல், உறவுகளுடன் தொடர்பைப் பேணுகின்ற முறை, சில சமயங்களில் ஆண் பெண் ஆதிக்க அடக்குமுறை எனப் பல சம்பவங்கள் திருமண வாழ்வின் சுவையை, இதமான நிலையை உடைத் தெறிந்து விடக்கூடும்.

இது மட்டுமன்றிச் சில பெண்களிடம் ஆண் தன்மையான இயல்புகளும் சில ஆண்களிடம் பெண் தன்மையான இயல்புகளும் மேலோங்கிக் காணப்படலாம். இவ்வாறான இடங்களில் ஏற்படக் கூடிய புறத்தோற்ற வெளிப்பாடு சார்பான நடத்தைகள் குடும்பத்தில் பிறழ்வான வாழ்க்கைக் கோலங்களை ஏற்படுத்திவிடக் கூடும்.

அது மட்டுமன்றி கணவன் மனைவி ஆகியோர் புரிகின்ற தொழில், தொழிலின் போது கற்றுக் கொள்ளும் விடயங்கள் குடும்ப, சமூக உறவாடலில் பாதிப்பை ஏற்படுத்தவல்லன. சட்டத்துறையுடன் சார்ந்த குடும்பத்தினருடைய உறவாடலில் சட்ட விடயங்களும் சமயத்துறை சார்ந்த குடும்பத்தினருடைய உறவாடலில் சமய விடயங்களும் எனப் பொதுவாகப் பரவலடைந்திருக்கக் காணலாம். இவை குடும்ப வாழ்வுக்கு உகந்தவையாக அமையாது.

> “மூத்தோரை மதித்தல், வீட்டில் இருக்கும்போது ஆடை அணியும் முறை, பேச்சு முறை , உபசரிப்பு முறை, கூடி உண்ணுதல், உறவுகளுடன் தொடர்பைப் பேணுகின்ற முறை, சில சமயங்களில் ஆண் பெண் ஆதிக்க அடக்கு முறை எனப் பல சம்பவங்கள் திருமண வாழ்வின் சுவையை, இதமான நிலையை உடைத் தெறிந்து விடக்கூடும்.

ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சட்ட உருவாக்கலுடன் வீதியால் ஒரு நாய்க்குட்டியை அழைத்துச் செல்வது எவ்வளவு சவாலானதோ அதுபோலவே குடும்ப வாழ்விலும் ஒரு நேர்த்தியான சட்டமிட்டு இயங்கச் செய்ய முனையும் செயல் அமைந்துவிடும். இது மனித மனங்களுக்குப் பொருந்தாது. மனித மனம் என்பது ஆசை, பாசம், அன்பு, கருணை, நேசம் முதலிய பல கூட்டுக் கலவைகளால் ஆனது. அது மட்டுமன்றி கோபம், ஆக்ரோசம், வீராப்பு எனச் சில நடத்தைகளும் மனிதனுக்குச் சொந்தமான இயல்புகளே.



இவை பரம்பரை வழியாகவும் சூழல், நிலைமைகள் ஊடாகவும் கற்றுக் கொள்ளப் படலாம். வக்கிர குணம், பழி வாங்கும் இயல்பு கொண்ட உயிரியாக மனிதன் காணப்பட இவனுடைய திருமண வாழ்க்கைக் காலம், அதற்கு முன், பின்னான சம்பவங்கள் கூட மகிழ்வான திருமண வாழ்வைப் பாதிப்படையச் செய்யலாம்.

எனவே இவற்றை நிவர்த்தி செய்வதற்காக மனிதர்கள்

தாவர உணவுகளை அதிகம் உண்ணுதல்

உடற்பயிற்சி செய்தல்

சாந்தம் தரும் செயல்முறைகளில் ஈடுபடுதல்

யோகாசனம் செய்தல்

காயகல்ப பயிற்சியில் ஈடுபடுதல்

ஆலய தரிசனம்

சாமி தரிசனம்

வாசிப்புப் பழக்கம்

மது, புகைத்தல் விலக்குதல்

வீட்டுத் தோட்டம் செய்தல்

செல்லப் பிராணிகளை வளர்த்தல்

போன்ற புறவயக் காரணிகளில் ஈடுபட்டாலும் என்றைக்கும் மகிழ்வான திருமண வாழ்வை வாழ முடியும்.

## ‘நான்’ என்னை அடக்கமுதல் நானதனை அடக்க வேண்டும்

‘நான்’ இறந்துவிடவேண்டும்.
‘நான்’ இறக்க வேண்டுமெனின்
நானிறக்க முன்பாக ‘நான்’
இறந்து விடவேண்டும்.
நான்வாழும் வாழ்க்கைக்கு
‘நான்’தான் தடையென்றால்...
‘நான்’ இறந்து விடவேண்டும்.

‘நான்’தான் எல்லாமே...
‘நான்’நினைத்தால்
பொசுக்கிடுவேன்.
‘நான்’நினைத்தால் காத்திருந்து
நானுன்னை அழித்திடுவேன்.
‘நான்’நினைத்தால்
உன்னையென்ன
ஊரையே அடக்கிடுவேன்.
என்றெல்லாம்...
‘நான்’ எழுந்து கூத்தாடி என்னை
அடக்கிவிடும்
இந்த‘நான்’ எல்லாமே
வந்தவழி ஓடிவிட
‘நான்’என்னை அடக்கமுதல்
நானதனை அடக்க வேண்டும்.
சொந்த நான் நான் ஆனால்
இடைநடுவில்
வந்த‘நான்’ ஓடிவிடும்.
நானுயிரோ டிருக்கையிலே
‘நான்’என்னைக் கொல்கிறது.
நானிலத்தில் நானொருவன்
நானாக வாழுதற்கு
என்னுள் இருக்கும்‘நான்’
தன்னுள்ளே தானடங்கி
தவிடுபொடி யாகிடணும்.
நானிறக்க முன்னாலே
‘நான்’முதலில் இறந்துவிடில்
நான்பிறகு நானாவேன்.
நீயும் நீயாவாய்.
அருகில் அவன் புலனாவான்.
அதுமெல்லத் துலங்கிவிடும்.
ஈதெல்லாம் ஈடேற...
நானிறக்க முன்பாக ‘நான்’
இறந்துவிடவேண்டும்.

அனலைதீவு அறநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்தவார முகநூலில்...

உ.சிலமணி

காலிமுகத்திடலில அடிச்ச அலை 'பேஸ்புக்கில' இருந்து இன்னும் ஓயேல்லை. 'வயசானாலும் உன் அழகும் ஸ்டைலும் இன்னும் குறையேல்லை' என்று படையப்பா படத்தில ரம்யாகிருஷ்ணன் சொன்ன டயலொக்தான் மகிந்தவைச் சுத்தித் திரியுது. பதவியிலிருந்து போனாலும் மகிந்தவின் மக்கள் செல்வாக்கு இன்னும் குறையேல்லை என்று 'முகநூலில' பலர் புழுங்குகிறாங்கள். மே தினத்துக்கு யாருடைய பக்கம் கூடச்சனம் நிக்குது என்டதை வைச்சுத் தங்கட அரசியல் பலத்தைக் காட்டுறதில தென் பகுதி கட்சிகள் மும்முரமாய் இருந்தவை. இதில எல்லாக் கட்சிக்காரரும் மகிந்தவிடம் 'பல்பு' வாங்கிட்டினம் என்றது தான் 'முகநூல்' போராளிகளின் கணிப்பு. மகிந்தவின்ர எழுச்சிக்கு, நீங்க இங்க நடத்தின எழுக தமிழ் காரணம் என்று, கூட்டமைப்புப் பெடியள் புதுப் புரளியக் கிளப்ப, மற்றப் பக்கத்தில சைக்கிள் காரர், இல்லையில்லை நீங்கள் நடத்தின மாவீரர் தினம்தான் காரணம் என்று பதில் புரளி கிளப்பி விட்டிருக்கினம். இந்தக் கிழமை இண்டு தரப்பும் மாறி மாறிப் போட்டுத் தாக்க இந்த 'விடயமே' போதுமாயிட்டுது.

Like

Like Comment Share

பாகுபலி – 2வைப்பற்றியும் இந்தக் கிழமை முகநூலில வைரலாகிச்சுது. வழமையாய் படம் வந்ததும் அதை திருட்டுச் சி.டியில உடனேயே 'ரிலீஸ்' பண்ணுற ரமில் றொக் கேஸ்சை பாராட்டுற பேஸ்புக்காறங்கள். இந்தப் பாகுபலி விசயத்தில மாத்திரம் எதிராய் இருந்தாங்கள். பாகுபலியைப் பற்றி எல்லாம் நல்லாச் சொன்னாலும் எல்லாருடைய கேள்வியும், பள்வாள்தேவன்ர மனைவி யார்? என்றதுதான். ராஜமௌலி கடைசி வரையில அதைச் சொல்லவேயில்லை என்று முகநூலில் ஒரே வறுவல்தான்.

Like Comment Share

இந்த கிழமை முழுக்க முகநூலில புதிதாய் வந்த செயலியை (app) போட்டுப் படுத்திறபாடு பெரும்பாடாய்க் கிடக்குது. 'பேஸ் அப்'(face app) என்ற அந்தச் செயலி, படத்திலிருப்பவரை, அவரது பெண் தோற்றம், வயதான தோற்றம் என்று பல வகையிலும் மாத்தித் தரும். அதை எல்லோரும் 'அப்பிளை' (apply) பண்ணி தங்கட பெண் தோற்றப் போட்டோவைப் போட்டு தங்களைத் தாங்களே அழகு பாத்தாங்கள். இந்தப் போட்டோக்கள் தான் முகநூலில் இந்த கிழமை கொஞ்சம் கூட உலா வந்தது.



பட்டதாரிகள் போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம், நில மீட்புப் போராட்டம் எல்லாம் வடக்கு – கிழக்கில் தொடர்கின்றன. ஆனால் முகநூலில் அதைப்பற்றிய பதிவுகள் குறைவபாகத்தான் உள்ளன. கடையடைப் போட எல்லாத்தையும் ஓரேயடியா முகநூல் போராளிகள் முழுங்கிட்டாங்கள் போல.
போராட்டங்களை அரசியல்வாதிகள் கண்டு கொள்ளுறாங்கள் இல்லை என்று புழுங்கிக் கொண்டிருந்த முகநூல் போராளிகளே, இப்ப இந்தப் போராட்டங்களை தாங்களும் கண்டு கொள்ளாமல் விட்டிட்டாங்கள்.
ஒவ்வொரு கிழமையும் ஏதாவது ஒவ்வொரு விசயத்தை வைச்சு புடுங்குப்படுவாங்கள். இனி வரும் கிழமை என்ன நடக்குது என்று பார்ப்பம்.







# எங்கும் இலஞ்சம்! எதிலும் இலஞ்சம்!

## தாயகப் பயணம் தந்த அனுபவம்

கலைவாணி ஏகானந்தராஜா

தஞ்சமடைந்திருந்த தேசத்தில் இருந்து தாயகம் திரும்பிய எமக்குக் காத்திருந்த அதிர்ச்சியான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன். போர் முடிவடைந்த சில வருடங்களில் நாம் தாயகம் வந்து திரும்பக் கூடிய சூழல் நிலவியது. வருடம் தோறும் நாம் இங்கு வந்துசெல்லும் நிலையும் நீடித்தது. சிறிய ரக மோட்டார் சைக்கிள் ஒன்றை எமது பயணங்களுக்காகத் தெரிவு செய்தோம்.

தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யவும், கோவில்களுக்குச் சென்று வரவும், உறவினர் வீடுகளுக்குச் சென்று திரும்பவும்; அதுவே எமக்குச் சௌகரியமாக இருந்தது.

ஆனால் எனது கணவருக்கு மூக்குக்கண்ணாடி மூலமான பார்வை தெளிவில்லாமல் இருந்தது. அதை மாற்ற எண்ணினோம். அது யாழ்ப்பாணத்தின் பிரபல மூக்குக் கண்ணாடியகம். அங்கு கண்ணைப் பரிசோதனை செய்துவிட்டு கண்ணாடி தருவதாகச் சொன்னார்கள். பரிசோதனைகள் நடைபெற்றன. கண்ணைப் பரிசோதித்தவர் கூறினார் "இதுவரை நீங்கள் பாவித்த கண்ணாடியைவிட கூடுதலான பார்வைத் தெளிவு தரும் கண்ணாடி செய்ய முடியாது. நீங்கள் சம்மதித்தால் சிறிய சத்திர சிகிச்சை செய்த பின்னர் வேறொரு கண்ணாடி அணிந்து தெளிவான பார்வையைப் பெறலாம்" என்றும் "அதற்கான செலவு ஒரு இலட்சம் ரூபா" என்றும் "சத்திர சிகிச்சையின்போது கண்ணில் லென்ஸ் என்ற ஒருவகை வில்லையைப் பொருத்துவதற்கு ஒன்றரை இலட்சம் பணம் தேவைப்படும்" என்றும் கூறினார்.

நாம் "யோசித்துவிட்டு வருகிறோம்" என்று கூறி விடைபெற்றோம். வசிப்பிட நாட்டுக்குச் சென்றதும் அங்குள்ள கண் வைத்தியர் ஒருவரிடம் சென்று காட்டினோம். அவர் ஏலவே கணவர் பயன்படுத்திக் கொண்டிருக்கும் கண்ணாடியை 'கிளீன்' செய்து தந்தார். அதில் தெளிவான பார்வையும் கிடைத்தது. மேலதிகமாக நாங்கள் கேட்டதற்காக மாத்திரம் "கண்களில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை" என்று அவர் கூறினார். வேலியே புல் மேய்வதுபோல் தற்போது நமது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் எம்மவரின் செய்கைகளை நாம் அவருக்குச் சொல்லாமலேயே வெளியேறினோம்.

நாம் நாடு திரும்புவதற்கு ஒரு வாரம் இருக்கும் நிலையில் இங்கு வாங்கிய சேலைகளுக்கான மேற்சட்டைகள் தைப்பதற்காக உறவினர்களின் வழிகாட்டலில் முன்,பின் பழக்கமில்லாத ஒரு பெண்ணின் தையல் நிலையத்துக்குச் சென்றேன். அங்கு அவர் ஒரு சட்டை தைப்பதற்கான கூலி 350ரூபா" என்று கூறினார். நான் நான்கு சட்டைகளைத் தைப்பதற்குக் கொடுத்தேன

இலஞ்சம் என்பதற்கும் அப்பால் வெளிநாட்டுக் காரர்தானே, அதிக பணமிருக்கும், அதைத் தந்தால் என்ன...? அதுவே பழக்கப்பட்டுப் பழக் கப்பட்டு இத்தகைய ஏமாற்று வித்தைகளை இவர்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது. மிக வும் நுட்பமாகப் பணம் பறிக்கும் இவர்கள் மிக இலகுவாகப் பணத்தைப் பார்க்கின்றார்கள்.

தைத்து முடித்ததும் 350 ரூபா என்று முன்னர் கூறியிருந்த வழமையான கூலித்தொகைக்குப் பதிலாக ஒரு சட்டைக்கு 450ரூபாப் படி கணக்குக் கொடுத்தார். "இதற்குக் கழுத்தில் பட்டி வைத்தோம். மற்றையதற்குக் கையில் மணிவைத்தோம்" என்று அதற்குச் சாட்டுப் போக்கும் சொன்னார். சரி போகட்டும் என்று கொடுத்துவிட்டுச் சட்டைகளை எடுத்துப் பார்த்தேன். கொடுத்த துணியை எடுத்துக்கொண்டு ஏமாற்று வேலைகள் செய்திருக்கின்றார். ஆசையாக வாங்கிய ஆடைகள் இவ்வாறாயிற்றே... மனதுக்குள் மிக வேதனை அடைந்தேன். இது இலஞ்சம் என்பதற்கும் அப்பால் வெளிநாட்டுக்காரர் தானே, அதிக பணமிருக்கும், அதைத் தந்தால் என்ன...? அதுவே பழக்கப்பட்டுப் பழக்கப்பட்டு இத்தகைய ஏமாற்று வித்தைகளை இவர்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது. மிகவும் நுட்பமாகப் பணம் பறிக்கும் இவர்கள் மிக இலகுவாகப் பணத்தைப் பார்க்கின்றார்கள். ஆனால் புலம்பெயர் தேசங்களில் வாழ்பவர்கள் இந்தப் பணத்தை உழைக்க எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கின்றார்கள் என்று எள்ளளவும் இவர்களுக்குச் சிந்தனை கிடையாது.

தாயகம் செல்லும் உறவுகளே...! நீங்கள் வெளிநாட்டுக்காரர் என்று காட்டிக் கொள்ளாதவரைக்குமே இவர்களிடமிருந்து தப்பிப்பீர்கள். அவதானமாக நடந்துகொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பாகுபலி - 2

## பிரமாண்டமான பேய்க்காட்டல்

பிரமிக்கத்தக்க காட்சியமைப்புக்கள், கற்பனையை நம்பத்தகுந்தவிதத்தில்காட்சிகளாகஉருவாக்கிய விதம் போன்ற அம்சங்களால் மாத்திரம் அதிகளவில் இரசிகர்களின் கவனத்தை ஈர்த்திருந்தது 'பாகுபலி'. இதனால் முதல் பாகத் திரைக்கதையில் எழுந்த கேள்விகளுக்கு எப்படிப் பதில்களைத் தரப்போகின்றது எனும்எதிர்பார்ப்புக்களைஇரண்டாம்நிலைக்குள்தள்ளி, முதற்பாகத்திலிருந்துஇன்னும்மெருகூட்டப்பட்ட எத்தகைய பிரமிப்புக்களைத் தரப்போகின்றது எனும் ஆவலையே இயல்பாக இரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது பாகுபலி 2. அதிக செலவில் தயாரிக்கப்படுகின்றது என்பதும் தமிழ் சினிமாவில் முதல் முறையாக முயற்சி என்பதும் இயல்பாகவே இந்தப் படத்துக்கான மவுசை அதிகரிக்கச் செய்திருந்தன.

மகிழ்மதி தேசமானது ராஜமாதா சிவகாமி தேவியின் (ரம்யா கிருஷ்ணன்) மதிநுட்பம் மிகுந்த நிர்வாகத்தால் தலை நிமிர்ந்து நிற்கின்றது. மகேந்திர பாகுபலியை (பிரபாஸ்) அரசனாக அறிவித்து அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நாள் குறிக்கின்றார் ராஜமாதா. அதற்குமுன்னர்தான் ஆளப்போகும்தேசத்தைச்சுற்றிப் பார்க்கச் செல்லும் பாகுபலி, குந்தள நாட்டின் இளவரசி தேவசேனாவைக் (அனுஷ்கா) கண்டு காதல் கொள்கின்றார். பாகுபலியின் சகோதரன் பல்லாளத்தேவன் (ராணா) இதை அறிகின்றான். தனக்குக் கிடைத்திருக்க வேண்டிய அரியாசனம் பாகுபலிக்குப்போவதைஎண்ணிவன்மம் கொள்ளும் அவன், அரியணையுடன்தேவசேனாவையும் அடையச் சூழ்ச்சிவலை பின்னுகின்றான். தந்தைபிங்களத்தேவனின் (நாசர்) சகுனித்தனங்கள் அவனை வழிநடத்துகின்றன. அந்தச்சூழ்ச்சியின் விளைவுகள் தான் 'பாகுபலி 2'வின் கதை.

இரண்டாம் பாகம் என்றால், முதல் பாகத்தில் எழுந்த எல்லாக் கேள்விகளுக்கும் நம்பும்படியான விடைகள் இருக்க வேண்டும். அதை நிறைவு செய்துவிடுகின்றது 'பாகுபலி 2.' கட்டப்பா மகிழ்மதி தேசத்தின் பரம்பரை அடிமைத் தளபதி என்றபோதும் அவரைத் தாய் மாமனாக ஏற்றுக்கொண்ட இளவரசன் பாகுபலியை அவர் ஏன் கொன்றார் என்ற கேள்விக்குத் தரப்பட்டிருக்கும் விடை என்பதாகப் பாகுபலி-2 வைக் கொள்ளலாம். இதில் இயக்குநர்எஸ்.எஸ்.ராஜமௌலி வெற்றி பெற்றிருக்கின்றார்.

தொழில்நுட்பம் மூலம் சாத்தியமாகியிருக்கும் காட்சிச் சிறப்பு, முதல் பாகத்தைவிட இரண்டாம் பாகத்தில் பல மடங்கு கூடியிருக்கின்றது. கற்பனையும் அழகியலும்சந்திக்கும்பிரம்மாண்டமான காட்சியமைப்பு மாத்திரமே இந்தப்படத்தின் சிறப்பு.

அரண்மனை வெளி உள் தோற்றம், அலங்காரங்கள், கதாபாத்திரங்களில் வீரம் வெளிப்படும் காட்சிகள், ரம்மியமான காதல் காட்சிகள், நிலக் காட்சிகள், ஆயுதங் கள், போர்க்களக் காட்சிகள் என எல்லாமே கவனமாகச் செதுக்கப் பட்டிருப்பதில் வெளிப்பட்டு நிற்கின்றது இயக்குநரின் அளவற்ற கற்பனை. அதற்குக் காட்சி வடிவம் கொடுத்துள்ளது நவீனதொழில்நுட்பமும்பொருத்தமானநடிகர்களைக்கையாண்ட விதமும்.


பிரபாஸ் அனுஷ்கா இணையிடம் காணப்படும் இயல்பான இணக்கத்தைப் போலவே கட்டப்பா பிரபாஸ் இடையிலான இணக்கமும் சிறப்பாக வெளிப்பட்டிருக்கின்றது. பாகுபலிஉயிரைவிடும் காட்சியில் தன்னைக்கொன்றகட்டப்பாமீதுஅன்பை வெளிப்படுத்தும் தருணம் அந்த இணையின் பிணைப்பின் உச்சக்கட்டமாகத்திகழ்கின்றது. அனுஷ்கா ரம்யாகிருஷ்ணன் சந்திப்பு, முடிசூட்டு விழாவில் மக்களின் விருப்பம் வெளிப்படும்விதம், பாகுபலி கொல்லப்படுவது ஆகிய காட்சிகள் மனதில் நிற்கின்றன. பாகுபலிக்கு எதிரியான ரணாவின் கதாபாத்திரம் வலிமையை நன்கு உள்வாங்கிவெளிப்படுத்தியிருக்கும் தோற்றமும் நடிப்பும்நாயகனின்பாத்திரத்துக்கு இணையாக அமைந்துள்ளது.

நாயகபிம்பத்தைமுன்னிறுத்தும் படமாக இருந்தாலும் ரம்யா கிருஷ்ணனுக்கும்அனுஷ்காவுக்கும்அதிகமுக்கியத்துவம்கொடுக்கப்பட்டிருக்கின்றது. மகிழ்மதியில் தனக்கு ஏற்படும் கசப்பான அனுபவங்களை அனுஷ்கா எதிர்கொள்ளும் விதம் அந்தப் பாத்திரத்தின் மீது மதிப்பைக் கூட்டுகின்றது.


கலை இயக்குநர் சாபு சிரில், அவருக்குவலதுகரமாகநின்றிருக்கும் வி.எப்எக்ஸ்மேற்பார்வையாளர் கமலக்கண்ணன், இசையமைப்பாளர் கீரவாணி, அகண்ட கோணங்களைஅதிகமும்தேர்ந்தெடுத்துபிரம்மாண்டப்படுத்தியிருக்கும் ஒளிப்பதிவாளர் செந்தில்குமார், மிகக் கச்சிதமாகக் காட்சிகளைத் தொகுத்திருக்கும் படத்தொகுப்பாளர்கோத்தகிரி வெங்கடேஷ்வர ராவ் ஆகிய அனைவரும் இணைந்து படம் தரும் அனுபவத்தைக் கூட்டுகிறார்கள்.

காதல் காட்சிகள் நீண்டு அலுப்பூட்டத் தொடங்குகின்றன. அதை எதிர்பாராதஒருதிருப்பத்தின்மூலம் படம் சுதாகரித்துக்கொள்கின்றது. இரண்டாம் பாதியில், கடைசிக்கட்டச்சண்டையில் போர்த் தந்திரம் சார்ந்த மதியூகம் பெரிதாக வெளிப்படவில்லை. ராணாவும்பாகுபலியும் மோதும் சண்டை நன்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அதைஅவ்வளவுநீளமாகக்காட்டியிருக்க வேண்டுமா எனத் தோன்றுகின்றது.





'மக்கள் வாழ்வியல் குறித்த திரைப்படங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற காலம் என்றைக்கு உருவாகுமோ அன்றைக்குத் தான் அரசியலிலும் அவர்கள் தெளிவு பெற்றிருக்கின்றார்கள் என்று பொருள். அதுவரை பாகுபலி போன்ற திரைப் படங்களும் கொண்டாடப்படும். அவர்களைச் சீரழித்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் அரசியல் பிழைப்பு நடத்தும் கூட்டங்களும் கொண்டாடப் படுவார்கள்'



இரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த பிரமாண்டம் எனும் எதிர்பார்ப்புடன் படக்குழுவினர் மத்தியில்ஏற்பட்டிருந்தஅதிகவசூலைக் குவித்தல் எனும் எதிர்பார்ப்பையும்சமநேரத்தில்பூர்த்திசெய்திருக்கின்றதுபாகுபலி2. பார்வையாளர்கள்எதிர்பார்த்திருந்தபிரமாண்டம் என்பதைத் திரையிலே மாத்திரம் தான் முழுமையாக அனுபவிக்க முடியும் என்பதுவும் இதன் வசூலுக்குரியகாரணங்களுள்ஒன்று. அத்துடன் படத்தில் பிரமாண்டத்தைச்சாத்தியப்படுத்தியஅளவுக்கு ஏனையகலை, கதைஅம்சங்கள் பலவும் கவனிக்கப்பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேர்ந்தே சிரிப்போம் வாருங்கள்

## புதிய சிரிப்பு விருந்து

செ. செல்வராஜா

புன்னகைக்கு நிகரானது எதுவும் இல்லை. புன்னகையைத் தொலைத்துவிட ஒருவரும் விரும்புவதுமில்லை. மகிழ்ச்சிகரமான வாழ்வே அனைரதும் இலக்காக உள்ளது.

இன்றைய நெருக்கடியான அரசியல், பொருளாதார காரணங்களால் மன அழுத்தமும் அதன் விளைவுகளும் மனிதனின் ஆரோக்கியத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. மனிதனாகப் பிறந்தவன் சுமைகளைச் சுமக்க வேண்டியவனாகவே இருக்கின்றான். இது காலங்காலமாக உள்ள நிலமை. அழுத்தங்களில் அமிழ்ந்து, நாமும் துன்பப்பட்டு மற்றவர்களையும் துன்பத்துக்குள் ஆழ்த்திவிட முடியாது. அதனாற்றான் 'துன்பம் வரும்போதும் சிரிங்க' என்று சொல்லி வைத்தார் வள்ளுவர்.

அந்த நோக்கை மனதிற் கொண்டே, அதற்குச் சிறிதளவாவது உதவும் பொருட்டு 'முசுப்பாத்தி' நிறைந்த இது உங்கள் கைகளில் தவழ விடப்படுகின்றது. 'முசுப்பாற்றல்' என்பது நல்லதொரு தழிழ்ச் சொல். சுமை களை இறக்கி வைத்து 'இளைப்பாறுதலை' இந்தச் சொல் குறிக்கின்றது. இதிலிருந்தே நம்மிடையே பிரதேச வழக்கிலுள்ள 'முசுப்பாத்தி' என்கிற சொல் உருவானது. உண்மையில் ஒரு ஒழுங்கான 'முசுப்பாத்தியின்' பின்னர் – இளைப்பாறலின் பின்னர் எமது உடலும் உள்ளமும் புது உற்சாகம் பெறும்; உயிர்ப்புப் பெறும். அது, அந்த உயிர்ப்பு நம் அனைவருக்கும் அவசியம்.

'இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்'

இடையூறு வருகின்றபோது சிரிக்க வேண்டும். அந்தத் துன்பத்தை வென்று அடக்கக் கூடியது அப்படிச் சிரித்து விடுவதன்றி வேறில்லை.

### சிரி சிரி சிரிப்பு...

இருமல், தும்மல், சளியைவிட விரைவில் தொற்றிக் கொள்ளக்கூடியது நகைச்சுவை – சிரிப்பு. சிரிப்பு பகிரப்படும் போது அது மக்களை இணைக்கின்றது. அத்துடன் நெருக்கத்தை ஏற்படுத்தி மகிழ்ச்சியையும் உருவாக்குகின்றது. உடல் நலத்தைத் தூண்டி, உடலில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, உடல் வலிமையை மேம்படுத்துகின்றது. மன அழுத்தங்களில் இருந்து விடுபடச் செய்து, உடல் வலிகளைக் குறைவடையச் செய்கின்றது. எல்லோரதும் சுதந்திரமாகவும், இலகுவாகவும் பயன்படுத்தக் கூடிய ஒரு சிகிச்சை முறை. நகைச்சுவைக்கும் சிரிப்புக்கும் ஒரு சமூகப் பெறுமானம் உண்டு. அதனால் பல இடங்களிலும் சிரிப்புச் சங்கம், லொள்ளு சமா, முசுப்பாத்தி மன்றம், சிரிப்புச் சமா என்பவற்றைத் தொடங்குகின்றனர். இவை இன்றைய காலத்தின் தேவைகளாகிவிட்டன.

வெளிநாடுகளில் humour clubs மிகவும் பிரபல்யமானவை. புத்துணர்ச்சி மற்றும், உத்வேகத்தின் ஊற்றாக இவற்றை அவர்கள் காண்கின்றனர். பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் தான் கூடுதலாக இந்தச் சங்கங்களை நாடி ஓடுபவர்களாகவும் உள்ளனர். நமது பிரதேசங்களிலும் நாலு பேர் சேர்ந்து கடதாசி 'கார்ட்ஸ்' (கூட்டம்) விளையாடும்போது அவர்களிடையே ஓரிருவர் கொஞ்சம் தமாஷ் பேர்வழிகள் இருப்பின் அந்த இடத்தைச் சூழ ஒரு கூட்டம் கடதாசி விளையாட்டைப் பார்ப்பதற்காக கூடிவிடும். அவர்கள் விளையாட்டில் ஈடுபடாதபோதிலும், அங்கு விடப்படும் பகிடிகளை இரசித்து, எழும் குபீர் சிரிப்பில் இணைந்து கொள்வர். இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும், அடுத்த வேளை உணவுக்கு என்ன வழியென்று தெரியாத நிலையிலும், அவர்களால் எப்படித்தான் இப்படிச் சிரித்து மகிழ முடிகின்றதோ? இவ்வாறு சில வேளைகளில் அவர்களைப் பார்த்து நாம் பெருமூச்சு விடுவதும் உண்டு.



# 13 நகைச்சுவை தொடர் ஓவசி

மிருசுவில் தமிழ்தாசன்

நிலவைப் பார்த்து வானம் சொன்னது என்னைத் தொடாதே' இன்னும் எத்தனைகாலம் தான் ஓவசியால் சோககீதம் பாடிக் கொண்டிருக்க முடியும். சவுந்தரியின் சௌந்தர்யம் குறைந்து போய்விடும் என்பதற்காகத் திருமணம் முடித்தும் பிள்ளை,குட்டிகள் பெறாது எவ்வளவு காலத்தை ஓட்ட முடியும்.

"எடி! சித்திராவைப்பார்! லீலாவைப்பார்! சுபத்திராவைப்பார்! சுப்பிரமணியத்தாரின் கடைக்குட்டி காயத்திரியைப் பார்! இவர்களெல்லோரும் கல்யாணம் முடித்துக் குழந்தை,குட்டிகளைப் பெற்று எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். கல்யாணம் பண்ணினால் மட்டும் போதுமா? ஒரு வாரிசு வேண்டாமா! வாரிசில்லாதவர்களை மலடன் – மலடி என்று ஊர் உலகம் பழிக்குமல்லவா! முழுவியளத்துக்கோ ஒரு நல்ல காரியத்துக்கோ பிள்ளை பெறாதவர்களைச் சேர்க்க மாட்டாது இந்தச் சமூகம். கொஞ்சம் யோசித்துப்பார் சவுந்தரி"

இத்தனை வசனங்களையும் மனனம் பண்ணி வைத்து சவுந்தரிக்குத் திணித்தது அடுத்த வீட்டு அம்பிகாக்கா புரிந்த மாபெரும் கைங்கரியம். அம்பிகாக்காவின் குடும்ப நல ஆலோசனைகளின் விளைவாக இன்று சவுந்தரி ஒரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டாள். இத்தனை ஆலோசனைகளையும் அம்பிகாக்கா தன்னுடைய மூளைக்கு எட்டித்தான் சொன்னாளென்று கூறமுடியாது. அத்தனையும் அவன் பாவம் ஓவசியின் வார்த்தைகள். அவைகளைச் சவுந்தரியிடம் இவள் ஒப்புவித்திருந்தாள். அன்றொருநாள் நள்ளிரவு நேரம் சவுந்தரிக்குப் பிரசவ வலி ஆரம்பித்துவிட்டது.

"ஓவசி! மினக்கெடாமல் கொண்டோடடா ஆசுப்பத்திரிக்கு"

அம்பிகாக்காவின் ஆலோசனை இது. அந்த நேரம் ஒரு ஓட்டோ பிடிப்பதற்காக அலைந்துலைந்து இறுதியில் குளத்தடிக் குணசிங்கத்தாரின் மருமகன் திலீபனுடைய ஓட்டோவைக் கூட்டிவந்தான் ஓவசி. ஊரிலே பக்கத்திலே எத்தனையோ ஓட்டோக்களிருக்க அலையோ அலையென்று அலைந்து நீண்ட தூரத்திலிருந்து இந்த ஓட்டோவை ஓவசி கொண்டு வந்ததுக்குக் காரணமில்லாமலில்லை. அது அவனுக்குமட்டும் தெரிந்த இரகசியம். எடுத்த எடுப்பிலே நீங்கள் ஓவசியை ஒரு முட்டாளென்று நினைக்கக் கூடாது.

ஓட்டோ வந்ததும் அடிக்குமேல் அடிவைத்து முனகியபடி வந்து ஏறிக் கொண்டாள் சவுந்தரி. அவளின் பருத்த உடலைத் தாங்க முடியாது திலீபனின் ஓட்டோ அவளுக்குப் போட்டியாக முனகிவிடத் திலீபன் தனது தலையில் கைவைத்தான். சவுந்தரியை ஏற்றிவிட்டு மறுபக்கம் ஏறப்போன ஓவசியைத் திலீபன் தடுத்தான்.

"சரியண்ணை! நீங்கள் இறங்கி வேறை என்னத்திலேயும் வாருங்கோ! இனி ஏத்தினால் ஓட்டோ தாங்காது"

"என்னடாப்பா! மூண்டு பேரை ஏத்தலாம் தானே!"

"அது தானப்பா! உங்கடை உவவை ஏத்தியாச்சுத் தானே! மூண்டுபேரை ஏத்தினதுக்குச் சமம்! என்ரை ஓட்டோவிலை ஓவர்லோட் போடேலாது"

திலீபனும் கடும் பிடியில் நின்றான். வலி தாங்க முடியாது சவுந்தரி ஓட்டோவின் சீற்றைப் பிய்த்தெடுத்துக் கத்திக் குளறி ஆரவாரம் போட்டுக் கொண்டிருந்தாள். சவுந்தரி ஓட்டோவில் [illegible] சைக்கி [illegible]

சவுந்தரியை ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு வெளியே வந்தான் ஓவசி.

"அண்ணை முன்னூற்றைம்பது ரூபா தாங்கோ! கொடுக்குப் பிடியில் நின்றான் ஓட்டோக்காரன்.

"என்ன காசோ! ஏய்! பிரசவத்துக்கு இலவசமெண்டெல்லோ உன்ரை ஓட்டோவிலை எழுதிவைச்சிருக்கிறாய் பிறகென்ன காசும் கத்தரிக்காயுமெண்டு...!"

முற்றிக் குறுத்துப்போன ஒரு புடையனாகச் சீறினான் ஓவசி. ஓட்டோக்காரனால் வாய் திறக்க முடியவில்லை. இருந்தும் அவனும் விடுவதாயில்லை.

"அண்ணை! இது நான் கிட்டடியிலை வாங்கின ஓட்டோ. முந்தின 'ஓணர்' அப்பிடி எழுதி வச்சதை அழிக்க நேரமில்லாமல் போயிற்றுது. அது தான் விடயமொழிய நான் இலவசத்துக்கு ஓடுறதுக்கு ஒண்டும் பேயன் பித்தனில்லை எண்ணெய் தண்ணியின்ரை விலை தெரியுமே உங்களுக்கு? உங்கை ஊர்முழுதும் நீங்கள் பிள்ளை பெத்துக் கொண்டிருங்கோ நாங்கள் பெற்றோலடிச்சு உங்களுக்கு ஊழியம் செய்யுறம்"

"அப்ப ஏனப்பா! பிரசவத்துக்கு இலவசமெண்டு பெரிய விலாசமாய் எழுதி வைச்சிருக்கிறாய். ஊருக்கை எத்தினை தெரிஞ்ச ஓட்டோக்களெல்லாம் நிக்கத்தக்கதாய் உவ்வளவு தூரம் தேடியலைஞ்சு உன்னட்டை ஏன் வரவேணும் நான்? உன்னிலை தான் பிழை"

"ஓமண்ணை! என்னிலை பிழையிருக்குத்தான்.

சற்று இறங்கி வந்து விட்டான் திலீபன்.

"சரி! போனது போகட்டும்! ஓடின பெற்றோல் காசையாவது தாருங்கோ. மனச்சாட்சியின் படிதாருங்கோ! என்னிலும் பிழை இருக்குது."

இனியும் அவனுடன் முரண் பட்டுக் கொண்டிருக்க ஓவசி விரும்பவில்லை. இரண்டு நூறுரூபாத் தாள்களை எடுத்துத் திலீபனின் கைக்குள் திணித்தான். திலீபன் ஒரு விளம்பரத்துக்காகத் தான் அப்படி எழுதிவைத்திருக்கின்றானே தவிர அவன் கூறியதெல்லாம் பொய். என்பதை ஓவசி ஊகித்துக் கொண்டான். சவுந்தரிக்குக் குழந்தை பிறந்து விட்டதாம். இத்தனை விரைவாகப் பெற்று விட்டாளே! இவளென்ன வயிற்றிலிருந்து தான் பிள்ளையைப் பெற்றாளா? அல்லது மடியிலிருந்து பிள்ளையை மெல்ல இறக்கி வைத்து விட்டாளா! அப்படியொரு நியாயமான சந்தேகம் ஓவசிக்கு. அத்தனை விரைவாகப் பிள்ளை பெற்று விட்டாளே!

நல்ல திடகாத்திரமான தேகம். எத்தனை விதமான நொறுக்குத் தீனிகள், கள்ளத் தீனிகளைக் கண்ட உடல் வேளா வேளைக்குச் சாப்பாடு. அதுவும் முட்டை, பால், இறைச்சி, மீனென்று சாப்பிட்டு வளர்ந்த சவுந்தரி சாதாரண பெண்களைப்போல் ஒன்றும் சிரமப்பட்டுப் பிள்ளை பெறவேண்டியதில்லை. அத்தனை பலம் அவளுடலில் நிறைந்திருந்ததால் மிகச் சுலபமாகப் பெற்றுவிட்டாள், வேறென்றுமில்லை.

பிறந்தது ஆண்குட்டி. இல்லை! குட்டியொன்று சொல்வதை விட 'குத்தி'யென்று சொல்லலாம். உரித்துப் படைத்து தாயின் நிறம் தாயின் முகம் வயிற்றிலேயே நன்றாக வளர்ந்து தான் பிறந்திருப்பான் போலும், அப்படியொரு வளர்த்தி தாயைப் போலபிள்ளை நூலைப்போல சேலை என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள் மூதாதையர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றமும் தண்டனையும்



# பிடிவிறாந்து

குணசேகரன் சக்தீனா

ஊர்காவற்றுறையில் நடந்த இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய ஈ.பி.டி.பியினர் இருவரை நாடு கடத்த ஏதுவாக அவர்களின் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு இலக்கம் என்பவற்றைக் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு குற்றவாளிகளுக்கு எதிராகப் பன்னாட்டு பிடிவிறாந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஏலவே பிறப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த குற்றவாளிகள் பிரிட்ட னில் தலைமறைவாக உள்ளனர். இவர்களைப் பிரிட்டனில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சர், அரசதலைவர், நீதிஅமைச்சர், அயலுறவு அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றுக்கு யாழ்மப்பாண மேல் நீதிமன்றால் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

அன்றும் மன்று வழமையைப் போன்றே இயங்கிக் கொண்டிருந்தது. இதற்குக் காரணம் அனைவரும் அறிந்த அந்த வழக்கின் தொடர் சாட்சியத்தை அறிவதற்கானது. ஆனால் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் நீதிபதி அந்தக் கட்டளையை வாசித்தார். அதுவே பொதுவெளியில் மக்கள் இவ்வாறு கதைத்துக்கொள்வதற்குக் காரணமாயிற்று.

"என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. அன்று அந்தச் சம்பவம் நடைபெற்றதும் அதிலிருந்து நான் விடுபடுவதற்குப் பலநாட்கள் சென்றன. மிகக் கொடுமையான இந்தச் செயலைப்புரிந்த பாதகர்கள் எங்கிருந்தாலும் நாசமாத் தான் போவாங்கள்" மன்றின் நுழைவாயில் படிகளில் இருந்து அவதானமாக இறங்கிக் கொண்டிருந்த வயதானவரின் வாய் வார்த்தைகளே இவை.

"பார்ப்போம் இன்னும் எவ்வளவு நாட்கள் செல்கின்றன என்று. கடவுளிடம் நான் வேண்டுவது இதுதான் அந்தக் கொலைகாரர்கள் எங்களது கண்களில் படவேண்டும். எப்படி எங்கட ஆசிரியரை வெட்டினாங்களோ அதுபோல அவங்களைக் கலைத்துக் கலைத்து வெட்டுவோம். அந்த வலியை அவங்களும் அனுபவிக்க வேண்டும்" கொதித்தெழுந்;த கோபத்துடன் வெளிவந்த இன்னொருவரின் வார்த்தைகள் எனது காதுகளுக்குள் தெளிவாகவே நுழைந்தன.

"என்னய்யா இது இன்னும் அந்தக் கொலைகாரப் பாவிகளைப் பிடிக்கவில்லையா…? நாட்டில் இதற்குக் கூடவா வசதியில்லை? அவங்கள் அந்த நாட்டில இன்னும் எத்தனை பேரைக் கொலை செய்து போட்டு வரப்போறாங்களோ? கடவுளே…!" தள்ளாத வயதுடைய இன்னெருவர்.

"எடேய் அவங்கள் அந்த நாட்டில ஒன்றும் செய்ய மாட்டாங்கள். இஞ்ச தான் இழிச்ச வாயன்கள் இருக்கிறாங்கள் என்றால் அங்கேயும் இருப்பாங்களா?" அவருக்குப் பதில் சொன்ன மற்றவர் இவர்.

"சட்டத்தின் முன் குற்றவாளிகளான அவர்களை, இரட்டைக் கொலை புரிந்த அந்தக் கட்சியின் இரண்டு பேரையும் நாட்டை விட்டு யார் வெளியே போகவிட்டது? தலைமறைவாக யார் இடங்கொடுத்தது? இப்போது தெரிகின்றதா எமது நாட்டின் விசித்திரம்?" பெருமூச்சோடு வார்த்தைகள் முற்றுப்புள்ளி யிட்டுக்கொண்டன.

கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மீது ஊர்காவற்றுறை – நாரந்தனை எனும் இடத்தில் குழு ஒன்று வழி மறித்துத் தாக்குதல் நடத்தியது. துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும், கம்பிகள் பொல்லுகளால் தாக்கியும் காயங்களையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தது அந்தக் குழு.

இதில் இருவர் கொல்லப்பட்டனர். அத்துடன் 18 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகி இருந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த(ஈ.பி.டி.பி) நான்கு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் மீது 47குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு, குற்றப் பகர்வுப் பத்திரம் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில் வழக்கு விசாரணைகள் ஆரம்பமாயின. இதில் குற்றவாளிகளாகச் சுட்டப்பட்டுப் பிணையில் விடுவிக்கபட்ட இரண்டு பேர் வழக்கு விசாரணைக்குச் சமூகம் அளிக்காது தலைமறைவானார்கள். ஏனைய இருவரும் வழக்கு விசாரணைகளுக்குச் சமூகம் அளித்து வந்தனர். இதனால் முதலாம், இரண்டாம் குற்றவாளிகள் இல்லாத நிலையில் மூன்றாம் மற்றும் நான்காம் குற்றவாளிகளுடன் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

மன்றில் முன்னிலையான குற்றவாளிகள் தம்மீது சுமத்தப்பட்ட 47குற்றச் சாட்டுக்களையும் மறுத்தனர். ஆனால் சாட்சியங்கள் உறுதிப் படுத்தின. "நாம் ஊர்காவற்றுறை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது எதிரே ஒரு வாகனம் திடீரெனக் குறுக்காக வந்து எம்மை வழிமறித்தது. அந்த வாகனம் வெள்ளைநிறமுடைய திறந்த நிலையுடைய [illegible] வாகனம். அந்த வாகனத்தில் முன் ஆசனத்தில் இருந்த நெப்போலியன் என்பவர் எம்மைப் பார்த்து அவர்களை அடியுங்கள், கொல் லுங்கள் எனக் கோசமிட்டபடி துப்பாக்கிச் சூடு மேற் கொண்டவாறு எம்மை நோக்கி ஓடிவந்தார்.

எமது வாகனக் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டன. இதன்போது நான் அனைவரையும் தப்பியோடுங்கள் எனக் கூறினேன். அந்த நேரம் சாரதி ஆசனத்துக்கு அருகில் இருந்த கமல் என்பவர் கதவைத் திறக்க முற்பட்டவேளை ஓடிவந்தவர்கள் அவரைத் தாக்கினர். அவர் தடுத்தார். எனினும் அவர் மீது இரும்பு ஆயுதத்தால் அவர்கள் தாக்கினர். அந்த ஆயுதங்கள் வாள் போன்றும் உள்ளூர்த் தயாரிப்பிலான கைக்கோடரி போன்றும் காணப்பட்டன. இந்தத் தாக்குதலால் கமல் முகம் குப்புறமாகத் தரையில் வீழ்ந்தார்.

அடுத்து எனக்குப் பக்கத்தில் இருந்த ஏரம்பு பேரம்பலம் என்பவர் ஓடும்போது அவர் கை மீது வெட்டுத்தாக்குதல் இடம்பெற்றது"

கேள்வி – வெட்டியவர் இந்த மன்றில் உள்ளாரா? அவ்வாறெனின் அவர் எத்தனையாவதாக நிற்கின்றார்?

பதில் – ஆம் குற்றவாளிக்கூண்டில் மூன்றாவதாக அந்த நபர் உள்ளார். அவரைச், சாட்சி தனது சுட்டுவிரலால் சுட்டி அடையாளம் காட்டினார். இறுதித் தீர்ப்புக்கான நாள் குறிக்கப்பட்டது. குற்றவாளிகள் நான்கு பேர். குற்றவாளிக் கூண்டுக்குள் இப்போது நிற்பதோ இரண்டு பேர். சிந்தனையைக் கலைத்தது மன்றுக்குள்ளே பெரிதாக ஒலித்த அந்தக்குரல்

"நான்காவது சந்தேகநபர் குற்றமற்றவர் எனக் கருதி வழக்கில் இருந்து விடுவிக்கப்படு கின்றார் இதில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் குற்றவாளிகள் மீதான 47குற்றச் சாட்டுக்களில், ஒன்றில் இருந்து 24 வரையான குற்றச் சாட்டுக்களில் இருந்து அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள். அத்துடன் 25 தொடக்கம் 47 வரையான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இதில் முதலாம் மற்றும் இரண்டாம் குற்றவாளிகள் வழக்கு விசாரணைக்குச் சமூகமளிக்காது தலைமறைவாகி உள்ளனர். அவர்களுக்கு எதிராக ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்து நடைமுறையில் இருக்கும்" என்று தீர்ப்பு வாசிக்கப்பட்டது.




"பார்ப்போம் இன்னும் எவ்வளவு நாள்கள் செல்கின்றன என்று. கடவுளிடம் நான் வேண்டுவது இதுதான் அந்தக் கொலைகாரர்கள் எங்களது கண்களில் படவேண்டும். எப்படி எங்கட ஆசிரியரை வெட்டினாங்களோ அதுபோல அவங்களைக் கலைத்துக் கலைத்து வெட்டுவோம் அந்த வலியை அவங்களும் அனுபவிக்க வேண்டும்"

குற்றவாளிகள் மூவருக்கும் இரட்டைத் தூக்குத் தண்டனையும், 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், ஒரு இலட்சம் ரூபா தண்டமும் தண்டப்பணம் செலுத்தத் தவறின் தவறின் 5ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனையும் வழங்கி மன்று தீர்ப்பளித்தது. அத்துடன் 18 பேரை கடும் காயங்களுக்கு உள்ளாக்கிய குற்றத்துக் காக 20 வருட கடூழிய சிறைத்தண்டனையும் ஒரு லட்ச ரூபா தண்டப்பணமும் அதைச் செலுத்தத் தவறின் ஐந்து வருடங்கள் சிறை தண்டணையும் வழங்கப்படும் என்பதாக அந்தத் தீர்ப்பு இருந்தது.

இதிலிருந்து தலைமறைவாகியுள்ள மற்றைய இரண்டு குற்றவாளிகளும் பிரிட்டனில் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுவதால் இலங்கை அரச தலைவர் பிரித்தானியப் பிரதமரை இராஜதந்திர ரீதியில் அணுகிக் குற்றவாளிகளை நாடுகடத்த ஆவண செய்ய வேண்டும் எனவும், அதே போன்று அயலுறவு அமைச்சு, நீதி அமைச்சு, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆகியோரும் குற்றவாளி களை பிரிட்டனில் இருந்து நாடு கடத்த வழிவகை செய்ய வேண்டும் என மேல் நீதிமன்ற நீதிபதி பரிந்துரை செய்திருந்தார். அத்துடன் பொலிஸ்மா அதிபரைப் பன்னாட்டுப் பொலிசாரின் உதவியை அணுகி குற்றவாளிகளைக் கைது செய்யுமாறும் மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு இட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடோடிப் பறவைகள்

> இந்தப் பறவைகளைப் பொறுத்தமட்டில் இந்த நெடும் பயணங்களுக்கு இவை தமது சிறகுகளையே நம்பி இருக்கின்றன. உணவுத் தேவை காலநிலை மாற்றம் போன்ற காரணிகளே இந்தப் பறவைகளை நாடுவிட்டு நாடு தாவுவதற்கு உந்துகின்றன. உலகில் ஏறத்தாழ 10 ஆயிரம் பறவை இனங்கள் இருப்பதாகக் கணிப்பிட்டுள்ளார்கள்.

ஏ.ஜே.ஞானேந்திரன்

மாரிகால பிற்பகுதி என்றாலே நமது பகுதிகளை நாடிப் புதுப் புதுப் பறவைகள் பல வந்து குவிந்து விடுகின்றன. மழை பெய்து ஓய்ந்ததும் ஆங்காங்கேயுள்ள குளம், குட்டைகள், நீர்நிலைகள் என்பனவற்றில் இவை முகாமிட்டுவிடுகின்றன. குளிர்ச்சி பொருந்திய காலநிலையின்பால் ஈர்க்கப்பட்டு இங்கு வருகைதரும் அவை வறட்சி(கோடை) ஆரம்பித்ததும் தமது சொந்தத் தேசங்களுக்குத் திரும்பி விடுகின்றன. தீவகத்துக்குச் சொல்லும் வீதியின் இருமருங்குகளிலுமுள்ள மழை நீர் தேங்கி நிற்கும் வெட்டைகளில் இவற்றை அதிகம் காணலாம்.பறவைகள் நாடு விட்டு நாடு பறந்து போவது பற்றி நாம் அறிந்திருந்தாலும் இவை எப்படிப் பயணிக்கின்றன? எவ்வளவு தூரம் பயணிக்கின்றன? என்ற விவரங்கள் எங்களில் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தெரிந்த அந்த நாடோடிப் பறவைகள் பற்றித் தெரியாத பல விடயங்கள் இதில் அலசப்படுகின்றன.

**நினைத்த மாத்திரத்தில் எங்கும் செல்லலாம்**

மனிதர்களை ஆகாய விமானங்கள் சுமந்து திரிந்து நாட்டுக்கு நாடு பயணிக்க வைக்கின்றன. அதில் பல்லாயிரம் கிலோமீற்றர்கள் தூரம் பறந்தாலும் அது எமக்குப் பெரிய சாதனை அல்ல. அந்தந்த நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு, அந்தந்த நாடுகளின் நுழைவுவிசைவு பெறுவதுவே எமது பெரிய சாதனையாக இருக்கின்றது. ஆனால் பறவைகள் இதிலிருந்து விதிவிலக்கானவை. அவை நினைத்த நேரத்தில் நினைத்த நாடுகளுக்கு தமது விருப்பத்துக்கேற்றவாறு சென்று வரலாம். இவ்வாறாக நாடு விட்டு நாடு பறந்து செல்லும் அற்புதமான நாடோடிப் பறவை இனங்கள் பல இருக்கின்றன.

இந்தப் பறவைகளைப் பொறுத்தமட்டில் இந்த நெடும் பயணங்களுக்கு இவை தமது சிறகுகளையே நம்பி இருக்கின்றன. உணவுத் தேவை காலநிலை மாற்றம் போன்ற காரணிகளே இந்தப் பறவைகளை நாடுவிட்டு நாடு தாவுவதற்கு உந்துகின்றன. உலகில் ஏறத்தாழ 10ஆயிரம் பறவை இனங்கள் இருப்பதாகக் கணிப்பிட்டுள்ளார்கள். இவற்றுள் கிட்டத்தட்ட 1800 பறவை இனங்கள் தொலைதூரம் பறந்து நாடுவிட்டு நாடு இடம்பெயரும் ஆற்றலுடையவை என்பதும் இவர்களது இன்னொரு கணிப்பு.

**பாதை அறியும் புதிய பறவைகள்**

அன்னம், தாரா போன்ற பறவை இனங்கள் நெடுந்தூரம் பறக்க முடிந்தவை. தமது வழமையான வசிப்பிடத்தின் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டால் அவை தமக்கு உகந்த காலநிலை நிலவும் பிரதேசங்களை நோக்கி நகர்கின்றன. தமது வசிப்பிடம் கடும் குளிராக இருந்தால் குளிர் அதிகமில்லாத இன்னொரு நாட்டுக்கு இவை பறந்து செல்வதுண்டு. உதாரணத்துக்கு இளம் சிவப்பு நிறத்திலான பாதங்களை உடைய ஒரு வகைத் தாரா இனங்கள் ஐஸ்லாந்திலிருந்து பறந்து பிரித்தானியாவுக்கும் அதனை அண்டிய நாடுகளுக்கும் இடம்பெயர்ந்து விடுகின்றன. இதில் பெற்றோருடன் இணைந்து தமது கன்னிப் பயணத்தை மேற்கொள்ளும் தாராக்கள் தமது பெற்றோரிடமிருந்து பயணப் பாதையைக் கற்று விடுகின்றன.

பறவை இனங்கள் எப்போதும் கூட்டம் கூட்டமாகவே தமது நெடுந்தூரப் பயணங்களை மேற்கொள்கின்றன. தனித்துப் பறப்பதைவிட இவ்வாறு கூட்டமாகப் பறப்பதால் இவற்றுக்குப் பறக்கத் தேவைப்படும் சக்தியின் விரயம் குறைக்கப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். வி (V) வடிவில் இவை கூட்டமாகப் பறக்கும்போது தனியாகப் பறக்கத் தேவைப்படும் சக்தியைவிட 20வீதமளவு சக்தி மிச்சம் பிடிக்கப்படுகின்றது என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

**இவ்வளவு உயரமா...!**

பறவைகள் எவ்வளவு உயரம் வரை பறக்கின்றன என்று ஆராய்ந்தால் அதன் விடை நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்தும். உலகின் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரம் மீது ஏறியவர்கள் 5000 மீற்றர்கள் (16,400 அடிகள்) உயரத்தில் இறந்த சில பறவைகளின் உடல் எச்சங்களைக் கண்டெடுத்துள்ளார்கள். இன்னொரு இனத் தாரா இமயமலைத் தொடர் உள்ள இடத்தில் 8000 மீற்றர்கள் (29000 அடிகள்) உயரத்தில் பறந்து செல்வதை அவதானித்துள்ளார்கள்.

சில பறவைகளின் பயணம் இடை நடுவே தடைப்படுவதுண்டு. அவை தமது பாதிப் பயணத்தில் தரை இறங்கி, உடலுக்கு வலுவேற்றி மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கும் வழமையைக் கொண்டுள்ளன. இவற்றின் பயணம் பாதிவழித் தரிப்பிடத்தில் கிடைக்கும் உணவைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. இதே சமயம் Bar tailed Godwits என்ற பறவை இனங்கள் அலஸ்காவிலிருந்து நியூசிலாந்து வரை முழுமூச்சாகப் பறந்து செல்லும் திறன் கொண்டவையாக இருக்கின்றன. இவை கடக்கும் தூரம் 11000 கிலோமீற்றர்கள். இந்த நெடுந்தூரப் பயணத்தை ஆரம்பிக்கும் வேளையில் அவை தமது உடல் எடையின் 55 வீதமான அளவைக் கொழுப்பாகச் சேமித்துத் தமது பயணத்துக்கு எரிபொருளாகப் பயன்படுத்துகின்றன.

கடல் மீன்களைத் தின்று வாழுகின்ற பறவை இனங்கள் இத்தகைய நெடுந்தூரப் பயணத்தில் கில்லாடிகளாகத் திகழ்கின்றன. Arctic Tern என்ற கடற்பறவை இனம் இதில் முதலிடத்தைப் பெறுகின்றது. இதில் ஒரு பறவையின் கழுத்தில் அறிகருவியைப் பொருத்தி அந்தப் பறவையை அதன் போக்கில் பறக்கவிட்ட ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பிரித்தானியாவின் கிழக்குக் கரையோரப் பகுதியிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்த அந்தப் பறவை ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரை மூன்று மாதங்களில் சென்றடைந்திருக்கின்றது. 22000 கிலோ மீற்றர்கள் தூரத்தை அது கடந்துள்ளது.

**இரவுப் பயணங்கள்**

சில பறவை இனங்கள் இரவுப் பயணத்தையே அதிகம் நாடுகின்றன. Humming Birds warblers, Fly cat chers ஆகிய மூன்று இனங்களும் இதற்கு நல்ல உதாரணங்கள். வழமையாக இரவில் பயணத்தை ஆரம்பித்து விடிந்ததும் பயணத்தை நிறுத்திக் கொண்டு தரையிறங்கி உணவைத் தேடிக் கொள்கின்றன. சில தினங்கள் கழித்து இன்னொரு இரவில் மீண்டும் பயணம் ஆரம்பம். இப்படியாகத் தங்கள் இலக்கை அடையும் வரை பயணத்தைத் தொடர்வதும் நிறுத்திக் கொள்வதும் இவற்றின் இயல்பு.

**சாகடிக்கப்படும்**

பலவான் பிழைத்துக் கொள்வான் என்பது காட்டு மிருகங்களிடையே நிலவுகின்ற எழுதப்படாத சட்டம். சிங்கம் முயலைக் கொன்று தின்னும் என்பது மாறாத ஒன்று. சிங்கத்தின் வாயில் சிக்காமல் தந்திரமாகத் தப்பித்தால் முயல் பிழைத்துக் கொள்ள வழியுண்டு. முயலால் திருப்பித்தாக்க முடியுமா? இவ்வாறே பறவைகளும் பெருந்தொகையாகப் பறந்து செல்லும்போது பல காரணிகளால் சாகடிக்கப்படுகின்றன.

Passenger Pigeons எனப்படும் ஒரு வகைப் புறா இனம் பெருந்தொகையாகப் பறப்பன. இவை 1.6 கிலோமீற்றர் அகலத்தையும் 500 கிலோமீற்றர் நீளத்தையும் கொண்ட இடப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டு பறக்கின்றன. இதில் கிட்டத்தட்ட ஒரு பில்லியன் வரையான புறாக்கள் இருக்கும் என்கிறார்கள். இவை வழியில் பல இடர்களைச் சந்திப்பதால் சாகடிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம். இதன் விளைவாக இந்த இனமே இன்று இல்லை. அடியோடு அழிந்து விட்டது.

இவை ஆச்சரியமான தகவல்களாக உங்களுக்குத் தெரியவில்லையா? இறைவனின் படைப்பில் பிரமிப்புகளுக்கு என்றுமே பஞ்சம் இருந்தில்லையே.



உதயன்
இற்கு
எழுதுங்கள்...!

சகல கலை, இலக்கியப்
படைப்பாளிகளுக்கும்...

உங்களுடைய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் இதர எழுத்துக்கள் பலவும் உதயனில் பிரசுரமாக வேண்டுமா...? உதயன் பத்திரிகை, இல 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இன்றே எழுதுங்கள். தயவு செய்து நீங்கள் அனுப்பும் சகல கலை, இலக்கியப் படைப்புக்களுடனும் உங்கள் தொலைபேசி இலக்கம், முகவரி போன்ற வற்றையும் தவறாது குறிப்பிட்டு அனுப்புங் கள். இத்தகைய விவரங்கள் இணைக்கப்படாத படைப்புக்கள் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மயானத்துப் பூக்கள்

ஒருநாள் நடுச்சாமம். மலைப்பாம்பு ஒன்று என்னைச் சுருட்டிப் பிடித்ததை உணர்ந்தேன். கைகள் அசைக்க முடியவில்லை. வாய்திறக்க முடியவில்லை கணநேரத்தில் அந்தக் கிழட்டுப் பாம்பு தன் வெறியைத் தணித்து, விரைந்துவிட்டது. அது வேறுயாரும் அல்ல உறவினர் என்ற போர்வையிலிருந்த அந்த வீட்டு உத்தமன்தான்.



வெள்ளாம்பொக்கட்டி கந்தசாமி

நான் சொல்லும் கதை உண்மையா? கற்பனையா? நடந்த கதையா? நடக்கவிருக்கும் கதையா?

நடந்தால், நாடு நலம் பெறுமென நான் நினைக்கின்றேன். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

முல்லை நிலப்பரப்பில் கோயில் கொண்டிருக்கும் முத்துமாரி அம்மனைத் தரிசித்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றேன். அடர்ந்த காடு, அதை ஊடறுத்துச் செல்கின்றது ஒரு ஒற்றையடிப்பாதை. அந்தப் பாதை வழியே போய்க் கொண்டிருக்கின்றேன். காட்டின் மத்தியில் இருந்து ஒரு பெண்ணின் குரல்

"ஹலோ மிஸ்ரர் கதிரவன்... உங்களைத் தான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்"

திரும்பிப் பார்த்தேன். அழகிய, நவநாகரிகத் தோற்றத்துடன் இளநங்கை. யார் இவள்? இந்தக் காட்டுக்குள் என்ன செய்கின்றாள்? வியப்பாக இருந்தது மீண்டும் பேசுகின்றாள்.

"என்ன பார்க்கிறீங்கள். கிட்டவாங்க, என்னைக் கட்டிப்பிடியுங்க, முத்தம் கொடுங்க' என்றாள்.

நான் திகைத்தேன்.

"என்ன யோசிக்கிறீர்கள்? யாருமே இல்லாத இந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இல்லையா?"

"அது சரி, நீங்கள் யார்? முன்பின் தெரியாத முகமாயிருக்கின்றதே?"

"அட சீ... இதுக்கு ஊர், பேர், முகவரி எல்லாம் தேவையா? நானோர் இளம்பெண் என்பது தெரியவில்லையா?"

"நீங்கள் கூறுவது ஒருபுறமிருக்கட்டும் சகோதரி ஆனால் கலாசார விரோதமாகப் பேசுகிறீர்களே...! இது கற்பரசி கண்ணகி கால் பதித்த மண். கற்பைக் காப்பாற்றச் சீதை சிறையிருந்த புண்ணியபூமி. இன்னும் எத்தனையோ தாய்க்குலம். கணவனே கண்கண்ட தெய்வமாக இருக்க வேண்டும் என்பதற்காக பரமனை வேண்டிப் பாற்குடமேந்திப் பவனி வந்த தர்ம பூமி, சுமங்கலி பூசை நடத்திய சத்தியவதிகள் வாழ்ந்த மண். இங்கே இப்படி பேசுவது சரியா?"

"ஆஹா ஹா..."

கலகலவென்று சிரித்தாள். மீண்டும் பேசினாள்.

"உங்களுடைய தமிழ் நன்றாக இருக்கின்றது. ஆனால் நீங்கள் பேசிய அவ்வளவும் முன்னொருகாலத்துக்குப் பொருந்தக் கூடியதாக இருந்தன. இன்று அதில் சில திருத்தம் செய்து பேசினால் பொருத்தமாக இருக்கும். இப்போது அதை நான் பேசுகிறேன்..."

பெற்றமகளை வன்புணரும் பிதாமார்கள் பிறக்கும் மண், கல்லூரி மாண [illegible]வியை வன்புணரும் கனவான்கள் உ[illegible]தும் மண், புத்தி சுவாதீனமற்ற பெண்ணை[illegible] சிதைக்கும் கல்விமான்கள் நிறைந்த மண். [illegible]ாலியல் பசியால் வீணிவடிக்கும் விசர்ந[illegible]கள் மலிந்த மண், இது எப்படி? தமிழ் நன்ற[illegible] இருக்கின்றதா? மிஸ்ரர் கதிரவன். நீங்கள் [illegible]டித்தவர் பட்டம் பெற்றவர், பண்பாளர், உண்மையை உரைப்பவர், உங்கள் பத்திரிகை மூலம் எதையும் அஞ்சாமல் படைப்பவர் என்பதும் எனக்குத் தெரியும். உங்களைப் பரீட்சித்துப் பார்த்தேனே தவிர பாலியல் பசியோடு பார்த்தவள் அல்ல நான். உத்தமர், நல்லவர் என்ற பட்டத்தோடு இருக்கும் உங்களைச் சந்திக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாக இருந்தது. அதாவது நான் வந்த செய்தியை உங்கள் பத்திரிகையில் கதையாகப் படைக்க வேண்டுமென்பதே எனது நோக்கம். அதனால் தான் காத்திருந்தேன். அதற்கு இந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்று நீங்கள் நினைக்கலாம். அதுவும் காரணத்தோடு தான். சுருக்கமாகச் சொன்னால் நான் வாசஞ்செய்யும் இடமே இந்த அடர்ந்த காடுதான். விசித்திரமாக இருக்கின்றதா? அதுபற்றியும் சொல்லுவேன் அதற்கு முன்பு கலாசாரம் பற்றிப் பேசினீர்கள். உங்கள் நாட்டில் மாறாமல் இருப்பது அரசியல் கலாசாரம் அதாவது பெரும்பான்மையினம், சிறுபான்மையினத்தை ஆள்வதும், ஆட்டிப்படைப்பதும் மட்டும் தான். அதில் சிறுபான்மையினரின் கோரிக்கைகளை நிறைவேற்றப் பேச்சு நடக்கும் அதில் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம், மூன்றாம் கட்டம் முடிவதற்குமுன் நாடாளுமன்றக் கால எல்லை முடிந்துவிடும். நாடாளுமன்றம் கலைக்கப்படும், தேர்தல் வரும் அதன்பின் புதிய அரசுவரும், மறுபபடியும் சிறுபான்மை இனத்துக்கான பேச்சு ஆரம்பமாகும். முன்போல் 1, 2, 3 ஆம் கட்டம் முடியுமுன் ஆட்சிக்காலம் முடிவடையும். இது மாறாத அரசியல் கலாசாரமாக இருப்பதால் இதுபற்றி நான் பெரிதும் அலட்டிக்கொள்வதில்லை.

நான் வந்த நோக்கம் வன்புணர்வு, பாலியல் கொடுமை, ஆணாதிக்க வெறியர்களால் நடத்தப்படும் பாலியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவே. அரச சட்டத்தை நான் ஆதரிக்கவில்லை. அதாவது காக்கிச்சட்டை கைது செய்து நீதிமன்றில் நிறுத்த, கறுத்தச்சட்டை வாதம் செய்து விடுதலை பெற்றுக் கொடுக்கும். இதுவும் வழமையான கலாசாரம் தான்.

ஆனால் சங்க காலத்தில் தெய்வமாகப் போற்றப்பட்ட பெண். இன்று கடித்து, குதறி, உமிழ்ந்து விட்டு, சாக்கடையில் வீசும் எச்சில் பண்டமாக அமைவது ஒரு கலாசாரமா? ஏன் அரசுகூட பெண் செய்யாத குற்றத்தை குத்திக் காட்டி விளம்பரஞ்செய்கின்றது. அதாவது வைத்தியசாலை வாசலிலே அலங்காரப்பதாகையாகத் தொங்கவிட்டிருப்பது எதை? அம்மணமாக்கிக் காட்சிப் பொருளாக்கி 'எயிட்ஸுக்கு' காரணம் இவளே என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் உண்மையாகவே இந்த நோய்க்காவி பெண்ணா? ஆணா? என்பதை அறிய வாக்கெடுப்பு வேண்டாம், பட்டி மன்றம் போட்டுப்பாருங்கள். ஆணே! என்பதை ஆணித்தரமாக நிரூபிப்பார்கள். ஔவையும் அடுத்து வந்த பாரதியும் இன்று பிறப்பெடுத்தால், புதுமைப் பெண்ணே பிறந்து வா' என்ற வலியோடு கோலோச்சும் மன்னர்களே...! கொடுமை செய்யும் அரக்கர்களே...! பாலியல் பாவிகளே புதைந்து போங்கள் புதுயுகம் பிறக்கட்டும் என்று பாடியிருப்பார்கள். தீர்க்கதரிசிகள் வாய்ச் சொல் ஒன்றும் பலிக்காமல் போகாது. ஹலோ மிஸ்ரர் கதிரவன் என்ன பேச்சைக் காணோம்"

"எதைப் பேசுவதென்றே தெரியவில்லை அம்மா. அது சரி, நீங்கள் யார் என்று கூறவில்லையே?"

"ஆமாம் அந்த இடத்துக்குத்தான் வருகின்றேன். நீங்கள் பல்கலைக் கழகத்தில் இறுதி வருடமாணவனாக இருந்தபோது முதலாம் வருடமாணவியாக இருந்தவள் தான் நான்.

43

"

புதுமைப் பெண்ணே பிறந்து வா' என்ற வலியோடு கோலோச்சும் மன்னர்களே...! கொடுமை செய்யும் அரக்கர்களே...! பாலியல் பாவிகளே புதைந்து போங்கள் புதுயுகம் பிறக்கட்டும் என்று பாடியிருப்பார்கள். தீர்க்கதரிசிகள் வாய்ச் சொல் ஒன்றும் பலிக்காமல் போகாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அழலாடிக்குட்டன்

# காப்பெற் வீதிகளில் பயணிப்பது மட்டும் வாழ்க்கை அல்ல



இது புதியதா? பழையதா? என்கின்ற விவாதங்களைத் தவிர்த்து இது எங்களுக்குப் பொருந்திப் போகின்றதா? எமது சமூக, பொருண்மிய மேம்பாட்டுக்குத் துணை புரி யுமா? என்ற கருத்தியல் தளத் தில் நின்று ஒரு பொது விதியில் இயங்குவது பொருத்தமானதாகும்.

படைப்புகளுக்கும் படைப்பாளிகளுக்கும் சமூகப் பொறுப்பு உண்டு என்பதை உறுதியாக நம்புகின்றவர்கள் அதனையே பிரதான கருத்துருவமாகப் பார்ப்பதைத் தலையாய கடமை எனவும் நம்புவார்கள்.

சமூக, அரசியல், பொருண்மியப் பண்பாட்டு அம்சங்கள் என்று ஒவ்வொருவருமே இருப்பவற்றை இழந்துகொண்டும் அழித்துக் கொண்டுமிருக்கும் சூழலில் இருப்பவற்றைப்பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணம் முதன்மை பெறுவதைத் தவிர்க்க முடியாது.

'தாய் பிச்சை எடுக்க மகன் அறுபத்து மூவருக்குப் பூசை கொடுத்தானாம்' என்கின்ற முதுமொழி எம்மத்தியில் வழக்கிலுள்ளது.

நவீன இலத்திரனியல் வசதிகள் பெருகிவிட்ட நிலையில் கைபேசி, தொலைக்காட்சி மற்றும் இணையங்கள் அன்றாட இயல்புகளில் சேர்ந்து விட்டன. இந்தப் பின்னனியில் நவீனத்துவ வடிவங்களை நாங்கள் புறந்தள்ள முடியாது. ஆயினும் 'ஜீன்ஸ்' அணிவதால் அம்மா என்பதை வேறு நிலைக்கு நாங்கள் கொண்டுபோக முடியாது. சேலை அணிந்தாலேன்ன 'ஜீன்ஸ்' அணிந்தாலேன்ன அம்மா அம்மா தான். அந்த உறவு நிலையையும் பாசப் பிணைப்பையும் நாங்கள் வேறெந்த வகையிலும் கொச்சைப்படுத்திவிட முடியாது.



எமது வாழ்வுச் சூழலிலும் சமூக இயக்கத்திலும் உணவு முறைகளிலும் அன்றாட வழக்குகளிலும் எமக்கெனத் தனித்துவமான இயல்புகளையும் அடையாளங்களையும் கொண்ட நாங்கள் நேரடியாக வெவ்வேறு புலங்களில் இருந்து தருவிக்கப்படும் கோட்பாடுகளிலும் கொள்கைகளிலும் மட்டுமே நம்பிக்கை வைத்து அவற்றைக் கொண்டாடவும் முடியாது.

ஆண் - பெண் உறவுகளை நுட்பமாக விவரித்து அதனூடாக அரசியல், இனத்துவப் பிரச்சினைகளை நுட்பமாக எழுதுகின்றோம் என்ற போக்கில் கதைகளை உருவாக்கும் அவசியம் இருக்கின்றதா? என்கின்ற கேள்விகளும் உண்டு. உச்ச வாசிப்புத் திறன் கொண்ட ஒருவர் விளங்கிக் கொள்ள முடியும் என்பதற்காகவும், வாழ்வில் நிறைவேற முடியாத மன விகாரங்களையும் வக்கிரங்களையும் படைப்புக்களாக்கி பரபரப்பு இலக்கியம் செய்கின்ற ஒளிவட்ட இலக்கியத் தனத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

டொலர், பவுண், யூரோ என்ற புலம்பெயர்ந்த சூழலில் இருந்து பண வரவுக்காகக் காத்திருக்கும் ஒருசில தமிழ்ப் பதிப்பாளர்களும் அதனோடு இணைந்த பிழைப்பாளர்களும் தமக்குப் பிடிக்காத படைப்புக்களைத் தரக் குறைவாகவும் கொச்சைத் தனமாகவும் தாக்குகின்றபோது பூரித்துப் போகும் சில மூத்த படைப்பாளிகளும் இத்தகைய முயற்சிகளுக்குக் கை கொடுக்கலாம். மேடைகளிலும் விமர்சன உரைகளிலும் பேசிப் பேசிப் போற்றலாம். ஆனால் முடிவு என்ன?

சொந்த வளவுக்குள் உள்ள பனைமரத்தை வெட்ட, வேம்பைத் தறிக்கப் பிறரிடம் அனுமதி பெற வேண்டும் என்ற எமது சூழலின் பின்னணியில் நான் இப்படித்தான் எழுத வேண்டும் இதனை யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்று வீரம்பேச வைக்கின்றன.

ஆண் - பெண் அந்தரங்க உறுப்புக்களைப் படம் வரையாத குறையாகச் சித்திரித்து சுய இன்பம் காண்பதற்கு(எழுத்துக்களில்) நாமும் துணைபோக வேண்டுமா? என்ற கேள்விகளும் உண்டு.

இது புதியதா? பழையதா? என்கின்ற விவாதங்களைத் தவிர்த்து இது எங்களுக்குப் பொருந்திப் போகின்றதா? எமது சமூக, பொருண்மிய மேம்பாட்டுக்குத் துணை புரியுமா? என்ற கருத்தியல் தளத்தில் நின்று ஒரு பொது விதியில் இயங்குவது பொருத்தமானதாகும்.

பிரதான வீதிகள் காப்பெற் வீதிகளாக மாறிவிட்டதால் அவற்றில் இலகுவாகவும் விரைவாகவும் எங்களால் பயணிக்க முடியும் என்பது உண்மை.

எனினும் எமது பெரும்பான்மை மக்களின் வாழ்விடங்களுக்குள் இருக்கும் சிறு வீதிகள், ஒழுங்கைகள், ஒற்றையடிப்பாதைகள் என்பன மேடும் பள்ளமுமாக, குன்றும் குழியுமாக, வெள்ளமும் மணலுமாக, புற்களும் பற்றைகளுமாக இருப்பதும் யதார்த்தம்.

இலக்கியமும் அப்படித்தான். சமூக இயக்கமும் அப்படித்தான். காப்பெற் வீதிகளில் பயணிப்பது மட்டும் எங்கள் வாழ்க்கை இல்லை என்பது அனுபவ பூர்வமானது.

## 2 கதைகள்

கை. சரவணன்

### நிமிர்தல்

விதைப்புக்குப் பின்னான மறுத்தலில் மண்ணுள் மறைகின்றன நெல் மணிகள். தெரிந்து நீக்கிய புதர்கள் வரம்பில் குவிந்து கூடியிருந்து மகிழ்ந்து கொண்டாடுகின்றன. புதைந்த மணிகளையெல்லாம் ஏளனம் கூறி கிண்டல்கள் செய்து கொண்டாடுகின்றன. வரம்பிலேயே குடியமர்ந்து கொண்டாடுகின்றன.

காலம் தன்போக்கில் விரைந்ததில் வயலில் நெல்லின் செழிப்பு. இப்போது கதிர் சுமக்க மாட்டாமல் தள்ளாடிக் காற்றில் தலைசாய்த்து ஆடுகின்றன நெற்பயிர்கள்.

வரம்பிருந்த பெருமைப் புதர்கள் அவமானத்தில் குறுகி அமைதியில் உறைகின்றன.

கதிரசைத்த காற்று காணமிசைக்கின்றது...

**புதையுண்டு போகவில்லை... விதையுண்டு செழித்தவர்கள்.**

### சுவரல்



உயிர் பிளைத்தலின் இரகசியத்தை இலைகளையெல்லாம் உதிர்த்து பரகசியப்படுத்த நிற்கிறது பெருமரம். காலம் கடுங்கோடை.

மரத்தின் கிளைகளில் எல்லாம் இலையோடும் பூவோடும் சிரித்தபடி இருக்கின்றது குருவிச்சை. மாரிபோலவே தள தளப்பு - மினு மினுப்பு நல்ல செழிப்பு.

எக்காளமிட்டுச் சிரித்தபடியே மரத்தின் வறுமைபற்றி உரத்து உரத்து வலிந்து கூறிக் கொண்டாடுகிறது மரத்தை உறுஞ்சியபடியே.

அமைதியிலுறைந்து ஆழ் தியானத்திலிருக்கிறது மரம். காற்றுச் சிரித்தபடியே கூறிப் போகின்றது...

**சுயமில்லாச் சுயநலம்**
**கேவலம் மறந்த அவலம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறமுற்றுகை

## இன்றைய வாழ்வியலின் எச்சரிக்கை

சி.ப.வேந்தன்

"எதிர்காலத்தில் உலக அளவிலான, வெகுவான படைப்புக்கள் இலங்கையிலிருந்துதான் தோன்றும். மனிதர்கள் சிதையும் மண்ணிலிருந்துதான் இப்படியான படைப்புக்கள் அதிகம் எழும். போராட்டத்தையும் அந்த மக்களின் சிதைவுகளையும் பற்றிப்படைப்பதும்பதிவுசெய்வதும்தான்என்வாழ்வின் முக்கிய பணியாக இருக்கும்" எனத் தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் வ.கௌதமன் ஒரு நேர்காணலில் கூறியிருந்தார்.



அவர் கூறியது போன்று உலகத் தரத்திலான படைப்புக்கள் உருவாகின்றனவோ, இல்லையோ எமது மக்களுடைய வாழ்வியல் சிதைவுகளைப் பேசுகின்ற சினிமாக்கள் இங்கு எழத்தொடங்கியிருக்கின்றன. அதற்கானஉதாரணமேஅண்மையில் வெளியாகி இருக்கும் மயன்காந்தனின் 'அறமுற்றுகை'. 27நிமிடக்குறும்படம்.

'மறந்தும் பிறன்கேடு
சூழற்க சூழின்
அறஞ்சூழும்
சூழ்ந்தவன் கேடு'

என்று வள்ளுவரால் அறத்துப்பாலில்கூறப்படும் குறளை ஒரு திரைக்கதையாக்கித் தந்திருப்பதில் கவனிக்க வைத்திருக்கின்றார் இயக்குநர். இதுவே அவரது மூன்றாவது படைப்பு. ஏற்கனவே இவரது படைப்பில் பேசப்பட்ட சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் கதைகள் போலவே இதுவும் சமகாலத்தில் தமிழர் பிரதேசத்தில் நிலவும் பதற்றமான சூழலைப் பற்றிப் பேசுகின்றது.

திட்டமிட்ட விபத்துக்கொலைகள், ஏமாற்று வேலைகள், வஞ்சகம், களவு, கொள்ளை, பழிவாங்குதல் எனப் படம் முழுக்கக் குருதிவாடை வீசுகின்றது. இதைப்படமாக்கவேண்டுமா...? என்ற கேள்வி எழுந்தாலும், இதுஇப்போதையசமகாலச்சம்பவங்கள்தானே! வெறும் கற்பனையல்லவே! எனவும் எண்ணத்தோன்றுகின்றது. அமைதியாக இரு எனச் சத்தம்போட்டுச் சொல்வதைப்போலவே இதையும் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கின்றது.

ஜோசித்தன், மதிசுதா, அபிலன், தீபன், சசீந்தர் ஆகியோரின் நடிப்பில் சிவராஜன் ஒளிப்பதிவு, சுதர்சனின் இசை மற்றும் மயன்காந்தன், ஷர்விக் ஆகியோரின் கதையில் படத்தொகுப்புச் செய்து பாடல் எழுதியிருப்பதோடு படத்தை இயக்கியுமிருக்கின்றார் மயன் காந்தன்.




தனியாளாக வசதியான வாழ்க்கை, சமூகத்தொண்டு, நண்பர்கள் என வாழும் ரவி, அதிஷ்டத்தை நம்பிக் கொண்டுகாசு, பணம்என்று அதற்காகஎதையும்செய்யத்துணியும் ரஞ்சன், தவறுகளையே தொழிலாகச் செய்துவரும்கனகன், சந்தர்ப்பசூழ்நிலையால்குற்றங்கள் புரியும் சுதா, இந்த நால்வரையும் முற்றுகையிடும் அறம் எப்படியிருக்கும் என்பதை எச்சரிக்கின்றது படம். இளைய தலைமுறைக்கு அறம்பற்றிய பயத்தையும் ஏற்படுத்துகின்றது.

ரஞ்சனின் பண ஆசையைப் பயன்படுத்தி அவனைக் குற்றத்தைநோக்கிநகர்த்துகின்றான்கனகு. ரஞ்சன்ஒரு தடவை சுதாவின் வீட்டுக்குள் புகுந்து திருடும்போது சுதாவின்தாயாரைக்கத்தியால்குத்திவிடுகின்றான். சுதாவின் தாயாருக்குச் சிகிச்சைக்குக் குருதி தேவை என்பதை முகப்புத்தகம் மூலம் தெரிந்துகொண்ட ரவி அவருக்குக் குருதிகொடுத்து உதவுகிறான். பிறிதொருநாளில்ரஞ்சன் தனதுபள்ளிநண்பன்என்றும்பாராதுரவியைஆள்களை வைத்துத்தாக்கிஅவனிடமிருந்துபணம், நகைஎன்பவற்றைக்கொள்ளையிடுகின்றான். கொள்ளையடித்தபங்கில் முக்கால்வாசியைத் தனக்குத் தரும்படி கேட்கும் ரஞ்சனைக் கனகு ரவியிடம் மாட்டி விடுகின்றான். ரவி அவனைப் பழிவாங்கச் சுதாவைப் பயன்படுத்துகின்றான். தாயைக்காப்பாற்றியநன்றிக்காகரஞ்சனைச்சுதாவிபத்தின்மூலம் கொன்றுவிடுகின்றான். அப்போது ரஞ்சனுடையதொலைபேசிக்குவரும்அழைப்பின்மூலம்தனது வீட்டில் கொள்ளையிட அனுப்பியது தனது நண்பனான கனகன் என்பதை அறிந்த சுதா அவனையும் கொன்றுவிடுகின்றான். கடைசியில் விபத்தா? கொலையா? என்ற தெளிவில்லாமல் அவனும் சாவடைகின்றான் அல்லது சாகடிக்கப்படுகின்றான். இப்படியாக ஒரு தவறு எப்படிச் சுற்றிச்சுழன்று மீண்டும் தொடங்கிய இடத்துக்கே வருகின்றது என்பதைச் சிக்கல்களோடு சொல்கின்றது அறமுற்றுகை.

ஆனாலும்இதில்சித்திரிக்கப்பட்டுள்ளதுபோன்று சட்டென்று கொலைகளைப் புரிந்துவிட முடிகிறதா? எனநினைக்கும்போதுஅதிர்ச்சியாக இருக்கின்றது. போருக்குப் பின்னர் எமது பிரதேசங்களில் இவைகள் நடந்துகொண்டிருப்பது யதார்த்தமாயினும் கொலையை நிகழ்த்தும் சுதா அதைச் சாவகாசமாகச் செய்துவிடுவதுதான் மனதில் ஒட்ட மறுக்கின்றது. இருந்தும்இப்போதுஇலங்கையில்குறிப்பாகதமிழர்பிரதேசங்களில் திட்டமிட்டும் திட்டமிடாமலும் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற சமூகச் சீர்கேடுகளை அப்பட்டமாக காட்ட முனைந்துள்ளது படம்.

பரபரப்பான கதை என்பதால் ஒளிப்பதிவும் அதற்குச் சளைக்காமல்உழைத்திருக்கின்றது. சிலசித்திரிப்புக்கள் (மாலைநேரச்சந்திப்பு, சூரியப்பொழுது, தூரக்காட்சிகள்) படத்துக்குமேலும்அழகைச்சேர்த்திருக்கின்றன. வசனங்கள் இரசிக்கும்படி இல்லையென்றாலும் காட்சிகள் அவற்றைஈடுசெய்துவிடுகின்றன. பெரும்குற்றவாளியான கனகன் பாத்திரம் தோற்றத்தாலும், நடிப்பாலும் தனது பாத்திரத்தை நிறைத்திருக்கின்றது. உடல்மொழி வெகுவாக இரசிக்க வைக்கின்றது. 'உயர்ந்த உள்ளம்' கமல்ஹாசனை நினைவுபடுத்தும் ரவி இன்னும் நடித்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. ஆரம்பத்தில் இரசிக்கவைக்கும் ரஞ்சன் பாத்திரம் போதைக் காட்சியில் சலிக்கவைக்கின்றது. சுதாவின் பரபரப்பில்லாத வில்லத்தனமும் சாதாரண தோற்றமும் அழகாயிருக்கின்றது. விறுவிறுப்பான கதையை உணர்ந்து படத்தொகுப்பு அமைத்திருப்பது நன்று. பின்னணி இசை குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே இரசிக்கவைக்கின்றது. சிக்கலைத் தோற்றுவிக்கும் நடைமுறைப்பிரச்சினைகளைப் பேசுகின்றகதையைமிகக்கவனமாகக்கையாண்டிருப்பதில் இயக்குநரின்உழைப்போடுஅவரதுசமூகஅக்கறையும் தெரிகின்றது.

யதார்த்தம் வெளிப்படவேண்டுமென்பதற்காக மது, புகைத்தல், கெட்டவார்த்தைஎன்பவைகளைச்சில இடங்களில் சற்றுக்கூடுதலாகவே அனுமதித்திருப்பது நெருடலாக இருக்கின்றது. படத்தில் கொலைகள் காட்டும் அதிர்வைவிடப் போதை காட்டும் அதிர்வு அதிகம்.

நுளம்புத்திரிச் சாம்பல், வாழைக்குலைத் தேனி, விபத்தின்மூலம் கொலை செய்யப்போகும்சுதாவின் வாகனத்தில் கட்டியிருக்கும் கோவில்பட்டு, தேவாலயத்தில் மன்றாடுதல் எனச் சின்னச்சின்ன குறியீடுகள் படத்தை மேலும் அழகாக்குகின்றன. முக்கியமாகத் தென்னிந்தியச் சாயலின்றிப் படைத்திருப்பது பாராட்டத்தக்கது.

முன்னைய காலங்களில் போர்கள் முடிந்ததன் பின்னர் அந்தப் பிரதே சங்களெங்கும் அறம் ஒழிந்து பசி, பட்டினி, குற்றங்கள், ஒழுக்கக்கேடுகள், சமூகப் பிறழ்வுகள் எனப் பலதும் சூழும். அந்த வேளைகளில் மக்களை அதனின்றும்விடுவிக்கஅறம்நோக்கியும் ஆன்மீகம் நோக்கியும்நல்வழிப்படுத்தநல்லிலக்கியங்கள் தோன்றின. அவைமக்களுக்குநீதியை எடுத்து ரைத்தன. அதே போன்றதொரு சூழலில் அறம் பற்றிய மெய்ம்மையை உணர்த்தமுயன்றிருக்கின்றது அறமுற்றுகை. சரியான நேரத்தில் தேவைகருதி அது படைக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் சினிமா கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னுடைய பரிணாமங்களை கட்டமைத்துக்கொண்டுவர ஆரம்பித்திருக்கின்றது.

அதன் ஒரு பதச் சோறாய் இந்தப் படம் அமைந்திருப்பது நன்று. வ.கௌதமன் போன்று நாமும் நம்புவோம். எதிர்காலத்தில் உலக அளவிலான, வெகுவான படைப்புக்கள் ஈழத்திலிருந்தும் தோன்றுமென.



திட்டமிட்ட விபத்துக்கொலைகள், ஏமாற்று வேலைகள், வஞ்சகம், களவு, கொள்ளை, பழிவாங்குதல் எனப் படம் முழுக்கக் குருதிவாடை வீசுகின்றது. இதைப் படமாக்க வேண்டுமா...? என்ற கேள்வி எழுந்தாலும், இது இப்போதைய சமகாலச் சம்பவங்கள் தானே! வெறும் கற்பனையல் [illegible] அமைதியாக இரு எனச் சத்தம்போட்டுச் சொல்வ [illegible] ள்ளவேண்டியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாலடியார்

01. நாலடியார் - பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல்.
02. இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது.
03. நானூறு சமண முனிவர்களால் இயற்றப்பட்டது.
04. இதனால் இது நாலடி, நானூறு எனவும் பெயர் பெறும்.
05 "வேளாண் வேதம்" என்ற பெயரும் இதற்கு உண்டு.
06. இது திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றது.
07. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் இதுவாகும்.
08. இந்த நூல் முத்தரையர் எனும் பிரிவைப் பற்றிக் கூறும் நூல் ஆகும்.
09. இது எளிமையான பொருட்களை உவமைகளாகக் கையாண்டு நீதி புகட்டுகின்றது.
10. நீதிகளைக் கூறுவதில் திருக்குறளும் நாலடியாரும் ஏறக்குறைய ஒரே முறையைப் பின்பற்றுகின்றன.
11. திருக்குறளைப் போன்றே நாலடியாரும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பிரிவுகளை உடையதாக விளங்குகின்றது.
12. திருக்குறள் இரண்டு அடிகளில் சொல்ல, நாலடியார் நான்கு அடிகளில் சொல்கின்றது.
15. "மனதளவில் உண்மை யாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவுநிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகு" என்பது நாலடியார் தரும் உயரிய கருத்தாகும்.



ஜெ. நிதுசலா,
வட்டு. இந்துக் கல்லூரி

# நூலகம்




நூலகம் என்பது தேன்கூடு
நூல்கள் ஒவ்வொன்றும்
தேன்துளிகள்

நூலகம் என்பது பூங்காடு
அதில் நூறாயிரமாம்
நன்மலர்கள்

நூலகம் என்பதுபழத்தோப்பு
நூல்கள் ஒவ்வொன்றும்
தீங்கனிகள்

நூலகம் என்பது தனியுலகம்
நுழைந்தால் புதுப்புது
அனுபவங்கள்டி

அதிசயா



அ.அபூர்வீகன்,
முன்பள்ளி



செ.டயகாந்தினி,
அராலி வள்ளியம்மை ஞா.வி.

# அறிவியல் துணுக்கு

01. மீன் தனது வாழ்நாளின் இறுதிவரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
02. பழுதடைந்து போகாத உணவுப்பொருள் தேன்.
03. கிளியும் முயலும் தங்கள் பின்னால் இருப்பதைத் தலை திருப்பாமல் பார்க்கும்.
04. பனிக்கரடிகளால் ஒரே அமர்வில் 86 பெங்குயின்களை விழுங்குக முடியுமாம்!
05. ஆறு மாதங்களுக்குத் தேவையான தண்ணீரை ஒட்டகம் சேமித்து வைத்திருக்கு மாம்.

ம.மேரிகா,
அராலி வள்ளியம்மை ஞா.வி.

## சிந்தனை

தாயின் காலடி யில் தான் சொர்க்கம் இருக்கிறது.
முதுமொழி.

## சிரி...சிரி..



ஆசிரியர் : என்னடா கொப்பியில பால் – 15 ரூபா, அரிசி – 40 ரூபா என்று எழுதி வைச்சிருக்கிறாய்
மாணவன் : நீங்கதானே சேர் சொன்னீங்க, நாளைக்கு வரும்போது வீட்டுக் கணக்கை மறக்காமல் எழுதிக் கொண்டு வர வேணும் என்று.
வாத்தியார் : !!!

## உயிரெழுத்துப் பாடல்!

அம்மா இங்கே வா! வா!
ஆசை முத்தம் தா! தா!
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு!
உன்னைப் போன்ற நல்லார்,
ஊரில் யாவர் உள்ளார்?
என்னால் உனக்குத் தொல்லை,
ஏதும் இங்கே இல்லை
ஐயமின்றிச் சொல்லுவேன்,
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதும் செயலே நலமாம்,
ஔவை சொன்ன மொழியாம்,
அஃதே எனக்கு வழியாம்!

## புதிர்


முன்னொரு ஊரின் பெயராம்
முதல் எழுத்து இல்லாவிட்டால்
நன்னகர் மன்னர் பெயராம்
நடு எழுத்து இல்லாவிட்டால்
கன்னமா மிருகத்தின் பெயராம்
கடை எழுத்தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பெயராம்
விளம்பு வீரே?

## விடை

இங்கு முதல் எழுத்து இல்லாவிட்டல் "துரை", நடு எழுத்து இல்லாவிட்டால் "மரை", கடைசி எழுத்து இல்லாவிட்டால் "மது". விடை "மதுரை".

# தாய் சொல்லைத் தட்டாதே!

தினமும் ஆற்றங்கரை ஓரத்துக்கு வருகின்ற கன்றுக்குட்டி ஒன்று, தனது நண்பனான கழுதையுடன் சேர்ந்து சுற்றித் திரிவது வழக்கம். சற்றுத் தொலைவிலுள்ள கோவிலிலே இருக்கின்ற தாய்ப் பசு தனது கன்று கழுதையுடன் சுற்றித் திரிவதைக் கவனித்துவிட்டு, "மகனே! நீ ஏன் கழுதையோடு சுற்றித் திரிகிறாய்? உனக்குக் கெட்ட பெயர் அல்லவா வரும்? என்னுடன் கோவிலில் இருந்தால் 'கோவில் கன்று' என்று எல்லோரும் மரியாதையாக உன்னை வணங்குவார்கள். அதுமட்டுமல்ல, நேரம் தவறாமல் உணவும் போடுவார்கள். நீ கழுதையோடு உலாவினால் கழுதை சாப்பிடுவது போன்று கடதாசி தானே சாப்பிடவேண்டும்?" என்று கன்றுக்குட்டிக்குப் புத்திமதி கூறியது. ஆனால் கன்றுக்குட்டியோ, "நீ உனது அலுவலைப் பார்த்துவிட்டு வந்த வழியே போய்விடு" என்று தாயைக் கடிந்துகொண்டது. வழமைபோன்று அது கழுதையுடன் சுற்றித் திரிந்தது.



தாய்ப் பசுவும் கோவிலுக்குத் திரும்பிப் போய்விட்டது. நாள்கள் கடந்தோடின. ஒரு நாள் வழக்கத்துக்கு மாறாக துணிப்பொதிகள் அதிகமாக இருந்ததால், கழுதையின் எஜமானரான சலவைத் தொழிலாளி பொதிகளைக் கன்றுக்குட்டியின் முதுகிலும் ஏற்றி, வீட்டுக்கு விரட்டிச் சென்றார். பாரம் தூக்கிப் பழக்கமில்லாத கன்றுக்குட்டி தள்ளாடியபடி நடந்து சென்று தெருவின் நடுப்பகுதிக்கு வந்தபோது, வேகமாக வந்த மோட்டார் வாகனம் அதன்மேல் மோதியதால் கீழே விழுந்தது. "ஒன்றுக்குமே உதவாத நீயெல்லாம் எதற்காகக் கழுதையுடன் சுற்றுகிறாய்?" என்று அந்தக் கன்றுக் குட்டியைக் கடிந்துகொண்ட சலவைத் தொழிலாளி, அதனைத் தனது காலால் தெருவின் ஓரத்தில் தள்ளிவிட்டு, கீழே கிடந்த துணிப்பொதிகளை எடுத்துக் கொண்டு கழுதையையும் அழைத்துச் சென்றார்.


பொழுது சாய்ந்தது. தெருவழியே வந்த சுவாமி ஊர்வலத்தில் தாய்ப்பசு பட்டு அலங்காரங்களுடன் அழைத்துச்செல்லப் படுவதைப் பார்த்த கன்றுக்குட்டி, "அம்மா, அம்மா" என்று கத்தியது. பக்தர்களின் ஆரவாரமும் தவில் நாதஸ்வர இசையும் சேர்ந்து ஒலித்துக்கொண்டிருந்ததால், கன்றின் கதறல் தாய்ப்பசுவுக்குக் கேட்கவேயில்லை. தற்செயலாகத் தலையைத் திருப்பிப் பார்த்த பசு, கன்றுக்குட்டியைக் கண்டுவிட்டது. எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தன் கன்றுக்குட்டியை நோக்கி அது ஓடி வந்தது. "அம்மா, இனிமேல் நான் உங்கள் சொல்லை மீறவே மாட்டேன்" என்று தாய்ப்பசுவிடம் கூறிய கன்றுக்குட்டி, தாயன்பில் நனைந்துகொண்டிருக்கின்றது.

**நீதி : தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.ஆர் நல்ல பௌத்தனாக இருந்திருந்தால், நான் ஆயுதமேந்திப் போராட வேண்டி வந்திருக்காது

- வே.பிரபாகரன்.





# முதலில் பௌத்தர்களாக இருக்கவேண்டும்

மௌனிகன்

பொதுவாகப் பார்த்தால், ஜே.ஆர் மாத்திரமல்ல இலங்கையை இதுவரை ஆண்ட ஆட்சியாளர்களில் எவருமே நல்ல பௌத்தராக இல்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது. ஏனெனில் பௌத்த மதத்தின் அடிப்படையே அன்புதான். பகவான் புத்தபெருமான், அன்பே ஒளி! அன்பே உலகு! அன்பே உயர்வு! என்று அன்பையே உலகம் பூராகவும் போதித்த ஒரு புனிதர். அவரைப் பின்பற்றும் பௌத்தர்கள் (அனைத்து பௌத்தர்களையும் அல்ல) அன்பை வாரி வாரி வழங்காவிட்டாலும் பரவாயில்லை பிறருக்குத் துன்பம் தராதவர்களாக இருந்தாலே போதுமானது. ஆனால் இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் பௌத்த – சிங்களவர்கள் தமிழர்களுக்குத் துன்பத்தை மாத்திரமன்றி வேறு எதையும் வழங்கியிருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்கள் மாத்திரமன்றி முஸ்லிம்களுக்கும் பௌத்தத்தின் பெயரால் துன்பம் கொடுத்து வருவது நாம் காணும் உண்மை. அதைப் பௌத்த மத குருமார்களே முன்னின்று நடத்துவதும் முக்கியமானது. ஆக புத்தபகவான் என்ற புனிதரின் பெயரால் இங்கு என்னவெல்லாம் நடக்கின்றது, நடந்திருக்கின்றது என்பது உலகறிந்த உண்மை. வரலாறு உணர்த்தும் உண்மையும்கூட.

சிறந்த பௌத்தர்களாகவும் அகிம்சை, அன்பு ஆகியவற்றின் தூதர்களாகவும் தம்மைக் காட்டிக்கொள்ள இலங்கையின் பௌத்த ஆட்சியாளர்கள் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். அதில் ஒன்றுதான் இந்த வருடம் இலங்கையில் நடைபெறுகின்ற பன்னாட்டு வெசாக் பண்டிகை தினம். உலகிலுள்ள 100 நாடுகளிலிருந்து அரச பிரதானிகள் மற்றும் 16நாடுகளின் அரச தலைவர்கள் சிறப்பு அழைப்பாளராக இந்தியப் பிரதமர் மோடி. (மோடி சிறப்பழைப்பாளராக தெரிவுசெய்யப்பட்டதற்கு அவர் ஒரு தீவிர மதவாதி என்பது காரணமாயிருக்கலாம் என இந்த வருடம் இலங்கையில் இதுவரை நடந்தேறாதவாறு வெசாக் பண்டிகை கோலாகலமாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

ஆசிய ஜோதி என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களால் பாடப்பட்ட புத்தருடைய பிறப்பு, இறப்புமற்றும் பரிநிர்வாணம் (ஞானம் கிடைத்தமை) ஆகிய மூன்று நாட்களதும் நினைவைக் கடைப்பிடிக்கும் சிறப்பு நாளே இந்த வெசாக் பண்டிகை. ஒவ்வொரு வருடமும் வைகாசி முழுநிலா நாளில் வருகின்ற இந்த நாள் உலகிலுள்ள பௌத்த சமயத்தவரின் முக்கிய புனித நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த நாளில் புதிய ஒளி கிடைக்கட்டும் என்ற பொருளில் வெளிச்சக்கூடுகள் எல்லா பௌத்த இல்லங்களிலும் தொங்கவிடப்பட்டிருக்கும். இங்கே புத்தர் பிறந்ததால் புதிய ஒளி கிடைக்கின்றதா? இறந்ததால் புதிய ஒளி கிடைக்கின்றதா? இந்த இரண்டு காரணங்களில் எதற்கு வெளிச்சக்கூடுகள் அமைக்கின்றார்கள் என்பது சந்தேகத்துக்குரியதாய் இருக்கின்றது.



இலங்கையின்பௌத்தஆட்சியாளர்களையும் பௌத்த சமயத்தவரையும் இந்தப் பண்டிகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டாவது காரணமே பொருந்தும் என்பதுபோல்தோன்றுகிறது. அன்பைப் போதித்த புத்தர் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்வதை விரும்பமாட்டார் ஆக அவர் இருக்கும்வரையும் எதுவும் செய்ய முடியாது இறந்தால் தமது விருப்பம்போல எதையும் செய்யலாம்(ஒரு நிஜத்தை ஒட்டிய கற்பனை) எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

## தமிழர் பிரதேசங்களில் வெசாக்

போர் முடிவுக்கு வந்ததன்பின்னர் தமிழர் பிரதேசமெங்கும் சிங்கள ஆதிக்கமும் பௌத்த அடையாளங்களும் வேகமாக பரவத்தொடங்கியிருக்கின்றன. புத்தாண்டு விழாக்கள், சமய விழாக்களோடு வெசாக் பண்டிகையும் தமிழர் பிரதேசத்தில் இப்போது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. பிரமாண்டமான வெசாக்கூடுகள், கண்கவரும் வண்ண விளக்குகள், புத்தர் புகழ்பாடும் இசைநிகழ்வுகள், பாற்சோறு, தண்ணீர்ப்பந்தல், வானவேடிக்கைகள் என்று திருவிழாக்கோலத்தை தமிழர் பிரதேசம் குறித்த சில காலமாக அனுபவித்து வருகின்றது. இவை ஏன் இங்கு இவ்வளவு கோலாகலம் கொள்ளவேண்டும்? என்ற அடிப்படைக் கேள்விகூட யாரும் எழுப்பாமல், அதை எங்களது ஒரு விழாவாகவே தூரத்திலிருந்தும் பஸ் பிடித்து வந்து பார்த்துப் போகும், கொண்டாடும் வழக்கத்தை ஏற்படுத்தி விட்டோம். போதாதற்கு அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், சமூக நலன்விரும்பிகள், கட்சி அலுவலகங்கள் என்று பலரும் தமது பங்கிற்கு போட்டி போட்டுக்கொண்டு பாற்சோறு, பழம், தண்ணீர்ப்பந்தல் என்று வீதிகளில் சென்றுகொண்டிருக்கும் பஸ்கள், பயணிகள் என்று எல்லோரையும் மறித்துப் பதகளப்படுத்தி விடுகிறார்கள். இப்படியான பல கேளிக்கைகளே அடுத்துவரும் வாரம் தமிழர் பிரதேசங்களில் நடந்தேறப்போகின்றன.


வலுக்கட்டாயமாக எமது பிரதேசங்களுக்கு வந்து சந்திக்குச் சந்தி குந்தியிருக்கும் புத்த பகவான் வண்ணவிளக்குகளாலும் வீதியை மறைத்த கொட்டகைளாலும் பரவசப்பட்டுப் போய் இருக்கப்போகிறார். இனிவரும் எமது இளைய தலைமுறை மாணவர்களுக்கு 'தமிழர்களால் கொண்டாப்படும் விழாக்களைப் பட்டியலிடுக...' என பாடசாலையில் ஆசிரியர் கூறும்போது 'வெசாக்' என்று அவர்கள் சொன்னால் யாரும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஏனெனில் இங்கே எமது தனித்துவ விழாக்களைவிட மிகப்பெரியளவில் அவர்கள்(சிறுவர்) மனங்களில் மறக்கமுடியாதளவுக்கு பௌத்தர்கள் இந்த விழவை மிகக் கச்சிதமாகக் கட்டமைத்துக் கொண்டாடி வருகின்றார்கள். இதற்குத் போரின் பின்னர் முகாம்களில் எந்தவித வேலையும் இல்லாமல் இருக்கும் படையினர் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றார்கள். இனிவரும் காலங்களில் கண்டிப்பெரகராக்களும் எங்கள் தெருக்களில் நடக்கலாம்! அப்போதும் நாங்கள் யானைகளைப் பார்த்து வியந்துகொண்டிருப்போம்.

300வருடங்கள் கழித்து... 'எமது வரலாற்றில் யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக வெசாக் பண்டிகைகள் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன எனவே யாழ்ப்பாணம் சுத்த பௌத்த சிங்கள தேசம்' என அவர்கள் இனிவரும் காலங்களில் சொல்வதற்கும் இவைகள் ஏதுவாக இருக்கும்.

கையும் போய் கபாலமும் போய் இனவாதம் முடித்து அடுத்து மதவாதம் பூச ஆரம்பித்துவிட்டார்கள் என்று நான்கூறுவதை எதிர்த்து நீங்கள் எனது சட்டையைப் பிடித்தால், இது ஏன் இங்கே தொடர்ந்து மிக மிகக் கோலாகலமாக நடத்தப்படவேண்டும்? என்பதற்கான சரியான பதிலைச் சொன்னீர்களானால் நீங்கள் எனது சட்டையைப் பிடிக்க அருகதையுள்ளவர்கள். தமிழர் தேசங்களில் இருக்கும் பௌத்தர்கள் இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளைச் சேர்ந்தவர்களே. அவர்களில் கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்களும் உள்ளனர். ஆக குறிப்பிட்ட சிலருக்காக ஏன் இவ்வளவு பிரயத்தனப்பட்டு இந்தக் களியாட்டத்தை இங்கே கொண்டாட வேண்டும்.

அம்பேத்கர் விழா, இந்திய நடன விழா, இந்திய நாடக விழா, இந்திய இசைவிழா எனப் பலவிழாக்களை கொண்டாடப்பழகிவிட்ட எமக்கு இது ஒன்றும் பெரிய விடயமில்லை. ஆனால் இந்தப் பண்டிகைகளின் பின்னால் இருக்கும் அரசியலை ஒருவரும் புரிந்து கொள்ள முற்படுவதில்லை என்பதுதான் இங்கே பிரச்சினை. பௌத்தமோ, புத்தரோ எமக்குப் பிரச்சினையில்லை அவற்றை வைத்து செய்யப்படும் அரசியல் தான் எமக்கு பிரச்சினை. நல்ல பௌத்தர்களைக் காண்பதே அரிதாகவுள்ள இந்தக் காலத்தில் பௌத்த பண்டிகைகள் மட்டும் எமக்கு நல்லதாக இருக்குமா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தொடர்பாடல் சாதனங்கள்

சி.சிவபாலன்

இன்றைய உலகில் இன்றியமையாதவைகள் ஆகிவிட்டவை தொடர்பாடல் சாதனங்கள். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் அவையு மொன்றாகி ஒவ்வொருவரின் கைகளில் மட்டு மல்லாமல் வீட்டின் மூலைமுடுக்கெல்லாம் வியாபித்து இருப்பனவாகவும் இவை மாறிவிட்டன. நாளுக்கு நாள் புதிய புதிய சேர்க்கைகளுடன் வெளியாகும் இவற்றின் பின்னால் இளையோர் சென்று கொண்டிருக்கின்றனர். எவ்வாறாயினும் இந்தச் சாதனங்கள் மூலம் உலகளாவிய ரீதியிலான தொடர்புகளை ஏற்படுத்தக் காரணமாக இருப்பவை செய்மதிகள்.

பூமியைச் சுற்றிவரும் இயற்கை உபகோளாக 'மதி' இருக்கையில் மனிதனால் உருவாக்கப்பட்ட 'உப கோள்களாக' இந்தச் செய்மதிகள் உள்ளன. 2016ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பின்படி 4256 செய்மதிகள் பூமியைச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டில் மட்டும் 240 செய்மதிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஒரு வருடத்தில் மிக அதிகமான செய்மதிகள் ஏவப்பட்ட ஆண்டாக 2014 பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இவற்றில் அனேகமானவை, தொலைத்தொடர்புக் கட்டமைப்பை விஸ்தரிப்பதற்காக ஏவப்பட்ட செய்மதிகளாகும். தொலைக்காட்சிகள், தொலைபேசிகள், இணையங்கள், வானிலை முன்னறிவிப்பு என்பனவற்றுக்காக இவை பயன்படுத்தப்படுகின்றன.

இந்தச் செய்மதிகள் புவியிலிருந்து குறிப்பிட்ட தூரத்தில் கணிக்கப்பட்ட வேகத்தில் வட்டப் பாதையில் செல்லுமாறு ஏவிவிடப்படுகின்றன. நீள்வட்டப் பாதையிலும் இவற்றில் சில ஏவிவிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு செய்மதியும் அதன் தேவைக்கேற்ப வெள;வேறு தூரங்களில் பறக்க விடப்படுகின்றன.

இவை வளிமண்டலத்துக்கு வெளியே இயங்கவிடப்படுவதால், வளித்தடை இன்மையால் அவை ஏவப்பட்ட வேகத்திலேயே தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கும். எவ்வாறு சந்திரன் புவியின் ஈர்ப்பு விசை காரணமாக புவியை விட்டு விலகிச் செல்லாது இயங்கிக் கொண்டிருக்கின்றதோ அவ்வாறே செய்மதிகளும் புவியின் ஈர்ப்புவிசை காரணமாகக் குறித்த தூரத்திலிருந்து விலகிவிடாது தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

எமது உள்ளங்கையின் அளவிலிருந்து பெரியதொரு வாகனத்தின் அளவு வரை வேறுபடுகின்ற இந்தச் செய்மதிகளில் அவற்றின் பயன்பாட்டிற்கேற்ப உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. தொலைத்தொடர்புச் செய்மதிகள் தரையிலுள்ள ஒரு செய்மதித் தொடர்பாடல் நிலையத்திலிருந்து வரும் சமிக்ஞை அலைகளைத் தரையிலுள்ள மற்றொரு தொடர்பாடல் நிலையத்துக்கு அனுப்பும் பணியைச் செய்கின்றன. ஒரு தகவலைப் பரிமாறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்மதிகள் பயன்படுத்தப்படலாம்.

இதைவிட புவியைப் படம்பிடித்தல், விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளுக்கான படங்களைப் பெறுதல், போக்குவரத்துக்கான வழிகாட்டல்களைப் பெறுதல், பாதுகாப்பு உள்ளிட்ட பல தேவைகளுக்காகவும் செய்மதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

செய்மதிகள் இயங்கிக் கொண்டிருக்கும் தூரத்தின் அடிப்படையில் அவை மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. விஞ்ஞான ஆராய்ச்சித் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் செய்மதிகள் புவியிலிருந்து சில நூறு கிலோமீற்றர் தூரத்தில் இயங்குகின்றன. இவை மிகவும் வேகமாக இயங்குபவை. சிலமணிநேரத்தில் புவியைச்சுற்றி வந்துவிடும். குறுகிய வட்டப் பாதையில் இயங்குபவை இவை.

அடுத்தவகையானவை புவியிலிருந்து சுமார் 20ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இயங்குபவை. அவை புவியைச்சுற்றிவர 12 மணித்தியாலங்கள் அளவில் எடுக்கும். அதாவது நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் அவை புவியைச் சுற்றிவரும். நடுத்தர வட்டப்பாதையில் இயங்குபவை இவை.

மற்றயவை நீண்ட வட்டப்பாதையில் இயங்குபவை. இந்தச் செய்மதிகள் சுமார் 36ஆயிரம் கிலோமீற்றர்கள் தூரத்துக்கு அப்பால் இயங்குபவை. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 36000 கிலோமீற்றர்கள் என்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தூரமாகும். ஏனெனில் இந்தத் தூரத்தில் இயங்கும் செய்மதிகளானவை பூமியின் வேகத்துக்கு இணையான வேகத்தில் பூமியுடன் ஒன்றித்து இயங்குபவையாகும்.

இது 24மணிநேரத்துக்கு ஒருமுறை என்பதாகப் பூமியுடன் சுற்றிக்கொண்டிருப்பன. அதாவது இந்தச் செய்மதிகளை நாம் பார்க்கமுடியுமாயின் அவை எமக்கு மேலே நிலையாக நிற்கின்ற பொருள்கள் போலவே எமக்குத் தோற்றமளிக்கும். இவ்வாறு இயங்கும் மூன்று செய்மதிகளின் உதவியுடன் பூமி முழுவதும் தொடர்பாடல் வலைப்பின்னலை அமைத்துவிட முடியும் என ஆதர்.சி.கிளாக் என்பவர் எழுதிய விஞ்ஞானக் கட்டுரை ஒன்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்மதிகளின் வரலாற்றில் 1957 ஒக்ரோபரில் ரஷ்யாவால் ஏவப்பட்ட 'ஸ்புட்ணிக் 1' என்ற செய்மதியே முதலாவது செய்மதி என்ற பெருமைக்குரியது. கடந்த 60 வருடங்களில் ஆராய்ச்சி மற்றும் வியாபார, தொலைத் தொடர்புத் தேவைகளுக்காக ஆயிரக்கணக்கான செய்மதிகள் செலுத்தப்பட்டுள்ளபோதும் அவற்றில் சில வேகம் குறைந்து, வளிமண்டலத்துக்குள் புகுந்து, எரிந்து அழிந்தும்விடுகின்றன.

அவைபோக தற்போது 4256செய்மதிகள் புவியை வலம் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றிலும் 1419 செய்மதிகளே பயன்பாட்டிலுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

" பூமியைச் சுற்றிவரும் இயற்கை உபகோளாக 'மதி' இருக்கையில் மனிதனால் உருவாக்கப்பட்ட 'உப கோள்களாக' இந்தச் செய்மதிகள் உள்ளன. 2016ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பின்படி 4256 செய்மதிகள் பூமியைச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. "



# அவள் கல்நெஞ்சக்காரி...

நீ மூன்று பொய்கள் சொன்னாய்
வெகு நிதானமாக...
அப்பொழுதெல்லாம்
உனக்கு வியர்க்கவில்லை
வார்த்தைகளில் பிசிறில்லை
அடிக்கடி என் கண்களைத் தவிர
வேறெங்கும் உன் பார்வை பாயவில்லை
ஏன் அடிக்கடி உதடு வெடித்துத் தள்ளும்
உன் உன்மத்தப் புன்னகைகூட
கசியவில்லை இப்படி வெகு நிதானமாக
நீ மூன்று பொய்கள் சொன்னாய்.
அதை நான் தடுமாற்றத்துடன் நம்பினேன்

என்னுடைய கைக்குட்டை கசியுமளவிலும்
அடிக்கடி பார்வைகளை அலையவிட்டும்
பிரயத்தனப்பட்டு எச்சிலூற்றெடுத்து
தொண்டை நனைக்குமளவுக்கு
வெகு தடுமாற்றத்துடன்
அந்த மூன்று பொய்களையும் நம்பினேன்

சரியாக என் குழந்தை
அசையத்தொடங்கும் பருவத்தில்
நான் வயிற்றில் கைவைத்திருந்த
ஒரு பின்மாலைப் பொழுதில்
நிரம்பிய தடுமாற்றத்துடன்
நீ... ஒரேயொரு உண்மை சொன்னாய்

வழக்கத்துக்கு மாறாக உண்மைக்குத்
துணையாய் மதுவருந்தியிருந்தாய்
ஒத்திகை வார்த்தைகளைப் பாவித்தாய்
போதாதென்று கடனும் வாங்கினாய்
நீ உண்மை சொல்லி முடியும்வரையிலும்
என் கால்களையே
பார்த்துக்கொண்டிருந்தாய்
இப்படியாக வெகு சிக்கல்பட்டு
தட்டுத்தடுமாறி
அந்த உண்மையைச் சொன்னாய்


[illegible]ன்னவென்றால்
நான் வெகு நிதானமாக
வெகு சாதாரணமாக
அந்த உண்மையை
எதிர்கொண்டதுதான்

இன்றுவரையிலும் என்பெயரை
தலையெழுத்தாய் போடும் மகன்
எப்போதாவது உன்னுடைய
மூன்று பொய்களையும்
ஒற்றை உண்மையையும்
கேட்பான்
அப்போது எதற்கு நிதானத்தையும்
எதற்கு தடுமாற்றத்தையும்
கையாளவேண்டுமென்று
நீ தந்த உண்மையையும்
பொய்களையும் வைத்து ஒத்திகை
பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.

சிவ.பரமேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைப் பழப் பருவம்



ஜெ. காயா

சிவந்த மண் தந்த அனுபவங்களில் அது அருமையானது. சித்திரை வைகாசி மாதங்களில் வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் பருவமாகும் அந்த மஞ்சள் பழங்களைச் சுவைக்கப் பள்ளி உடையுடன் முண்டியடிப்பது எமது வழக்கம். பாடசாலை விட்டு விட்டது. அன்றும் விரைகின்றோம் பாலைக் காட்டை நோக்கி....

பாலை மரங்கள். அவை வன்னி மண்ணுக்கேயுரிய அடையாளங்கள். வைரம் செறிந்து, முற்றி முறுகி எப்போதுமே பச்சைப் பசேலாகக் காட்சியளிக்கும் அவை இப்போது மட்டும் மஞ்சள் மயமாகி இருக்கின்றன. ஆம்...! இப்போது அவற்றின் இலைகளுக்கு ஈடாக கிளைகளில் ஏராளம் பழங்கள். பருவமடைந்து, மஞ்சள்பூசியனவாய் மஞ்சள் நிறங்கொண்டு சிறுவர் நாம் புசிக்கத் தயாராகிவிட்டன.

அந்தப் பாலைப் பழங்களின் சுவை விசித்திரமானது. மஞ்சள் நிறமானால் அவை பழப்பருவத்தை அடைந்துவிட்டதற்கு அறிகுறி. அவை பிஞ்சுகளாகவும் காய்களாகவும் இருக்கும்போது பச்சை நிறத்தில் இலைகளோடு இணைந்து செழித்திருக்கும்.

பச்சை நிறத்திலிருந்து மஞ்சளாகும்போது இடையில் குருத்துப் பச்சை நிறங்கொண்ட செங்காய் பருவத்தை அவை எட்டுகின்றன. அப்போதுதான் சிறுவர் நமது கண்களுக்கும் அவை தென்படும். அப்போதிலிருந்துதான் அதைப் புசிக்க நாமும் உசார் நிலை கொள்வோம்.

செங்காய்கள் ஓரளவுதான் இனிப்பன. ஆனாலும் அவற்றில் அதிகளவில் பாலையின் பால் இருக்கும். அது நாவிலும் பற்களிலும் ஒட்டிக் கொண்டு சுவைக்கும் எமது வாய்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தி விடும். அதனால் பழம் ருசிக்கும் அவா அடங்கும் வரைக்கும் அந்தச் செங்காய்களை உண்ண முடியாது. வாய் வறண்டு, தொண்டை அடைத்து, உதடுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டி அதிக அசௌகரியத்தை அந்தச் செங்காய்கள் எமக்கு ஏற்படுத்தும். பொதுவாகவே மஞ்சள் நிறமெய்தினால் அவை பழங்களாகி விடும்.

ஆனாலும் அவை கொண்டுள்ள பாலைப் பால் குறைந்திருப்பது நன்கு கனிந்து, கண்ணாடிபோன்று மஞ்சள் நிறமாகி, உள்ளிருக்கும் சிறிய கரும் விதை அதனூடே வெளித்தெரியும் நன்கு பழுத்த பழங்களிலேயே. சுவைகூட அவற்றிலேதான் அதி உச்சமாகவிருக்கும். தேனை ஒத்த இனிப்பும், அந்தப் பழத்துக்கேயுரிய மணமும் சிறுவர் நமக்கு நன்கு பிடித்தமாகிவிடுகின்றன. அவையே நாம் வேண்டிய அளவுக்கு உண்ண முடிந்தவையும்கூட. அந்த மரம் 'பாலை' என்று பெயர் கொண்டதற்குத் தன்னில் அதிகளவில் ஒட்டும் தன்மையுடைய பால் திரவத்தைக் கொண்டுள்ளமை தான் காரணம்போலும்! சிறுவர்களான எம்மால் உருண்டு, திரண்டு பருத்திருக்கும் உயர்ந்த அந்தப் பாலை மரங்களில் ஏறிப் பழம் பறிக்க முடியாது. பெரியவர்கள் எவரும் பள்ளி உடையுடன் நின்றுகொண்டிருக்கும் எமது பழம் தின்னும் ஆசையைப் பூர்த்தி செய்ய முன்வரார்கள். நாம் மரத்தின் கீழ் நிற்பதைக் காணும் சிலர்கூட "டேய் ஓடுங்கடா வீட்ட..."

"நேரத்துக்கு வீட்ட போங்கோ பிள்ளையளே..."

"பாலை மரத்தில மத்தியானத்தில பேய் நிற்கும்கிட்ட நிற்கா தீங்கோ" என்றவாறாக எம்மை அங்கிருந்து அகற்றிவிடவே முனைவர். அவ்வாறாயின் சிறுவர் நமக்குப் பழம் பறிக்க என்னதான் வழி...? மரத்தின் கீழேநின்றுதடிகள், பொல்லுகளாலும் கல்லுகளாலும் எறிந்து ஒன்றிரண்டு பழங்களையாவது வீழ்த்தி விடுவது ஒன்றும் எமக்குக் கடினமல்லவே. காய்த்த மரம் கல்லேறி வாங்கும் என்பது நியதிதானே...?



பச்சை நிறத்திலிருந்து மஞ்சளாகும்போது இடையில் குருத்துப் பச்சை நிறங்கொண்ட செங்காய் பருவத்தை அவை எட்டுகின்றன. அப்போதுதான் சிறுவர் நமது கண்களுக்கும் அவை தென்படும். அப்போதிலிருந்துதான் அதைப் புசிக்க நாமும் உசார் நிலை கொள்வோம்.



# தெருக்கூத்து... 3

சாரா

போர் முடிந்ததன் பின்னர் அதன் வடுக்களைத் துரிதமாக மறைப்பதற்காகத் தமிழர் தாயகத்தில் கடந்த அரசால் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றில் பிரதானமானவை வீதி நிர்மாணிப்புக்கள். இதன் தாக்கத்தை அதிகளவில் கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் காணலாம். முகத்தை மாத்திரம் ஒப்பனை செய்து அழகாக வைத்திருப்பதைப் போல வெளியே தெரியும் முக்கிய வீதிகளை மாத்திரம் செப்பனிட்டுக் காப்பெற் வீதிகளாக்கியிருந்தது கடந்த அரசு.

அழகாக நீண்டு செல்லும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காப்பெற் வீதிகளிலிருந்து விலகி ஏதாவது ஒரு கிளை வீதிக்குள் நுழைவோமானால் அந்த முகப்பூச்சின் விசித்திரத்தை நம்மால் அறிந்துகொள்ள முடியும். இப்படி அவசர அவசரமாகத் தடல் புடலாக அமைக்கப்பட்ட இத்தகைய காப்பெற் வீதிகளின் நிலை சில இடங்களில் இப்போது கவலைக்கிடமாக இருக்கின்றது.

வீதி என்பது வெறுமனே காப்பெற்றால் ஆக்கப்பட்ட தரை மட்டுமல்ல. அது தன்னில் வீதி ஒழுங்கு பேணும் குறியீடுகளையும் வீதியை அடையாளப் படுத்தும் குறிப்புக்களையும் கொண்டிருக்கின்றது.

> வீதி ஓரங்களிலும் வீதியிலும் அமையும் குறியீடுகள், குறிப்புக்கள் இந்தக் காப்பெற் தரையின் பாவனைக் காலத்தை விடக் குறைந்த ஆயுளைக் கொண்டவை. ஆகையால் அவற்றைக் காலத்துக்குக் காலம் கவனித்து புதுப்பிக்க வேண்டியது கட்டாயமானது.



காப்பெற் என்பது நீண்ட காலமாக நிலைத்திருக்கக் கூடிய தார் உள்ளிட்ட கலவைகளைக் கொண்டதாயினும் அதன் பாவனைக்கும் கால எல்லை உண்டு. ஆனால் வீதி ஓரங்களிலும் வீதியிலும் அமையும் ஏனைய மேற்குறித்த குறியீடுகள், குறிப்புக்கள் இந்தக் காப்பெற் தரையின் பாவனைக் காலத்தைவிடக் குறைந்த ஆயுளைக் கொண்டவை. ஆகையால் அவற்றைக் காலத்துக்குக் காலம் கவனித்து புதுப்பிக்கவேண்டியது கட்டாயமானது.

விபத்துக்கள், உறுதியின்மை மற்றும் காலநிலைக் காரணிகளால் வீதி ஓரங்களில் அமைக்கப்பட்டிருந்த வீதிக் குறியீடுகள் பலவும் இன்று காணாமல் போய்விட்டன. வீதியின் நடுப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த ஒளித்தெறிக்கைக் கட்டைகள் பலவும் சிதைந்து போய் விட்டன. இதற்குப் பொறுப்பானவர்கள் இவற்றால் ஏற்படும் விபரீதங்களைப் புரிந்து அவற்றை அன்றாடம் கவனித்துச் செம்மைப்படுத்துவதில்லை. காப்பெற் வீதியை அமைத்ததுடன் அரசின் வேலையும், அதைக் குத்தகைக்கு எடுத்த நிறுவனத்தின் பணியும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கடமையும் நிறைவடைந்து விட்டது என எண்ணுகின்றார்கள் போலும்.

வீதிகளில் வீதி ஒழுங்கறிந்து பயணிப்பது சட்டமாக்கப்பட்டு அதை மீறும் ஓட்டுநர்களுக்கு எவ்வாறு தண்டம் அறவிடப்படுகின்றதோ அதைப்போல வீதிக் கட்டமைப்புக்களில் ஏற்படும் இத்தகைய குறைபாடுகளுக்கும் அதற்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டம் அறவிடப்பட்டு அந்த வேலை உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில், பஸ் நிலையத்தை அண்மித்துத் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் பொலிஸ் கண்காணிப்புக் கூடாரத்துக்கு அருகில் காணப்படும் மங்கி மறைந்து விட்ட மஞ்சள் கடவை போன்ற இன்னும் ஏராளம் [illegible] பாதசாரிகளையும் வாகன ஓட்டுநர்களையும் பற்றிக்கொள் ளும் [illegible] பெரும் விபத்தாக விஸ்வரூபம் எடுக்கும் பட்சத்தில்தான் இவை போன்ற வீதிக் கட்டமைப்புக்கள் உரியவர்களால் கவனத்தில் எடுக்கப்படும் போலும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையிலிருந்து.....!

அனார்கலி



## பரவசம் பரவசம்!

கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் முடிவ டைந்ததும் அங்கு திரண்டிருந்த மக்களைப் பெரும் பரவசப்படுத்திய சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது!

கெடுபிடிகளற்ற பாதுகாப்பு ஏற்பாட்டின்படி கூட்ட மேடையிலிருந்து சற்றுத்தூரத்திலேயே போடப்பட்டிருந்த ஆசனங்களில் அனைத்து மக்களும் அமர்ந்திருந்தனர்.

கூட்டம் முடிவடைந்ததும் தலைவர்களான சம்பந்தன் மாவை, சுமந்திரன், செல்வம் ஆகியோர் மேடையை விட்டிறங்கி நேரே பொதுமக்களிருந்த பகுதிக்குச் சென்று மக்களுடன் மனம் விட்டு நேரில் அளவளாவினர்.

இந்த சம்பவம் தீரண்டிருந்த ஆண்கள், பெண்கள், தொழிலாளர்களை மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்தியது. பலரும் அகமும், முகமும் மலர தலைவர்களுடன் உரையாடினர்.






## பதவிதுறப்பேன்!

அம்பாறையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மே தினப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உணர்ச்சி மேலீட்டுடன் தனது தலைமை உரையை ஆற்றினார்.

"அம்பாறை மாவட்டத் தமிழர்களின் இருப்புகள், உரிமைகள், வாழ்விடங்கள், காணிகள் உறுதி செய்யப்பட்டு, தீர்வுத்திட்டத்தில், தமிழ்ப் பிரதேசங்களை உள்ளடக்கிய தனியான தீர்வுத் திட்டம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எமது மக்களின் இருப்புகள் கேள்விக் குறியாக்கப்பட்டால், பாதிக்கப்பட்டால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பேன்" என்று அவர் கடுமையாகக் கொதித்தார்.

## கோடீஸ்வரனின் கவனத்துக்கு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வு இந்த முறை அம்பாறை அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு தர்ம சங்கரி மைதானத்தில் நடைபெற்றது. ஊர்வலம், பொதுக் கூட்டம் என்பன மிகச்சிறப்பாக நடைபெற்றன.

அத்தனை சிறப்புடன் அந்த மே தின நிகழ்வுகளை நடத்தி முடித்த ஏற்பாட்டுக் குழுவின் தலைவரும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான கவீந்திரன் கோடீஸ்வரனுக்குக் கூட்ட மைப்பின் தலைவர்கள் பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனுக்கு ஒரு சபாஸ் கூறும் அதேவேளை ஒரு சிறு குறையையும் நாம் குறிப்பிடாக வேண்டும்.

அதாவது இத்தனை பெரிய மே தினப் பொதுக்கூட்டம் இடம்பெற்ற மேடைப் பகுதியில் ஊடகவியலாளர்களுக்கென பிரத்தியேக ஆசனவசதிகள் எவையும் செய்யப்படவில்லை. அடித்தடும் வெயிலுக்கு மத்தியில் நின்ற நிலையிலேயே ஊடகவியலாளர்கள் செய்தி சேகரித்த அவலத்தையும் அவதானிக்க முடிந்தது!



## ஏமாற்ற முடியாது

கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தமிழர்களை முஸ்லிம்களும், முஸ்லிம்களைத் தமிழர்களும் ஒரு போதும் ஏமாற்றமுடியாது என்ற கருத்தை அழுத்திக் கூறினார்.


தமிழ்த் தலைமைகளும், முஸ்லிம் தலைமைகளும் ஒருங்கே கூடிப் பேச முன்வர வேண்டுமென்ற பகிரங்க அழைப்பையும் அவர் விடுத்தார். அனுபவம் பக்குவம் கொண்ட தலைவரல்லவா அவர்!

## கண்டனம் கண்டனம்!

அம்பாறை - இறக்காமம் பிரதேச மாயக்கல்லி மலை அடிவாரத்திலுள்ள முஸ்லிம்களின் காணிகளை அபகரித்து பௌத்த விகாரை அமைக்க எடுக்கப்படும் அடாவடி முயற்சிகளுக்கு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இதற்கான கண்டனத் தீர்மானம் நிலைவேற்றப்பட்டுள்ளதுடன், முசலிப் பிரதேச முஸ்லிம்களைப் பாதிக்கும் வில்பத்து வர்த்தமானி பிரகடனத்தை நீக்குமாறு அரசதலைவரைக் கோரும் தீர்மானமொன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## அனுதாபத் தீர்மானம்!




அண்மையில் மறைந்த வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவரும், மூத்த ஊடகவியலாளருமான செல்லையா கதிர்காமத்தம்பியின் மறைவையொட்டி, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் அனுதாபத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

சம்மேளனத் தலைவர் கலாபூசணம் மீரா.எஸ்.இஸடீன் தலைமையில் அட்டாளைச் சேனை ஏஸ்றா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற சம்மேளன வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இந்த அனுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## நான் உதவிச்சேர்மன்!

கூட்டமைப்பின் மே தினப் பொதுக்கூட்ட மேடையில் திடீரென ஒருவர் ஏறிவிட்டார். இதனைக் கண்ணுற்ற பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அந்த நபரை அழைத்து மேடையில் வெறுமையான ஆசனமில்லை. குறிப்பிட்ட அளவினரே மேடையில் இருக்கலாம் நீங்கள் கீழே இறங்கிவிடுங்கள் என வற்புறுத்தினார்.

சம்பந்தப்பட்ட நபரோ நான் உதவிச் சேர்மன் எனத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு மேடையிலிருந்து இறங்காது அடம் பிடித்தார். ஆயினும் சிறிது நேரத்தின் பின்னர் முகத்தை 'உம்' என வைத்துக் கொண்டு மேடையிலிருந்து இறங்கி அவர் வெளியே நடையைக் கட்டினார்.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் நான் சேர்மன், நான் உதவிச் சேர்மன், நான் மெம்பர் எனும் பிரமையிலேயே சிலர் உள்ளனரென்பதற்கு இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டு.

யார் இந்த உதவிச் சேர்மன்? என்ற கேள்வி எழலாம். தூரப் பாருங்கள் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை தெரியும்!



## புத்த பிரான் கூறவில்லை!

"மற்றொருவரின் காணியில் அத்துமீறி அடாவடித்தனம் செய்து பௌத்த விகாரை அமைக்குமாறு புத்தபிரான் கூறவில்லை" இவ்வாறு அம்பாறை தீகவாபி பரிவாரசைத்திய ராஜமகா விகாரையின் முதன்மை குருவண போத்திவெல சந்தானந்த தேரர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இறக்காமம் மாயக்கல்லி மலை விவகாரம் தொடர்பில் அவர் தெரிவித்திருந்த கருத்து ஏனைய சகோதர இனங்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




## ஊடக மே தினம்

அம்பாறை மாவட்டத்தில் முதன் முதலாக மூவின ஊடகவியலாளர்களும் இணைந்து இந்த முறை மே தின நிகழ்வைச் சிறப்பாக நடத்தியுள்ளனர்.

அகில இலங்கை ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மே தின நிகழ்வில், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட மே தின ஊர்வலம் அம்பாறை ரீகல் சந்தியில் ஆரம்பித்து அம்பாறை நகர மண்டபத்தில் பொதுக்கூட்டத்துடன் முடிவடைந்தது. மூத்த ஊடகவியலாளர் வசந்த சந்திரபால தலைமையில் நடைபெற்ற இந்த மே தின நிகழ்வில் அம்பாந்தோட்டை, மொனறாகல, பொலனறுவை, மாத்தளை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்ரோன் - லி பென்

# பிரான்ஸை ஆளப்போவது யார்?



பிரகாஸ்

பிரான்ஸ் அரசதலைவர்-பிரான்கோயிஸ் ஹோலண்டேவின் பதவிக்காலம் முடிவடையப் போகின்றது. எனவே புதிய அரச தலைவரைத் தேர்ந்தெடுக்க வாக்குப் பதிவுகள் அங்கு நடை பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் பலமுனைப் போட்டியாகவிருந்த பிரான்ஸ் அரச தலைவர் தேர்தல் தற்போது மக்ரோன் - லி பென் எனும் இரு முனைப் போட்டியாக மாறியுள்ளது.







பிரான்ஸ் அரச தலைவர் தேர்தல் முறை ஏனைய நாடுகளில் இருந்து வேறுபட்டது. வேட்பாளர்கள் அத்தனைபேரும் முதலில் போட்டியிடுவார்கள். யார் ஐம்பது சதவீதத்துக்கும் கூடுதலான பெரும்பான்மையைப் பெறுகின்றாரோ அவரே வெற்றியாளர். அவ்வாறு எவருக்கும் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்க வில்லையென்றால், பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற முதலிரு வேட்பாளர்கள் மட்டும் இரண்டாம் கட்டத் தேர்தலில் போட்டியிடுவார்கள். இவர்களில் யார் கூடுதல் வாக்குகளைப் பெறுகிறாரோ அவரே பிரான்ஸின் அரச தலைவராக மகுடம் சூடுவார்.

பிரான்ஸ் அரசதலைவர் தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப் பதிவு கடந்த மாதம் 23ஆம் திகதி நடைபெற்றது. கென்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த பிரான்கோயிஸ் பில்லன், வலது சாரியைச் சேர்ந்த மரின் லி பென், லிபரல் கட்சியைச் சேர்ந்த இம்மானுவல் மக்ரோன், இடதுசாரிகள் சார்பில் மெலன்சன் ஆகிய நால்வருக்கும் அப்போது போட்டியிருந்தது. எவருக்கும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை. மக்ரோன் 23.7 சதவீத வாக்குகளையும், பென் 21.7 சதவீத வாக்குகளையும் பெற்றனர். இதனையடுத்து இவர்கள் இருவரில் யார் பிரான்ஸை ஆளப்போகின்றார் என்பது இன்று தீர்மானவாகவுள்ளது.

## லி பென்

பெண் வேட்பாளரான இவர், பிரான்ஸ் தற்போது அடிக்கடி எதிர்கொள்ளும் தீவிரவாதத்துக்கு எதிராகத் தனது பரப்புரைகளைக் கட்டமைத்திருந்தார். சுருங்கச் சொல்லின், கடந்த வருடம் இறுதிப் பகுதியில் அமெரிக்க அரசதலைவர் தேர்தல் பரப்புரையில் ட்ரம்ப் என்னென்ன உத்திகளையெல்லாம் கையாண்டாரோ அதையெல்லாம் அப்படியே பின்பற்றினார் பென். இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான கருத்துக்களால் பிரான்ஸின் இரண்டாவது பெரும்பான்மையை இவர் பெற்றுள்ளார்.

பிரான்ஸின் பொருளாதாரம், அமைதி, சுய பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகியவற்றக்குப் பங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற சட்டவிரோதக் குடியேறிகள் அத்தனைபேரும் வெளியேற்றப்படுவார்கள். மத்திய கிழக்கில் இருந்தோ அல்லது ஏனைய பாகங்களில் இருந்தோ வரும் அத்தனை அகதிகளும் நாட்டுக்குள் ஏற்கப்படாமல் ஆண்டுக்குப் பத்தாயிரம் அகதிகள் மட்டுமே ஏற்கப்படுவார்கள். தேவையற்ற இடங்களில் உள்ள மசூதிகள் இல்லாமல் செய்யப்படும், சமூக நலத்திட்டங்களின் கீழ் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். போன்ற வாக்குறுதிகள் மரின் லி பென்னினால் வழங்கப்பட்டுள்ளன. இதுவே அவரின் பலமாகப் பார்க்கப்படுகின்றது.

ஏனெனில், பரிஸ்நகரில் தொடங்கிய தீவிரவாதத் தாக்குதல் பிரான்ஸில் இன்றளவும் தொடர்ந்துகொண்டேயுள்ளது. இஸ்லாமியத் தீவிரவாதமே இதற்குக் காரணம் என்று தனது பரப்புரையை ஆரம்பித்து இன்று பிரான்ஸில் அத்தனை மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ள பாதுகாப்பை மலிபென் உறுதிப்படுத்த எத்தனிக்கின்றார். இதுவே அவரின் பலம்.

## மக்ரோன்

மலிபென்னுக்குக் கணிசமான அளவு ஆதரவு இருந்த போதிலும் பிரான்ஸின் அடுத்த அரசதலைவர் மக்ரோன் தான் என்றே கருத்துக் கணிப்புக்கள் பலவும் குறிப்பிடு கின்றன. இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று, குறித்த தேர்தலில் ஆரம்ப வேட்பாளர்களாகக் களமிறங்கியிருந்த சிலர் மக்ரோனுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். எனவே அவர்களுக்குக் கிடைத்த வாக்குகளில் பெரும்பாலானவை இனி மக்ரோனுக்கு மாற்றம் பெறலாம்! இரண்டாவது, சாத்தியமான தேர்தல் பரப்புரைகளை மக்ரோன் வெளிப்படுத்துகின்றார். அகதிகளை அனுசரித்துச் செல்லும் அதேநேரம் நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த இயலும், வேலையில்லாத பிரச்சினையை 9.7 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாகக் குறைத்தல், 15 வயதுக்குட்பட்ட மாணவர்கள் அலைபேசிகளைப் பாவிக்கத் தடை ஆகியன மக்ரோனின் தேர்தல் பரப்புரைகளில் சில. தனது சாதகமானதும் தெளிவானதுமான பரப்புரையால் ஏராளமான வாக்குகளை மக்ரோன் தன்வசப்படுத்தியுள்ளார். மக்ரோனுக்கு தற்போது 39வயதே ஆகின்றது. அவர் அரச தலைவரானால் பிரான்ஸ் வரலாற்றில் இளம் வயதில் தலைவரானவர் என்ற சிறப்பையும் பெறுவார்.

## சர்ச்சை

மேற்குறித்த இந்த இரண்டு போட்டியாளர்களுக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இதில் மக்ரோனின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகிக் கொண்டிருந்த நிலையில், அவர் மீது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பல மில்லியன் டொலர் பெறுமதியான கறுப்புப் பணத்தை கரீபியனில் உள்ள வங்கிகளில் மக்ரோன் பதுக்கியுள்ளார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது. எனினும் மக்ரோன் அதை மறுத்துள்ளார். அது தொடர்பில் தெளிவுத் தன்மையையும் தனது வாக்காளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளார் என்று பிரான்ஸ் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. ஏலவே அமெரிக்காவில் நடந்ததுபோலவே பிரான்ஸிலும் தேர்தல் பருவம் மிகவும் சூடு பிடித்துள்ளது. இதில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை நாளைவரை காத்திருந்துதான் பார்ப்போமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# கிழக்கை நோக்கி திரும்பும் கவனம்!

ஸ்டோ ஸ்வாமி

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் நினைவு நாள் மற்றும் இரா.சம்பந்தன் தேசியக் கொடியை மே தின மேடையில் அசைத்த நாள் போன்ற ஞாபகங்களுடன் மற்றொரு மே தினம் கடந்த திங்கட்கிழமை நடந்து முடிந்திருக்கின்றது. இலங்கையில் வழமைபோலவே இந்தவருட மே தினமும் அரசியல் கட்சிகளுக்கு இருக்கக்கூடிய கூட்டம் கூட்டும் இயலுமையைப் பரீட்சித்துப் பார்க்கும் களமாக இருந்து ஓய்ந்திருக்கின்றது..
மக்கள் விடுதலை முன்னணி தனது மே தினத்தையெட்டிய பிரதான ஊர்வலத்தைக் கொழும்பு பி.ஆர்.சி. மைதானத்தில் நிகழ்த்துவதற்கு முன்னதாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்தது. இந்த நடை பவனியில் ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, ரில்வின் சில்வா மற்றும் ராமலிங்கம் சந்திரசேகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.
வடபுலத்தில் வாழும் தமது கட்சி அங்கத்தவர்களின் வசதி கருதியே தமது பேரணியை யாழ்ப்பாணத்தில் நடத்தியதாகவும் இதில் 4000 ஆதரவாளர்கள் பங்குகொண்டிருந்ததாகவும் ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரான விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார்.

### கூட்டமைப்பின் மே தினம்

கடந்த வருடம் தனது மே தினக்கூட்டத்தை யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் நடத்தியிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த முறை அதனை நாட்டின் கிழக்குப் பகுதிக்கு நகர்த்தியிருந்தது. அம்பாறை மாவட்டம் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தர்மசங்கரி மைதானத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற அந்த மேதின நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட வடக்கு கிழக்கைச் சேர்ந்த பலரும் பங்கெடுத்திருந்தனர். குறித்த மே தின வைபவத்தில் தமிழர் விவகாரங்களை உள்ளடக்கிய மே தினப் பிரகடனம் ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது.
7 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீட்டைக் கொண்ட திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பால் ஒரு தமிழ் பிரதிநிதித்துவமே காப்பாற்றப்பட்டு வருகின்றது. கடந்தமுறை பொடியப்பு பியசேன வந்திருந்தார்: இம்முறை கோடீஸ்வரன் வந்திருந்தார். இவ்வாறு ஒற்றைப் பிரதிநிதியைக் கொண்ட பிரதேசத்தை மேதின நிகழ்வுகளுக்காகத் தெரிவு செய்ததில் அரசியல் பின்நோக்கம் இல்லாமல் இல்லை.
அண்மைக்காலமாகத் தமிழ் அரசியல் களம் கிழக்கில் தனது கவனத்தை அதிகரித்து வருகின்றது. வடக்கில் இருந்து கொண்டு வடக்கு-கிழக்கு இணைப்பைப் பற்றிக் கூச்சல் போடுவதைத் தவிர்த்து கிழக்கிற்குச் சென்று அதன் நிலைவரத்தை நாடிபிடித்துப் பார்த்து அதற்குக் கிழக்குச் சமூகத்தைத் தயார்ப்படுத்தும் நிகழ்ச்சி நிரலுடனேயே தற்போதைய கவனக்குவிப்பு கிழக்குக்கு திருப்பப்பட்டிருக்கின்றது.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் கிழக்கிலே இருக்கின்ற போதும்கூட தமிழர் தரப்பு விடயங்கள் கவனிப்புப் பெறும்போது வடக்கு முதன்மை பெறுவதே வழமையான ஒன்று. இந்த நிலையில் வழமை நிலையிலிருந்து தவிர்த்து கிழக்கின் மீதான கவனத்தை அதிகரிக்கும் எத்தனங்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன.
அதன் ஒரு அம்சமாகவே இந்த வருட மே தினம் கிழக்கில் அம்பாறையில் கொண்டாடப்பட்டிருக்கின்றது.
இது மாத்திரமின்றி, இறக்காமம் பிரதேச மாயக்கல்லி மலையில் புத்தர் சிலையை நிறுவி விகாரை அமைக்கும் விவகாரம் தொடர்பிலும் அம்பாறை மாவட்டம் சர்ச்சைக்குள்ளாகியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.
சம்பந்தன் தனது மே தின உரையில் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை நிலவவேண்டியதன் அவசியம் பற்றியும் வடக்குகிழக்கு மக்களுக்குள் ஒன்றுபடல் இருக்க வேண்டியமை தொடர்பிலும் குறிப்பிட்டிருந்தார்.

### மறுபுறம் தமிழரசுக்கட்சி

தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நீண்ட காலத்துக்குப் பின்னர் கிழக்கில், மட்டக்களப்பிலே கூட்டப்பட்டிருக்கின்றது. கடந்த 29ஆம் திகதி ஊறணியில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் புதிய அரசியலமைப்பு. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் நிலமீட்பு தொடர்பில் அரசுடன் நேரடிப் பேசசுவாரத்தைகளில் ஈடுபடுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறித்த செயற்குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் கிழக்கிலங்கை முக்கியஸ்தர்களான கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.
இதனை தொடர்ந்து, தந்தை செல்வாவின் 40ஆம் ஆண்டு நினைவுதினம் கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது.
தமிழரசுக்கட்சியின் பட்டிருப்புக் கிளையின் ஏற்பாட்டில் களுதாவளை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற வைபவத்தில் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

### கிழக்கிலும் கடையடைப்பு!

தீர்வில்லாமல் தொடர்ந்துகொண்டிருக்கும் காணாமலாக்கப்பட்டோர், அரசியல் கைதிகளின் உறவினர்களின் அறப்போராட்டங்களை முன்வைத்து தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய முழு அடைப்புப் போராட்டம் கிழக்கின் பல பிரதேசங்களிலும் முடக்க நிலையை ஏற்படுத்தியிருந்தது. முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தபோதும் சில இடங்களில் தகுந்த வகையில் தகவல்கள் மக்களைச் சென்றடைந்திருக்கவில்லை என்பதால் சில இடங்களில் இயல்பு நிலைமை உண்மையே.

### தமிழ் மக்கள் பேரவையும் கிழக்கில் கவனம்!

தனது முதலாவது எழுக தமிழ்ப் பேரணியை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்த தமிழ் மக்கள் பேரவை. தனது இரண்டாவது பேரணியை கிழக்கிற்கு நகர்த்தியிருந்தது. மட்டக்களப்பு- நாவற்குடா விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பேரணியும் வடக்கு - கிழக்கு இணைப்பிற்கான கிழக்கிற்குரிய அழைப்பாகவே அமைந்திருந்தது.
வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்தி அதற்காகக் கிழக்கை நோக்கிக் கவனம் திருப்பப்பட்டு வருகின்றது. நேரடி மற்றும் மறைமுக வழிகளில் அதற்கான நடவடிக்கைகள் உசுப்பி விடப்பட்டுள்ளன.
ஜே.வி.பி. தனது மே தினப் பேரணியை வடக்கை நோக்கி நகர்த்தியிருக்க, வடக்கிலே பலம் வாய்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது பேரணியை கிழக்கை நோக்கி நகர்த்தியிருக்கின்றது. கிழக்கு நோக்கிய முன்னகர்வு, வெறுமனே கூட்டங்களுக்கான ஆட்சேர்ப்பு முயற்சிகளுக்கப்பால் வடக்கு-கிழக்கு இணைப்புக்கான தடத்துக்கு வலுச்சேர்க்குமானால், தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒருமித்த தேசமாக வடக்குக் கிழக்கு உருவெடுக்கும் என்பதில் நாம் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் இராணுவ மேலாதிக்கம்

சந்திரசேகர ஆசாத்

ஒரு நாட்டின் ஆட்சிக்கு அரசியலும் இராணுவமும் முக்கியமானவை. எனினும் இதில் எது தலைமைப் பாத்திரம் வகிக்கின்றது என்பதைப் பொறுத்தே அந்த நாட்டின் மக்கள் நலன்கள் நிர்ணயிக்கப்படும். அரசியல் இராணுவத்துக்குத் தலைமை தாங்கும்போது அந்த நாடு ஜனநாயகப் பாரம்பரியங்களைப் பாதுகாத்து முன்னேறுகின்றது. அதேவேளை இராணுவம் அரசியலுக்குத் தலைமை தாங்கும் போது மக்களின் நலன்கள் உதாசினம் செய்யப்பட்டு இராணுவத்தின் நலன்கள் மேலோங்கி நாடு ஒரு சர்வாதிகாரப் போக்குக்குள் புதைந்துபோகும் ஆபத்து ஏற்படுகின்றது. இது ஜனநாயகத் தத்துவ மேதைகளால் வலியுறுத்தப்படும் கருத்தாகும்.

## எடுத்துக்காட்டுக்குப் பாகிஸ்தான்

ஒரு நாடு இராணுவ மேலாதிக்கத்துக்குள் கொண்டு வரப்பட்டு, அதன் ஆட்சி ஒரு குறிப்பிட்ட காலம் நிலைபெற்றுவிட்டால், பின்பு அந்த நாடு ஜனநாயக அரசியலுக்குள் திரும்பினாலும்கூட இராணுவத்தின் பிடியிலிருந்து இலகுவில் விடுபட முடியாது.

இந்த விடயத்தில் பாகிஸ்தான் ஒரு கவனிக்கத்தக்க உதாரணமாகும். அந்த நாடு நீண்ட காலமாக இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது. பின்பு தேர்தல் மூலம் ஜனாப அலிகார் பூட்டோ பிரதமரானார். எனினும் சிறிது காலத்தின் பின்பு அவரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு அவர் தூக்கிலிடப்பட்டார். பின்னர் அங்கு இராணுவ ஆட்சி தொடர்ந்தது. அதன்பின் சிறிது காலத்தில் பிரதமராக நாவாஸ் செரிப் பதவியேற்றார். பின்னர் அவரது ஆட்சியும் கவிழ்க்கப்பட அவர் வெளிநாடு ஒன்றில் தஞ்சமடைந்தார். பின்பு கடைசியாக இடம்பெற்ற தேர்தலில் நாவாஸ் செரிப் மீண்டும் பிரதமராகியுள்ளார். ஆனால் அவர் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே செயற்பட வேண்டியுள்ளது.

காரணம் பாகிஸ்தான் இராணுவம் ஆயுத பலத்தை மட்டுமன்றி நாட்டின் பொருளாதார பலத்தையும் தனது கைக்குள் வைத்திருக்கின்றது. ஆயுத உற்பத்தி, மின்சார உற்பத்தி, போக்குவரத்துச் சாதனங்கள் உற்பத்தி என்பன இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அதாவது அங்கு இராணுவம் நாட்டின் இயங்கு சத்தியைத் தனது கையிலேயே வைத்துள்ளது. எந்த ஜன்நாயகவாதி ஆட்சிக்கு வந்தாலும் இராணுவம் கீறும் கோட்டுக்கு வெளியே அவரால் செல்ல முடியாது. அப்படி யாராவது இராணுவத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர முயன்றால், அலிகார் பூட்டோவுக்கும், பெனாசீர் பூட்டோவுக்கும் நடந்த கதியே அவர்களுக்கும் ஏற்படும் என்பதை எல்லோருமே அறிவர்.

## இராணுவத்துடன் பயணித்த மகிந்த ஆட்சி

இலங்கையில் மகிந்த ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தானைப் போன்ற நிலவரம் போரைக் காரணம் காட்டி உருவாகியது. ஆனால், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச இராணுவத்தின் இரண்டாம் நிலைத் தளபதிகளைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். அவர்களுக்கு இராணுவத் தளபதிகள் மூலம் கட்டளை வழங்குவதே வழிமுறையாக இருந்தபோதும், அவர் அதை மீறி நேரடியாக அவர்களுக்குக் கட்டளைகளை வழங்கித் தனது கட்டுப்பாட்டுக்குள் அவர்களை வைத்திருந்தார். அதன் காரணமாக மகிந்த ஆட்சியும், இராணுவமும் ஒரே பாதையில் பயணித்தன. அவர்களுடன் முரண்பட்ட இராணுவத் தளபதி சரத்பென்சேக சிறை வைக்கப்பபட்டார்.

அன்று இராணுவத்துக்கு இருந்த மேலாதிக்க நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அரசியல் இராணுவத்துக்குத் தலைமை தாங்கும் நிலையில் மாற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. ஆனால் இன்றும் இராணுவத்துக்குள் மகிந்த, கோத்தபாய குழுவினருக்கு ஒரு பலம் உண்டு என்பது சகலரும் அறிந்த உண்மை.

அந்தப் பலத்தை உடைத்துத் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் முப்படையியையும் கொண்டு வரும் நடவடிக்கைகளை இந்த அரசு இன்றுவரைக்கும் ஏன் எடுக்கவில்லை? என்பதே இங்குள்ள கேள்வியாகும். அத்துடன் சிவில் விவகாரங்களில் மேலாண்மை செலுத்த இராணுவத்தினருக்கு வாய்ப்பு வழங்கப்படுவது பல சந்தேகங்களை எழுப்புகின்றது.



## இராணுவாத்தின் வேலைகள் இவையல்லவே!

இலங்கையில் இன்றைய இராணுவ ஆதிக்கம் தொடர்பாக இரண்டு விடயங்களைச் சுட்டலாம்.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு இலங்கையின் சார்பில் முன்னாள் கடற்படைத் தளபதி வைஸி அட்மிறல் சாரத் வீரசேகர பிரசன்னமாகி அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணி விடுவிப்பு சம்பந்தமாக இராணுவத்தினர் ஐக்கியநாடுகள் பிரதிநிதிகளைச் சந்தித்து விளக்கமளித்துள்ளனர்.

முன்னாள் கடற்படைத் தளபதி போர்க்குற்றங்கள், ஆள்கடத்தல்களுடன் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்டவர். இவர் தளபதியாகவிருந்த காலத்திலே கொழும்பில் இளைஞர்கள் கடத்தப்பட்டு திருமலை கடற்படை இரகசிய முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டதாக வழக்கு நடைபெற்று வருகின்றது. இவர் கோத்தபாய ராஜபக்சவின் விசுவாசி என்பதும் அனைவரும் அறிந்த விடயம். அப்படியான ஒருவர் இலங்கை சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு எப்படி அனுப்பப்பட்டார்?

இவர் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்தவரா? அல்லது மனித உரிமை அமைப்புப்போன்ற தொண்டு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவரா? ஒரு முன்னாள் படைத்தளபதி என்ன அடிப்படையில் அனுப்பப்பட்டார்? இலங்கையில் படையினருக்கு அரசியலில் தலையிடும் அதிகாரம் உண்டு என்பதைப் பன்னாட்டுக்கு உணர்த்துவதற்காகவா இவர் அனுப்பப்பட்டார்?

காணி விடுவிப்புத் தொடர்பாக இராணுவத்தரப்பினர் என்ன உரிமையில் ஐ.நா.பிரதிநிதிகளுக்கு விளக்கம் கொடுத்தனர் இவற்றை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

## அரசும் ஐ.நாவும் எதிர்க்கட்சியும் ஏற்றுக் கொண்ட இராணுவ மேலாதிக்கம்

இராணுவம் வசமுள்ள தனியார் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியது அரசு. இது தொடர்பாக விளக்கமளிக்க வேண்டியதும் அரசே. இராணுவம் தனது பிரச்சினைகளை அரசுக்குத் தெரியப்படுத்த அரசே ஐ.நாவிடத்தில் அதை முன்வைக்க வேண்டும். மாறாக இராணுவம் நேரடியாகப் பன்னாட்டுக்குத் தெரிவிப்பதனால் இங்கு இராணுவ அதிகாரம் மேலோங்கி விட்டது என்பதே அர்த்தமாகும். ஐ.நா, அரசிடம் விளக்கம் கேட்பதற்குப் பதிலாகக் குற்றவாளிக்கூண்டுக்குள் இருக்கும் படைத்தரப்பிடம் விளக்கம் கேட்பது எந்த வகையில் பொருத்தமானது? இராணுவத்தை விளக்கமளிக்க அரசு அனுமதித்ததன் மூலம் இராணுவ மேலாண்மையை அது ஏற்றுக் கொண்டுள்ளது. அது மட்டுமன்றி காணி விடுவிப்புத் தொடர்பாகத் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் அரச தலைவருடன் பேசியபோது அவர் பாதுகாப்புத் தரப்பினருடன் பேசும்படி ஆலோசனை வழங்கினார். அதன் அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஒவ்வொரு முகம்களாகப் போய் அங்குள்ள கட்டளைத் தளபதிகளுடன் காணி விடுவிப்புப் பற்றிப் பேசி வருகின்றனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர், எதிர்க்கட்சித்தலைவர் என்ற வகையில் பாதுகாப்புச் செயலரையோ, தளபதிகளையோ அழைத்து அவர்களின் பிரச்சினையைக் கேட்டறிந்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவது ஜனநாயக நடைமுறை. எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாதுகாப்புச் செயலர் மூலம் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க அதிகாரம் உண்டு.

ஆனால் படையினரின் முகாம்களுக்குச் சென்று பேச்சுக்களை நடத்துவதென்பது எதிர்க்கட்சித் தலைவரும் இங்குள்ள இராணுவ மேலாண்மை ஏற்றுக் கொள்கின்றார் என்பதை வெளிப்படுத்தும். இதன் அர்த்தம் அரசு மட்டுமன்றி எதிர்க்கட்சியும் இராணுவ மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது தான்.

## தமிழர் பகுதிகளில் இராணுவத்தின் செல்வாக்கு

கடந்த ஆட்சிக் காலத்தில் அதீத இராணுவத் தலையீடுகள் இருந்ததை நாமறிவோம். பாடசாலை விழாக்கள் உட்படச் சகல நடவடிக்கைகளிலும் இராணுவத்தினர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பொலிஸாரதோ, அரச அதிபரதோ, உபவேந்தரதோ அனுமதியின்றிப் பல்கலைக்கழகத்துக்குள் புகுந்து மாணவர்களைக் கைது செய்யும் நிலையும் காணப்பட்டது. மீள்குடியேற்றம் என்ற பெயரில் வீடுகளை அமைத்து மக்களைக் குடியேற்றி அவர்களைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிலையும் நிலவியது. பாடசாலைக்குக் கட்டடங்கள் அமைத்துக் கொடுப்பது போன்ற அரசு செய்ய வேண்டிய பணிகளைப் படையினர் மேற்கொண்டனர். ஆக, வடக்குக் கிழக்கில் இராணுவ ஆட்சியே நிலவியது. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளிலும் இராணுவத்தினர் நேரடியாகவே ஈடுபட்டனர்.

தொடர்ச்சியான மக்களின் எதிர்ப்புக் காரணமாகவும், பன்னாட்டு அழுத்தங்கள் காரணமாகவும், ஊடகங்களின் கண்டனங்கள் காரணமாகவும் தற்சமயம் இந்த நடவடிக்கைகள் பலவீனமடைந்தாலும்கூட அவை அறவே இல்லாமல்போய் விட்டதாகக் கூற முடியாது. கடந்த வருடம் கூட காங்கேசன் துறையில் நல்லிணக்கபுரம் என்ற பேரில் ஒரு வீட்டுத்திட்டம் பொருத்தமற்ற இடத்தில் படையினரால் அமைக்கப்பட்டு அங்கு நிவாரண முகாம்களில் தங்கியிருந்த மக்கள் குடியேற்றப்பட்டிருந்தனர்.

அது மட்டுமன்றி விவசாயப் பண்ணைகள், சுற்றுலா விடுதிகள் என்பவற்றை மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் அமைத்து தமக்கென வருமானம் தேடும் வழிகளிலும் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வாறே கடற்படையினர் மீன்பிடித்துறைகளைக் கைப்பற்றி மீன்படியில் ஈடுபடுகின்றனர். கிளிநொச்சியில் பெரும் விவசாயப் பண்ணைகளை நடத்துவதுடன், சிறுவர்களுக்கான முன் பள்ளிகளையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

அதாவது பாதுகாப்புப் படைகள் பொருளாதாரம் சிவில் நிர்வாகம் போன்ற துறைகளில் ஈடுபட்டுத் தமது நிலையைப் பலப்படுத்தி வருகின்றன. எவ்வாறு பாகிஸ்தானில் இராணுவம் ஆயுத வலுவில் மட்மன்றி பொருளாதாரத்திலும் பலம்பெற்று யார் ஆட்சிக்கு வந்தாலும் தனது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்துள்ளதோ அப்படியான ஒரு நிலைமையை நோக்கியே இலங்கையும் நகர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமறிந்தால் சுகமாகும் வாழ்வு

அ. அஜந்தன்

நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களைவிட உடலாலும் உள்ளத்தாலும் வேறுபட்டவர்கள். இதனூடாக நீங்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதை உணர முடியும். இதனால் நீங்கள் மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டுப் பார்த்து உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள். அவ்வாறு தனித்துவமான உங்களுக்குள் தனித்துவமான தேவைகளும் மகிழ்வூட்டும் காரணிகளும் உள்ளன. ஒருபோதும் மற்றவர்களின் மகிழ்ச்சிக்கான காரணிகளே உங்களையும் மகிழ்ச்சிப்படுத்தும் என்று எண்ணிவிடக்கூடாது. பிறரின் மகிழ்ச்சிக்கான காரணிகளில் சில எமக்கும் மகிழ்வைத் தரலாம். ஆனால் அது உங்களை உள்ளார்ந்தமான மகிழ்ச்சிக்குள் இட்டுச்செல்கின்றதா என்பதை ஆராயவேண்டும். உண்மையாகவே உங்களை மகிழ்விக்கக்கூடிய காரணிகள் பல தனிப்பட்டவையாகவே இருக்கும் அவை எவையென்று கண்டறிதல் அவசியம்.

பலர் தம்மை மற்றவர்கள் செதுக்குவார்கள் என்று அவர்களுக்காகக் காத்திருந்து காலத்தைக் கழிக்கின்றனர். உங்களைச் செதுக்குகின்ற பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் உங்களை அழகாகச் செதுக்குவது உங்களை விட வேறு யாராலும் முடியாது. உங்கள் அனுபவங்களை அடித்தளமாக்குங்கள். திறன்களால் திட்டமிடுங்கள். தோல்விகளை உளியாக்குங்கள். சந்தித்த துரோகங்களைச் சுத்தியலாக்குகள். ஏமாற்றங்களை ஏணியாக்குங்கள். துன்பங் களை தூரிகையாக்குங்கள். வலிகளை வர்ணங்களாக்குங்கள் அப்பொழுதுதான் உங்களை நீங்கள் செதுக்கியிருப்பீர்கள்.

நீங்கள் செலவிடும் ஒவ்வொரு மணித்துளியும் பெறுமதிமிக்கது, மீளப்பெறமுடியாதது. அதனை முடிந்தவரை வினைத்திறனாகப் பயன்படுத்துவது அவசியம். கீழுள்ள 5 விடயங்களை அறிந்து வைத்திருப்பீர்களானால் உங்களை நீங்களே அறிந்துகொள்ள முடியும்.

### 1. உங்கள் குழந்தைப் பருவங்களைப் பிரதிபலித்தல்


நீங்கள் யார் என்பதையும் உங்களது நடத்தை சார்ந்த இயல்புகளையும் அறிந்துகொள்வதென்பது அவ்வளவு எளிதான ஒரு காரியமல்ல. தன்னுணர்வும் நடத்தையும் எமது ஆழ் மனப்பான்மை மற்றும் நம்பிக்கைகளின் விளைவாகும். உண்மையாகவே நீங்கள் யார் என்பதை ஆழமாகப் பார்க்கவேண்டுமாயின் உங்கள் ஆழ்மனநிலையில் உங்களைப் பற்றிய உருவகம் எப்படி உள்ளது என்பதைக் காணவேண்டும். உங்களை நீங்களே சில கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள் அதனூடாக குழந்தைப் பருவ அனுபவங்களின் பிரதிபலிப்புக்களை உங்களால் பகுத்தறியமுடியும்.

- சிறுவயதில் ஒரு குழந்தையாக நான் கவனிக்கப்பட்டேனா? அல்லது புறக்கணிப்புக்கும் விமர்சனத்துக்கும் ஆளானேனா ?
- நான்மரியாதையாகநடத்தப்பட்டேனா? அல்லது புறக்கணிக்கப்பட்டேனா? அல்லது கிண்டல் செய்யப்பட்டேனா ?
- சரியான கவனமும் அன்பும் கிடைத்ததா? அல்லது அவை புறக்கணிக்கப்பட்டனவா ?
- நான் உடல்ரீதியாக, வாய்வழியாக அல்லது பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டேனா ?
- எனது சாதனைகள் அங்கீகரிக்கப்பட்டனவா ?
- எனது குறைகள், தோல்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவா? அல்லது நான் சிதைக்கப்பட்டேனா ?

### 2. உங்கள் மனநிலையைக் கவனித்தல்

ஒரு நாள் முழுவதும் உங்களுடன் ஒரு குறிப்பேட்டை அல்லது தாளை வைத்துக்கொள்ளுங்கள். மனநிலையில் மாற்றம் நிகழ்வதை உணரும்பொழுது அதைப் பதிவுசெய்து கொள்ளுங்கள். உங்கள் உள்ளார்ந்த குரல் உங்களிடம் தொடர்புகொள்வதைக் கண்டறிவதில் இது முதல் படிமுறை. உங்கள் செவிகளில் உள்வாங்கிக்கொள்ளும் குரல் உள்ளார்ந்த குரலல்ல. மாறாக உள்ளார்ந்த குரல் என்பது உங்களால் அனுபவிக்கப்படும் எண்ணங்களின் தொகுப்பே ஆகும். இந்த எண்ணங்கள் ஆழ்மனதில் ஆழமாக உட்பொதிந்துள்ளன. இந்த எண்ணங்கள் செயற்படும்போது நீங்கள் அவற்றை நேரடியாக அடையாளம் காண்பது கடினம் ஆனால் உங்கள் மன நிலையால் மாற்றத்தை உணரமுடியும். உங்கள் உள்ளார்ந்த குரல் உறுதியானதாகவோ அல்லது சுயதோற்றமுள்ளதாகவோ தோற்றமளிக்கும். சிறந்த சுயமதிப்புடையவர்களால் உள்ளார்ந்த குரலை ஏற்றுக்கொள்வதோடு உறுதிப்படுத்தவும் முடிகின்றது. ஆனால் தாழ் சுயமதிப்பு உடையவர்கள் கடுமையான மற்றும் சிக்கலான உள்ளார்ந்த குரலையே அனுபவிக்க முடியும். அனுபவத்தைப் பதிவுசெய்தல் என்பது சிலருக்குக் கடினமானதாக இருக்கும். குறிப்பாக உங்களால் சரியாக கையாளப்படாத கடந்தகால துயரச்சம்ப வங்களை எழுதுதல். இவ்வாறான நிலையில் நாளாந்தம் நீங்கள் கையாளச் சிரமப்படும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துவதோடு உதவியை நாடுவதும் அவசியமாகின்றது.

> உங்கள் மனங்களில் எழும் எண்ணங்களை பதிவுசெய்துகொண்ட பிறகு ஒரு சிந்தனை வடிவம் வெளிப்படுவதைக் காணலாம். உங்கள் எண்ணங்களுக்குள் உள்ள அடிப்படைச் சிந்தனைகள் எவை? என்ற கேள்வியை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.



### 3. உங்கள் சிந்தனைகளை எழுதுதல்

உங்கள் மனநிலையை மாற்றுவதற்கு முன் உணரப்படும் எண்ணங்கள் உங்கள் உள்ளார்ந்த குரலின் சிறந்த பிரதிபலிப்பாகும். அந்த எண்ணங்களே தன்னியக்க எண்ணங்கள் எனப்படுகின்றன. நீங்கள் உங்களையும், மற்றவர்களையும், உலகையும் எப்படிப் பார்க்கின்றீர்கள் என்பதும் இந்த தன்னியக்க எண்ணங்களில் செல்வாக்குச் செலுத்தும். இந்தத் தன்னியக்க எண்ணங்கள் ஆழ் மனதிலிருந்து உருவாகின்றன அதனால் அவற்றைச் சுட்டிக்காட்டுவது இலகுவானதன்று. இதற்குச் சில கேள்விகளை நீங்களே உங்களிடம் கேட்டுப் பதிலை எழுதிக்கொள்ளலாம்.

உதாரணமாக: அலுவலகத்தில் சகபணியாளர் நடந்துகொண்டவிதம் உங்களைக் கோபப்படுத்தியிருந்தால் பலமுறை உங்களைக் கேட்டுக்கொள்ளுங்கள் "நான் என்ன செய்தேன்?" "எனக்குள் என்ன எண்ண மாற்றங்கள் நிகழ்ந்தன?". இறுதியாக 'அதற்கு மேல் என்ன?' என்ற கேள்வி சில சமயங்களில் இவ்வாறான பிறிதொரு சம்பவத்தை எப்படிக் கையாள்வதென்பதற்கான பதிலைத் தரும்.

### 4. உங்கள் சிந்தனை வடிவங்களை மதிப்பிடல்

உங்கள் மனங்களில் எழும் எண்ணங்களை பதிவுசெய்துகொண்ட பிறகு ஒரு சிந்தனை வடிவம் வெளிப்படுவதைக் காணலாம். உங்கள் எண்ணங்களுக்குள் உள்ள அடிப்படைச் சிந்தனைகள் எவை? என்ற கேள்வியை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அவற்றுள் ஆரோக்கியமானதும், நேர்த்தியானதுமா அல்லது எதிர்மறையானதும் சுயமிஎக்கச் செய்யக்கூடியதுமாக உள்ளதா ? என்பதையும் கவனியுங்கள் எதிர்மறையான எண்ணங்களில் வெளிப்படும் பொதுவான சிந்தனைகளின் வடிவங்கள்

- நீங்கள் தோற்றுவீர்கள் என்றோ அல்லது உங்கள் அலுவலகத்தில் ஒரு சிறு தவறைச் செய்தால் நான் வேலையில் தோற்றுவிடுகிறேனோ என்று எண்ணிவிடுதல்.
- நீங்கள்செய்யும் சிறு தவறை மையப்படுத்திச் சிலரால் நீங்கள் செய்த நல்ல காரியங்கள் புறக்கணிக்கப்படுதல் தாழ்வாகச் சிந்திக்கத் தோன்றும்.
- உண்மை நிலையை அறியாமல் சில சமயம் தவறான முடிவுகளை எடுத்துக்கொள்ளுதல்
- நீங்கள் மற்றவர்களால் சற்று வேறுபட்ட விதத்தில் நடத்தப்பட்டிருந்தால் "நான் தவறானவன்" என்று
- சிந்திக்கத் தொடங்கிவிடுவீர்கள்.

இது போன்ற எதிர்மறையான சிந்தனை வடிவங்களை நீங்கள் மதிப்பிட்டுத் திருத்திக் கொள்ள முடியும்.

### 5. உங்களது சுயமரியாதையைப் பரீட்சித்துப் பார்த்தல்

ஒருவர் உங்களை பயனுள்ளவர் அல்லது தகுதியுடையவர் என்று நம்பினால் அது உங்கள் ஆரோக்கியமான உயர் சுயமரியாதை. மாறாக, தாழ் சுயமரியாதையுடையவர்கள் தன்னைப் பற்றி தாழ்வான அல்லது மோசமான எண்ணங்களைக் கொண்டிருப்பதோடு மற்றவர்களின் அங்கீகாரத்தையும் எதிர்பார்த்த வண்ணம் இருப்பர். இவ்வாறர்ன எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்குள் இருந்தால் அவற்றில் அக்கறை காட்டுவது நன்று. ஏனெனில் தாழ் சுயமரியாதை எதிர்மறையான விளைவுகளைக் கொடுக்கும்.

இவற்றை உங்களை நீங்களே பரீட்சித்துத் தெரிந்துகொள்ள முடியும். எண்ணங்களதும் சிந்தனைகளதும் தாக்கம் உங்கள் சுயமரியாதையில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தகின்றது என்பதையும் அறிய முடியும். தன்னம்பிக்கையுடன் வாழ்ந்தால் உங்களைவிட உங்களை யாரும் நம்பிவிட முடியாது. வாழ்விலும் வாழ்வின் ஒவ்வொரு தருணங்களிலும் நீங்கள் நம்பிக்கையோடு நடைபோடுவது வெற்றிக்கு வழிசமைக்கும். நீங்கள் முழுமையை மட்டுமல்ல குறைகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலையை அடைந்திருக்கவேண் டும்.


குறைகளிலிருந்துநிறைவு காண்பதற்கான சிந்தனைகளும் எண்ணங்களும் உங்களுக்கு ஏற்படவேண்டும்.

நம்மில் பலர் இன்னமும் வாழ்வை ஒரு ஓட்டப்பந்தயமாக எண்ணி எம்மை முந்துபவர்களை முந்துவதற்கு முனைந்து வாழ்வைக் கடினமானதாக ஆக்கிக்கொள்கின்றனர். மற்றவர்களை வெல்வது எமது வெற்றியல்ல. மாறாக எமது கனவை அடைவதே எமது வெற்றி. வாழ்வை ஒரு சுற்றுலாப் பயணாக மாற்றியமைத்து ஒவ்வொரு தருணங்களையும் மகிழ்வாகக் கழித்தால் எமக்குள் எல்லாம் நேர்த்தியானவையாக மாறும். சுயமறிதல் என்பது நமக்குள் நாம் பயணிக்கும் ஒரு உல்லாசச் சுற்றுலா அதனை மகிழ்வுடன் செய்யுங்கள். வாழ்வு சுகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உண்மையைச் சொல்ல அனைவராலும் முடியும். ஆனால் அதனால் ஏற்படும் இழப்புகளைத் தாங்கிக் கொள்ள முடியாது என்பதால் தான் பொய் வாழ்கிறது!!



# பெண்களுக்கு பயிற்சி கொடுக்கும் பிபாஷா!

பெண்கள்தங்களைப்பாதுகாத்துக்கொள்வதற்காக கிக்பாக்ஸிங் பயிற்சியைக் கற்றுக் கொடுக்கிறார் நடிகை பிபாஷா.

பொலிவூட்டின் பிரபலமான நடிகை பிபாஷா பாசு. இவர் கடந்தாண்டு கரண் சிங் குரோவரைத் திருமணம் செய்து கொண்டார். சமீபகாலமாக பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் கண்டு வேதனையடைந்தார். பெண்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளும் வகையில் தற்காப்புக்கலையைப்பயில்வதற்கு புதிய பயிற்சி மையம் தொடங்கவுள்ளார் பிபாஷா. இதன் முதற்கட்டமாக டில்லி, மும்பை மற்றும் கல்கத்தாவில் பயிற்சி மையம் அமைக்கவுள்ளார். இதில் பெண்களுக்கான கிக்பாக்ஸிங் உள்ளிட்ட பல தற்காப்புப் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. சுமார்13வயது முதல்30வயது வரை உள்ள பெண்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபடலாம். இதற்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்து இன்னும் நிறைய இடங்களில் பயிற்சி மையம் அமைக்க முடிவு செய்துள்ளார் பிபாஷா. இவர்மட்டுமல்லாமல்இதற்குமுன்னதாக பொலிவூட் நடிகர்அக்ஷய்குமாரும்பெண்களுக்குதற்காப்புக்கலையின்முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு மும்பை மற்றும் டில்லியில் தற்காப்புக் கலை பயின்றவர்களோடு இணைந்துபெண்களுக்குப்பயிற்சியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 3 | | 5 | | | | |
| 5 | | | | | | 8 | 7 | |
| | 6 | | | 7 | | | | 5 |
| | | 4 | 1 | | | | | 7 |
| | 5 | | 9 | 4 | 6 | | 1 | |
| 3 | | | | | 7 | 6 | | |
| 2 | | | | 8 | | | 4 | |
| | | 5 | | | | | | |
| | | | | 9 | | | 8 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | [illegible] | 7 | 9 |
| 9 | 5 | 2 | 1 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 2 | 9 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 5 | 7 | [illegible] | 8 | 3 |
| 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 5 | 4 | 8 | [illegible] | 1 | 7 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் [illegible]ன் அடிப்படை. 1–9 வரையான எண் க[illegible] ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். [illegible]ந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3[illegible] ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கி[illegible] [உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுர[illegible]கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலு[illegible] 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நி[illegible]ப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் [illegible]வ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்[illegible]ற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நி[illegible] வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். [illegible] பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவ[illegible]ான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக[illegible] பரவலாக்கியது. 2005இல் இது உலக அ[illegible]ல் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினர்ஒத்துழைப்பர். அத்தியாவசிய செலவுக்குக் கடன் வாங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** வாழ்வில் புதிய அனுபவத்தைப் பெறுவீர்கள். எதிரியின்தொல்லைமறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்கால வளர்ச்சி குறித்துத் திட்டமிடுவீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** யாரிடமும்சொந்தவிடயம்பேசுவது கூடாது. தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**கடகம்:** புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்குஅதிகாரிகள் ஆதரவுகிடைக்கும். குடும்பத்தில்சுபநிகழ்ச்சி நடத்தத்திட்டமிடுவீர்கள்.

**சிங்கம்:** மனதில்மகிழ்ச்சிநிறைந்திருக்கும். பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்குத் திட்டமிட்டபடி நிறைவேறும். ஆடம்பரப் பொருள் வாங்குவீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத வகையில் வருமானம் அதிகரிக்கும். தொழில், வியாபார ரீதியாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். உணவு விடயத்தில் கட்டுப்பாடு தேவை. மனைவியின்செயல்பாடுமகிழ்ச்சிஅளிக்கும்.

**துலாம்:** நேர்மையான எண்ணத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. சீரான ஓய்வு உடல்நலம்பெறஉதவும்.

**விருச்சிகம்:** பொது விடயங்களில் அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். விழா, விருந்து என, சென்று மகிழ்வீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**தனுசு:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில்நல்லமுன்னேற்றம்ஏற்படும். பணவரவுகூடும். பிள்ளைகள்விரும்பியதை வாங்கித்தருவீர்கள்.

**மகரம்:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில்புதிய உத்தி மூலம் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர்வருகையால்செலவுஉண்டாகும். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

**கும்பம்:** எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். சொத்து, முக்கிய ஆவணம் பிறர் பொறுப்பில் தரக் கூடாது. பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

**மீனம்:** நண்பர்களின் உதவியால் மனம் நெகிழ்வீர்கள். அன்றாடப்பணிகளில்ஆர்வம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில்லாபம் பெருகும். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேர்க்கை உண்டாகும்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்களுக்கான அலங்கார வகைகளில் தற்போது நவீன வடிவில் மோதிரங்கள் வந்துள்ளன. கொண்டாட்டங்களுக்கு இதனை அணிந்து செல்லும்போது பார்ப்பதற்கு மிக எடுப்பாக இருக்கும். இவை 250 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

இது புதுசு

# தூங்கச் செல்லும் முன்பு சருமத்தை பராமரிப்பது எப்படி



தூங்கசெல்வதற்குமுன்பாகசருமத்தைபராமரிக்கப்போதியகவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் பகல்பொழுதில் சரும ஆரோக்கியத்தை பேணுவது பயனற்றதாகி போய்விடும்.

சருமத்தை பராமரிப்பதற்கு பகல் பொழுதில் காண்பிக்கும் அக்கறையைபெரும்பாலானோர் இரவுபொழுதில் கடைப்பிடிப்பதில்லை. தூங்கசெல்வதற்குமுன்பாகசருமத்தைபராமரிக்கபோதியகவனம் செலுத்தவேண்டும். இல்லாவிட்டால் பகல் பொழுதில் சரும ஆரோக்கியத்தை பேணுவது பயனற்றதாகி போய்விடும்.

* இரவில் தூங்க செல்லும் முன்பாக முகத்தைநன்றாககழுவவேண்டும். ஆர்வக்கோளாறில் முகத்தை அதிகமாக அழுத்தி தேய்த்து கழுவக்கூடாது. அப்படிதேய்த்தால்முகத்திலுள்ள எண்ணெய் பசைத்தன்மை வெளியேறிவிடும். வெதுவெதுப்பானநீரில் முகத்தை கழுவுவது நல்லது. அது சருமத்தில் உள்ள துவாரங்கள் திறக்கவழிவகுப்பதுடன்அதிலிருக்கும்அழுக்குகளையும்வெளியேற்றும்.

* மேக்கப் போட்டிருந்தால் முதலில் எண்ணெய் தன்மை கொண்ட கிளிசனரை பயன்படுத்தி மேக்கப்பை நன்கு நீக்க வேண்டும். அதன் பின்னர் தண்ணீரால் முகத்தை கழுவ வேண்டும்.

*வாரம்இருமுறைமுகத்திற்குநீராவிபிடிப்பதுநல்லது. அதுமுகத்தில் படிந்திருக்கும் அழுக்கு, தூசுகளை நீக்கும்.

* ஈரமான தலையுடன் தூங்க செல்வதை தவிர்க்க வேண்டும். இல்லையென்றால்தலைமுடிபிசுபிசுப்புதன்மையுடன்மாறி. மயிர்கால்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

* தலைமுடியை இறுக்கமாக கட்டிக் கொண்டு தூங்க செல்வதை தவிர்க்க வேண்டும். அதிலும் நீளமாக கூந்தல் உடையவர்கள் தலை முடியை தளர்த்தி கட்டிக்கொள்வது நல்லது.

* தினமும் ஆறு முதல் எட்டு மணி நேரமாவது தூங்க வேண்டும். அது உடலுக்கு மட்டுமல்ல முகத்திற்கும் நல்லது. கண்களுக்கு அடியில் கருவளையம் ஏற்படுவதை தவிர்க்கும். முகம் சோர்வடைவதும் தடுக்கப்படும்.

## நாளை

**சித்திரை-25**
திங்கட்கிழமை -08.05.2017
திதி: திரயோதசி பி.இ.12.20
நட்சத்திரம்: அத்தம் மு.ப.11.04
சுபநேரம்:11.55-01.25 வரை
ராகுகாலம்:07.25-08.55 வரை
பிரதோஷ விரதம்

# மூட்டுகளில் ஏற்படும் வலி நீங்க....

**எப்படிச் செய்வது?**

**வலது கை:**
பெருவிரல் நுனியுடன் மோதிர விரல் நுனியை சேர்த்துவைக்கவேண்டும். மற்றமூன்றுவிரல்கள் நீட்டி இருக்க வேண்டும்.

**இடது கை:**
பெருவிரல் நுனியுடன் நடுவிரல் நுனியை சேர்த்துவைக்கவேண்டும். மற்றமூன்றுவிரல்கள் நீட்டி இருக்க வேண்டும்.

**பலன்கள்:**
முழங்கால் மூட்டு வலி, இடுப்பு வலி, மணிக்கட்டு மற்றும் சிறுமூட்டுகளில் ஏற்படும் வலி, வீக்கங்களைக் குறைக்கும்.

மூட்டுகளில்தேங்கும்வாயுவேவலிவரக்காரணம். அதிகப்படியான வாயுவைக் குறைத்து, வலியைக் குறைக்கும்.

வயோதிபத்தால் மூட்டுகளில் உள்ள ஈரப்பசை குறைவதால் வறட்சி ஏற்பட்டு, நடக்கும்போதும், காலை நீட்டி மடக்கும்போதும் சத்தம் கேட்கும். இதற்கு சந்தி முத்திரை செய்தால், மூட்டுகளில் ஈரப்பசை உருவாகி, மூட்டுக்கள் ஒன்றோடு ஒன்று உரசாமல் தடுக்கும்.

அதிக தூரம் நடப்பவர்கள், மலையேறுபவர்கள், நின்றுகொண்டே வேலைபார்ப்பவர்கள் போன்றோர், சந்தி முத்திரை செய்ய உடனடியாக வலி குறையும்.

இடுப்பு எலும்புத் தேய்மானம், சவ்வு விலகல், ஈரப்பசை குறைதலுக்கு சிறந்த பலன் அளிக்கிறது.

மூட்டுகளைச் சுற்றியுள்ள தசை நார் கிழிவுகளில் ஏற்படும் பிறழ்வு, வலி, வீக்கத்துக்குத் தீர்வு கிடைக்கிறது.

முழங்கால்மூட்டுகளில்ஏற்படும்தசைநார்க்கிழிவு (Ligamenttear), மீண்டும்ஒன்றுகூடப்பலநாள்கள் ஆகும். வலியும் தீவிரமாக இருக்கும். இதற்கு சந்தி முத்திரை சிறந்த தீர்வு.

பல வருடங்களுக்கு முன் சிக்குன்குனியாவால் வந்த முடக்குவாதம் மற்றும் மூட்டுவலி, மூட்டுகள் வளைதல் போன்ற பிரச்சினை இருப்போர், தொடர்ந்துமூன்றுமாதங்கள்இந்தமுத்திரையைச் செய்துவர, பரிபூரண பயனை உணர முடியும்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | |
|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 100 |
| கத்தரி | 100 | 80 | 100 |
| கரட் | 200 | 150 | 160–320 |
| மரவள்ளி | 80 | 50 | 50–60 |
| பயிற்றை | 150 | 100 | 100–120 |
| பாகல் | 140 | 150 | 150–180 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 200 | 180 | 160 |
| பூசணி | 50 | 60 | 50 |
| தக்காளி | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 40–50 |
| கீரை | 20 | 20 | 20–30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 20–30 |
| பச்சை மிளகாய் | 160 | 100 | 100–120 |
| புடோல் | 80 | 80 | 120–160 |
| கோவா | 150 | 140 | 140–160 |
| வெண்டி | 80 | 120 | 80–100 |
| போஞ்சி | 200 | 200 | 160–180 |
| லீக்ஸ் | 120 | 100 | 80–120 |
| தேங்காய் | 65 | 70 | 60–70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100–120 |
| இராசவள்ளி | – | 180 | 180–200 |
| முருங்கைக்காய் | 140 | 200 | 160 |


## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | |
|---|---|---|
| இறால் | 700 | 1000 |
| நண்டு | 400 | 400 |
| கணவாய் | 600 | 800 |
| பாரை | 500 | 600 |
| சுறா | 500 | 800 |
| சீலா | 400 | 450 |
| விளை | 500 | 500 |
| முரல் | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 |
| கிளாக்கன் | 900 | 600 |
| ஒரா | 350 | 500 |
| திரளி | 250 | 300 |
| நகரை | 250 | 400 |
| சூடை | 100 | 200 |
| ஒட்டி | 150 | 300 |
| திருக்கை | 300 | 400 |
| மதனம் | 200 | 300 |
| கொய் | 150 | 80 |
| பாலை | 200 | 600 |
| வாழை | 200 | 400 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானத்துப் பூக்கள்

(29ஆம் பக்கத் தொடர்ச்சி)



பிறகு நானும் பட்டமளிப்பு முடித்து வெளிக்கிட்டேன். உங்கள் வீட்டுக்குச் சிறிது தூரம் தள்ளித்தான் இருக்கின்றது எங்கள் வீடு.என்பெயர் உதயா"

"ம்... ஓ... தெரியும், ஆனால் அந்த உதயா...."

"ஆமாம் நீங்கள் சிந்திப்பது சரிதான். உதயா செத்துவிட்டாள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள், செத்துப்போன அதே உதயா தான் இப்போது உங்கள் முன்னால் நிற்கின்றாள். அசல் அல்ல நகல். அதாவது பேய் என்றும், பிசாசு என்றும் ஆவி என்றும் சொல்லப்படும் அமானுஷ சக்திகளில் ஒன்று தான் நான்.

அன்று பயங்கரப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாலாபக்கமும் குண்டு மாரி பொழிந்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ வந்த எறிகணை ஒன்று பலரைச் சிதறடித்தது. அதில் என் பெற்றோர்களும் சங்கமமாகிவிட்டனர். மீதியாக இருந்த எல்லோரும் எழுந்து ஓடினார்கள். நானும் ஓடினேன். அதன்பின் என்ன..., எத்தனையோ தடைமுகாம்களைத் தாண்டிப் பல மாதங்களுக்குப் பிறகு உறவினர் வீடொன்றுக்கு வந்துவிட்டேன். அவர்கள் வரவேற்றார்கள். அங்கேயே தங்கினேன். ஒருநாள் நடுச்சாமம். மலைப்பாம்பு ஒன்று என்னைச் சுருட்டிப் பிடித்ததை உணர்ந்தேன். கைகளை அசைக்க முடியவில்லை. வாய்திறக்க முடியவில்லை. கணநேரத்தில் அந்தக் கிழட்டுப் பாம்பு தன் வெறியைத் தணித்து, விரைந்துவிட்டது. அது வேறுயாரும் அல்ல உத்தமன் என்ற போர்வையிலிருந்த அந்த வீட்டுஉறவினர்தான். அந்த மாமிச மலையால் நெரிக்கப்பட்ட என் உடல் அசதியாக இருந்தது. அதிகாலை எழுந்து யாருக்கும் தெரியாமல் அருகில் உள்ள தண்ணீர் நிரம்பிய கிணறு ஒன்றுக்குள் குதித்தது தான் எனக்குத் தெரியும். எனது சாவு யாருக்கும் தெரியாத மர்மமாகத்தான் இருந்திருக்கும்.

அதன்பின் ஓர் இனம் தெரியாத சூனியமான மண்டலத்துக்குள் இரண்டு குண்டர்கள் என்னை இழுத்துச் சென்றார்கள். நாங்கள் எமதூதர்கள். சத்தம் போடாதே என எச்சரித்தார்கள். அவர்களின் குறிப்பிட்ட இடம் வந்துவிட்டது. அங்கே வன்புணர்வால் கொல்லப்பட்ட தீவகத்துப் பெண்கள், செம்மணியில் புதைக்கப்பட்ட தாய்மார்கள் உட்படப் பலர் இருந்தார்கள். எமதர்மராஜனின் விசாரணை நடந்தது. இறுதியில் எம்மை ஆளும் ஈசனும் உமையாளும் தோன்றினார்கள். ஈசனின் தீர்ப்புரை நடந்தது அப்போது, பிள்ளைகளே நீங்கள் அனைவரும் ஒரு குறுகிய காலம் பூமியில் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை முடித்துக் கொண்டு மீண்டும் என்னுடன் வந்து சங்கமம் ஆவீர்கள். அதன் பின்னர் உங்களுக்கு நித்திய சுகம் கிடைக்கும். 'பூமியில் மானிடவர்க்கத்துக்குச் சாவே முடிவானதல்ல என்பதைச் சொல்லிவையுங்கள். எங்கள் குழுவின் பெயர் மயானத்துப் பூக்கள். எனக்குக் கிடைத்த பெயர் சாமுண்டி. இப்போது என்னைப் பாருங்கள்" என்றாள்.

கோரப்பற்கள், நீண்டநாக்கு, கொடூரமான தோற்றத்துடன் காணப்பட்டாள். நான் பயத்தால் அலறினேன்.

"உஷ்... பயப்படாதீர்கள்". மீண்டும் அழகிய தோற்றத்தை எடுத்துக் கொண்டாள். "இப்போது எனது கதை புரிகின்றதா...? நல்ல கதையாக இருந்தால், உங்கள் பத்திரிகையில் எழுதுங்கள். எனது நோக்கம் பெண்களைத் துன்புறுத்துபவர்களைத் தண்டிப்பதே. அவர்கள் எவரும் இன்றிலிருந்து நிம்மதியாக நித்திரை கொள்ளமாட்டார்கள். நித்திரையில் அவர்களை இழுத்துவந்து உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை அடித்து, நெரித்து குருதியை உறிஞ்சி நாதியற்றவர்களாக நடுத்தெருவில் அலைய விடுவதே எனது வேலை. கொல்வல்ல, பொல்லா வினையறுக்க'

அவ்வளவுதான் அவளைக் காணவில்லை. ஏதோவொரு மயக்க நிலையில் நான் எனது வீட்டைநோக்கி நடந்து கொண்டிக்கின்றேன்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 470

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | 8 | | ■ | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | | 16 |
| | ■ | 17 | 18 | | | ■ | |
| ■ | 19 | | | | ■ | 20 | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ................................

..........................................................

கையொப்பம்:.................................................

**இடமிருந்து வலம்**

1. பெறுமதி
4. அரசியலில் இதற்குத்தான் ஆசை
6. மறு
7. தேவையைப் பூர்த்தி செய்து கொடுத்தல்
9. பாரமான தன்மை
10. இது ஓய்வதில்லை
11. ஒரு வகைப் பருப்பு
13. இந்தியாவின் முதல் பிரதமர்
14. பெரிய கயிறு
15. காந்தம் இதைக் கவரும்
17. பதி வைக்கப்பட்ட நாற்று
19. மூப்புற்றுப் பழுத்தல்
20. கழித்தல் குறியீடு
21. நல்லது
22. வெறும் வாய் வீச்சுக் காரன்

**மேலிருந்து கீழ்**

1. மேன்மையான தன்மை
2. வரி
3. உலகம்
4. வதிவிடம்
5. குளிகை
8. மனைவி
9. கை பிடி
10. அருமையானது என்பதைக் குறிக்கும்
12. ஒரு திசையின் சுருக்கம்
13. நிகழும்
15. பண்பு
16. பாம்பின் ஒரு ரகம்
18. ஓர் உத்தரவு
19. பின் அல்ல
20. கூட்டல் குறியீடு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 468 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சேது சமுத்திரம் (7) வரைதல் (8) ராசி (9) கலைவாணி (12)ஓம் (13) சக (14)அணா (15)அப்புயம் (17)வன்மம் (19)சமாதி (21) நவ (22)திக்கு (23)திட்டம்

### மேலிருந்து கீழ்

(1) சேவல் (2) துரை (3) சதகம் (4) முல்லை (5)திராணி (6)ரசி (10)வாரம் (11)அகம்பாவம் (12) ஓணான்(13)சய (14)அவமதி (15)அம்மா (16)புகை (18)மசகு (20)திதி (21)நட

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 468 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

ஆனந்தசிவம் ஆரங்கன்,
இல.55/1, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

ம.பொணிபஸ் றோச்,
அன்னை வேளாங்கன்னி வீதி,
பள்ளிமுனை, மன்னார்.

**3 ஆம் பரிசு**

ஜெ.மாதங்கி,
இல.57, இரண்டாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

**4 ஆம் பரிசு**

த.நிர்மலம்,
இல.2, நாலாம் குறுக்குக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**

சூ.ஞானப்பிரகாசம்,
4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

**பாராட்டுப் பெறுவோர்**

மேகலா குணசிங்கம்,
இல.29 ,சந்தனமாதா கோவில் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

கா.வேலுப்பிள்ளை,
இல. 36, மில் வீதி,
வவுனியா.

து.அபிராமி,
இல. 515/5,
கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.470 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (17.05.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.470இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 21.05.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 468 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம்

07.05.2017 முதல் 13.05.2017 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நற்பலன்கள் உண்டாகும். பணிகளில் நேர்த்தி உருவாகும். உடன்பிறந்தவர்களுடன் கருத்துவேறுபாடு உண்டாகலாம். வாகனப் பயணம் ஓரளவு நன்மை தரும். புத்திரரின் செயல்கள் குளறுபடியாகலாம். சொத்துப் பராமரிப்பில் கூடுதல் கவனம் தேவை. கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வதால் வளர்ச்சி கூடும். எதிர்பார்ப்பு நிறைவேறும். பணியாளர்கள், விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள் மேற்படிப்புக் குறித்து ஆலோசிப்பர்.

## இடபம்

சூரியன், புதன், ராகு சனீஸ்வரர் நன்மை தரும் விதத்தில் உள்ளனர். எதிர்பார்ப்புகள் இனிதாக நிறைவேறும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய வீடு வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடந்து பெருமை சேர்ப்பர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். அரசு சார்ந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை பெருகும். பணியாளர்கள், பொறுப்புடன் செயல்பட்டு நற்பெயர் காண்பர். பெண்கள் நகை வாங்குவர். மாணவர்கள் பெற்றோரின் அன்பைப் பெற்று மகிழ்வர்.

## மிதுனம்

சூரியன், புதன், ராகு சனீஸ்வரர் நன்மை தரும் விதத்தில் உள்ளனர். உறவினர்களிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். வாகன பயணத்தால் நன்மை காண்பீர்கள். சமூகத்தில் பெயரும், புகழும் தேடி வரும். புத்திரர் படிப்பு வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவு வீர்கள். அரசு சார்ந்து உதவி கிடைக்கும். தொழில், வியா பாரத்தில் உற் பத்தி, விற்பனை பெரு கும். பணியாளர் கள், பொறுப்புடன் செயற்பட்டு நற்பெயர் காண்பர். பெண்கள், புத்தாடை நகை வாங்குவர்.

## கடகம்

சூரியன், செவ்வாய், சுக்கிரனால் நன்மை உண்டாகும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தால் நன்மை காண்பீர்கள். சமூகத்தில் பெயரும், புகழும் தேடி வரும். புத்திரர் படிப்பு வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் சாதகமான முடிவு கிடைக்கும். மனைவி இணக்கமுடன் நடந்து ஒற்றுமையை நிலைநாட்டுவார். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவால் சலுகை கிடைக்கும். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று வெற்றி காண்பர்.

## சிங்கம்

புதன், குரு, சுக்கிரனால் நன்மை உண்டாகும். சொல்லில் நேர்மையும், செயலில் நேர்த்தியும் உருவாகும். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பூர்வ சொத்தில் அதிர்ஷ்டவசமாக வருமானம் கூடும். புத்திரர் உங்களின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். பழைய கடன்கள் அடைபடும். அக்கம்பக்கத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். மனைவியின் நல்ல செயல்களை முழுமனதாக பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்களுக்கு, அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும். மாணவர்கள், எதிர்கால படிப்பில் கவனம் செலுத்துவர்.

## கன்னி

சனீஸ்வரர், கேது ஓரளவு நன்மை தருவர். செயலில் விடா முயற்சி தேவைப்படும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர் விடயத்தில் தலையிட வேண்டாம். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி உண்டாகும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து நடப்பது நல்லது. பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் சாகச விளையாட்டுகளில் ஈடுபடக் கூடாது.

## துலாம்

ராகு, புதன், சந்திரன் அனுகூல பலன் தருவர். புதிய உத்தியால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நண்பர்களால் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். வாகனப் பயன்பாட்டால் மகிழ்ச்சி அதிகரிக்கும். புத்திரர் உங்கள் வழிகாட்டுதல்களை ஏற்று முன்னேறுவர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைத்திருக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயல்களில் சிறு குளறுபடி வரலாம். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். பணியாளர், நிர்வாகத்தின் நன்மதிப்பிற்கு உரியவராவர். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். மாணவர்கள் படிப்பில் சிறப்பிடம் பெறுவர்.

## விருச்சிகம்

சுக்கிரன், குரு, சூரியன் நற்பலன் வழங்குவர். எதிர்பார்த்த நன்மை வந்து சேரும். உடன்பிறந்தவரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். புத்திரர் நற்செயல்களால் பெருமை தேடித் தருவர். மனைவி பெருந்தன்மையான குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி இலக்கை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படும். வெளியூர் பயணம் செல்லும் சூழ்நிலை உருவாகும். பெண்களுக்கு, உறவினர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் அக்கறை தேவை.

## தனுசு

சுக்கிரன், செவ்வாய், கேதுவினால் நன்மை உண்டாகும். குடும்பத்தினர் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர் உங்களின் சொற் கேட்டு நற்செயலில் ஈடுபடுவர். கையிருப்பு அதிகரிக்கும். உடல்நிலை சீராக இருக்கும். மறைமுக எதிரிகள் விலகிச் செல்வர். மனைவியின் செயலால் குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளிலும் ஈடுபடுவர்.

## மகரம்

குரு, சுக்கிரன், சனீஸ்வரர் நற்பலன் தருவர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தைரியம் மேலோங்கும். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். விருந்து விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவி உங்கள் கருத்துக்களை ஏற்று நடப்பார். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரித்து பணவரவு கூடும். பணியாளர்கள் பணியிடத்தில் சுதந்திர உணர்வுடன் செயற்படுவர். பெண்கள், குடும்ப நலனை பேணிக் காத்திடுவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## கும்பம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். பேச்சில் ஆன்மிகச் சிந்தனை மிகுந்திருக்கும். வாகன பயன்பாட்டால் நன்மை காண்பீர்கள். புத்திரரை வழி நடத்துவதில் நல் அணுகுமுறை தேவை. கடன் பெறுவதில் நிதானம் பின்பற்றவும். அலைச்சல் அதிகரிக்கலாம். சீரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வெளியூர் பயணத்தால் ஆதாயம் அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் லாபம் உயரும். பணியாளர்கள் பணியிடத்தின் சூழல் உணர்ந்து செயல்படவும். பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் புதிய சாதனை புரிவர்.

## மீனம்

குரு, சுக்கிரன், செவ்வாய், ராகுவால் நன்மை மேலோங்கும். மனதில் உற்சாகமும், செயலில் சுறுசுறுப்பும் வெளிப்படும். குடும்பத்தில் சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும். புத்திரரின் விருப்பங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிரிகளின் தொந்தரவு குறையும். பணவரவு படிப்படியாக உயரும். எதிர்கால தேவை கருதி சேமிப்பீர்கள். உறவினர் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். மனைவியின் அன்பு, பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் அபரிமிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ முபாறக்

# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா...!



## கறுப்புப் பணத்தை எப்படிச் செலவு செய்வது?

நடந்து முடிந்த மே தினக் கூட்டங்கள் மகிந்த அணிக்கும் மைத்திரி அணிக்கும் இருக்கின்ற மக்கள் பலத்தை நிரூபிக்கும் ஒரு போட்டியாகவே அமைந்திருந்தன. தமது நிகழ்வுக்குக் காலி முகத் திடலை ஒதுக்கிக் கொண்ட மகிந்த அணி அதில் அதிகமான மக்களை நிரப்ப வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது.

மைத்திரி அணி கண்டியில் ஒதுக்கிக்கொண்ட கெட்டம்பே மைதானத்தின் அளவு இரண்டு ஏக்கர்களாகும். ஆனால், மகிந்த அணி ஒதுக்கிக்கொண்ட காலி முகத்திடலின் அளவு 18 ஏக்கர்களாகும். இதை நிரப்புவதென்பது மிகப் பெரிய சவாலாகும்.

இந்தச் சவாலை பசில் ராஜபக்சவும் மகிந்தானந்த அழுத்கமயேயும் ஏற்றுக்கொண்டனர். அதிக மக்களைக் கொண்டு செல்வதற்கு அதிக பணம் செலவாகும். மகிந்த அணியிடம் மக்களிடமிருந்து திருடிய பணம் நிறைய இருப்பதாகக் கூறப்படுவதால் அவர்கள் விரும்பிய எண்ணிக்கையில் மக்களை அழைத்துச் செல்வார்கள் என்று மைத்திரி அணியினர் கூறிவிட்டதால் இதை எப்படிச் சமாளிப்பது என்று மகிந்த அணி சிந்திக்கத் தொடங்கியது.

அதிக பணம் செலவழித்தால்தான் அதிக மக்களை அழைத்துச் செல்ல முடியும். அப்படி அழைத்துச் சென்றால் மைத்திரி அணியின் குற்றச்சாட்டும் உண்மையாகிவிடும் என்ன செய்வது...? என்று மகிந்த அணி ஆழ்ந்து யோசிக்கத் தொடங்கியது... சிக்காமல் திருடத் தெரிந்தவர்களுக்கு இதைச் சமாளிப்பது ஒன்றும் பெரிய விடயம் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் ஒரு செயலில் இறங்கினர் மகிந்த அணியினர். மக்களிடம் பணம் வசூலித்து அந்தப் பணத்தைக் கொண்டுதான் இந்த நிகழ்வை நடத்தினோம் என நாட்டுக்குப் படம் காட்டும் திட்டம்தான் அது.

திட்டப்படி மாத்தறை உள்ளிட்ட பல இடங்களில் பணம் வசூலித்தனர். அதில் கிடைத்த சொற்ப தொகைக்குள் மறைந்து கொண்டு இலட்சக் கணக்கில் பணத்தை அள்ளி வீசினர். இப்போது கேள்வி எழுப்ப முடியாது. மக்களிடம் வசூலித்த பணத்தைக் கொண்டுதான் இந்த நிகழ்வை நடத்தினோம் என்று இலகுவாகக் கூறித் தப்பிவிடலாம்.

மக்கள் பணம் கொடுத்தனர் என்பதற்கு ஆதாரம் உண்டு. எவ்வளவு கொடுத்தனர் என்பதற்கு ஆதாரம் இல்லை. மகிந்த ஆள்கள் காட்டுவதுதான் கணக்கு. இதுதான் மகிந்த அணியின் ஸ்ரைல். சிக்காமல் திருடுவது எப்படி? கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவது எப்படி? கறுப்புப் பணத்தை செலவு செய்வது எப்படி? என்று இவர்களிடம்தான் கற்றுக் கொள்ள வேண்டும் போல என்று பேசிக்கொள்கிறார்கள்.

## ஜே.வி.பியால் வந்த ரோஷம்

மே தினத்தையொட்டி சில சுவாரசியமான நிகழ்வுகளும் நாட்டுக்கு நலன் சேர்க்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றாகக் கூட்டம் இடம்பெற்ற இடங்களைச் சுத்தம் செய்த சம்பவம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி, மகிந்த அணி மற்றும் ஜே.வி.பி போன்ற கட்சிகள் தத்தமது கூட்டங்கள் நிறைவு பெற்றதும் அந்தந்த இடங்களைச் சுத்தம் செய்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்களே இதனை முன்னின்று செய்தனர். ஆனால், இதற்கெல்லாம் முன்னோடி யார் தெரியுமா? ஜே.வி.பிதான். எப்போதுமே ஒழுக்கமிக்க, ஊழல் அற்ற கட்சியாக வர்ணிக்கப்படும் ஜே.வி.பி. நடைமுறையிலும் அவ்வாறே உள்ளதாம்!

அவர்களின் மே தினக் கூட்டங்கள் மாத்திரமல்ல எந்தக் கூட்டங்களாயினும் அவை நிறைவுற்ற பின்பு அந்த இடங்களைச் சுத்தம் செய்துவிட்டுப் போவது வழமையாகும். மே தினத்துக்கு ஓரிரு தினங்களுக்கு முன் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் கலந்துகொண்ட ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தாம் இவ்வாறு சுத்தம் செய்வதுபற்றிக் கூறி இருந்தார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஏனைய கட்சிகளுக்கும் ரோசம் வந்துவிட்டது. அவர்களும் ஜே.வி.பியை முன்னோடியாகக் கொண்டு அந்தப் பணியை செய்வதற்குத் திட்டமிட்டன.





## எம். பிக்களைப் பதம் பார்த்த தேனீக்கள்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வு விடுதி ஒன்று நுவரெலியாவில் உள்ளது. பிரித்தானிய ஆட்சியாளர்களால் ஓய்வு விடுதியாகப் பயன்படுத்தப்பட்ட இல்லம்தான் இப்போது இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வு விடுதியாக மாறியுள்ளது.

இந்த விடுதி அவ்வப்போது சர்ச்சைக்குள் சிக்குவதுண்டு. ஓரிரு மாதங்களுக்கு முன் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார அந்த விடுதியில் தங்கி இருந்தபோது பேய்த் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறி இருந்தார். இதனைத் தொடர்ந்தே தேனீக்களும் அங்கு செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கத் தொடங்கியுள்ளன.

அந்த விடுதியைச் சுற்றி யன்னல் கதவுகளில் பத்து, பதினைந்து தேன் கூடுகள் திடீரெனத் தோன்றின. இதனால் அங்கு செல்வோர் கடும் அசௌகரியத்தை எதிர்கொள்ளத் தொடங்கினர். ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அந்தத் தேனீக்கள் பதம் பார்க்கத் தொடங்கின. அந்தத் தாக்குதலை எதிர்கொள்ளமுடியாதவர்கள் உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தனர். அந்த அதிகாரிகளின் ஏற்பட்டால் ஓரிரு நாள்களுக்கு முன் அந்தத் தேன் கூடுகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன. இப்போது நிம்மதியாக அங்கு ஓய்வு எடுக்கலாம்.

## முன்கூட்டியே பட்டாசுகள் தயார்

இரட்டைக் குடியுரிமை உள்ள ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாது என்ற 19ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் பிரபல சிங்கள நடிகையும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினருமான சுவிஸ் - இலங்கை இரட்டைக் குடியுரிமை உரிமை உள்ள கீதா குமாரசிங்கவின் பதவியை மேன்முறையீட்டு நீதிமன்றம் நீக்கம் செய்துள்ளது.

ஆனால், நீதிமன்றத் தீர்ப்பை அவரது எதிரிகள் முன்கூட்டியே அறிந்து வைத்துள்ளனரோ! என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது. அதற்குக் காரணம் இதுதான்.

தீர்ப்பு வழங்கப்பட்டதும் அதைக் கொண்டாடுவதற்கு கீதாவின் அரசியல் எதிரி ஒருவர் சில ஏற்பாடுகளைச் செய்தாராம். தீர்ப்பு வெளியாவதற்கு முதல் நாள் இரவு அந்த அரசியல் புள்ளி தனது ஆதரவாளர்களிடையே பட்டாசுகளைப் பகிர்ந்து கொண்டாராம். தீர்ப்பு காலையில் அறிவிக்கப்பட்டதும் அனைவரும் பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ வேண்டும் என்று அவர் உத்தரவிட்டிருந்தாராம். இந்தச் செய்தி அன்றிரவே கீதாவின் காதுகளுக்கு எட்டிவிட்டது. தீர்ப்பு தனக்கு எதிராக அமையப் போகின்றது என்பதை அவர் அறிந்துவிட்டார்.



## கடுப்பில் உள்ளாராம் தலைவர் மைத்திரி

மே தினம் அண்மிப்பதற்கு முதலே நாட்டு மக்கள் அனைவரதும் முழுக் கவனமும் திரும்பி இருந்தது மகிந்த மற்றும் மைத்திரி அணிகள் மீதான கூட்டங்க ளில்தான். எந்தக் கூட்டத்துக்கு மக்கள் அதிகமாக வருகிறார்களோ அந்த அணியைத்தான் வெற்றி பெற்ற அணியாகவும் மக்கள் செல்வாக்கு உள்ள அணியாகவும் தேர்ந்தெடுப்பதற்கு மக்கள் தயாராக இருந்தனர்.

அதற்கு ஏற்ப இரண்டு அணிகளும் செயலில் இறங்கின. மகிந்த அணிக்கு பெரிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் மக்கள் நிறையமாட்டார்கள்.மைத்திரி அணியின் இடம் சிறிதாக இருப்பதால் மக்களை இலகுவாக நிரப்பலாம் என்று மைத்திரி அணி தப்புக் கணக்குப் போட்டது.

ஆனால், நடந்ததோ வேறு. மகிந்த அணியின் கூட்டம் நிரம்பியதோடு அந்த இடத்துக்கு அப்பாலும் மக்கள் நிறைந்து காணப்பட்டனர். இந்தச் செய்தியை திட்டமிட்ட அடிப்படையில் வெளியில் கொண்டு வந்தவை சிங்கள ஊடகங்கள்தான். அந்த ஊடகங்கள் அனைத்தும் பேசி வைத்தால்போல் ஒரே ஒளிப்படத்தைப் பிரசுரித்தன. ஒரே மாதிரியான காட்சியை ஒளிபரப்பின.

அதாவது சனத் திரளை முழுமையாகக் காட்டும் வகையில் மேலே இருந்து பிடிக்கப்பட்ட ஒளிப்படங்கள், மேலே இருந்து எடுக்கப்பட்ட வீடியோக்களைக் காட்சிப்படுத்தின: ஆனால், மைத்திரி அணியின் கூட்டத்துக்கு இவ்வாறானதொரு முக்கியத்துவத்தை சிங்கள ஊடகங்கள் கொடுக்கவில்லை. சிங்கள ஊடகங்கள் அனைத்தும் நன்கு திட்டமிட்டு மகிந்தவுக்கு ஆதரவு வழங்கி மைத்திரி அணியைத் தோல்வியடைந்த அணியாகக் காட்டியுள்ளன என்று மைத்திரி புலம்புகிறாராம்.

காலி முகத் திடலை மகிந்த அணிக்குக் கூட்டம் நடத்த வழங்கிய [illegible] தாக [illegible] தகவல்கள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள்

பேராசிரியர்
சி. பத்மநாதன்

**வீடு வாசல், காணி பூமி என் பவற்றில் உரிமை கொள்வதற்கு உறுதிகள் எவ்வளவு ஆதாரமோ அதேபோல் நூற்றாண்டு காலமாகத் தமிழ்மொழி பேசுவோர் வாழ்ந்த, வாழ்கின்ற தொடர்ச்சியான நிலப்பரப்பில் அவர்களுக்குரிய உரிமையின் உறுதியான ஆதாரங்கள் இக்கல்வெட்டுகளேயாகும்.**

கி.பி. 2006ஆம் ஆண்டு காலப் பகுதிவரையான இலங்கைத் தமிழ்ச் சாசனங்களின் வரலாறு கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பமாகியிருக்கின்றது என்றே எல்லோரும் கருதினர். அதற்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருந்த தமிழ்க் கல்வெட்டுகளைப் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. ஆயினும், பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ள பிராமிச் சாசனங்களிலே தமிழ்ப் பிராமி வரிவடிவங்கள் சில இருப்பதைச் சிங்களச் சாசனவியலாளர்கள் சிலர் அடையாளங் கண்டுள்ளனர். பின்பு வண.பிதா கனகரத்தினம், ஆ. வேலுப்பிள்ளை, ப.புஷ்பரத்தினம் முதலானோர் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளிலே, தமிழுக்குச் சிறப்பாக வுரிய எழுத்துகள் பல இடங்களில் உண்டென்பதை உறுதி செய்தனர்.

அதனால் பௌத்தம் தொடர்பான பிராமிக் கல்வெட்டுகளில் தமிழ் மொழியின் செல்வாக்கு ஏற்பட்டிருந்தமை தெளிவாகியது. அதன் பயனாக பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் சில சொற்கள் தமிழ்ச் சொற்கள் என்ற கருத்து மேலோங்கியது. பிராமிக் கல்வெட்டுகளில் இரண்டு வகைகள் உள்ளன.

பிராகிருதமொழி வாசகங்களை எழுதுவதற்கு வடபிராமி எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. சில வருடங்களுக்கு முன்பு அதனை அசோகபிராமி என்றும் சொல்வது வழமை. தமிழ் மொழியை எழுதுவதற்குச் சற்று வேறுபட்ட வரிவடிவங்களைப் பயன்படுத்தினார்கள். அவற்றை இந்த நாட்களிலே தமிழ்ப் பிராமி என்பர். இதனை ஆதிகாலத்து வட இந்திய நூலோர் அறிந்திருந்தனர்.

சமராங்கண சூத்திரதர முதலான நூல்கள் அதனைத் தாமிழி எனக் குறிப்பிடுகின்றன.



இலங்கையில், கடந்த பத்து வருடங்களிலே தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. கிழக்கு இலங்கையிலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள வெல்லாவெளி என்னுங் கிராமத்தில் 2008ஆம் வருடம் மலைக்குன்றுகளில் இரண்டு தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் முதன் முதலாக அடையாளங் காணப்பட்டன. அவற்றிலொன்று பௌத்த சமயம் தொடர்புடையது போலத் தெரிகின்றது. மற்றது சமண சமயம் பற்றியது. அது பெண் துறவிகளின் மாடம் பற்றியும் அதனை அமைத்துக் கொடுத்த பெருவணிகனையும் குறிப்பிடுகின்றது. இந்தக் கல்வெட்டுகளின் காலம் 2000வருடங்களுக்கு முற்பட்டது. அந்தக் காலத்திலே வெல்லாவெளியிலே தமிழ்மொழி பேசுவோர் வாழ்ந்தமைக்குரிய சான்றாக இவற்றைக் கொள்ளலாம்.

வெல்லாவெளிக் கல்வெட்டுகள் பற்றிய செய்திகள் ஊடகங்கள் மூலமாக இலங்கையிலும் வெளிநாடுகளுக்கும் பரவின. கிழக்கிலங்கையிலே வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. துணை அரச அதிபர் முதலான நிர்வாக அதிகாரிகளும், கலாசார உத்தியோகத்தர்களும், கல்லூரி ஆசிரியர்களும், மேல்நாட்டு முறை மருத்துவர்களும், வேறு வகையினரும் கல்வெட்டுகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

'முயற்சி திருவினையாகும்' என்பது முதுமொழி. பலரின் தேடல்கள் மூலம் முயற்சிக்கேற்ற பலன்கள் கிடைத்தன. பெரும்பாலான கல்வெட்டுகளை மட்டக்களப்பில் எழில்வாணி பத்மகுமாரும், செல்லையா பத்மநாதனும் கண்டுபிடித்தனர். திருகோணமலையிலும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் பல்வேறிடங்களில் உள்ளன என்பது மருத்துவ நிபுணர்களான அருமைநாயகம் ஸதீஸ் குமார், தங்கராஜா ஜீவராஜ் ஆகியோரின் தேடல்கள் மூலம் உறுதியாகியது.

இவர்கள் அனைவரும் தாம் கண்டுபிடிக்கும் எழுத்துப் பொறித்த தொல்பொருட்களின் ஒளிப்படங்களை மின்னஞ்சல் மூலமாகவும் வேறுவகையிலும் எமக்கு அனுப்புவார்கள். நாம் பிரமி எழுத்துகளை அடையாளங் கண்டு அந்தப் பொருட்களிலுள்ள சொற்களையும் வசனங்களையும் படித்து அவர்களுக்கு விளக்குவதுண்டு. அவற்றை ஆதாரமாகக் கொண்ட பெரு நூலொன்றும் உருவாகிவிட்டது.

மட்டக்களப்பில் உயரமான மலைகளையும் காடுகளையும் தவிர்ந்த எல்லாவிடங்களுக்கும் சென்று நாகர் தொல்பொருள் சின்னங்களை எம்மால் நேரிலே பார்த்து ஆராயமுடிந்தது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அமைந்துள்ள தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளைப் படித்து, ஆய்வு செய்தமையின் பயனாக வடமாகாணத்திலுள்ள அருங்காட்சியகங்களிலும் வேறிடங்களிலும் அமைந்திருக்கும் கல்வெட்டுகளைச் சிரமமின்றிப் படிக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்திலே கள ஆய்வுகளைச் செய்வதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவுகள் கிடைத்தன. வன்னி மாவட்டங்களில் நண்பர் அருணா செல்லத்துரை சலிக்காதும் தன்னந்தனியாகவும் மேற்கொண்ட முயற்சியால் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் பொறித்த பெருந்தொகையான பண்பாட்டுச் சின்னங் களின் உருவப் படங்களை வடிவமைத்துக் கொள்ள முடிந்தது.

ஒருமித்துப் பார்க்குமிடத்து இலங்கையிலே தமிழ்மொழி வழங்கும் பிரதேசங்களின் ஆதிகால வரலாற்றை இப்பொழுது விரிவாகவும் தெளிவாகவும் விளக்க முடிகின்றது. ஆய்வுகளைப் பொறுத்தவரையில் இது ஒரு முன் முயற்சி மட்டுமே. இவற்றின் மூலம் உருவாகின்ற கோட்பாடுகளும் விளக்கங்களும் வருங்கால அகழ்வாய்வுகள்மூலம் உறுதிப்படுத்தப்படும். இப்பொழுது தென்னிலங்கையிலே சில அருங்காட்சியகங்கள் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

ஆனால், வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிலை வேறானது. தமிழ்ப் பிராமிச் சாசனங்களை ஏன் படிக்க வேண்டும்?

அவற்றால் என்ன பயன் கிடைக்கும் என்று வாசகர் சிலரும் கல்லூரி மாணவர் பலரும் எண்ணக்கூடும். வீடு வாசல், காணி பூமி என் பவற்றில் உரிமை கொள்வதற்கு உறுதிகள் எவ்வளவு ஆதாரமோ அதேபோல் நூற்றாண்டு காலமாகத் தமிழ் மொழி பேசுவோர் வாழ்ந்த, வாழ்கின்ற தொடர்ச்சியான நிலப்பரப்பில் அவர்களுக்குரிய உரிமையின் உறுதியான ஆதாரங்கள் இந்தக் கல்வெட்டுகளேயாகும்.

தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் கி.மு. 250 - கி.பி. 300 ஆகிய காலப் பகுதிக்குரியவை.

அவை வட, கிழக்கு மாகாணங்களில் மிகுதியாகவும் அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம், அம்பாந்தோட்டை போன்றவற்றில் அரிதாகவும் கிடைக்கின்றன. அவை கற்பாறைகள், நிலப்பாறை, மலைப் பாறை ஆகியவற்றிலே வெட்டப்பட்டுள்ளன. சிறு தூண்டுகள், நெடிய தூண்கள், கற்பலகைகள் ஆகியவற்றிலும் அவற்றைக் காணலாம். அம்மி, குளவி, உரல், செக்கு ஆட்டுக்கல்போன்றவற்றில் அவற்றைப் பொறித்துள்ளனர். எழுத்துப்பொறித்த பெருந் தொகையான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

பானை, சட்டி, முட்டி, முக்காலி, உண்கலம், நீர்க்கெண்டி, தாழி, ஈமத்தாழி என்பன அவற்றுள் அடங்கும். கட்டடப் பொருட்களான செங்கட்கடிகளிலும் ஓடுகளிலும் கற்களிலும் தமிழ்ப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துப் பொறித்த உலோகப் பொருட்கள் தனியொரு வகையானவை. இன்றுவரை புழக்கத்திலுள்ள கைவிளக்குகள் மாதிரியான பித்தளை விளக்குகளிலும் மாளிகைகளில் வைக்கப்பட்டிருந்த சில காட்சிப் பொருட்களிலும் தமிழ்ப் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

அவற்றோடு தூண்தாங்கு கற்கள், வாசற்படிகளாக வைக்கப்பட்டுள்ள அரைவட்டக் கற்கள், மாளிகைச் சுவர்கள் என்பவற்றிலும் அவற்றைக் காணலாம். இவற்றுள் பெரும்பாலானாவை உற்பத்தி முறை, அன்றாட வாழ்க்கை என்பவற்றோடு தொடர்புடையவை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பன்ட்
சாம்சன்

> இந்திய அணியைப் பொறுத்தவரையில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என மூன்றுமே சிறந்த திறனில் உள்ள போதிலும் ஆரம்ப வீரராக எவரைத் தெரிவுசெய் வது என்ற சிக்கல் உள்ளது. ரோகித் சர்மா அணிக்குத் திரும்பியுள்ளார். ஆனால் ரோகித்துடன் எவர் களமி றங்கவுள்ளார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

பிரகாஸ்

# இந்திய அணியின் ஆரம்ப வீரர் யார்?



திரிபதி

மினி உலகக்கிண்ணத் தொடர் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இந்திய அணியைத் தவிர மற்றைய அத்தனை அணிகளும் அறிவிக்கப்பட்டாயிற்று. இந்திய அணி இன்று அல்லது இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படலாம் என்று கருதப் படுகிறது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் துடுப் பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என மூன்றுமே சிறந்த திறனில் உள்ள போதிலும் ஆரம்ப வீரராக எவரைத் தெரிவுசெய்வது என்ற சிக்கல் உள் ளது. ரோகித் சர்மா அணிக்குத் திரும்பியுள்ளார். ஆனால் ரோகித்துடன் எவர் களமிறங்கவுள்ளார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

தவான், ரர்கானே இருவரும் ஆரம்ப வீரராக களமிறங்கப்பட்டனர். ஆனால் இவர்கள் இருவ ரும் ரோகித்துடன் இணைந்து வெற்றிக்கூட்ட ணியை அமைக்கவில்லை. எனவே ஆரம்ப வீரராக நிரந்தரமாக ஒருவரைத் தெரிவுசெய்ய கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக முயன்று வந்தது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் அந்த இடத் துக்கு சில வீரர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

**பன்ட், சாம்சன்**

டெல்லி அணியில் விளையாடி வருகிறார் பன்ட். இந்திய அணியின் 19 வயதுக்குட்பட்ட அணி, தேசிய அணி ஆகி யவற்றில் விளையாடி பன்ட்டுக்கு ஏற்கனவே பழக்கமுள் ளது. நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரிலும் பன்ட் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருகிறார். டெல்லி அணியின் துடுப்பாட்ட பலமாகவும் அவர் உள்ளார். கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத்தை எதிர்த்து டெல்லி அணி மோதியது. 209 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது குஜராத். பதிலுக்குக் களமிறங் கிய டெல்லி 15 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்தது. 43 பந்துகளில் 97 ஓட்டங்களைக் குவித்து ஆட்டநாயக னானார் பன்ட். குஜராத் அணியின் தலைவர் ரெய்னா பன்டை மிகையாகவே பாராட்டினார். தவிர முன்னாள் வீரர்களான சச்சின் உள்ளிட்டோரும் பன்டை பாராட்டியுள் ளனர். எனவே அணியில் இவர் தெரிவாக வாய்ப்பு அதி கம் என்றே கருதப்படுகிறது.

டெல்லி அணி இந்த வெற்றியைப் பெறுவதற்கு சாம்சனும் முக்கிய காரணமாக இருந்தார். அவர் 31 பந்துகளில் 61 ஓட்டங்களைக் குவித்தார். டெல்லியின் ஆரம்ப வீரராகவும் சாம்சான் உள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யின் தேவையும் இதுவே.

**திரிபதி**

புனே அணியில் விளையாடி வருகிறார் திரிபதி. புனே அணி ஆரம்பத்தில் தடுமாற்றத்தை எதிர்கொண்ட போது திரிபதி பெரிதளவில் பிரகாசிக்கவில்லை. எனினும், டோனியின் பரிந்துரையில் அவரை அணியில் தொடர வைத்தார் சிமித். தற்போது மிகவும் ஆபத்தான ஆரப்பத் துடுப்பாட்ட வீரராக திரிபதி உருவெடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் புனே, கொல்கத்தாவை வீழ்த்த திரிபதி முக்கிய பங்காற்றினார். இந்த ஆட்டம் அவரது திறமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. எனவே இந்த மூவரில் ஒருவர் மினி உல கக்கிண்ணத் தொடரில் ஆரம்ப வீரராகக் களமிறங்கலாம். கம்பீர், உத்தப்பா இருவரும் சிறந்த பெறுபேற்றை வெளிப் படுத்தி வருகின்ற போதிலும் இவர்களின் வயதைக் கருத் தில் கொண்டு அவர்கள் அணியில் தெரிவாக வாய்ப் பில்லை என்று கருதப்படுகிறது.

## அதிகரிப்பு!

பெண்கள் உலகக்கிண்ணத் தொடருக் கான பரிசுத்தொகையை அதிகரித்துள் ளது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

11 ஆவது பெண்கள் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் ஜூன் 24 ஆம் திகதி தொடங்குகிறது. இதில் நடப்புச் சம்பியன் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபி ரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய 8 நாடுகள் கலந்து கொள்கின்றன. இந்தத் தொடருக்கான மொத்த பரிசுத் தொகையை 10 மடங்கு அதிகரித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

கடந்த 2013 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் 1.25 கோடி பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டது. இந்தத் தொகை 13 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

ICC
WOMEN'S WORLD CUP
ENGLAND & WALES 2017

# தடை உடைந்தது



மெஸ்ஸிக்கு விதிக்கப்பட்டிருந் தடையை கைவிட்டு உத்தரவிட்டது பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தில் மேன்முறையீட்டுக் குழு. 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் உலக அளவில் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

தென்னமரிக்க நாடுகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. ஆர்ஜென்ரினா அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி, சிலியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் நடுவர் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து அவருடன் முரண்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால் அவருக்கு 4 ஆட்டங்களில் விடையாடத் தடையும் 10 ஆயிரம் யூரோ தண்டமும் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து மேன்முறையீடு செய்தார் மெஸ்ஸி.

ஆர்ஜென்ரீனா கால்பந்து சம்மேளனத்தின் சார்பிலும் மேன்முறையீடு செய்யப்பட்டது. விசாரணைகளின் முடிவில் மெஸ்ஸி குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இதனால், ஓகஸ்ட் 31 ஆம் திகதி உருவேக்கு எதிரான ஆட்டத்திலும், வெனிசுலாவுக்கு எதிராக செப்ரெம்பர் 5 ஆம் திகதி [illegible] ஆட்டத்திலும், [illegible] எதிராக ஒக்ரோ[illegible] மெஸ்ஸி களமிறங்குவது உறுதிப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மறுமலர்ச்சிமன்றத்தால் வடமாகாண அளவில் நடாத்தப்படுகின்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியின் முதல் மற்றும் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் கடந்த 21, 22 ஆம் திகதிகளில் கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தில் இடம்பெற்றன. (ஐ)



க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இலவச செயலமர்வும், வினாவிடைத் தொகுப்பு வழங்கலும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம் பித்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராஜா, ஈ.சர வணபவன் மற்றும் கல்வி அதிகாரிகள், மாணவர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். கழகத் தலைவர் லயன் இ.சுரேஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் வை.தியாகராஜா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக மாவட்டத் தலைவர் லயன் பத்மநாதனும், கௌரவ விருந்தினராக ஆளுநர் சபையின் பிரதிச் செயலாளர் லயன் வ.ஸ்ரீபிரகாஸும் கலந்து கொண்டனர். நிகழ்வில் பரீட்சையில் சித்தி பெற்ற 91 மாண வர்கள் விருதுகள் வழங்கக் கௌரவிக்கப் பட்டனர். (ஐ-9)




உலக சுகாதார தினம் உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையில் கரம்பைக்குறிச்சி பொருளாதார உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் கரம்பைக்குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் கரம்பைக்குறிச்சி பொதுநோக்கு மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை மாண வர்களுக்குச் சுகாதார பொருள் பொதிகள் வழங்கப்பட்டதுடன், பிரதேச சுகாதார பரிசோதகர், உலக தரிசன நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மற்றும் கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை முதல்வர் ஆகியோரால் விழிப்புணர்வுக்கருத்துக்கள் நிகழ்த்தப்பட்டன. (ஐ)





அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 77ஆவது ஆண்டுவிழாவின் இறுதி நிகழ்வுகள் கடந்த 14 ஆம் திகதி நிலையக் கலையரங்கில் இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கலந்து கொண்டார். கலை நிகழ்வுகள், சிற்ப[illegible] விருது பெற்ற கலைஞர்களுக்கான கௌரவிப்பு மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)






குருநகர் பேர்கன் ஒஸ்லோ சமூக அபிவிருத்திக்கான இணையத்தின் இரவுக்கல்விச் சேவையில் கல்வி பயிலும் மாணவர்களுக் கான சீருடை வழங்கும் நிகழ்வு அண்மையில் குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியால யத்தில் இணையத் தலைவர் கி.சிலுவை தாஸ் தலைமையில் நடைபெற்றது. நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எவ்.எக்ஸ். அன்ரன் முதன்மை விருந்தினராகவும், சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அதிபர் க.கலியுகன், சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அதிபர் ஏ.மரியதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குச் சீருடைகளை வழங்கி வைத்தனர். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி கைதடி மேற்கு மாதர் கிராம அபி விருத்திச் சங்க வளாகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். நிகழ் வில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கான கௌரவிப்பு இடம் பெற்றது. (ஐ)



தவக்காலத்தை முன்னிட்டு குருதித்தான நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முகப்பு மண்டபத்தில் இடம்பெற்றது. பங்குத் தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குருதிக்கொடை நிகழ்வில் 40இக்கும் மேற்பட்டோர் குருதி தானம் வழங்கினர். (ஐ-135)







மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த சித்திரைப் புதுவருடத்தினத்தன்று இடம்பெற்றது. (ஐ)





அனலைதீவு அரு ணோதயா சனசமூக நிலையமும் அருணோ தயா விளையாட்டுக் கழகமும் இணைந்து ஏ விளம்பி சித்திரைப் புத்தாண்டை முன்னிட் விளையாட்டுப் போட்டிகளை கடந்த 15 ஆம் திகதி கழக மைதானத்தில் நடத்தின அனைத்துப் பிரிவினருக்குமான பாரம்பரிய விளை யாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)





முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள குமுழமுனை நடுவ முன்பள்ளியின் 2017ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவானது கடந்தவாரம் நடைபெற்றுள்ளது. வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் முன் பள்ளிச்சிறார்களின் விளை யாட்டுக் களும் நிறைவாகப் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. (ஐ)





உயிர்ப்புஞாயிறு தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய இளையோர் ஒன்றி யத்தால் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இளைஞர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்பணி ஏ.கிறிஸ்தோப்பர் அடிகள் ஆரம்பித்துவைத்தார். போட்டியில் யே.சுபீட்சன் முதலாம் இடத்தையும் ம.நிக் ஷசன் 2ஆம் இடத்தையும் வ.பிரிந்தன் 3ஆம் இடத்தையும் பெற் றுக்கொண்டனர். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விடுதலைக்காகக் குரல் கொடுப்பவர்களே ஆயர்கள்

## 'வாழும் நாயகன்' ,ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

மனித விடுதலைக்காகக் குரல் கொடுப்பவர்களே ஆயர்கள் என்ற தலைப்பில் மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகையின் மனித விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் பணி பற்றிய கடந்த வார ஆரம்ப ஆக்கத்தின் தொடர் ஆக்கம் இதுவாகும்.

**இனங்களுக்கு இடையில் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபை காத்திரமான பணி**

இலங்கை நாட்டில் இரு இனங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற இன முரண்பாடுகளிடையே தமிழ்க் கத்தோலிக்க திருச்சபையானது காத்திரமான பணியை ஆற்றிக்கொண்டே வந்திருக்கின்றது. இலங்கையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய நான்கு தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களும் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் தமிழ் மக்களுக்காக, அவர்களின் அமைதியான வாழ்வுக்காக துணிந்து குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றார்கள்.

இலங்கையில் தமிழ் கத்தோலிக்க ஆயர்கள் தமது பாதுகாப்பையும் துச்சம் என மதித்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு இரண்டு காரணங்களே துணை நிற்கின்றன எனலாம்.

**கத்தோலிக்க திருச்சபை சர்வதேச மயப்படுத்தப்பட்டது**

இவற்றில் முதலாவது இலங்கையில் கத்தோலிக்க மதம். சிறுபான்மை மதமாக இருந்தாலும், சர்வதேச மதமாக இருக்கின்ற வகையில் அதன் குரல் உலகளவில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பது. கத்தோலிக்க திருச்சபை சர்வதேச மயப்படுத்தப்பட்டு அனைத்து விடயங்களும் உடனடியாக உலகம் முழுவதற்கும் பரவக்கூடிய தன்மையையும், உலகம் முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தன்மையையும் பெற்றிருக்கிறது.

கத்தோலிக்க உலகின் ஒரு பகுதியில் நடைபெறும் ஒரு விடயம் உடனடியாகவே முழு உலகின் கவனத்தையும் ஈர்த்து விடுகிறது. முழுக் கத்தோலிக்க உலகும் உடனடித் தன்மையோடு குரல் கொடுக்க தொடங்கிவிடும். இலங்கை நாட்டில் நடைபெற்ற கொடிய போர் பற்றிய செய்திகளை கத்தோலிக்க உலகம் பல தடவைகள் அறிவிப்புச் செய்தும் கண்டித்தும் வந்துள்ளது.

**திருத்தந்தை பிரான்சீஸ் வேத சாட்சிகளின் குருதியால் தோய்ந்த மன்னார் தமிழ் மண்ணில் கால் பதித்தார்**

திருத்தந்தையர்களும் பல தடவைகள் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். இலங்கை



நாட்டின் தலைவர்கள் திருத்தந்தையர்களைச் சந்திக்கும் போதெல்லாம் இலங்கை நாட்டின் பிரச்சினைக்கு முடிவு காணுங்கள் என திருத்தந்தையர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

திருத்தந்தை பிரான்சீஸ் இலங்கைக்கு வந்த



போது போரினால் அல்லற்பட்ட மண்ணில் கால் பதிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து மடுப்பதிக்கு வந்து சரித்திரம் படைத்தார்.

திருத்தந்தை பிரான்சீஸ் வேத சாட்சிகளின் குருதியால் தோய்ந்த மன்னார் தமிழ் மண்ணில் கால் பதித்து மடுப்பதியை உலகுக்குத் தெளிவாகக் காட்டினார். இந்த நிகழ்வின் போதெல்லாம் இலங்கையின் நிலை முழு உலகுக்கும் உணர்த்தப்பட்டது. அவை எல்லாவற்றிற்கும் காரணம் கத்தோலிக்க திருச்சபையின் உலக மயப்படுத்தப்பட்ட தன்மையாகும்.

**கத்தோலிக்கம் சிங்கள தமிழ் இனங்களை இணைக்கும் பாலம்**

இரண்டாவது காரணம், கத்தோலிக்க மதம் இலங்கையின் இரு இனங்களான சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கு இடையிலான ஒரு பாலமான மதமாக இருக்கின்றது.

இலங்கையில் தமிழ்க் கத்தோலிக்கரும், சிங்களக் கத்தோலிக்கரும் இருக்கிறார்கள். கத்தோலிக்கம் இந்த இரண்டு இனங்களையும் இணைக்கும் பாலமாக உள்ளது. நாம் பல தடவைகள் உதயன் கிறிஸ்தவ பகுதியில் தெரிவித்ததுபோல் மடுப்பதி இந்த இரண்டு இன மக்களையும் ஒரு தாய் மக்களாக அன்னையின் பாதத்தில் இணைய வைத்துள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் இலங்கையில் வசிக்கின்ற இரண்டு இனங்களான தமிழ் மக்களும், சிங்கள மக்களும் சங்கிலித் தொடராக இன மோதல்களில் ஈடுபட்டே வந்துள்ளனர். கத்தோலிக்க மதம் இலங்கையின் இரு இனங்களான சிங்களம், தமிழ் ஆகிய இரு இனங்களுக்கும் இடையிலான ஒரு பாலமாக இருந்து இன்னும் சிறப்பாக பணியாற்றி இருக்கலாம் என்பது பலரது வாதம். இந்தப் பாலம் பலம் மிக்கது. இது மென்மேலும் பயன்படுத்தப்படலாம்.

**இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை**

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையானது இலங்கை நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தன் பங்களிப்பை இலைமறைகாயாக எப்போதும் வழங்கிக்கொண்டே வந்திருக்கிறது. அது போன்ற நிகழ்வு ஒன்று செடேக். கரித்தாஸ் நிறுவனத்தின் ஒருங்கமைப்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினரின் பங்களிப்பில் தென்னாபிரிக்காவில் நிகழ்ந்தேறியுள்ளது.

உலகம் போற்றும் உன்னத தலைவர் நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்காவில் நீண்ட காலம் நீடித்த இனவெறிப் போராட்டத்துக்கு ஒரு சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்.

> இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் இலங்கையில் வசிக்கின்ற இரண்டே இரண்டு இனங்களான தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சங்கிலித் தொடராக இன மோதல்களில் ஈடுபட்டே வந்துள்ளனர். கத்தோலிக்க மதம் இலங்கையின் இரு இனங்களான சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கு இடையிலான ஒரு பாலமாக இருந்து இன்னும் சிறப்பாக பணியாற்றி இருக்கலாம் என்பது பலரது வாதம். இந்தப் பாலம் பலம் மிக்கது. இது மென்மேலும் பயன் படுத்தப்படலாம்.

தென்னாபிரிக்காவில் நடந்த உண்மைகளைக் கற்றறிந்து புரிந்துணர்வைக் கட்டியெழுப்ப தென்னாபிரிக்காவின் உண்மையும் ஒப்புரவாகுதலும் என்ற ஆணைக்குழுவின் செயற்பாட்டை ஒத்ததாக இலங்கையிலும் மேற்கொள்ளும் முன்முயற்சியாக, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் மூன்று தமிழ் ஆயர்களும், நான்கு சிங்கள ஆயர்களும் தென்னாபிரிக்காவுக்கு சென்று வந்த செய்தி பலரும் அறியாத செய்தியாகும். (இது பற்றிப் பிறிதொரு ஆக்கத்தில் விரிவாக நோக்குவோம்)

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் மூன்று தமிழ் ஆயர்களும், நான்கு சிங்கள ஆயர்களும் கடந்த 2011ஆம் ஆண்டு ஜீலை 25ஆம் திகதி முதல் ஓகட்ஸ் 01ஆம் திகதிவரை தென்னாபிரிக்காவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இந்தப் பயணத்தில் (2011ஆம் ஆண்டின்படி) யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, திருமலை, மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, கண்டி ஆயர் மேதகு வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை, குருநாகல் ஆயர் மேதகு கரல் அன்ரனி பெரரோ ஆண்டகை, அனுராதபுர ஆயர் மேதகு நேபேட் அன்ராடி ஆண்டகை, பதுளை ஆயர் மேதகு வின்ரன் பெர்னாண்டோ ஆண்டகை ஆகியோருடன் இலங்கை செடேக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அருள்திரு ஜோர்ச் சிகாமணி அடிகளாரும் கலந்துகொண்டார்கள்.

தென்னாபிரிக்காவின் உண்மையும், ஒப்புரவாகுதலும் ஆணைக்குழு தென்னாபிரிக்காவில் நடந்த உண்மை நிகழ்வுகளைக் கற்றறிந்து. சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து பிரச்சினைக்குட்பட்டவர்களை நேரடியாகச் சந்திக்க வைத்து, அவர்கள் மனங்களில் தாம் நடந்துகொண்ட நிலைகளை உணர்ந்து, பழையவற்றை மன்னித்து மறந்து மனதில் ஒப்புரவாகி நல்லுறவைக் கட்டியெழுப்பி, உளத்தூய்மைபெற்று அமைதியும் சமாதானமும் நிறைந்த ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முயற்சித்தது. தொடர்ந்து என்ன நடந்தது என அடுத்த வாரம் பார்க்கலாம்.

**வாழும் நாயகன் நூல்வெளியீட்டு விழா**

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மைய கலையருவி அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி வாழும் நாயகன் நூல் வெளியீட்டு விழா மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக 22 ஆண்டுகள் பணியாற்றி தற்போது உடல் நலக்குறைவாக இருக்கும் 'வாழும் நாயகன்', நூலின் கதாநாயகன் முச்சக்கர வண்டியில் வந்து மங்கல தீபம் ஏற்றினார்.

'வாழும் நாயகன்' நூலின் ஆசிரியர் கலாநிதி வின்சன் பற்றிக் அடிகளாரை இந்த ஆக்கம் தொடர்பாகப் பேசிட பிசப் சவுந்தரம் மிடியா சென்ரர் கேட்போர் கூடத்தில் சந்தித்தபோது மேலும் பல விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது.

மன்னார் மறைமாவட்டத்தில் நான் பணியாற்றிய காலத்தில் ஆயரின் வாகனத்தில் அவருடன் பயணம் செய்யப் பயந்ததுண்டு. எல்லா நேரத்திலும், எல்லோர் கண்களும் அவர் மேலேயே இருந்தன. எப்போ என்ன நடக்கும். எப்போ குண்டு வெடிக்கும். எங்கிருந்து துப்பாக்கிக் குண்டு பாயும் என்ற பதற்றமும் அதற்குக் காரணமாகும். ஆனால் இந்தப் பயத்தின் மத்தியிலும் இந்த மாமனிதனின் அபார துணிவையும், அசைக்க முடியாத மன உறுதியையும் பார்த்து வியந்ததுண்டு. அதுவே இந்த நூலை வெளியிட உந்து சக்தியாய் அமைந்தது - என்றார் அவர்.

**ஆயர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்**

யாழ். மறை மாவட்டத்தின் மறைந்த முன்னாள் ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை தம் பணியின் (1972 1992) இறுதிக் காலத்தில் குறிப்பாக, 1998ஆம் ஆண்டு தம் வாழ்க்கைக் குறிப்புக்கள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டார். யாழ். மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆயர்ப் பணி யாழ். மறை மாவட்டத்தை ஆயனாக வழி நடத்தல் என்னும் தலைப்பில் யூட்தாஸ் அடிகளாரின் தொகுப்பாசிரியப் பணியில் நூலாக வெளி வந்துள்ளது. ஆங்கில மொழியில் ஆயர் எழுதிய நாட் குறிப்பேடானது 2016ஆம் ஆண்டு குருக்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடலின் போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழ்க் கத்தோலிக்க ஆயர்கள் அரசியல்வாதிகள் அல்லர். அவர்கள் ஆன்மீகவாதிகள். இவர்கள் அரசியல் பேசவில்லை அடிப்படை மனித உரிமைகளைப் பற்றியும், முழு மனித விடுதலை பற்றியும் பேசுகிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியம் ஆகும். இவ்வாக்கத்தின் தலைப்பை உருவாக்கக் கருத் தந்த ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகையின் பணி பற்றி விவரிக்கும் வாழும் நாயகன் என்ற கலாநிதி வின்சன் பற்றிக் அடிகளாரின் நூல் பற்றி மேலும் அடுத்த வாரம் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம்
## ல்லாவி சிவன்கோயில்
## அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஸ்டா
# ம்பாபிஷேக பெருவிழா

**07.05.2017 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 06.46 முதல் 08.24 வரை**

### ாபிஷேகம்

து விளங்கும் மல்லாவி யோகபுரம் ஸ்ரீ யோகாம்பிகை
ழிவோடு அமைந்து அஷ்டபந்தண நவகுண்டபட்ச
உலகத்தின் கர்த்தாவாக விளங்கும் சிவபிரானின்.
ரசர்கால தொன்மை கொண்ட இவ் மூலாலய லிங்கம்
சமயத்தின் அற்புத சான்று. சிவத்தொண்டர் இயக்கச்சி
ும்பாபிஷேக பணியில் பெரும்பணி புரிகின்றார். ஆலய
னதும் தொண்டுகள் போற்றுதற்குரியது. சாரதாபீடம்
பெறும் இக் கும்பாபிஷேகம் விழா அனைவருக்கும்
ங்களம் பொழியட்டும்.

### வாழ்த்து செய்தி



புராதன வரலாறு படைத்த வன்னி மண்ணின் பெருமைகள் பல பேசப்பட்டுக்கொண்டிருக்கும் வரலாற்று காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் மேலும் ஓர் சிவன் ஆலயத்தை மல்லாவியில் அமைத்து அதற்கான மஹா கும்பாபிஷேக பெருவிழா 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 06.46 முதல் 08.24 வரைஇனிதே நிறைவேற திருவருள் பாலித்திருக்கின்றார். துணுக்காய் பிரதேசத்திற்கும். வன்னிவள நாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இப்படிப்பட்ட பெரும்பணியை துணிவுடன் ஆரம்பித்து வழிநடத்திய ஆலய பரிபாலன சபை திருப்பணி சபைக்கும் ஒத்துழைத்து நிதி உதவி செய்த அடியவர்க்கும் எமது பாராட்டுக்கள்.

இச் சூழலில் அத்திவாரக்கல் நாட்டிய நாள் முதல் செயல்வடிவத்துக்கும் ஒத்தாசை புரிந்தவன் என்றவகையில் என்மனம் புழங்காகிதமடைகின்றது. 'ஏலவே சிவன் ஆலயம் பனங்காமத்திலும், வவுனிக்குளத்திலும் சிவன் ஆசி வழங்கி, மாந்தை கிழக்கு பிரதேசத்தை வழிநடாத்துகின்ற நிலையில் துணுக்காய் பிரதேசத்திற்கு சிவன் ஆலயம் அமைந்தது பெரும்பேறாகும். இவ்வாலயம் புராதன மன்னன் கால சிவன் என்பதும் மறைத்து வைக்கப்பட்ட இச் சிவன் பூனகரியான் குளத்திலிருந்து அடியார்களால் கொண்டுவந்து பிரதிஸ்டை செய்யப்பட்டதும் வரலாறு.

நீண்ட காலமாக இழுபட்டுபோன நிர்மாணப்பணி திருப்பணிச் சபையினரின் அயராத சேவையின் மூலம் நிறைவுக்கு வந்தது பெரும்பேறு அத்துடன் கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குரு சிவபிரம்மஸ்ரீ தேவலோகேஸ்வர குருக்கள் அவர்களது பங்கும் இக்கைங்கரியத்திற்கு கிடைத்திருப்பதும் மேலும் பிரமிக்க வைக்கின்றது அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். மக்களின் பக்தியை வளர்த்து கொள்ளவே ஆலய வழிபாடு அமைந்துள்ளது.மனத்தூய்மை, பணிவு. அன்பு. வாய்மை போன்ற சிறந்த பண்புகளின் அடிப்படையில் அமைந்த சிவன் அருளே எமக்கு தேவை இதை வளர்க்க பாடுபடுவோமாக !.

க.வ.கமலேஸ்வரன்
பிரதி அவைத்தலைவர்
வடக்கு மாகாண சபை. யாழ்ப்பாணம் .

### வாழ்த்து செய்தி



மல்லாவி நகரின் மத்தியிலே பிரதான வீதிக்கரு காமையில் இப்பிரதேச மக்கள் அனைவருக்கும் தனது அருளை வழங்குவதற்காக எழுந்தருளியிருக்கும் யோகாம் பிகை சமேத யோகபுரநாதரின் ஆலய கும்பாபிஷேகம் எம்பெருமானின் அருளினால் இன்று 07.05.2017 நடைபெறுகின்ற மையையிட்டு மிகுந்த மகிழ்சியடைகின்றேன்.


இப்பிரதேசத்தின் ஒரே சிவன் ஆலயமாகவும் ஒப்பீட்டளவில் பெரிய அளவிலும் இவ்வாலயத்தை நிர்மாணிப்பதில் இப்பிரதேச மக்கள், வர்த்தக பெருமக்கள், சிவனடியார்கள். மற்றும் ஆலயத்தின் பரிபாலன, திருப்பணி, கும்பாபிஷேக சபையைச் சேர்ந்தவர்கள் அனைவரினதும் கடின முயற்சியின் பயனாகவே இவ்வாலயம் இன்று நிறைவுற்றுள்ளமை மிகவும் பாராட்டக்கூடிய விடயமாகும்.

இப்பிரதேச மக்கள் அனைவரும் எல்லாம் வல்ல யோகாம்பிகை சமேத யோகபுரநாதரின் நல்லருளைப் பெற்று எல்லா வளங்களுடனும் சிறந்து வாழ வேண்டும்மென இந் நன்னாளில் இறைவனின் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

இ.பிரதாபன்
பிரதேச செயலாளர்,
துணுக்காய்.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்
**பிள்ளையார் ஸ்ரோர்**

துணுக்காய் சாலை, மல்லாவி
0774297024

**உயர்ச்சி புத்தகசாலை**
புதினப் பத்திரிகைகள், அப்பியாச கொப்பி
பயிற்சி புத்தகங்கள், பாடப்புத்தகங்கள்
மொத்தமாகவும் சில்லைறையாகவும்
விற்பனை செய்யப்படும்.

பிரதான வீதி, மல்லாவி 0772399446

றோம்
ர்
ர்
ல
ம்




Ti Mobile
Thunukkai Road
Mallavi
0772737987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவி சிவன்கோயில் மஹா கும்பாபிஷேக பெருவிழா



## வாழ்த்துச் செய்தி

"ஆலயம் தொழுவது சாலமும் நன்று கோயி லில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு அதற்கமைய சைவர்களாகிய நாம் ஆலயங்களைத் தேடி வழிபடுவதென்பது ஓர் ஆத்ம திருப்தி. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு இறையருள் வேண்டும் இவ் இறையருளை நாம் பெறுவதற்கு ஆலய தரிசனங்களை உரிய முறைப்படி பெறுதலும் அவசியமாகும். அந்த வகையில் வடபுலத்திலே முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி யோகபுரத்தினிலே வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ யோகாம்பிகை சமேதயோக புரநாதர் ஆலயமானது பழைமையான ஓர் ஆலயம் என்பதோடு போர்க்காலச் சூழ் நிலையிலும் ஆலய பரிபாலன சபையினரால் சிறப்பான முறையில் இயங்கியுள்ளதனையும் இங்குள்ளவர்களிடம் கேட்டறிந்துள்ளேன். தற்போது போருக்கு பின்னரான இக்காலத்தில் இவ்வாலயம் ஆலய பரிபாலன சபை. திருப்பணிச்சபை. கும்பாபிசேக தொண்டர் சபை ஊடாகவும் பக்தர்களின் ஒத்துழைப்போடு மீள் புனரமைக்கப்பட்டு இவ் வாலயம் பெருங்கோயிலாக மல்லாவி நகரில் கம்பீரமாக காட்சியளித்து அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம் இன்று மஹா கும்பாபிசேக பெருவிழாவினை காண்பதனையிட்டு மகிழ்வடைவதோடு. இவ்வாலய மஹா கும்பாபிசேகம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**எந்திரி.பா.விகர்ணன்.**
**நீர்ப்பாசனப் பொறியியலாளர்,**
**தலைவர் - சிவபுரம் சீதனாம்பிகை சமேத சிவபுரநாதர், வவுனிக்குளம்**



## வாழ்த்துச் செய்தி

அருள்மிகு ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம் மஹா கும்பாபிஷேக பெருவிழா 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை குடமுழுக்கு விழா எமது பரிபாலன சபையின் நீண்ட அர்ப்பணிப்புக்கள் சவால்களுக்கு மத்தியில் இரண்டாவது முறையாக இருபது வருடங்களின் பின்னர் வன்னி பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் துணுக்காய்ப் பிரதேசத்தில் யோகபுரம் பகுதியில் மல்லாவி நகரின் மத்தியில் இப்பிரதேச மக்களினதும் புலம்பெயர் அடியாவர்களின துும் நீண்ட உதவியின் பயனாக எமது காலத்தில் இவ்வாறான பெரிய ஆலயம் ஒன்றினை ஆகம விதிக்கமைவாக அமைத்துள்ளோம். துணுக்காய் பிரதேசம் பெரும் இந்து மக்களைக் கொண்ட ஒரு பிரதேசம். கடந்த காலங்களிலே இம்மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத் திருந்த வேளையில் மனதால் பூசித்து வழிபாடற்றிய தெய்வமாக எம் பெருமான் இருக்கின்றார். அதன் பயனே எம் மக்களின் உதவியும் அமைந்தது பரிபாலன சபை, திருப்பணிச்சபை, அறநெறிக்குழாம், கும்பாபிஷேக குழு.அன்னதான சபை, மலர்குழு. இவ்வாலய இந்து இளைஞர் அணியுடன் பல சிவனடியார்களை முன்னிறுத்தி எமது சிவப்பணி சிறப்புற எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர நடராஜா கூத்தனை வேண்டி யோகாம்பிகை சமேத யோகபுரநாதரின் பாதார விந்தங்களை வணங்கி இன்றைய குடமுழுக்கு கும்பாபிஷேக விழாவிற்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் இறைவன் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்தித்து மனநிறைவோடு ஆசி கூறுகின்றேன்.

**திரு.தி.சோதிலிங்கம் - பரிபாலன சபை தலைவர்,**
**ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம்**
**மல்லாவி.**



## வாழ்த்துச் செய்தி

உலக மதத்திலும் ஒப்பிலா தோங்கி இலகு பேரொளியாய் உலகை ஆட்டிப் படைக்கும் சக்தியால் நான் என்ற ஆண வத்தினை வேருடன் அறுக்கும் சக்தி யால் ஏகனாய் ஏகமுதல்வனாய் அடிமுடி காண முடியாத பரம்பொருளாய் இருப்பவர் நம் ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் பெயர்பெற்ற லிங்கேஸ்வரர். இவ் லிங்கேஸ்வரருக்கு ஆலயம் அமைக்க சிவ அடியார்கள். அன்பர்களின் நன் கொடையினாலும் இரவுபகல் அயராத உழைப்பி னாலும் திருப்பணி சபை தலைவராக பொறுப் பெடுத்து பின்னர் திருப்பணி வேலைகளை பரிபாலன சபையுடன் விரும்பி என் தலையாய கடமையாய் எண்ணி பொறுப்புடன் பொறுப்பேற்று ஓரளவு சிறப்பாகவும் கிராம மக்கள். பிரதேச மக்கள் போற்றும் வண்ணம் இத் திருப்பணியை எம்பெரு மான் என்னுள் புகுந்து நிறைவேற்றி உள்ளார் என்றுதான் நான் கருதுகின்றேன். எனவே இவ் ஆசிச்செய்தி சைவப் பெருமக்களாகிய எல்லோருக் கும் சென்றடைய எம்பெருமானை வேண்டுகின றேன்.

**பொ.சிவஞானசுந்தரம்,**
**திருப்பணிச்சபை தலைவர்.**
**ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம்**
**மல்லாவி**

---

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**SAYO JEWELLERS**
THUNUKKAI ROAD, MALLAVI
T.P: 0770878473

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**அருள் பிள்ளையார்**
**பான்சி சொப்**
யோகபுரம், மல்லாவி T.P: 0776501063

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**கஜமுகன்** பல்பொருள் உதிரிகள் வாணிபம்
விவசாய உள்ளீடுகள், பொறிகள் மற்றும் இரும்பு பொருள்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்.
துணுக்காய் வீதி, மல்லாவி. 0773705818

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**யோகாம்பிகை ஹாட்வெயர்**
பிரதான வீதி, மல்லாவி. T.P: 0770417522

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**கல்யாணி** தாம்பூல நிலையம்
பல்பொருள் வாணிபம்
துணுக்காய் சாலை,மல்லாவி 0775322669

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**புதிய பொற்பரிதி நகையகம்**
துணுக்காய் சாலை, மல்லாவி. T.P: 0772478938

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**பிரியன்** பான்சி சொப்
பிரதான வீதி, மல்லாவி . 0772095232

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**அதில்ஷன் புடைவையகம்**
துணுக்காய் சாலை, மல்லாவி.


அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதப் பெருமானின்
கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
**றோயல் பதிப்பகம்**
சகல விதமான அச்சுப்பதிப்பு
துணுக்காய் வீதி, மல்லாவி.
தொ.இல:-0774517447.
வேலைகளும் எம்மிடம் சிறந்த முறையில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**மலர்மகள்**
நகை அடைவு மாடம் மற்றும் விற்பனையும்
மல்லாவி
T.P: 0778074413/ 0773459144

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**பிறைவிழி** பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும் சில்லைறையாகவும் விற்பனை செய்யப்படும்
துணுக்காய் சாலை, மல்லாவி.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**பரணி ஹாட்வேயர்**
கட்டட விற்பனை பொருள் நிலையம்
துணுக்காய் சாலை, மல்லாவி.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**ஓம் சூரியா ஹோட்டல்**
உயர்தரமான சைவ உணவுகளை பெற்றுக்கொள்ளலாம்,
ஓடர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்
NO.149, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 11 T.P: 0112380926

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**ஊர்மிளா புடைவையகம்**
துணுக்காய் சாலை,
மல்லாவி.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சூரியா ரேடேஸ்**
நுகர்வு பொருள்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்
NO- 215 V, குமார வீதி, கொழும்பு-13 T.P: 0112380926

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**விதுஸ் பான்சி சொப்**
பிரதான வீதி, மல்லாவி.
T.P: 0770742690

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாள் வெட்டில்...

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணி யளவில் நடந்துள்ளது. சுதுமலை அம்மன் கோயிலுக்குப் பின்புறமாக உள்ள மரவள்ளித் தோட்டம் ஒன்றில் பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த ஒருவருக்கு, வலி யில் முனகும் சத்தம் கேட்டுள்ளது. சென்று பார்த்தபோது இரத்த வெள்ளத்தில் இளைஞர் ஒருவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந் தார். இந்த விடயம் ஏனையோருக்குத் தெரி விக்கப்பட்டது. மானிப்பாய் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இளை ஞரை மீட்டனர். யாழ். போதனா வைத்தியசா லையில் சேர்ப்பித்தனர். வாள் வெட்டுக்கு இலக்கானவர் உடுவிலைச் சேர்ந்த யூட் (வயது - 30) என்று கூறப்படுகின்றது.

இந்த இளைஞரை ஒரு குழு துரத்திச் சென்றது என்று சம்பவத்தைத் தாம் கண்டனர் என்று கூறுவோர் தெரிவித்தனர்.

"ஓட்டோ ஒன்று வேகமாகச் சென்றது. அதைத் தொடர்ந்து 5 மோட்டார் சைக்கிள்கள் வேகமா கப் பின்தொடர்ந்தன. ஓட்டோவின் சாரதி குதித்து அங்கிருந்த மரவள்ளித் தோட்டம் ஊடாக ஓடினார். மோட்டார் சைக்கிளில் வந்த வர்கள் இரு மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி விட்டு வாள்களுடன் அவரைத் துரத்திச் சென் றனர். அவர்கள் சிறிது நேரத்தில் திரும்பி வந்தனர். காத்திருந்த ஏனையோருடன் இணைந்து அங்கிருந்து சென்றனர். அவர்கள் முகத்தை துணியால் கட்டியிருந்தனர். அங்கி ருந்து செல்ல முன்னர் ஓட்டோவைத் தாக்கிச் சேதமாக்கினர்." என்று அவர்கள் கூறுகின்ற னர்.

வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞரின் இடது கை துண்டிக்கப்பட்டுள்ளது. மற்றைய கையிலும், கால்களிலும் ஆழமான வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இளைஞரை வைத் தியசாலையில் சேர்க்க எவரும் முன்வர வில்லை. பொலிஸாரே அவரை வைத்தியசா லையில் சேர்த்தனர் என்று அங்கிருந்தவர் கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை. விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற-4)

## அரசின்...

ரங்களை பொன்சேகாவிடம் ஒப்படைக்க அரச தலைவர் ஆலோசனை வழங்கினார் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தக் கருத்து உள்நாட்டு அரங்கிலும், பன் னாட்டு அரங்கிலும் பெரும் அதிர்வலையைத் தோற்றுவித்திருந்தது. இதன் பின்னரான அமைச்சரவைக் கூட்டத்திலும் இது எதிரொ லித்திருந்தது.

இந்த நிலையில், அமைச்சர் சரத் பொன்சேகா வுக்கு எத்தகைய பதவி வழங்குவதற்கான முனைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது? அது இராணுவம் சார்ந்த பதவியா? என்பது தொடர் பில் கொழும்பிலுள்ள தூதரகங்களில் இராஜ தந்திரிகள் அறிந்து கொள்வதற்கு முனைப்புக் காட்டியுள்ளனர்.

நல்லாட்சி, ஜனநாயகத்துக்குப் பங்கம் விளை விக்கும் வகையில் முன்னாள் அரசு போன்று தற்போதைய அரசும் செயற்படப் போகின்றதா ? சரத் பொன்சேகாவை அவ்வாறான ஒரு பதவிக்கு ஏன் நியமிக்க வேண்டும்? என்று வெளிநாட்டுத் தூதரகங்கள் அமைச்சர்களிட மும் அரச நிறுவனங்களிடமும் தகவல்களை அறிந்து தமது நாட்டுக்கு அறிக்கை சமர்ப்பிக் கவுள்ளதாக அறிய முடிகின்றது. (வ-5)

## மோடியுடனான...

நடைபெறக்கூடும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் கொண் டாட்டத்தில் பங்கேற்பதற்காக இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங் கைக்கு வருகை தரவுள்ளார். எதிர்வரும் 11ஆம் திகதி இலங்கைக்கு வரும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, இரு நாள்கள் தங்கியிருப்பார்.

இலங்கைப் பயணத்தின் போது பல்வேறு அரசியல் தரப்புக்களையும் சந்தித்து மோடி கலந்துரையாடவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அவர் நிச்சயம் சந்தித்துக் கலந்துரையாடுவர் என்று தெரிவித்த இரா. சம்பந்தன், இது தொடர்பான ஏற்பாடுகளை இந்தியத் தூதரகத்தினர் மேற்கொண்டு வரு வதாகவும் கூறினார்.

பெரும்பாலும் இந்தச் சந்திப்பு எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறக் கூடும் என்றும், இதன் போது தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கு கின்ற காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் பேசப்படும். அத்துடன் மிக முக்கி யமாக அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படும் என்றார் இரா.சம்பந்தன். (வ-5)

## பஸ்...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் அரச தலைவரிடம் நேரில் கோரிக்கை விடுத்தார்.

மாகாண முதலமைச்சர்களின் மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கோரிக்கை விடுக்கையிலேயே, முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

"வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடு கின்ற தனியார் பேருந்துகளிடம் வழித்தட அனுமதிக்காக, மாவட்டச் செயலகங்கள் ஊடாக அறவிடப்பட்ட பணத்தை, கொழும்பு அரசின் போக்குவரத்து ஆணைக்குழு பெற் றுள்ளது. இதில் வடக்கு மாகாண சபை உரு வாக்கப்பட்ட பின்னர், 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம், 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியும் உள்ளடங்குகின்றது. 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் எமது மாகாண சபையின் போக்குவரத்து நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

எமது சபையின் ஆயுள் காலத்தில் அறவிடப் பட்ட பணத்தை கொழும்பு அரசு மீள வழங்க வேண்டும். இந்தப் பணத்தின் ஊடாகவே, மாகாணப் போக்குவரத்து ஆணைக்குழு பணிகளை முன்னெடுக்க முடியும். பல மில் லியன் ரூபா கொழும்பு அரசிடம் உள்ளது" என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு விரைவில் வருகை தந்து, இது தொடர்பில் ஆராய்ந்து தீர்வை வழங்குவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் இதன் போது பதிலளித்தார். (வ-5-101)

## காலியில்...

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக் கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர். இரண்டு தரப்பினருக்கும் இடையிலான விரோதமே இந்தக் கொலைக்குக் காரணம்" என்று பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களைக் கைதுசெய்ய காலி மாவட் டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் சிறப்பு பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது. (வ-5)

## மோடியின்...

வில் பங்கேற்க இலங்கை வரவுள்ள இந்தியத் தலைமை அமைச்சருக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தலைமை அமைச்சர் மற்றும் ஐ.நா வெசாக் நிகழ்வு ஆகியவற்றின் பாதுகாப்புக்கு 6 ஆயிரம் பொலிஸார் கடமையில் அமர்த்தப் படவுள்ளனர். பொலிஸார், சிறப்பு அதிரடிப்ப டையினர் மற்றும் மிக முக்கிய பிரமுகர்களுக் கான பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடும் சிறப்பு பயிற்சி பெற்ற அதிகாரிகள் இதில் உள்ளடங்கு கின்றனர்.

கொழும்பு, கண்டி மாவட்டங்களில், கடுமை யான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும்.

அத்துடன் நாடு முழுவதும் வெசாக் நிகழ்வுகள் நடைபெறும் விகாரைகளுக்கும் சிறப்பு பாது காப்பு வழங்கப்படவுள்ளது. இந்தியத் தலைமை அமைச்சரின் வருகையின் போது எந்த நாச வேலைகளையும் மேற்கொள்ள முடியாது. இந்த விடயத்தில் சிறப்புக் கவ்னம் செலுத்த பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள் ளது என்றார். (வ-5)

## உடுத்துறை...

றைக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் நடத் தப்பட்ட சோதனையில் 17 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. அவை பளைப் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. நேற்றுக் கடற் படையினர் மீண்டும் சோதனை நடத்தினர். அதில் 21 கிலோ [illegible] பளைப் பொலி[illegible] கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப்



பொலிஸ் மா அதிபர் மகேஸ் வெலிக்கன்ன, கிளிநொச்சி மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறிவர்த்தன, கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகி யோரின் மேற்பார்வையின் கீழ் கடற்படையி னருடன் இணைந்து தேடுதல் நடத்தப்பட்டது. சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யும், நீதிமன்ற நடவடிக்கைகளையும் பளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-6)

## பணிஸ்...

பரிதாபமாக உயிரிழந்தது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

"சிலாபத்தில் நேற்றுக்காலை சம்பவம் இடம் பெற்றது. காலை உணவாக பணிஸ் உட் கொண்டபோது அதன் சிறுதுண்டு தொண் டையில் சிக்கியதால் 3 வயதுடைய குறித்த குழந்தை திணறிச் சரிந்துள்ளது. குழந்தை திடீரென அவ்வாறு அவதிப்படுவதைக் கண்ட பெற்றோர் உடனடியாக சிலாபம் பொது மருத் துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பயனளிக்காது குழந்தை உயிரிழந்துவிட்ட தாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## ஒருங்கிணைப்பு

கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டி ருந்தது. அரச தலைவர் செயலகத்தால் அறி விக்கப்பட்டதற்கு அமைவாகவே மாவட்டச் செயலகத்தால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் திடீரென, மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காரணம் எதுவும் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படு வதாக தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், போர் வீரர்களுக்கான நினைவு நாள் நிகழ்வு பலாலியில் நாளை திங்கட் கிழமை காலை 9 மணிக்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு, யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாக அதிகாரிகளுக்கு அழைப்பு அனுப்பப் பட்டுள்ளது. இதன் காரணமாகவே, மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள் நால்வரில் இருவர் ஏற்கனவே, இந்தத் திகதியில் ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டம் நடத்தினால் தம்மால் பங் கேற்க முடியாது என்பதைக் குறிப்பிட்டிருந்த னர். இவ்வாறான பின்னணியில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்தி வைக் கப்பட்டுள்ளது. (வ-5-8-101)

## முழு...

ராஜபக்ச தலைமையில் இந்த வாரம் கூடவுள் ளனர் என்று தெரிய வருகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு மகிந்த அணி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. தொழிலாளர் தினக் கூட்டத்திலும் அவர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளூராட்சித் தேர் தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும் என்பதையே முன்வைத்தனர்.

அரசு தொடர்ந்து இந்த விடயத்தில் அசமந்தப் போக்கில் செயற்பட்டு வருவதால், அரசுக்கு பெரும் அழுத்தத்தை கொடுக்கும் வகையில் நாடு முழுவதிலும் முழு அடைப்புப் போராட் டத்தை முன்னெடுக்க பொது எதிரணி தீர்மா னித்துள்ளது.

முன்னாள் அரச தலைவர் தலைமையில் நடை பெறும் கூட்டத்தில் இதற்கான திகதி தீர்மானிக் கப்படும் என்று அறிய முடிகின்றது. (வ-5)

## முதலவர்...

அரச தலைவர் மற்றும் கொழும்பு அரசின் விவசாய அமைச்சரால், வடக்கு மாகாண சபைக்கு உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர்களின் மாநாடு, ஹபரணையில் நேற்று நடை பெற்றது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் உள்ளிட்ட 9 மாகாணங் களின் முதலமைச்சர்கள், கொழும்பு அரசின் அமைச்சர் கள், அரச தலைவர் ஆகியோர் பங்கேற்றனர்.

அரச தலைவர் மைத்திரிபால தனது உரையில், "9 மாகாண சபைகளும் ஒன்பது விதமாக செயற்படுவத னால் நாட்டின் பொது அபிவிருத்தி இலக்கு களை அடைவதில் பெரும் சிக்கல் நிலவுகின்றது. பொதுவான உடன்பாட்டுடன் மாகாண சபைகள் இயங்க வேண்டும். வினைத் திறனான மக்கள் சேவையை வழங்க முடியாமல் இருப்பதனால், மக்கள் மிகுந்த அழுத்தத்துக்கு உள்ளாகுகின்றனர். பொறுப்புகளை நிறைவேற்றுவது அனைவரி னதும் கடப்பாடாகும்.

அரசமைப்பு, சட்டம் மற்றும் அதிகாரம் எப்படி யிருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்து வோரின் நடத்தைப் பாங்குக்கமையவே செயற்றிறன் இருக்கும். அதிகாரத்தைப் பயன் படுத்துவதில் நாம் எவ்வளவு தூரம் முன்னே றியுள்ளோம் என்பதை தெளிவுபடுத்தக்கூடிய அண்மைக்கால உதாரணமாக மீத்தொட்ட முல்ல குப்பைமேட்டு இடரைக் குறிப்பிடலாம்" என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாணங்கள் தொடர் பில் கலந்துரையாடல் நடைபெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்களாக வடக்கில் எவரும் இல்லை என்ற விடயத்தை தெரிவித்தார். வடக்கில் 918 வெற்றிடங்கள் உள்ளன. இவற்றுக்கு உரிய வர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதில் வழங்கிய கொழும்பு அரசின் விவசாய அமைச்சர் துமிந்த, வடக்கில் காணப்படும் விவசாய ஆராய்சி உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சர வைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு, அமைச்ச ரவை அனுமதி விரைவில் பெறப்படும் - என் றார். (வ-5-101)

## போர்...

அதற்காக நாம் ஆட்சியாளருக்கு எதிராக ஒரு வரை களத்தில் இறக்குவோம். அப்படித்தான் 2010 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மஹிந்தவுக்கு எதிராக சரத் பொன்சேகாவை இறக்கினோம்.

போர் முடிந்த கையோடு மகிந்தவுக்கு மக்கள் ஆதரவு கூடியது. அதில் ஒரு பகுதி சரத் பொன் சேகாவுக்கும் இருந்தது. போரை முடித்து வைப்பதற்கு பொன்சேகா கணிசமான பங்க ளிப்பு வழங்கியமைதான் அதற்குக் காரணம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் அதை போர் வெற்றி என்று கூறக்கூடாது. போர் முடிவு என்றே கூற வேண்டும். போர் வெற்றி என்று கூறினால் இனங்களிடையே ஒற்று மையைக் கட்டி எழுப்ப முடியாது. அது இன் னோர் இனத்தைத் தோற்கடித்ததாகப் பொருள்படும்.

போரை முடித்து வைத்ததால்தான் எம்மால் யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை எது வித சிக்கலும் இல்லாமல் நடத்த முடிந்தது. இதற்கான அதிக பங்கை சரத் பொன்சேகா வகித்ததால்தான் அவரை நாம் மகிந்தவுக்கு எதிராக களத்தில் இறக்கினோம். பின்பு அவ ரது வாயால் அவர் எல்லாவற்றையும் கெடுத் துக்கொண்டது வேறு விடயம்.

சரத் பொன்சேகாவும் அந்தத் தேர்தலில் வென்றிருந்தால் அவரும் சர்வாதிகாரியா கவே மாறியிருப்பார். இன்று ரணில் இவ ருக்கு அமைச்சுப் பதவி கொடுத்து அவரது கட்சியையும் அழித்துவிட்டார். அரச தலைவர் இராணுவப் பதவி கொடுத்து இருப்பதையும் பிடுங்கப் போகிறார்.

தொழிலாளர்களின் போராட்டத்தை முடக்கு வதற்காகவே இந்தப் பதவி வழங்கப்படவுள் ளது. அவரது படையணியை விட எமது தொழிலாளர் படையணி பலம் வாய்ந்தது. எம்மை அவரால் எதுவும் செய்ய முடியாது என்றார். (ற-4-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யங்ஹென்றிஸ் அணி போராட்டமான வெற்றி

யாழ்ப்பாணம், மே 7

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி போராடி வெற்றிபெற்றது.

அழைக்கப்பட்ட எட்டு அணிகளுக்கு இடையில் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியில் இந்தத் தொடர் நடைபெற்ற வருகிறது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# சங்கா மிரட்டல்

இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் றோயல் லண்டன் கிண்ணத்துக்கான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சங்காவின் சிறப்பான செயற்பாட்டால் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் சர்ரே அணி வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சர்ரேயை எதிர்த்து மிடில்செக்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது சர்ரே அணி.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மிடில்செக்ஸ் அணி 9 இலக்குகள் இழப்புக்கு 243 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ராம்போல் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சர்ரே அணி சங்காவின் சிறப்பான அரைச்சதத்தின் உதவியுடன் 28 பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்தது. சங்கா 59 ஓட்டங்களை எடுத்தார். (ம)



# பாடும்மீன் கழகம் கம்பீரமான வெற்றி

யாழ்ப்பாணம், மே 7

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில், குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியர்ஸ் அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் அணி அபார வெற்றிபெற்றது. (ம-23)





# புதிய ஜெர்சியில் இங்கி. கலக்கல்

நீண்டகாலத்துக்குப் பின்னர் புதிய ஜெர்சியில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, அயர்லாந்துக்கு எதிரான தொடரில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது அயர்லாந்து. அந்த அணி வெறும் 126 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது. பல்பிர்னி 30 ஓட்டங்களையும், ஜொய்ஸ் 23 ஓட்டங்களையும், ஸ்ரெர்லிங் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரசிட்கான் 5 இலக்குகளையும், ரூட் 2 இலக்குகளையும், வில்லி, வூட், போல் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து ஓர் ஓட்டத்தைப் பெற்றிருந்த நிலையில் அதன் ஆரம்ப வீரரான றோய் ஆட்டமிழந்தார். எனினும் சிறு பதற்றமும் உணரப்படவில்லை. ஏனைய வீரர்கள் அடித்தாட வெறும் 20 பந்துப்பரிமாற்றங்களில் இலக்கை அடைந்தது இங்கிலாந்து. அதிகபட்சமாக கேல்ஸ் 55 ஓட்டங்களையும், ரூட் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும் சேர்த்தனர். (ம)



# உனகட் ஹற்றிக் அசத்தியது புனே

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் உனகட் ஹற்றிக் பதிவுசெய்ய அபாரமான வெற்றியைப் பெற்றது புனே அணி.

ஹைதராபாத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஹைதராபாத்தை எதிர்த்து புனே மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது ஹைதராபாத்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனே அணிக்கு ஆரம்ப வீரர்களாக திரிபதி மற்றும் ரகானே களமிறங்கினர். ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார் அதிரடி வீரர் திரிபதி. இது புனேக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்த இலக்குச் சரிவால் அணித்தலைவர் சிமித், அதிரடி வீரர் ஸ்ரோக்ஸ் ஆகியோர் அதிகம் நிதானித்தனர். சிமித், தான் சேர்த்த 34 ஓட்டங்களுக்காக 39 பந்துகளை எதிர்கொண்டார். அவற்றில் ஓர் பவுண்டரிகூட இல்லை. ஸ்ரோக்ஸ் ஆட்டமிழந்ததும் புனேயின் சராசரி முடங்கியது. பின்வரிசையில் டோனி சில சிக்சர்களை விளாசினார். பின்னர் ஒருவாறாக 148 ஓட்டங்களைப் பெற்றது புனே. டோனி 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் ராகுல் 4 இலக்குகளையும், ரசிட் கான், விபுல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத்துக்கு வோர்ணரும், யுவராஜும் மட்டுமே சிறந்த ஆட்டத்தை வழங்கினர். 40 ஓட்டங்களுடன் வோர்ணர் ஆட்டமிழந்தார். யுவராஜ் 47 ஓட்டங்களைச் சேர்த்தால். தவான், வில்லியம்சன், ஹென்றிஸ் பெரிய அளவில் பிரகாசிக்கவில்லை. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 6 ஓட்டங்கள் தேவை என்றிருந்தது ஹற்றிக் பதிவுசெய்து புனேயின் வெற்றிக்கு வித்திட்டார் உனகட். (ம)

# பேசுவதற்கு ஒன்றுமேயில்லை; தோல்வி தொடர்பில் கோக்லி

பஞ்சாப் அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் கிடைத்த தோல்வியைத் தொடர்ந்து, பேசுவதற்கு ஒன்றுமேயில்லை என்று புலம்பித் தள்ளியுள்ளார் கோக்லி.

ஆட்டம் முடிந்த பின்னர் உரையாற்றுகையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"தொடர்ச்சியாக இத்தனை தோல்விகளை ஓர் பருவகாலத்தில் ஓர் அணி திரும்பத்திரும்ப சந்திப்பதை தற்போது தான் பார்க்கிறேன். இந்தத் தோல்விகள் எம்மைச்சோர்வூட்டுகின்றன. துடுப்பாட்டத்தைப்பலமாகப்பாவிக்க முடிவெடுத்தோம். அடித்தாட வேண்டும் என்பது எமது திட்டமாக அமைந்தது. ஆனால் களத்தில் அதை நடைமுறைப்படுத்துவதில் தொடர் பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். எமது அணி பலமான அணி. எமது தோல்விக்குக் காரணம் நாங்களே" என கோக்லி மேலும் தெரிவித்தார். ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக பெங்களூர் அணியின் நட்சத்திர வீரர் வில்லியர்ஸ், "எஞ்சியுள்ள ஆட்டங்களை வெற்றியுடன் முடிக்க விரும்புகிறோம். பெரியளவில் ஓட்டங்களைக் குவிப்பதே எமது எண்ணம்" என்று தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 7

**இலங்கை கிரிக்கெட்டின் துடுப்பாட்டத் தொடர்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானங்களில் இன்று சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதவுள்ளது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் றெஜின்போ அணியை எதிர்த்து திருநெல்வேலி வை.எச்.எம்.ஏ. அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸி. கழக துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.

**பாரதி வி.கழக கரப்பந்தாட்டம்**

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக 'ஏ', 'பி' என இருபிரிவாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## டி சில்வா விலகல்

கடந்த சிலவருடங்களாக இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்குழு மற்றும் ஆலோசனை சபையில் சேவையாற்றி வந்த அர்விந்த டி சில்வா தனது பணிகளிலிருந்து விலகியுள்ளார்.

தற்பொழுது 51 வயதான அரவிந்த டி சில்வா, 2016ஆம் ஆண்டிலிருந்து கிரிக்கெட் செயற்குழுவை தலைமை தாங்கினார். மட்டுமல்லாமல் இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்வாளர்களின் தலைமைப் பொறுப்பு மற்றும் கிரிக்கெட் செயற்பாட்டுக் குழுத் தலைவர் போன்ற பதவிகளையும் வகித்திருந்தார். தற்போது தனது பதவிகளில் இருந்து அவர் விலகியுள்ளார். (ம)



# கிளிநொச்சி மகா வித்தி. வன்னியின் போரில் வெற்றி

### இன்னிங்ஸ் மேலாதிக்கத்துடன் ஆட்டத்தை வசப்படுத்தியது





ஆட்டநாயகன் குருகுலன்



சிறந்த துடுப்பாட்ட வீரர் துவாரகன்



சிறந்த சகலதுறை வீரர் கபிலன்



புதுக்குடியிருப்பு, மே 7

'வன்னியின் போர்' என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கும் புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி இன்னிங்ஸால் அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய அணி களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. கபிலன் 48 ஓட்டங்களையும், சுஜீபன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜசிக்குமார் 4 இலக்குகளையும், யதுர்சன் 3 இலக்குகளையும், நிதர்சன், துசாந்தன், சஞ்சீவன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 9 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக துவாரகன் 59, கீர்த்திகன் 53 ஓட்டங்களையும், யதுர்சன் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தேனுஜன் 4 இலக்குகளையும் கபிலன், சுஜீபன், விதுசன், ஜதுர்சனன் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 101 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய [illegible] மத்திய கல்லூரி அணி வெறும் [illegible] சகல இலக்குகளையும் இழந்து இன்னிங்ஸாலும் 60 ஓட்டங்களாலும் படுதோல்வியடைந்தது. சுஜீவன் பெற்ற 65 ஓட்டங்களே அதிகபட்சம்.

பந்துவீச்சில் குருகுலன் 6 பந்துப்பரிமாற்றங்கள் வீசி ஓர் ஓட்டத்தை மட்டும் விட்டுக்கொடுத்து 6 இலக்குகளைக் கைப்பற்றினார். அவர் ஆட்டநாயகனாகவும் சிறந்த பந்துவீச்சாளராகவும் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் துவாரகன், சிறந்த களத்தடுப்பாளராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் விஜிதரன், சிறந்த சகலதுறை வீரராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் கபிலன் ஆகியோர் தெரிவாகினர்.

**வன்னியின் போர் வரலாறு**

வன்னியின் போர் வரலாற்றில் நடப்பு வருடத்தின் ஆட்டம் ஏழாவது ஆட்டமாக அமைந்தது. கடந்த 2007 ஆம் ஆண்டு இந்தத் தொடர் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிந்தது. 2008 ஆம் ஆண்டில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வெற்றிபெற்றது. 2009, 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் ஆட்டங்கள் நடைபெறவில்லை. 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றிபெற்றது. 2014, 2015, 2016 ஆம் ஆண்டு ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தன. இரண்டு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தமையால் நடப்பு வருடத்தில் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரில் ஆதிக்கம் செலுத்தும் என்ற நிலை இருந்தது. இந்த [illegible] தற்போது ஆதிக்கத்தை [illegible] கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

யாழ்.நகரில் இயங்கிவரும் ஆர்.வி.ஜி. மருந்தகத்துக்கு மருந்தாளர் (PHAMACIST - CERTIFICATE உள்ள வர்கள்) விண்ணப்பிக்கவும்.

அனுபவத்துக்கு ஏற்ற கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முகவரி:

**ஆர்.வி.ஜி.மருந்தகம்**

**504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(AJA CS/ 3756)

**வவுனியாவில்**

**கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு தேவை**

சிங்கர் நிறுவனத்தின் விற்பனைக்குப் பின்னரான சேவைகளை மேற்கொள்வதற்கான பிராந்திய சேவை நிலையத்துக்கு கட்டடம் தேவை.

* ஏறத்தாள 6000 - 8000 சதுர அடிகள் (கீழ்த்தளம் குறைந்தது 3000 சதுர அடிகள் அல்லது அதற்கு மேல்)
* 10 வருடங்கள் வாடகைக்கு / குத்தகைக்கு
* 10 வாகனங்களுக்கான தரிப்பிட வசதி
* (3- Phase) 3- அவத்தை மின்னிணைப்பு
* நுழைவு வீதி குறைந்தது 20 அடி அகலம்

தொடர்புகளுக்கு: D.Angelo 077 176 8331

SINGER — SINGER SERVICE

15 வருட நிறைவை முன்னிட்டு விசேட கட்டணக்கழிவு **50%** Only 50 Students

**Diploma in Spoken English**

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்கள் நடைபெறுவதுடன், பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.

Spoken English - Course Fee : 15250/= Offer Fee : 7625/=
Diploma in English - Course Fee : 21000/= Offer Fee : 10500/=

BRITISH COLLEGE of Education — More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

**முக்கிய அறிவித்தல்**

திருமணம் முடித்து UK செல்லவுள்ளவர்கள் தற்போது A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்று ஒரு பிழையான தகவல் இலங்கையிலும், UK இலும் பரவியுள்ளது. அது முற்றிலும் தவறான தகவல் என அறியத்தருகின்றோம். அதன் உண்மைத்தன்மை என்னவெனில் ஏற்கனவே UK இல் வசிக்கும் partner அவரது விசா காலத்தினை நீடிப்பதாயின் A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதே உண்மையாகும். ஆகவே புதிதாக Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு இப் புதிய நடைமுறை தேவையற்றது. அவர்கள் வழமை போன்று A1 பரீட்சைக்கு தோற்றினால் போதுமானது.

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE of Education — More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

Viswam Lanka Education Viswam Campus

BBA, B.Com, BA, M.Com, BSc, MSc, MBA ( India/ Latin America/ USA / UK/ ) பட்டப்படிப்புக்களைத் தொடர்வதற்கு உடன் அழையுங்கள்.

viswamcampus@gmail.com

072 799 1705 / 8

**காணி விற்பனைக்கு**


வட்டுக்கோட்டை, மூளாய் றோட் அருகில் காணி விற்பனைக்குண்டு.

075 451 2698

**வெசாக் தினத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன் !**

மாத இலாபம் ரூ.50,000/= இற்கு மேல் பெற...

ஜூஸ் பக்கெட் மெசின்



வேலையாட்கள் தேவையில்லை

Eastman

உ.கோப்பி மெசின் — பொப்கோர்ன் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள

077 391 8870

WINRICH INTERNATIONAL(PVT)LTD

max adz



# கம்பீர் மோசமானவர் அப்ரிடி வெளிப்படை

இந்திய அணியின் வீரர்களுடன் நட்புறவில் உள்ள போதிலும், கம்பீர் மட்டும் அதில் விதிவிலக்கு இவ்வாறு குறிப்பிட்டார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் அப்ரிடி. ஊடகமொன்றுக்கு எழுதிய கட்டுரையிலேயே அப்ரிடி இவ்வாறு குறிப்பிட்டார். 'மைதானத்தில் ஆக்ரோசமான வார்த்தைகள் உதிர்வது வழமையானது. மாறி மாறி திட்டிக் கொள்வது ஏற்றுக் கொள்ளக்கூடியது. ஆனால் அது மைதானத்தில் மட்டுமே. மைதானத்தை விட்டு விட்டு வெளியே வந்தால் சராசரி வாழ்க்கைக்கு மனம் திரும்பி விடும். எல்லா கிரிக்கெட் வீரர்களுமே அப்படித்தான். ஆனால், இந்தியாவின் கவுதம் கம்பீர் மட்டும் அதில் இருந்து வெளியே வராமல் இருக்கிறார். அவருக்கு வாழ்த்துக்கள், என்று அப்ரிடி குறிப்பிட்டுள்ளார். (ம)

**காணி தேவை**

யாழ். நகரை அண்மித்த 1-2 பரப்புக்காணி தேவை.

தொடர்பு. 077 255 6561

**காணி விற்பனைக்கு**

மருத்துவ பீடத்துக்கு அண்மையில் பொற்பதி வீதிப் பிள்ளையார் கோயிலை அடுத்து உள்ள ஒழுங்கையில் 2¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

076 639 9277

**WALK-IN INTERVIEW**

* வாடிக்கையாளர் சேவை உதவியாளர்
* மின் உபகரண தொழிநுட்பவியலாளர் (குளிரூட்டி, சலவை இயந்திரம் மற்றும் வளிச்சீராக்கி

சிங்கர் பிராந்திய சேவை நிலையத்தில் மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் தேவை. மாத வருமானம் அண்ணளவாக ரூ 25,000.00 ஆர்வமுள்ளவர்கள் நேர்முகத்தேர்வுக்கு சமுகம் தரவும்.

காலம் : 16 வைகாசி 2017
நேரம் : பி.ப 2.00 மணி முதல்
இடம் : 50, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

SINGER — SINGER SERVICE

தொடர்பு: 021 222 4577/ 021 205 3844/ 021 567 4577/ 077 176 8331

**சுன்னாகத்தில் கடைகள் வாடகைக்கு**

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள மூன்று மாடிக்கட்டடத்தில் முதலாவது மாடியில் 33 அடி X 12 அடி பரப்பளவும், இரண்டாவது மாடியில் 66 அடி X 24 அடி பரப்பளவும் கொண்ட கடைகள் மலசலகூட வசதியுடன் வாடகைக்கு உண்டு.

076 749 0219

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், புகையிரத நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள விஸ்தீரணம் 1½ பரப்பு, 2 குளி நிலப் பரப்பில் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

077 998 9676

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## நூல் வெளியீட்டு விழா

தென்மராட்சி, மே 7

தமிழ்ப் பாட ஆசிரியர் வீ. வீ.சாந்தன் எழுதிய உயர்தர தமிழ் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின்பழைய மாணவர் சங்க உப தலைவரும் மருதங்கேணி பிரதேச செயலருமான க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வார்.

விழாவின் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.சிறிதரன், ஓய்வு நிலை அதிபர் க. அருந்தவபாலன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப் பட்டது.

(ற-9)


இலங்கையில் முதல் தடவையாக
ஒளிஅழகன் British College of Beauty Studies இணைந்து நடத்தும்
அழகுக்கலைக்கல்லூரி

பெண்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளைக்கொண்ட
அழகுக்கலை பயிற்சி நெறிகலைக்கல்லூரி.
பயிற்சி சேவை வழங்கப்படுகிறது.

ஒளி அழகன் ஸ்ரூடியோ (British College of Beauty Studies) இணைந்து நடத்தும்
பாடநெறிகள் அழகுக்கலை, கேக்ஐசிங், சிகையலங்காரம், சமையற்கலை, ஆங்கிலம், சிங்களம் French, Dutch மொழிகளையும் கற்றுக்கொள்ள முடியும் Driving பாடநெறியையும் License ஐயும் கற்றுக்கொள்ள முடியும் அனைத்து பாடநெறியும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே கற்பிக்கப்படுகிறது.
சர்வதேச சான்றிதழை அனைத்து பாடநெறிக்கும் வழங்குகிறோம்.

அறிவித்தல்:
இந்தக் காலகட்டத்தில் அனைத்து பெண்களும் வெள்ளையாக வருவதற்காக பலவிதமான Whightning Cream களை உப யோகிக்கின்றனர் இதனால் தோல் புற்றுநோய் ஏற்படுகிறது. உங்களுடைய சரும வகையைப் பரிசோதித்த பின்னரே Cream வகைகளைத் தெரிவு செய்து உபயோகியுங்கள்
Wedding Bridal விசேட விலைக்கழிவில் செய்து கொடுக்கப்படும்



British College of Beauty Studies
Kasthuriyar Road. Jaffna.
Thirunelvely Juction.
076 7011 645




இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

நெஞ்சடைப்புக்கான காரணிகள்
புகைத்தல், உயர்இரத்தஅழுத்தம்,
அதிக கொழுப்புச்சத்து, நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது



FAIR PHARMA (PVT) LTD

செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு.
இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com


Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330
Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை, BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

எங்களால் குணப்படுத்தப்படுகிறது
- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சோமசுந்தரம்



பிறப்பு 19.02.1942 — இறப்பு 06.05.2017

சாவகச்சேரி, கச்சாய் தம்பு தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சோமசுந்தரம் நேற்று (06.05.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னாச்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினம், கந்தசாமி (ஆஸ்திரேலியா), மகேஸ்வரி (ஆஸ்திரேலியா), அருளம்பலம் (ஆஸ்திரேலியா), யோகமூர்த்தி (நோர்வே), காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோகரன், காலஞ்சென்ற கருணாகரன், சிறிமதி, சிறிகரன், சிவமதி (சுவிஸ்), ரவீந்திரன், கலைமதி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நளாயினி, சுகந்தா, சுமதினி, பாலசுப்பிரமணியம், உதயகுமார் (சுவிஸ்), கிருபசாந்தா, பிரதீபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் மீசாலைமேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

கைதடி வீட்டுத்திட்ட சங்கத்தில் சந்தாப் பணம் செலுத்தி அங்கத்துவம் பெற்ற விண்ணப்பங்கள் பரிசிலிக்கப்பட்டு மிக விரைவில் காணி வழங்கும் நடவடிக்கை தொடங்க இருக்கின்றது. கீழ் வரும் நிபத்தனைகளுக்கு அமைய அங்கத்தவர்கள் பயனாளிகளாக இணைத்து கொள்ளபட இருக்கின்றார்கள்.

01. பயனாளிகள் தெரிவு செய்யப்படும் போது கூடிய குடும்ப அங்கத்தவர்கள் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை வழக்கப்படும்.
02. அங்கத்தவர் தனி ஒரு வராகவோ, இருவராகவோ இருந்தால் காணி வழக்கப்பட மாட்டது.
03. பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் 2 பரப்பு காணி வீதம் கொடுக்க சங்கம் தீர்மானித்து உள்ளது.
04. காணி எழுதும் போது நொத்தாரிஸ் செலவு நில அளவுச் செலவு சங்க நடைமுறைச் செலவு ஆகியவற்றுக்குமாக இரண்டு பரப்பு காணிக்கு ரூபா 50,000/= பெற்றுக் கொண்டு காணி வழங்கப்படும்.
05. பயனாளிகளாக இணைக்கப்பட்ட காணி பெற்றவர்கள் மூன்று மாத காலத்தினுள் வீடு கட்டி குடி ஏற வேண்டும்.
06. காணி பெற்ற பயனாளிகள் காணியை அவரவர் சந்ததிக்கு கொடுக்கலாமே தவிர வெளியாருக்கு விற்க முடியாது.
07. எந்த ஊரிலாவது ஒரு அங்கத்தவருக்கு சொந்த காணி இருந்தால் காணி வழக்கப்பட மாட்டது.
08. காணி பெற்ற ஒவ்வொரு பயனாளிகளும் மாதம் தோறும் 300/= சந்தாப் பணம்மாக செலுத்த வேண்டும்.

**பொதுச்செயலாளர்**
**சு. பிரகலாதன்**
**(மண்கும்பான் பிரபு)**

**தலைவர்**
**புலவர் செ.து தெட்சணாமூர்த்தி**

## மரண அறிவித்தல்

### ஆனந்தீஸ்வரன் துரைராஜசிங்கம்

(யா/புனித இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவனும், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் உதவி பொலிஸ் பரிசோதகர்)



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆனந்த ஈஸ்வரன் - தவநாயகியம்மா தம்பதியரின் ஏகபுதல்வனும் ஜெயந்தினியின் அன்புஅண்ணாவும் தெட்சணாமூர்த்தி, சாரதாதேவி காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் திருமதி சரஸ்வதி, இராமகிருஸ்ணன், நாகரட்ணம், தர்மலிங்கம், நாகலிங்கம், கோஷவாகினி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருஞானஈஸ்வரன் மற்றும் திருமதி கனகம்மா (மலேசியா), திருமதி சரஸ்வதி (மலேசியா), தம்பிநாயகம், இரத்தினம்மா ஆகியோரின் பெறாமகனும் நீலம்பரன், தயாபரன், கீதாம்பரன், வனிதகுமார், கிருஸ்ண மேனன், நவநீதன், நிர்மலா, கிருஷாந்தி, உதயமலர், சிராயினி, நிஷாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நாகநாதன், நாகறஞ்சன், நாகறஞ்சினி, நாகசுபதினி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாதர்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சித்திரமேழி, இளவாலை**

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் சிவகுருநாதன்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவகுருநாதன் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை முத்து தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரியின் பாசமிகு கணவரும் பாமினி(லண்டன்), பாரீந்தன்(சுவிஸ்), பாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீஸ்கந்தராஜா(லண்டன்), தர்சினி(சுவிஸ்), பிரபாகரன் (ஆசிரியர், யா/கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் பானுஜா, சிறியானி, சிபிஜா, மகிஜா, ஷாயுகன், சானுகா, பிரதீசா, அபிராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி,**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**

தகவல்: குடும்பத்தினர்.
077 617 6913

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசேட விலைக்கழிவு**

முதல்தர பனர்பிரதியாக்கம் - 30.00
ஒருபக்க விளம்பரப்பலகை - 150.00
ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை - 400.00
கதவுகளுக்கான கொத்து வேலை - 10,000.00
**மூர்த்தி டிஜிற்றல் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**0772247428**

**வேலையாள்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் பிரபல ஏற்றுமதி இறக்குமதி வியாபார நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. தகுதி உடையவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.
1. பொதிசெய்பவர்.
2. சிட்டை வழங்குனர்.
தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
**தொடர்பு. 0776401458, 0776231295**

## நன்றி நவிலல்

**அமரர் திருமதி லீலாதேவி ஆலாலசுந்தரம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி, யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

கடந்த 02.05.2017 சிவபதமடைந்த எமது அன்புத் தாயார் சுகயீனமுற்றிருந்தவேளை அன்னாருக்கு சிகிச்சையளித்த விசேட வைத்தி நிபுணர்கள், வெள்ளவத்தை றோயல் வைத்திசாலை மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட சகல ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது மறைவையடுத்து எமது துயரில் பங்குகொண்டு சகல வழிகளிலும் எமக்கு ஒத்ததாசையாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்ட சகஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பரீட்சைத்திணைக்கம், கல்வி வெளியீட்டுத்திணைக்களம், கல்வி அமைச்சு ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் கார்கில்ஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் கொ/விவேகானந்தா கல்லூரி ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் மின்னஞ்சல், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலம் தமது அனுதாபச் செய்தியை தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிச்சடங்குகளைச் செவ்வனே நடத்த உதவிய மகிந்த மலர்ச்சாலைக்கும் எமது குடும்பம் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகள் - நளினி
மகன் - வாகீசன்
**தொடர்பு.**
**0112734117, 0776709032**
**0773747814**

அனைத்து முச்சக்கரவண்டி குத்தகையுடனும்
பெறுமதியான மின்விசிறி மற்றும்
02 MRF ரயர்
இலவசம்




சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

**விற்பனையாளர் தேவை**

யாழ்மாவட்டத்தில் ..
தேசிய, அபிவிருத்தி லொத்தர் சபை ரிக்கட்டுக்கள் விற்பனை செய்ய ஆர்வம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
**தொடர்புகளுக்கு. 0778558841**

**மாற்றப்பட்டுள்ளது** (சிவன் சாணைக்கடை)

